001

*ஆதியெனும் பராபரத்தின் கிருபைகாப்பு*

*அன்பான மனோன்மணியாள் பாதங்காப்பு*

*சோதியெனும் பஞ்சகர்த்தாள் பாதங்காப்பு*

*சொற்பெரியகரிமுகனுங் கந்தன்காப்பு*

*நீதியெனு மூலகுரு முதலாயுள்ள*

*நிகழ்சித்தர்போகருட பாதங்காப்பு*

*வாதியெனும் பெரியோர்கள் பதங்காப்பாக*

*வழுத்துகிறேன் ஜோசியத்தின் வன்மைகேளே*

*ஆதியென்றும் பராபரை என்றும் அகிலமெல்லாம் போற்றும் அகிலாண்ட நாயகியாளின் திருவடிக்கமலங்கள் எனக்குக் காப்பாக அமையும். என்றென்றும் எவ்வெவர்க்கும் அன்பு வடிவாக இயங்கி ஆதரித்திடும் மனத்திற்குகந்த இன்பம் அருளும் மனோன்மணியான வடிவுடை நாயகியின் செந்தாள் மலர்க்கமலம் எனக்குக் காப்பாக அமையும். மற்றும் சோதிவடிவாக இலங்கி மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்பொறிகளின் நுகர்வாய் அமைந்த ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசையென்னும் ஐம்புல நுகர்வுகளுக்கு உரிமை கொண்ட தெய்வங்கள், எனக்குக் காப்பாக அமைவதுடன் ஓங்காரத்துட் பொருளைத் தன்னுருவிலேயே கொண்ட வேலமுகத்தானும் அவனது* விருப்பினுக்குரிய அருட்பெருங் கடலான திருமுருகனும் எனக்கு [என்கவிக்கு] காப்பாக *அமைவதுடன் நீதியினையே என்றும் பொருளாய்க் கொண்டு இலங்குகின்ற பிரகஸ்பதி முதலாக உள்ள சித்தர்களில் என் குருவாகிய போகரது திருவடிகளும் எனக்குக் காப்பாக அமைவதுடன் என்றென்றும் தங்கள் அருள் நோக்கால் ஆதி முதல் என்னை ஆதரிக்கும் சான்றோர் தமது திருவடிக்கமலங்களைச் சிரசில் சூடி நீதியான முறையில் சோதிடத்தின் வண்மையினை நான் உரைப்பேன். கேட்டுப் பயனடையுங்கள்.*

(*இனி வாழ்த்தாவது தான் எடுத்துக் கொண்ட முயற்சி இனிது முடிதற் பொருட்டு ஏற்புடைக் கடவுளையோ வழிபடு கடவுளையோ வாழ்த்துவதாம்) இது அகலவுரை.*

002

*சத்தியே தயாபரியே ஞானரூபி*

*சாம்பவியே மனோன் மணியே கபாலிசூலி*

*முத்தியே வேதாந்தபரையே அம்மா*

*முக்குணமே முச்சுடரே மாயாவீரி*

*வெற்றியே மூவர்களுக் கருளாய்நின்ற*

*வேணிகையே சாமளையே பொன்னேமின்னே*

*சித்திடையே சோதிடமும் முன்னுரையா*

*சின்மயத்தின் கணேசனுட காப்பாம்பாரே.*

சக்தி என்றும் கருனை வடிவானவள் என்றும், ஞான வடிவினள் என்றும், ஜம்புகேசுவரரின் மனத்திற்குகந்த சாம்பவியென்றும், மனத்திற்கு மகிழ்ச்சித்தரும் சிந்தாமணி போன்ற அன்னையென்றும், கபாலியென்றும், சூலியென்றும் மூவுலகோர்க்கும் முத்தியருளும் வேதமுதலாகியும் முடிவாகியும் அமைந்த தாயென்றும், பரையென்றும் பலவாறாய் அமைந்து [சத்துவ, ராஜஸ, தாமஸம் ஆகிய] முக்குண வடிவானவளும், அக்கினி, சூரியன், சந்திரன் ஆகிய முச்சுடர் ஆனவளும், மாயை வடிவினளும், வீரமுடையவளும் பிரம்மன், அயன், அரன் ஆகிய முத்தேவர்களுக்கும் வெற்றியினை நல்கவல்ல அருள் வடிவினராய் முறையே சரஸ்வதி, இலக்குமி,பார்வதி என்று எவ்வுலகும் பரவும் பராசக்தியே உன்றன் மின்னல் போன்ற இடையினிலே மகிழ்வுடனே சின்மய முத்திரையோடு வீற்றிருந்து அருளும் கணேசனது அருளால் இந்நூலினைப் படைக்கிறேன். [அவர் என்றென்றும் என் துணையிருப்பார்.]

இனி உலகனைத்தும் பலவாறாய்ப் பரவும் பரையே சக்தித்தாயே உன் மைந்தன் கணேசருடைய அருள் நோக்கால் நான் படைக்கும் இந்நூலை அவர் பரிவுடன் காப்பார்.

ஜோதிடம் பயில்பவரும், சொல்பவரும் அன்னை பராசக்தியின் அருளைப் பெற அவளை ஏதாவது ஒரு ரூபத்தில் வணங்கி வழிபட வேண்டும். அன்னையின் அருளைப் பெறாமல் ஜோதிடராக முடியாது என்று புலிப்பாணி விளக்குகிறார்.

003

தானென்ற சூரியனுக்காட்சி சிங்கத்

தன்மையுள்ள மேஷமது உச்சமாகும்

தானென்ற துலாமதுவும் நீசமாகும்

தனியான தனுவுட னே மீனம் நட்பாம்

மானென்ற மற்றேழு ராசிதானும்

வரும் பகையா மென்றுனக்கு சாற்றினோம்யாம்

கோனென்ற போகருட கடாட்சத்தாலே

குணமான புலிப்பானி குறித்திட்டேனே.

நவக்கிரகநாயகனான தன்னேரில்லாத சூரியதேவனுக்கு சிம்மம் ஆட்சி வீடாகவும், மேஷம் உச்சவீடாகவும், துலாம் நீச்ச வீடாகவும் அமைவதுடன் தனித்தன்மை பெற்ற தனுசுடன் மீனம் நட்பு வீடாகும். தன்னிகரில்லாத குரு நாதரான போகரது கருணையினாலே இவை நீங்கிய மற்ற ஏழு வீடுகளும் பகையாம் என்று கூறினேன்.

இப்பாடலில் சூரியனின் ஆட்சி, உச்ச, நீச்ச, நட்பு மற்றும் பகை வீடுகளைப் புலிப்பாணி விவரிக்கிறார்.

004

ஆட்சி உச்சம் பகை நீச்சம் சந்திரன்

பாரப்பா சந்திரனுக் காட்சிநண்டு

பாங்கான விடைய துவே உச்சமாகும்

*வீரப்பா வீருச்சிகமும் நீசமாகும்*

*விருது பெற்றதனுமீனம் கன்னி`நட்பு*

*ஆரப்பா அறிவார்கள் மற்றாறு ராசி*

*அருளில்லாப் பகையதுவே யாகும்பாரு*

*கூறப்பா கிரகம் நின்ற நிலையைப் பார்த்து*

*குறிப்பறிந்து புலிப்பாணி கூறினேனே.*

*நவநாயகர்களில் சந்திரனுக்கு ஆட்சி வீடு கடகம், அருமையான ரிஷபராசி உச்ச வீடாகும். போர்க்குணம் கொண்ட விருச்சிகம் நீச்ச வீடாகும். மற்றபடி தனுசு, மீனம், கன்னி நட்பாகும். ஏனைய ஆறு ராசிகளும் [மேஷம், மிதுனம், சிம்மம், துலாம், மகரம், கும்பம்] பகையதுவேயாகும் கிரகங்கள் நின்ற நிலையை நன்கு கவனித்துப் பார்த்துப் பலன் குறிப்பறிந்து கூறவேண்டும்.*

*இப்பாடலில் சந்திரனின் ஆட்சி, உச்ச, நீச்ச, நட்பு மற்றும் பகை வீடுகளைப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

005

*கேளப்பா செவ்வாய்க்கு மேஷம் தேளும்*

*கெணிதமுட னாட்சியது வாகும்பாரு*

*நாளப்பா மகரமது உச்சமாகும்*

*நலமில்லா நீசமது கடகமாகும்*

*தாளப்பா தனுமீனம் ரிஷபம் கும்பம்*

*தயங்குகின்ற கோதையுடன் மிதுனம் நட்பாம்*

*பாளப்பா கால்சிங்கம் பகையாமென்று*

*பண்புடனே போகரெனக் குரைத்தார்தானே*

*செவ்வாய் கிரகத்திற்கு மேஷமும் விருச்சிகமும் ஆட்சி வீடாகும். சனி வீடான மகரம் உச்ச வீடாகும். கடகராசி நீச்ச வீடாக அமைந்து துர்ப்பலன் தரும். தனுசு, மீனம், ரிஷபம் ஆகியவற்றினோடு கன்னியும், மிதுனமும் நட்பு வீடுகளாகும். துலாமும் சிம்மமும் பகைவீடாம் என்று பண்பாகப் போகர் எனக்குச் சொன்னதை உரைத்திட்டேன்.*

*இப்பாடலில் செவ்வாயின் ஆட்சி, உச்ச, நீச்ச, நட்பு மற்றும் பகை வீடுகளைப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

006

*தானென்ற புதனுக்கு மிதுனமாட்சி*

*தன்மையுள்ள கன்னியது மாட்சி உச்சம்*

*மானென்ற மீனமது நீசமாகும்*

*மனிதரிலாம் கடகமது பகையாமென்று*

*வானென்ற மற்றேழு ராசிதானும்*

*வகையான நட்பென்று வாழ்த்தினோம்யாம்*

*நானென்ற போகருட கடாக்ஷத்தாலே*

*நவக்கிரக நிலையறிவாய் நன்மைதானே*

*தன்னிகரற்ற புதபகவானுக்கு ஆட்சி வீடு மிதுனம் என்றும், தன்மையுள்ள கன்னியது ஆட்சி வீடும், உச்ச வீடென்றும் மீனராசி நீச்ச வீடென்றும் மற்றும், கடகம், சிம்மம் பகை வீடென்றும் ஏனைய மேஷம், ரிஷபம், துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம் ஆகிய இராசிகள் எமது குருநாதரான போகரது அருளினாலே நட்பாம் என்ற வாழ்த்தினோம் எனினும் நவக்கிரக நிலையறிந்து பலன் கூறல் நன்மை பயக்கும்.*

*இப்பாடலில் புதனின் ஆட்சி, உச்ச, நீச்ச, நட்பு மற்றும் பகை வீடுகளைப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

007

*ஓமென்ற வியாழனுக்கு ஆட்சிகேளு*

*உண்மையுடன் தனுமீன மிரண்டேயாகும்*

*காமென்ற கற்கடகம் உச்சமாகும்*

*கனமில்லா மகரமது நீச்ச வீடாம்*

*போமென்ற விருச்சிகமும் பகையதாகும்*

*புகழ்பெற்ற மற்றேழு ராசிநட்பாம்*

*நாமென்ற போகருட கடாக்ஷத்தாலே*

*நயமாக புலிப்பாணி நவின்றிட்டேனே.*

*ஓம் என்ற பிரணவப் பொருளை விளக்கும் வியாழனுக்கு தனுசும்,மீனமும் ஆட்சி வீடென்றும் கர்க்கடகம் உச்ச வீடென்றும் உச்ச வீட்டிற்கு ஏழாவதான இராசி மகரமானது நீச்சமென்றும் விருச்சிக ராசி பகையென்றும் மற்றைய இராசிகளான மேஷம், ரிஷபம், மிதுனம், சிம்மம், கன்னி, துலாம், கும்பம் நட்பு வீடுகளாமென போகரது கருணையால் புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் வியாழனின் ஆட்சி, உச்ச, நீச்ச, நட்பு மற்றும் பகை வீடுகளைப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

008

*கேளப்பா சுக்கிரனுக் கெருதுகோலும்*

*கெணிதமுட னாட்சியது உச்சம்மீனம்*

*வாளப்பா கோதையவள் நீச்சமாவாள்*

*வகையில்லா சிங்கமுடன் விருச்சிகந்தாள்*

ஆளப்பா பகையதுவே யாகும் ஆறும்

அளவில்லா நட்பென்றே யறைந்தவாறு

மாளப்பா பகையதுவே யாகும் ஆறும்

மார்க்கமுடன் புலிப்பாணி யறிவித்தேனே.

சுக்கிர பகவானுக்கு ரிஷபமும், துலாமும் எண்ணிக் கூறி விடில் ஆட்சி வீடென்றும் மீனம் உச்ச வீடென்றும், கன்னி ராசி நீச்ச வீடென்றும் சிம்மமும் விருச்சிகமும் பகை வீடென்றும் ஏனைய இராசிகளான மேஷம், மிதுனம், கடகம், தனுசு, மகரம், கும்பம் நட்பு வீடென்றும் இதுவே நன்மார்க்கம்[வழி] என்றும் புலிப்பாணி கூறினேன்.

இப்பாடலில் சுக்கிரனின் ஆட்சி, உச்ச, நீச்ச, நட்பு மற்றும் பகை வீடுகளைப் புலிப்பாணி விவரிக்கிறார்.

009

தேனென்ற சனி தனக்கு மகரம்கும்பம்

தெகிட்டாத ஆட்சியது உச்சம்கோலாம்

மானென்ற மேஷமது நீசம்மற்ற

மற்கடக சிம்மமொடு விருச்சிகந்தான்

ஊனென்ற வீண்பகையாம் மற்றோரைந்தும்

உள்ளபடி நட்பாகு முடவனுக்கே

கோனென்ற குருவருளாம் கடாட்சத்தாலே

கொற்றவனே புலிப்பாணி கூறினேனே.

தேனைப் போன்ற இனிமையான பலன்களை வாரி வழங்கும் சனி பகவானுக்கு மகரமும் கும்பமும் ஆட்சி வீடாகும். துலாம்ராசி உச்ச வீடாகும். அவ்விராசிக்கு ஏழாவதான மேஷராசி நீச்ச வீடாகும். மற்றும் கர்க்கடகம், சிம்மம், விருச்சிகம் ஆகிய இராசிகள் பகை வீடென்றும் ஏனைய மீனம், ரிஷபம், மிதுனம், கன்னி, தனுசு ஆகிய ஐந்தும் நட்பு வீடுகளாம் என்றும் குருவாகிய போகரது கருணையாலே புலிப்பாணி கூறினேன்.

இப்பாடலில் சனியின் ஆட்சி, உச்ச, நீச்ச, நட்பு மற்றும் பகை வீடுகளைப் புலிப்பாணி விவரிக்கிறார்.

010

பாரப்பா ராகுடனே கேதுவுக்கும்

பாங்கான வீடதுவே கும்பமாட்சி

வீரப்பா விருச்சிகமும் கடகம் உச்சம்

வீறுடைய ரிஷபமது நீச்சம்சிம்மம்

காரப்பா பகையாகும் மற்றேழ்நட்பாம்

காண்பதுவும் மூன்றுபதி னொன்றாம் சொல்வார்

ஆரப்பா போகருட கடாட்சத்தாலே

அப்பனே புலிப்பாணி அறிவித்தனே.

நன்றாக ஆராய்ந்து பார்ப்போமானால் இராகு பகவானுக்கும், கேது பகவானுக்கும் நன்மையளிக்கும் ஆட்சி வீடு கும்பம் என்றும் முறையே இராகுவிற்கு உச்ச வீடு விருச்சிகம் என்றும் கேதுவுக்கு கர்க்கடகம் உச்ச வீடென்றும் ரிஷபம் நீச்ச வீடென்றும் சிம்மம் பகையென்றும் ஏனைய மற்றைய மேஷம், மிதுனம், கன்னி, துலாம், தனுசு, மகரம், மீனம் ஆகிய ஏழு இராசிகளும் நட்பென்றே போகருடைய கருணையால் புலிப்பாணி அறிவித்தேன்.

இப்பாடலில் ராகு, கேதுவின் ஆட்சி, உச்ச, நீச்ச, நட்பு மற்றும் பகை வீடுகளைப் புலிப்பாணி விவரிக்கிறார்.

ராகு

கேது

011

சீர்மலிமுதற்பாகத்தின் பலன் றான்

சித்தி தங்கிலேச மெய்சொரூபம்

பேர் மலிவயதும் பகர்தனுத்தானம்

பெருநிதிகீர்த்தி மூர்த்திகளும்

ஏர்மலிசு பந்தோஷநிறமும்

மிலக்கணமுபாங்கமே முதலாம்

தார்மலிபோகர் தாளிணைவணங்கிச்

சாற்றினே புலிப்பாணிதானே

பெருமைக்குரிய மாலையணிந்த என் குருநாதர் போகமுனிவரின் தாளிணை பணிந்து முதற் பாவகத்தின் மூலம் அறிந்துகொள்ள வேண்டிய விஷயங்களைப் பற்றிய பெயர்களைக் கூறுவேன் கேட்பீராக, ஒரு ஜாதகனின் வடிவத்தையும் அறிவு நலனையும், வயதையும், தன சம்பந்தமான விஷயங்களையும், கிடைக்கும் பெருநிதியையும். புகழையும்,அடையும் பேறுகளையும், ஏற்படக்கூடிய இன்பங்களையும், நிறத்தையும் குண விசேடங்களையும் நன்கு கூறலாம்.

இப்பாடலில் முதற் பாவத்தின் தன்மைகளைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.

012

தானமிகு ரெண்டிடத்தின் பெயரைக்கேளு

தனம்குடும்ப மொளிசெறிநேத் திரமும் வித்தை

ஈனமிலாச் செல்வமுடன் சாஸ்திரவாக்கு

*இரும்பொன்னும் முபதேச மியம்புகேள்வி*

*மானமிகு சவுபாக்கியங் கமனம் புத்தி*

*மற்றுமுள்ள நவரெத்தின வகையின் பேதம்*

*ஊனமிலா யிவை பார்த்து முணர்ந்துமென்று*

*உரைத்திட்டேன் புலிப்பாணி உறுதியாமே. 12*

*சிறப்பு மிகுந்த இரண்டாம் பாவகத்தால் அடையும் பலன்களின் பெயர்களாவன: இத்தானம் தனஸ்தானம் என்றும் குடும்பஸ்தானம் என்றும் ஒளிமிகுந்த நேத்திர ஸ்தானம் என்றும் கல்வி மற்றும் வித்தை ஸ்தானம் என்றும் கல்வி மற்றும் வித்தை ஸ்தானம் என்றும் மற்றும் செல்வம், சாத்திர அறிவு, வாக்கு, சிறப்புமிகு பொன் சேர்க்கை, உபதேசம், கேள்வி, மற்றும் சுக ஸ்தானம் என்றும் , மனம் , புத்தி மற்றும் நவமணிகளின் குற்றங்களையும் குறைகளையும் அறிந்துரைக்கும் குற்றமில்லாத தானமென்றும் உறுதியாகப் புலிப்பாணி உரைத்தேன்*

*இப்பாடலில் இரண்டாம் பாவத்தின் தன்மைகளைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

013

*ஆனமூன்றா மிடத்தினரும்பலன்*

*மானவீரியம் மற்றுயர்சேர்க்கையும்*

*தானயோகந் தயிரியஞ்சோதரர்*

*ஈனவேலை இருங்கலன் வீரமே.*

*மூன்றாம் இடத்தின் பலன்களாவன; மானவீரம், உயர்ந்தவர்கள் நட்புக்கொள்ளுதல், தானத்தில் ஈடுபாடு மேலானதாகக் கொள்ளும் யோகமும், வீரமும் வேகமும் கொண்ட சோதரர் ஸ்தானம் என்றும், ஈனவேலையில் வீறுடனும் வீரத்துடன் செயல்படுதலும் ஆன பலன்களைக் கூறலாம். (எ-று)*

*இப்பாடலில் மூன்றாம் பாவத்தின் தன்மைகளைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

014

*வித்தை வாகனம் வீடுசுபஞ்சுகம்*

*மெத்தையன்னை மிகுசுகநான்கதாம்*

*பத்தின்பாதி பழையசீமான் கந்திரம்*

*வித்தை புத்திபுத்திரர் செல்வமே*

*நான்காவது பாவகத்தின் மூலம் வித்தை, வாகனம், வீடு, சுபம் மற்றும் மெத்தை, தழுவணை மிகுவதும் ஆன சுகபோகங்களையும் அறியலாம்.பத்தில் பாதியான ஐந்தாம் பாவம் பூர்வ புண்ணிய ஸ்தானமானதால் முன்னோர் பெருமை கல்வி, வித்தை நலம், சிறந்த புத்தி மற்றும் புத்திரர் செல்வம் ஆகியன பற்றித் தெற்றென எழுதலாம். (எ-று)*

*இப்பாடலில் நான்காவது, ஐந்தாம் பாவத்தின் தன்மைகளைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

015

*ஆறா மிடத்தின் னதுபலன் றானப்பா*

*ஆயுதத்தால் ரணஞ்சொல்லு ஞாதிதுன்பம்*

*வீரான யுத்தமொடு திரவியநஷ்டம்*

*மிகுதிருடர் ஜலமடந்தை விளையுஞ்சோர்வும்*

*கூறான மெய்வாதை பெண்ணால்கண்டம்*

*கூடுமேபெரும்பாலும் நோயுமென்று*

*பேரான சிறைச்சாலை கிட்டுமென்று*

*பேசினேன் புலிப்பாணி பிரியத்தோட*

*ஆறாம் இடத்தினால் அரியத் தரும் பலன்களாவன: ஆயுதத்தால் ஏற்படும் அபாயம், தாயாதிகளால் ஏற்படும் துன்பம், யுத்தபயம், திரவிய நஷ்டம், திருடர்களால் ஏற்படும் தொல்லை, ஜலகண்டம், பெண்களால் ஏற்படும் துன்பங்கள், செய்வினைகளால் சோர்வுறுதல், உடலுபாதை, பெண்ணால் ஏற்படும் கண்டம் நோய்கள் மற்றும் சிறை வயப்படும் தொல்லைகள் ஏற்படுமென் பிரியமாக புலிப்பாணி குருவருளாலே கூறினேன். (எ-று)*

*இப்பாடலில் ஆறாம் பாவத்தின் தன்மைகளைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

016

*சப்தமத்தின் பலன்கேளு மணமதாகும்*

*தகுமடந்தை புதல்வர்க்குச் சான்றுமின்பம்*

*சித்தமுள வுபகார மனஞ்சுற்றத்தார்*

*அபிமானமரசரது சேர்சன்மானம்*

*தத்துகயல் விழிமாது சேர்க்கைநன்றாய்*

*சதிருடனே தான் வந்து சேருமென்று*

*கொத்தாக நீயறிந்து கூறுவாயேல்*

*குறிதப்பா பலன் வந்து கூடுமன்றே.*

*சப்தமஸ்தானம் என்னும் ஏழாம் இடத்தினால் ஏற்படும் பலன்களாவன: மணம் நிகழ்தலும் நல்ல மனைவியும், புதல்வர்கள் வாய்த்தலும் அவர்களால் இன்பம் வாய்த்தலும் சுற்றத்தார் உறவு அதிகமாதலும் அவர்களது அபிமானம் நேருதலும் அரச சன்மானம் வாய்த்தலும் போகஸ்திரீகள் வாய்த்தலும் நிஷ்களங்கமின்றி வந்து சேரும்மென்று ஆராந்து அறிந்து கூறின் புலிப்பாணி குருவருளால் குறித்துச் சொன்ன குறி தப்பாது.*

*இப்பாடலில் ஏழாம் பாவத்தின் தன்மைகளைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

017

*அஷ்டமயோக மரும்பிணி சண்டையும்*

*நஷ்டங்கிலேசம் பகைநன்மரணமும்*

*துஷ்டடம்பமும் துன்றுமலையேறி*

*கஷ்டப்பட்டு கலங்கி விழுதலே*

*அஷ்டம பாவகத்தால் அரிய நோய்களைப் பற்றியும், விளையும் சண்டைகளையும், நஷ்டங்களையும் மனம்பேதலித்தலையும், பகைமையையும், மரணசம்பவத்தையும், துஷ்டத்தனத்தையும், வீண்டம்பத்தையும், மலைமீதுஏறிமிகுந்த துன்பமுற்றுக்கலங்கி விழுதலையும் அறியலாம்.*

*இப்பாடலில் எட்டாம் பாவத்தின் தன்மைகளைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

018

*ஒன்பதாம்பல னாகுமுபதேச*

*மின்பகூப மிகும் பணிகூபமும்*

*வன்வதான பரியும் வளப்பமும்*

*தன்மதானந் தனங்களுஞ்சாற்றுவர்*

*ஒன்பதாம் பாவகத்தால் ஏற்படும் பலன்களாவன: ஞானோபதேசம் பெறுதலும் இன்பம் வாய்த்தலும் நீர் வளப்பெருக்கும் ஆடையாபரணச் சேர்க்கையும் இன்னும், வாகனம், பரி முதலானவையும், மிகுந்த தனலாபம் தன்னலம் கருதாத தானதர்மங்கள் வாய்த்தலும் வெகு தனம் வாய்த்தலும் நேரும்.*

*இப்பாடலில் ஒன்பதாம் பாவத்தின் தன்மைகளைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

019

*பத்தாகு மிடத்தினது பலனைக்கேளு*

*பட்டணங்கள் தாபித்தல் பலங்களோடு*

*வித்தான பலபுண்ணியந் தேசாபிமானம்*

*வீறான அரசனொடு கருமம் ஞானம்*

*சித்தமதி லிரக்கமிகு தெய்வபக்தி*

*சேருகின் றசவுரியமுங் கொப்பமூணும்*

*நத்துகின்ற பூசையோடு மனைவிசேர்க்கை*

*நலமாக விப்பலனை நவிலுவாயே.*

*பத்தாம் பாவகத்தின் பலன்களாவன: பட்டினங்கள் ஸ்தாபித்தலும், நல்லூழோடு பல புண்ணியம் செய்தலும் தேசாபிமானமும், அரசரோடு இணக்கமுறுதலும் நற்கருமம் ஞானம் முதலிய வாய்த்தலும், மனத்தில் இரக்க உணவு இழையோடுதலும் மிகுந்த தெய்வ பக்தியும் சிறந்த சௌகரியமும் கருப்பம் வாய்த்தலும் நல்ல உணவு வாய்த்தலும் வெகுவான பூசைகளைச் செய்வதோடு துணைவி சேர்க்கையும் நலமாகக் குறித்தறிந்து கூறுவாய்.*

*இப்பாடலில் பத்தாம் பாவத்தின் தன்மைகளைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

020

*பத்தின்மேலொன்றாகும் பலனைநன்றாய்*

*பகருகிறேன் பயிர் வளப்பம் பரிநல்வேழம்*

*வித்தைமிகு லாபங்கல் லறிவுசேர்க்கை*

*மிகுமனதிற்றூக்கமொடு சிவிகைசேரும்*

*உத்தரியஞ் செறிந்தபசும் பொன்னையொத்த*

*உயர்மனைவி யோகமது முதலாயுள்ள*

*மெத்தவே நீயறிந்து விளம்புவாயேல்*

*வேதமா யுன்வார்த்தை விரும்புவாரே*

*பதினோராம் இடத்தின் பலன்களாவன: விவசாய அபிவிருத்தி ஏற்படுதலும், பரியொடு யானை முதலியன வாய்த்தலும் (வாகனங்கள் அமைதலும்) நல்ல வித்தைகள் வாய்த்தலும், மிகுந்த இலாபங்கள் வாய்த்தலும், நல்ல அறிவுடையோர் தொடர்பு வாய்த்தலும், மனத்தில் ஊக்கமும் சிவிகை சேர்தலும், உத்தரியம் மகரகண்டிகை வாய்த்தலும், நன்மனைவி யோகமும் இது போன்ற நன்மையானவை யெல்லாம் நன்கு ஆராய்ந்து குறித்துக்கூற உன்றன் வார்த்தைகளை வேதமாய், எண்ணிக் கொண்டாடுவார்கள்.*

*இப்பாடலில் பதினோராம் பாவத்தின் தன்மைகளைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

021

*பத்தின்மேல் இரண்டாகும் பெயரைக்கேளு*

*பரதேச வுத்தியோகம் பணத்தின்சோர்வு*

*சத்தான பலியோக சயனம் தியாகம்*

*தர்மமொடு கர்மபலன் சவுக்கியமாக*

*வித்தான பலபுண்ணிய விவாதமோடு*

*விளைந்திடுமே தொழிலான பலதானங்கள்*

*கத்தாதே போகருட கருணையாலே*

*கரைந்திட்டேன் புலிப்பாணி கருத்தைத்தானே.*

*பன்னிரண்டாம் பாவகத்தின் பலன்களாவன: பிறதேச சௌக்கியம், உத்தியோகம், பணத்தால் ஏற்படும் சோர்வு பலயோகங்கள் வாய்த்தலும் சயன சுகம், தியாகம், தர்மம் ஆகியவற்றோடு கர்மபலனும் மற்றும் சுகமடைதலும், பல புண்ணிய சம்பந்தமும் விவாதத்தில் வல்லமையும் ஏற்படக் கூடிய தொழில்களும் பற்பல தானங்களும் வாய்த்தலை உணர்ந்து கூறினால் நன்மை பயக்கும் எனக் குருவருள் கொண்டு புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் பன்னிரண்டாம் பாவத்தின் தன்மைகளைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

022

*சோதியென்ற குருபதியும் வெள்ளிநீலன்*

*சொலிக்கின்ற கதிர்மதிசேய் கணக்கன்பாம்பு*

*ஆதியென்ற ராசிபனி ரெண்டுக்குள்ளே*

*அடக்கிவைத்தார் கோள்களையும் ஆயன்தானும்*

*வாதியென் ஞானியும் பலவாறாக*

*வையகத்தில் பூட்டிவைத்தார் வரிசையாக*

*சாதகமாய் சென்மனுக்கு சுட்டிக்காட்டி*

*சமர்த்தாகப் பலன் சொல்லும் குறியைக்கேளே.*

*சோதிவடிவான குருவும், சுக்கிரன்,நீலனும் சனியும் ஒளி வீசுகின்ற சூரியனும்,சந்திரனும், செவ்வாய்க் கிரகமும், இன்னும் புதபகவானும் பாம்பிரண்டும் ஆகிய இந்த நவகோள்களையும் ராசிமண்டலமான பன்னிரு ராசிகளுக்குள்ளே அடக்கி வைத்தார் பேரொளிப்பிழம்பான இறைவன்.இது குறித்து வாதிட்டுக் கணித்த ஞானியர் பூவுலகில் வரிசைப்படுத்தி கூறிவைத்துள்ளார்கள். எனவே [ஒருவன் தன் ஜென்மஜாதகம் குறித்துக் கேட்க வருவானேல்] அவனுக்குச் சாதகத்தைக் கூறும் சமர்த்தான முறையினைக் கூறுகிறேன். எனது குறிப்பினை நன்கு உணர்ந்து கூறும் வகையைக் கேட்பாய்.*

023

*கேளப்பா மேடத்தில் செனித்தபேர்க்கு*

*கெடுதிமெத்த செய்வனடா கதிரோன்பிள்ளை*

*ஆளப்பா அகம்பொருளும் நிலமும் ஈந்தால்*

*அவன் விதியுங்குறையுமடா அன்பாய்க்கேளு*

*கூறப்பா கோணத்தி லிருக்கநன்று*

*கொற்றவனே கேந்திரமும் கூடாதப்பா*

*தாளப்பா போகருட கடாக்ஷத்தாலே*

*தனவானாய்வாழ்ந்திருப்பன் திசையிற்சொல்லே*

*மேடத்தை இலக்கினமாகப் பெற்று ஜெனித்த ஜாதகருக்கு சூரிய பகவானின் பிள்ளையான*

*சனிபகவான் மிகுந்த தொல்லை தருவான். அவ்வாறில்லாமல் அவன் வீடும், பொருளும், நிலபுலன்களும் தருவானேயானால் அச்சாதகன் ஆயுள்குறையும் என்பதையும் உணர்வாயாக. மேலும் அச்சனிபகவான் 1,5,9, ஆகிய கோணத்தில் இருந்தால் மிகுந்த நன்மை விளையும். அதற்கு மாறாகக் கேந்திரத்தில் அ·தாவது 1,4,7,10 ஆகிய இடங்களில் இருந்தால் கெடுபலனே விளையுமாதலால் அவ்வாறிருத்தல் ஆகாதப்பா, போக மகா முனிவரின் கருணையாலே மிகவும் லட்சுமிகடாட்சத்துடன் தனலாபம் பெற்று வாழ்வான். இதனை அவனது திசாபுத்திகளில் சொல்க.*

*இப்பாடலில் மேஷ இலக்கினத்தில் பிறந்த ஜாதகரரைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

024

*சொல்லப்பா எருதோடு மிதுனத்தோர்க்கு*

*சுகமெத்த உண்டென்று சொல்லுவார்கள்.*

*அல்லப்பா அந்தணரும் கேந்திரமேற*

*அவர் செய்யுங்கொடுமையது மெத்தவுண்டு*

*தள்ளப்பா தரை பொருளும் தனமும்நாசம்*

*தார்வேந்தர் தோஷமுடன் அரிட்டம்செப்பு*

*குள்ளப்பா குருமதியுங் கோணமேற*

*கொற்றவனே குழவிக்கு நன்மைகூறே*

*அன்பனே! நான் கூறுவதை மிகவும் கவனமாகக் கேட்பாயாக! ரிஷபம், மிதுனம் ஆகிய லக்கினத்தில் பிறந்தவர்களுக்கு சுகம் மிகவும் என்றும் உண்டு எனக் கூறுவார். ஆயினும் அந்தணர் எனப்படும் குருபகவான் கேந்திரத்தில் [1,4,7,10 ஆகிய இடங்களில்] நின்றால் அவரால் ஏற்படும் கொடுமை மிகவும் அதிகம். எவ்வாறெனில், பூமி, பொருள், தனம் நாசமடையும். அது மட்டுமல்லாமல் அன்றலர்ந்த மலர்மாலை அணியும் அரசர்களின் துவேஷமும் ஏற்படும். நோய் முதலிய துன்பம்,உண்டென்று கூறுவாய் எனினும் குருபகவானும் சந்திரனும் 1,5,9 ஆகிய திரிகோண ஸ்தானத்தில் இருப்பார் என்றால் ஜாதகனுக்கு நன்மை பெருகிப் பல்கும் எனவும் கூறுவாயாக.*

*இப்பாடலில் ரிஷபம், மிதுன இலக்கினத்தில் பிறந்த ஜாதகரரைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

025

*கூறப்பா கடகத்தில் செனித்த பேர்க்கு*

*கொடுமைபலன் தந்திடுவார் சுக்கிராச்சாரி*

*வாரப்பா வரம் பெற்ற இந்திரசித்து*

*வகைமடிப்பாய் மாண்டானே வெள்ளியாலே*

*சீரப்பா திரிகோணம் மறிந்துநிற்க*

*சிவ சிவா செம்பொன்னும் ரதங்களுண்டு*

*கூறப்பா மற்றவிடம் கூடாதப்பா*

*கொற்றவனே நிலைசமயம் கூற்ந்துபாரே*

*கடக லக்கினத்தில் ஜனித்த ஜாதகருக்கு, வெள்ளி என விளம்பும் சுக்கிராச்சாரியார்` மிகுதியான தீயபலன்களைத்தருவார். எவ்வாறெனில் யாராலும் வெல்ல முடியாத வரம் பெற்ற இராவணன் மகனாகிய இந்திரசித்தும் இக்சுக்ராசாரியினால் வகைதொகையாய் மாண்டதையும் அறிவாயன்றோ? ஆயினும் இச்சுக்கிரன் இவர்களுக்குத் திரிகோண ஸ்தானங்களில் நின்றால் சிவபரம்பொருளின் பேரருளினால் பெருந்தனம் வாய்க்கும். மற்றும் ரதம் முதலிய வாகன யோகமும் உண்டு. ஏனைய இடங்களில் இருப்பின் ஆகாது.*

*இப்படிப்பட்ட ஜாதகரின் கிரக நிலை, திசாபுத்தி ஆகியனவற்றை நன்கு ஆராய்ந்தறிந்து பலன் கூறுவதே சிறப்புடையது.*

*இப்பாடலில் கடக இலக்கினத்தில் பிறந்த ஜாதகரரைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

026

*பாரப்பா சிங்கத்தில் செனித்த பேர்க்கு*

*பவுமனுமே திரிகோண மேறிநிற்க*

*சீரப்பா செம்பொன்னும் செல்வம் பூமி*

*சிவ சிவா சிக்குமடா சென்மனுக்கு*

*வீரப்பா மற்றயிடந் தனிலேநிற்க*

*வெகுமோசம் வருகுமடா வினையால் துன்பம்*

*கூறப்பா போகருடா கடாக்ஷத்தாலே*

*கொற்றவனே புலிப்பாணி குறித்திட்டேனே.*

*சிம்மத்தில் பிறந்த அதாவது சிம்மலக்கின ஜாதகருக்கு செவ்வாய்க் கிரகமானது திரிகோண ஸ்தானத்தில் அமைந்தால் பெருஞ்சீர் வாய்க்கும்:*

*செம்பொன் சேரும், செல்வமும் பூமியும் வாய்க்கும். இவையும் சிவபரம்பொருளின் பேரருளேயாகும். ஆனால் அத்திரிகோண ஸ்தானம் தவிர வேறிடத்தில் அமர்ந்திருப்பின், அவனால் மிகுந்த துன்பமும் செய்வினை முதலிய துன்பங்கள் ஏற்படுதலும் உண்டாகும். எனது சற்குருவாகிய போக மகாமுனிவரின் பேரருளால் கூறினேன். இக்குறிப்பினை அறிந்து ஜாதகனுக்குப் பலன் கூறுவாயாக.*

*இப்பாடலில் சிம்ம இலக்கினத்தில் பிறந்த ஜாதகரரைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

027

*குறித்திட்டேன் கன்னியிலே உதித்தபேர்க்கு*

*குற்றம்வந்து நேருமடா குருவினாலே*

*பரித்திட்டேன் பண்டுபொருள் நிலமும்சேதம்*

*பகருகின்ற குருபதியும் கோணமேற*

*சிரித்திட்டேன் சென்மனுக்கு வேட்டலுண்டு*

*செந்திருமால் தேவியுமே பதியில் வாழும்*

*குறித்ததொரு மனை தனிலே தெய்வமுண்டு*

*குற்றமில்லை புலிப்பாணி கூறினேனே*

*கன்னியா லக்கினத்தில் உதித்த பேர்க்குக் குருவினால் வெகு துன்பம் வாய்த்திடுதல் உண்மையேயாகும். எவ்வாறெனில் பூர்வீக சொத்துகளும், நிலமும் சேதமாகும் என்பது உண்மையே, ஆனால் குருவும் மதியும் திரிகோண ஸ்தானத்தில் அமைவதில் பலனுண்டா? என நினைப்பின் எனக்குச் சிரிப்புதான் வருகிறது. ஏனெனில் இத்தகைய ஜென்மனுக்கு வேட்டல் உண்டு என்பதும் உண்மையேயாமன்றோ? எனினும் திருமகள் கணவனான திருமாலும் அவனது திருவான தேவியும் அவன் மனையில் வாழ்வர். அவர் தம் மனையில் தெய்வம் வாழும். எனவே இதனால் குற்றமில்லை என்பதை போகரது மாணாக்கனான புலிப்பாணியாகிய நான் இதைக் குறித்துச் சொன்னேன்.*

*இப்பாடலில் கன்னி இலக்கின ஜாதகர் இலக்கினத்தில் பிறந்த ஜாதகரரைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

028

*கூறினேன் கோலுட யில்லு மாகில்*

*கொற்றவனே கதிரவனும் கோணமேற*

*சீரி§¨ன் சென்மனுக்கு யோகம்மெத்த*

*சிவசிவா சிவபதவி கிட்டும் செப்பு*

*மாறினேன் மற்றவிடந் தன்னில்நிற்க*

*மார்த்தாண்டன் திசையுமது ஆகாதப்பா*

*தேரினேன் போகருட கடாக்ஷத்தாலே*

*திடமான புலிப்பாணி தெரிவித்தேனே*

*இலக்கினம் துலாம் ஆக இருக்க அவ்விலக்கினத்திற்குத் திரிகோண ஸ்தானமான1,5,9-இல் சூரியன் நிற்கப் பிறந்தஜாதகனுக்கு மிகவும் சிறந்த ராஜ யோகங்கள் பேரருளால்கிட்டும் என்பதையும் திடமாகக் கூறுவாயாக வேறு இடங்களில் மாறி நிற்பின் அவனது திசாபுத்திகள்*

*மிகவும் தொல்லை தருவனவேயாகும். இதுவே என் குருநாதர் போகரது அருட்கருணை கொண்டு திடமாக நான் அறிந்து கொண்ட காரணத்தால் நீ தேர்ச்சி பெறஎடுத்துச் சொன்னேன். உணர்க!*

*இப்பாடலில் துலாம் இலக்கினத்தில் பிறந்த ஜாதகரரைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

029

*தெரிவித்தேன் தேளினில்லம் சென்மந்தோன்ற*

*செழுமதியும் கோணத்தில் சேரநன்று*

*அறிவித்தேன் அகம்பொருளும் அடிமைசெம்பொன்*

*அப்பனே கிடைக்குமடா அவனிவாழ்வன்*

*அறிவித்தேன் கேந்திரமும் கூடாதப்பா*

*மறையவனே கொடும்பலனை குறித்துச்சொல்லும்*

*தெரிவித்தேன் போகருட கடாக்ஷத்தாலே*

*தேர்ந்து நீபுலிப்பாணி நூலைப்பாரே*

*தேள்சின்னம் கொண்டவிருச்சிக இலக்கினத்தில் பிறந்தோனுக்கு நன்மை செய்யத்தக்க சந்திர பகவான் திரிகோணத்தில் அமைவது நற்பலன்களை வாரி வழங்கும். இதனை உனக்கு நன்கு அறிவுறுத்துகிறேன். நல்ல வீடு அமைதலும் தனலாபம் பல்கிப் பெருகுதலும், அடிமைகள் வாய்த்தலும் சீரிய பொன்னாபரண சேர்க்கையும் அவனுக்குக் கிடைத்து இந்த பூமியில் வெகு புகழுடன் வாழ்வான். ஆனால் 1,4,7,10 ஆகிய கேந்திரஸ்தானத்தில் அவன் வீற்றிருப்பின் இதற்கு நேர்மாறான பலன்களை நீ கூறவும். இதையும் என் குருவான போகரது கடாட்சத்தாலேயே நான் குறித்துச் சொல்கிறேன். நன்றாக ஆய்ந்தறிந்து என் நூலின் சிறப்பினை உணர்ந்து கொள்க.*

*இப்பாடலில் விருச்சிக இலக்கினத்தில் பிறந்த ஜாதகரரைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

030

*பாரப்பா வில்லதனில் உதித்தபேர்க்கு*

*பகருவேன் புந்தியுமே பகையுமாவர்*

*சீரப்பா சென்னல் விளை பூமிதோப்பும்*

*சிவசிவா செம்பொன்னும் சேதமாகும்*

*நீரப்பா நெடுமாலும் கோணமேற*

*நீணிலத்தில் பேர்விளங்கும் நிதியுமுள்ளோன்*

*ஆரப்பா போகருட கடாக்ஷத்தாலே*

*அப்பனே புலிப்பாணி பாடினேனே*

*இராசி மண்டலந்தன்னில் வில்லைத் தன் இலச்சினையாக்கொண்ட தனுசு ராசியைஇலக்கினமாகக் கொண்டு ஜனித்த ஜன்மனுக்கு கணக்கன் என்றும் புந்தி என்றும் புகலப்படும் புதபகவான் பகையானவர். அவரால்,*

*செம்பொன்விளையும் பூமியும், தோப்பு துரவுகளும் பூர்வ புண்யவசத்தால் பெற்ற அருந்திரவியங்களும் சேதமாகும். ஆனால் அதே புதன் 1,5,9 ஆகிய் திரிகோணஸ்தானத்தில் வீற்றிருப்பின் சிறந்த பூமியில் தன் பெயர் விளங்கக் கூடிய பெருநிதி படைத்தோனாக அச்சாதகன் விளங்குவான் என்பதையும் குருவருளால் குருவாணை கொண்டு குவலயத்திற்கு புலிப்பாணி உரைத்தேன்.*

*இப்பாடலில் தனுசு இலக்கினத்தில் பிறந்த ஜாதகரரைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

031

*அறைந்திட்டேன் இன்னமொன்று அன்பாய்க்கேளு*

*அப்பனே மகரத்தில் உதித்தசேய்க்கு*

*திரந்திட்டேன் திரவியமும் மனையும் சேதம்*

*தேசமா ளரசனுட பகையுண்டாகும்.*

*குறைந்திட்டேன் கொடுஞ்சேயும் கோணமேற*

*கோவேறு கழுதைகளும் காவல் மெத்த*

*பரந்திட்டேன் போகருட கடாக்ஷத்தாலே*

*பதியறிந்து புவியோர்க்குப் பாடினேனே*

*இன்னுமொன்றையும் சொல்வேன்; நன்கு ஆராய்ந்து கேட்டுத் தெரிந்து கொள்வாயாக! மகர லக்கினத்தில் பிறந்த சாதகனுக்கு திரவிய நாசமும் மனை நாசமும் தேசத்தை ஆளும் மன்னரின் பகையுமுண்டாகும். ஆனால் சனி, சேய்* [செவ்வாய்] *ஆகிய கிரகங்கள் கோணத்தில் வீற்றிருந்தால் நிறைந்த பதி வாகனப் பிராப்தியும், பாதுகாவல் மிகுதியும் உண்டென்றும் எனது குருவான போகரின் கருணை கொண்டே கூறுகிற புலிப்பாணி ஆகிய என்றன் கருத்தை கிரக நிலவரத்தை ஆய்ந்தறிந்து கூறவேண்டியது நன்மை தரும்.*

*இப்பாடலில் மகர இலக்கினத்தில் பிறந்த ஜாதகரரைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

032

*பாடினேன் இன்னமொரு புதுமைகேளு*

*பாங்கான கும்பத்தி லுதித்த சேய்க்கு*

*ஆடினேன் அசுரர்குரு கோணமேற*

*அப்பனே உப்பரிகை மேடையுண்டு*

*தேடினேன் திரவியமும் சென்னல் பூமி*

*திடமாகச் சேருமடா செல்வமுள்ளோன்.*

*கூடினேன் கேந்திரமும் நட்புமே*

*கொற்றவனே துர்ப் பலனைக் கூறுவாயே*

*நான் என்கவியில் பாடுகின்ற இன்னொரு புதுமையையும் மனங்கொண்டு கேட்பாயாக! மிக அழகிய கும்ப லக்கினத்தில் உதித்த மகனுக்கு அசுரர் தம் குருவான சுக்கிராச்சாரியார் திரிகோண ஸ்தானங்களில் அமர்ந்தால் உப்பரிகையும் சிறந்த மேடையும், இணையற்ற திரவியமும் செந்நெல் விளையும் நறுவிய பூமியமைதலும் நிச்சியமாக நேரும். மிகு தனவானாக சிறந்து வாழ்வான். ஆயினும் கேந்திர* [1,4,7,10] *நட்பு ஸ்தானங்களில் சுக்கிரபகவான் இருந்தால் மேற்குறித்த பலனுக்கு நேர்மாறான பலன்களைக் குறித்து கிரக நிலவரம் அறிந்து கூறுவாயாக!*

*இப்பாடலில் கும்ப இலக்கினத்தில் பிறந்த ஜாதகரரைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

033

*கூறேநீ மீனத்தில் குழவிதோன்ற*

*கொற்றவனே மாலோடு வெள்ளியாகா*

*ஆரேநீ அகம் பொருளும் நிலமுஞ்சேரும்*

*அப்பனே அங்கத்தில் மச்சமுண்டு*

*பாரேநீ கோணத்தி லிருந்த பேர்க்கு*

*பகருவாய் நற்பலனை யறிந்துநீதான்*

*யேரேநீ போகருட கடாக்ஷத்தாலே*

*யெமலோகஞ் சேர்வனடா இயம்பினேனே*

*மீன இலக்கினத்தில் பிறந்த சாதகனுக்கு புதனும், சுக்கிரனும் தீமை செய்யும் கிரகங்களேயாகும். அவர்களால் வீடு, திரவியம், நிலபுலன் வாய்த்தல். நேர்தலும் அங்கத்தில் மச்சமுண்டாதலும், இவர்கள் திரிகோணஸ்தானத்தில் நின்ற பேர்க்கு வாய்க்கும். இத்தகைய நற்பலன்களை கிரக நிலவரங்களை நன்கு ஆராய்ந்து கூறுக. என் குருநாதராகிய போகமா முனிவரது அருளாணையால் நான் அறிந்து கொண்ட வண்ணம் இச்சாதகன் எமலோகம் சேர்வது திண்ணம் என நான் உரைத்தேன்.*

*இப்பாடலில் மீன இலக்கினத்தில் பிறந்த ஜாதகரரைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

034

*காணப்பா இன்னுமொரு செயலைக்கேளு*

*கனமுள்ள குளியனுமே பதியில்நிற்க*

*ஆணப்பா அகம்பொருளும் நிலமுங்காடி*

*அப்பனே அயன்விதியும் தீர்க்கஞ்சொல்லு*

*கூணப்பா குளியனுமே துதியில்நிற்க*

*கொற்றவனே கலகனடா நேத்திரரோகன்*

*தாணப்பா தனவிரயம் தோடம் சொல்லு*

*தரணிதனில் துஷ்டனென்று கூறுகூறே*

*சோதிடம் கூறப்புகும் மகனே! இன்னுமொன்றையும் நன்கு உணர்ந்து கொள்வாயாக. சனியின் மைந்தனும் மாந்தி என்றும் குளிகன் என்றும் கூறப்படும் கிரகமானது லக்கினத்தில் அமைந்தால் அச்சாதகனுக்கு நல்ல மனை வாய்த்தலும் நிறைதனமும், நிலம் முதலியன அமைதலோடு அவனது விதியும் தீர்க்கமானதாக அமையும் என்று கூறுக. ஆனால் தனஸ்தானமான இரண்டாமிடத்தில் அமைய அவன் கலகன் எனவும் நேத்திர ஊனம் உறுவோன் என்றும் அதாவது கண்களில் ரோகம் பெறுபவன் என்றும், தனவிரயம் செய்வன் என்பது மட்டுமல்லாமல் தரணியில் துஷ்டன் எனவும் பெயர் வாங்குவன் என நீ துணிந்து கூறுவாயாக.*

*இப்பாடலில் இலக்கினத்தில் மாந்தி என்றும் குளிகன் அமரப் பிறந்த ஜாதகரரைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

035

*கூறப்பா குளிகனுமே மூன்றில் நிற்க*

*கொற்றவனே துணைவனுடன் போரும்செய்வன்*

*வீரப்பா விரதனடா வாய்ச்சமர்த்தன்*

*விளம்புகிறேன் நாலினுட விவரங்கேளு*

*பாரப்பா பதி கடந்து கிரியில் வாசம்*

*பாலனவன் சிலகாலம் வாழ்ந்திருந்து*

*கூறப்பா போகருட கடாக்ஷத்தாலே*

*குற்றமில்லை புலிப்பாணி கூறினேனே.*

*இக்குளிகன் திருதிய ஸ்தானத்தில் அதாவது மூன்றாமிடத்தில் அமையப் பெற்ற சாதகன் தன் தம்பியரோடும், நண்பர்களோடும் போர் செய்பவன் என்பதையும் நீ உணர்ந்து கூறுவதோடு இவன் வாய்ச் சமர்த்தன், நல்ல விரத ஒழுக்கமுள்ளவன் என்பதையும் உணருக. மேலும் நான் கூறுவதைக் கேட்பாயாக. குளிகன் நான்கில் அமையப் பெற்ற சாதகன் தன் பிறப்பிடத்தை விட்டு வேற்றிடம் சென்று, மலைப் பகுதிகளிலும் சில காலம் வாழ்ந்திருப்பன். அதனால் குற்ற மொன்றுமில்லை என்று போக முனிவரின் பேரருட் கருணை கொண்டு புலிப்பாணி கூறினேன். இதை நன்கு ஆய்ந்து தெளிக.*

*இப்பாடலில் மூன்றாமிடத்தில் மாந்தி என்றும் குளிகன் அமரப் பிறந்த ஜாதகரரைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

036

*கூறினேன் கிரிஅய்ந்தில் முடவன்பிள்ளை*

*குணமாக வாழ்வனடா சேய்க்குதோஷம்*

*தேரினேன் வீரனடா சத்துருபங்கன்*

*திடமாக வாழ்வனடா தனமுள்ளோன்*

*ஆரினேன் அயன் விதியுமெத்தவுண்டு*

*அப்பனே அடுத்தோரைக் காக்கும் வீரன்*

*கூறினேன் குளியனுமே ஆறில் நிற்க.*

*கொற்றவனே இப்பலனைக் கூறினேனே.*

*இலக்கனத்திற்கு ஐந்தாம் இடத்தில் சனியின் குமாரனான குளிகனானவன் நிற்கப்பிறந்தவன் குணவானாக வாழ்வான் எனினும் புத்திர தோடம் உடையவனேயாவான். மிகச் சிறந்த வீரனாக இவன் விளங்குவதோடு பகையை ஒழித்தழிக்கும் பாங்கறிந்தவன்; திடமாக வாழ்பவன். வெகுதன தான்ய சம்பத்துடைவன், மேலும் இக்குளிகன் ஆறாமிடத்தில் நிற்கப் பிறந்தவன் நிறைந்த ஆயுள் உள்ளோன். பரோபகாரி, இவனும் வீரனே என்பதனை நன்கு கிரக பலம் அறிந்து கூறுவாயாக.*

*இப்பாடலில் ஐந்தாம் இடத்தில் மாந்தி என்றும் குளிகன் அமரப் பிறந்த ஜாதகரரைப் பற்றிப்*

*புலிப்பாணி விவரிக்கிறார்.*

037

*குறித்திட்டேன் குளிகனுமோ ரேழில்நிற்கக்*

*கொற்றவனே குடும் பிக்குக் கண்டம்சொல்லு*

*சிரித்திட்டேன் சென்மனுக்கு விவாதத்தாலே*

*சிவசிவா செம்பொன்னும் நஷ்டமாகும்.*

*அரித்திட்டேன் அட்டமத்தில் குளிகன்நிற்க*

*அப்பனே அழும்பனடா ஜலத்தால் கண்டம்*

*முரித்திட்டேன் போகருட கடாக்ஷத்தாலே*

*முகரோக முண்டென்று மூட்டுவாயே.*

*மேலும் ஒரு கருத்தைக் குறித்துச் சொல்வேன் கேட்பாயாக! இலக்கினத்திற்கு ஏழாம் இடத்தில் குளிகன் நிற்கப் பிறந்த சாதகனுக்குக் கண்டம் நேரும். இவனுக்கு விவாதத்தாலே வெகுதன விரயம் சிவனருளாலே சித்திக்கும். அதே போல் எட்டாமிடத்தில் குளிகன் நிற்கப் பிறந்த ஜாதகன் மகா அழும்பன் என்பதோடு நீரால் கண்டம் ஏற்படும் என்பதையும், அறிவித்துக் கொள்ளலாம். என் குருவான போகருடைய கருணையாலே புலிப்பாணியாகிய நான் கூறும் இன்னொன்றையும் நீ அறிந்து கொள்க. இச்சாதகன் முகரோகன் என்பதையும் நீ உணர்த்துவாயாக.*

*இப்பாடலில் ஏழாம் இடத்தில் மாந்தி என்றும் குளிகன் அமரப் பிறந்த ஜாதகரரைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

038

*மூட்டுவாய் குளிகனுமோ பாக்கியத்தில்*

*முகவசியன் அழும்பனடா பிதுர் துரோகி*

*கூட்டுவாய் குவலயத்தில் தனமுள்ளோன்*

*குற்றமில்லை கருமத்தின் குறியைக் கேளு*

*நீட்டுவாய் நீணிலத்தில் கருமிதுரோகன்*

*நிலையறிந்து நீயறிவாய் அய்யம்வாங்கி*

*தீட்டுவாய் தின்பனடா விரலேஉச்சம்*

*சிறப்பாக செப்புவாய் திண்ணந்தானே.*

*இலக்கினத்திற்கு ஒன்பதாம் இடமான பாக்கிய ஸ்தானத்தில் குளிகன் நிற்கப் பிறந்த ஜாதகன் முகவசியமுடையவன் என்றாலும் அழும்பனாய் பிதுர் துரோகியாய் விளங்குவான். எனினும் இப்பூமியின் கண் நிறை தனம் பெற்று மகிழ்வோனே யாவான். அதனால் குற்றமில்லை எனக் கூறுக. இனி பத்தாம் இடமான கர்ம ஸ்தானத்தில் குளிகன் நிற்கப் பிறந்த சாதகன் கருமியாகவும், துரோகம் செய்பவனாகவும் இருப்பான். கிரக நிலையை நன்கு ஆய்ந்தறிந்து தீட்டு நிகழ்ந்த வீட்டில் உஞ்சை*

*விருத்தி ஜீவனம் செய்பவனாக இருப்பன். கிரக பலம் அறிந்து சிறப்பாகவும் திண்ணமாகவும் பலன் கூறுக.*

*இப்பாடலில் ஒன்பதாம் இடத்தில் மாந்தி என்றும் குளிகன் அமரப் பிறந்த ஜாதகரரைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

039

*தானென் பதினொன்றில் குளிகன் நிற்கத்*

*தரணிதனில் பேர் விளங்குந் தனமுமுள்ளோன்*

*யேனென்ற அயன்விதியும் அறிந்துசெப்பு*

*யென்மகனே வசியனடா ஜாலக்காரன்*

*வீணென்ற விரயனடா ரசவாதத்தால்*

*விளம்புகிறேன் வீடுமனை கொதுவை வைப்பான்*

*கோனென்ற போகருட கடாக்ஷத்தாலே*

*கொற்றவனே வியத்தில் நின்ற பலனைக்கூறே*

*இலக்கினத்திற்கு பதினொன்றாம் இடத்தில் குளிகன் நிற்கப் பிறந்த சாதகன் பூமியில் நல்ல புகழ் உடையவனேயாவான். சிறந்த தனலாபம் உடையவனே. இவனது ஆயுள் பலத்தை அறிந்து கிரக நிலைமை தெரிந்து நீ சொல்லுக. இவன் வசியன் [தேவதை வசியன்] ஜாலக்காரன். இனி பன்னிரண்டாம் இடத்தில் குளிகன் நிற்கப் பிறந்தவன் வீண்விரயம் செய்பவன். ரசவாதம் தேர்ந்தவன். குடும்ப நாசம் செய்பவன். ன் குருவான போகருடைய அருளாணையாலே நான் கூறுவதை ஆராய்ந்தறிந்து நன்கு உணர்த்துக.*

*இப்பாடலில் பதினொன்றாம் இடத்தில் மாந்தி என்றும் குளிகன் அமரப் பிறந்த ஜாதகரரைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

040

*பாரப்பா மூன்றாறு பத்துஒன்று*

*பகருகின்ற பன்னொன்றில் வெய்யோன்நிற்கில்*

*சீரப்பா சீலனுட மனையில் தானும்*

*சிவசிவா தெய்வங்கள் காத்திருக்கும்*

*வாரப்பா வாகனமும் ஞானம்புத்தி*

*வளமான புத்திரர்கள் அரசர்நேசம்*

*கூறப்பா புரிவனடா சத்துருங்கன்*

*கொற்றவனே மூர்க்கனென்று கூறுவீரே.*

*இலக்கினத்திற்கு 3,6,10,11` ஆகிய இடங்களில் பதுமன் என்றும் இனன் என்றும் பரிதி என்றும்*

*கூறப்படும் சூரியன் தேறி நின்றால் அச்சாதகனுடைய மனையில் சிவ பரம்பொருளின் பெருங்கருணையால் தெய்வங்கள் காத்து நிற்கும், அச்செல்வனுக்கு நல்ல வாகன யோகமும், நல்ஞானமும், விசேடமானா புத்தியும், வளமை தரும் புதல்வர்களும் அரசர்களுடைய ஆதரவும் அன்பும் ஏற்படும் என்றும், பகைவரை அழித்தொழிக்கும் வீரனாக அமைந்து மூர்க்கனாக விளங்குவான் என்றும் கூறுவாயாக.*

*இப்பாடலில் சூரியன் இலக்கினத்திலிருந்து 3,6,10,11 ஆகிய இடங்களில் அமரப் பிறந்த ஜாதகரரைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

041

*கூறேநீ ஈராறும் ரெண்டுரெண்டு*

*கொற்றவனே பாக்கியமும் யேழோடஞ்சில்*

*ஆரேனீ ஆதித்த னிருந்தானானால்*

*அப்பனே அங்கத்தில் காந்தலுண்டு*

*சீரேனீ சொற்பனமும் சிரங்குகண்ணோய்*

*சிவசிவா சிந்தித்த தெல்லாமாகும்*

*கூறேனீ போகருட கடாக்ஷத்தாலே*

*கொலையீனார் பகையது வருகுஞ்சொல்லே*

*சூரியபகவான் 2,3,4,7,5 ஆகிய இடங்களில் இருப்பாரேயானால் [இலக்கினத்திலிருந்தது] அச்சாதகனுக்கு உடலில் காந்தல் உண்டென்றும் சொற்ப அளவிற்கே சீர் பெறுவான் என்றும், சிவனருளால் சிரங்கு, கண்ணோய் முதலியன ஏற்படும் என்றும் நின்று இதந்தரும் என் குருநாதரான போகரது கருணா கடாக்ஷத்தாலே இம் மகனுக்கு, வஞ்சித்துக் கொலை செய்யும் ஈனர்களின் பகையும் வரும் என்று கிரகநிலையை நன்கு ஆய்ந்தறிந்து பலன் கூறுவாயாக.*

*இப்பாடலில் சூரியன் இலக்கினத்திலிருந்து 2,3,4,7,5 ஆகிய இடங்களில் அமரப் பிறந்த ஜாதகரரைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

042

*கேளப்பா கலையினுட பெருமை சொல்வேன்*

*கனமுள்ள தனலாபம் கேந்திரகோணம்*

*ஆளப்பா அகம்பொருளும் நிலமுங்காடி*

*அப்பனே கிட்டுமடா கறவையுள்ளோன்*

*சூளப்பா சுகமுண்டு ஜென்மனுக்கு*

*சுயதேச பரதேச அரசர்நேசம்*

*கூளப்பா கொடியோர்கள் சேர்ந்துநோக்க*

*கொற்றவனே கலைகண்டு கூற்ந்துசெப்பே*

*அமிர்த கலையை அள்ளி வழங்கும் சந்திர பகவானின் பெருமையையினை இனிக் கூறுகிறேன் கேட்பாயாக! மிகுதியான நன்மை தரும் இரண்டாம் இடத்திலும் இலக்கினத்திற்குப் பதினொன்றாம் இடமான இலாபஸ்தானத்திலும், மற்றும் 1,4,7,10 என்ற கேந்திர ஸ்தானங்களிலும் 1,5,9 என்னும் திரிகோண ஸ்தானத்திலும் சந்திர பகவான் நிற்பாரேயாகில் நல்ல மனையும், நிறைந்த தன வருவாயும் நிலமும், விளை வயலும் கன்று காலிகளும் நிரம்ப வந்தடையும். இச்சாதகனுக்கு மெத்த சுகம் உண்டென்றும் சுயமான தேசத்திலும் பிற தேசத்திலும் வாசஞ்செய்யும் போதும் அரசினரால் ஆதாயம் மிகவும் உண்டாகும்.எனினும் தீயகோள்களை தங்கள் தீட்சண்யமான பார்வையில் நோக்குதலின் உண்மையறிந்து சந்திர பகவானின் கலை தீட்சண்யம் அறிந்து பலன் கூறுக.*

*இப்பாடலில் சந்திரன் இலக்கினத்திலிருந்து 1,4,7,10, 1,5,9 ஆகிய இடங்களில் அமரப் பிறந்த ஜாதகரரைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

043

*சூடப்பா சந்திரனார் மூன்றேழ்ஐந்து*

*சுத்த இந்து பன்னொன்றில் தனித்திருக்க*

*மாடப்பா மந்திரங்கள் செய்வன் காளை*

*மகத்தான வாதமொடு வயித்தியம் செய்வான்*

*கூடப்பா குடும்பமது விருத்தியாகும்*

*குவலயத்தின் எதிரிக்கு மார்பிலாணி*

*வீடப்பா போகருட கடக்ஷத்தாலே*

*விதியறிந்து புவியோர்க்கு விளம்புவாயே.*

*எல்லாராலும் போற்றப்படும் சந்திரபகவான் 3,7,5,11 ஆகிய இடங்களில் தனித்திருக்க, அச்சாதகன் செல்வமுள்ளோன் என்றும் மந்திரங்கள் அறிந்து முறைப்படி பிரயோகித்து வெற்றி காண்பவன் என்றும் வாதம் செய்வதில் வல்லவன் என்றும் வயித்திய சாத்திரத்தில் சிறந்தோன் என்றும் அவனது குடும்பமானது என்றும் விருத்தியடையும் அவனது எதிரிகள் அழிவர் என்றும் எனது சற்குருவான போகரது கருணையாலே புலிப்பாணி அருளியதை புவியோர்க்கு உணர்த்துவாயாக.*

*இப்பாடலில் சந்திரன் இலக்கினத்திலிருந்து 3,7,5,11 ஆகிய இடங்களில் அமரப் பிறந்த ஜாதகரரைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

044

*கேளப்பா செவ்வாயும் ஒன்று பத்து*

*கனமுள்ள தனலாபம் ஆறில்நிற்க*

*ஆளப்பா அகம்பொருளும் நிலமும் செம்பொன்*

*அப்பனே கிட்டுமடா தொழிலுமுள்ளோன்*

*சூளப்பாரு குடித்தலைவன் சத்துருபங்கன்*

*கொற்றவனே வகையாகப் பகர்ந்து சொல்லே*

*புலிப்பாணி ஆகிய நான் சொல்லும் இக்குறிப்பினையும் நீ நன்கு உணர்ந்து கொள்வாயாக! செவ்வாய் கிரகமானது 1,10,2,11,6 ஆகிய இடங்களில் அமர்ந்திருப்பின், அவனுக்கு மனை வாய்த்தாலும், செம்பொருட்சேர்க்கையும், சிறந்த நிலமும்,செம்பொன்னும் கிட்டுமென்றும், செய்தொழில் விருத்தியுடையவன் என்றும் பல குடும்பங்களைக் காக்கும் தலைவன் என்றும், எதிரிகளை வெற்றி கொள்ளும் வீரனென்றும் மற்றைய கிரக நிலவரங்களை ஆராந்து கூறுவாயாக.*

*இப்பாடலில் செவ்வாய் இலக்கினத்திலிருந்து 1,10,2,11,6 ஆகிய இடங்களில் அமரப் பிறந்த ஜாதகரரைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

045

*சொல்லப்பா ஆறெட்டு பன்னிரண்டும்*

*சுகசப்த கேந்திரமும் பாக்கியம் ரெண்டில்*

*அல்லப்பா அத்தலத்தில் ஆரல்நிற்க*

*அப்பனே அகம் பொருளும் நிலமும் நஷ்டம்*

*குள்ளப்பா குடும்பமது சிதறிப்போகும்*

*கொற்றவனே குருவுக்கு தோஷமுண்டாம்*

*வல்லப்பா போகருட கடாக்ஷத்தாலே*

*வளமாகப் புலிப்பாணி வசனித்தேனே.*

*இன்னுமொன்றும் சொல்லுகிறேன் கேட்பாயாக. இச் செவ்வாய், சேய், பவுமன் என்றும் உரைக்கப்படுபவன். இவன் 6,8,12,3,7,10,9-இல் நிற்க நிலமும் பொருளும் மனையும் சேதமாகும்;* குடும்பமானது சிதறிப்போகும் இதனைச் செவ்வாய் [குரு] தோடம் என்றும் கூறுவார்கள் *வல்லவராகிய என் சற்குரு போக மாமுனிவரின் கருணையாலே வன்மையுடன் புலிப்பாணி முனிவராகிய நான் கூறினேன்.*

*இப்பாடலில் செவ்வாய் இலக்கினத்திலிருந்து 6,8,12,3,7,10,9 ஆகிய இடங்களில் அமரப் பிறந்த ஜாதகரரைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

046

*பாரப்பா பரகுரு நாலேழ்பத்து*

*பகருகின்ற கோணமுடன் தனமும்லாபம்*

*சீரப்பா சென்மனுக்கு யோகம் செப்பு*

*செந்திருமால் தேவியுமே பதியில்வாழ்வன்*

*கூறப்பா குடிநாதன் கண்ணுற்றாலும்*

*குவலயத்தில் வெகுபேரை ஆதரிப்பன்*

*ஆரப்பா ஆறெட்டு பன்னிரெண்டு*

*அறைகின்றேன் அதன்பலனை அன்பால்கேளே*

*வியாழ பகவான் என விளம்பப்படும் குருபகவான் 4,7,10 மற்றும் 1,5,9 இன்னும் 2,11 ஆகிய இடங்களில் இருந்தால் இச்சாதகனுக்கு யோகம் மிகவும் உண்டென்று கூறுவாயாக! செந்திருமால் தன் தேவியுடன் இவன் மனையில் வாழ்வார்கள். இன்னும் இரண்டாமிடத்ததிபதி இவனைக் காணில் இப்பூமியில் வெகு பேரை ஆதரிப்பான். இனி 6,8,12 ஆகிய இடங்களில் நின்றால் எத்தகைய பலன் விளைவிப்பான் என்பதனையும் கூறுகிறேன். இதனை நீயும் அன்புடனே கேட்பாயாக!*

*இப்பாடலில் வியாழன் இலக்கினத்திலிருந்து 4,7,10,1,5,9,2,11 ஆகிய இடங்களில் அமரப் பிறந்த ஜாதகரரைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

047

*கேளப்பா யெட்டுக்கு வேசிகள்ளன்*

*கெடுதியுள்ள மனைவிபகை நோயால் கண்டம்*

*ஆளப்பா அரசர்பகை பொருளுஞ்சேதம்*

*அப்பனே அவமானம் கொள்வண்டம்பன்*

*தாளப்பா ஆறுக்கு தோஷமுண்டு*

*தார்வேந்தர் பகையுமுண்டு ரோகமுண்டு*

*கூறப்பா ஈராறில் எங்கோனாட்சி*

*குற்றமில்லை சென்மனுக்கு யோகங்கூறே*

*இனி எட்டாம் இடத்தில் குருபகவான் வீற்றிருப்பின் அவன், வேசி கள்ளனாகவும், தீய மனைவியால் பகைகொண்டவனாகவும், அவளாலும், பகையாலும் கண்டம் அடைபவனாகவும், அரசரது பகை பெற்றவனாகவும், பொருட் சேதம் அடைபவனாகவும், நிறைந்த அவமானம் அடைபவனாகவும், பெரிய டம்பனாகவும் இருப்பன். மேலும் 6ஆம் இடத்தில் குரு நிற்பின் சாதகனுக்கு அதனாலும் தோடம் உண்டு. அரசரது பகைநேரும். நோய் உபாதை ஏற்படும். ஆயினும் பன்னிரண்டாம் இடத்தில் குரு நின்றால் அதுவே அவனது ஆட்சி வீடானதால் அதனால் எந்த ஒரு குற்றமும் சென்மனுக்கு இல்லையென்று நீ ஆய்ந்தறிந்து கூறுவாயாக.*

*இப்பாடலில் வியாழன் இலக்கினத்திலிருந்து 8 ஆகிய இடங்களில் அமரப் பிறந்த ஜாதகரரைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

048

*கேளப்பா அசுரகுரு கேந்திரகோணம்*

*கெட்டவர்கள் கண்ணுற்று பார்த்திட்டாலும்*

*ஆளப்பா அசுரகுரு பலனளிப்பர்*

*அப்பனே உப்பரிக்கை மேடையுண்டு*

*வாளப்பா வயிரங்கள் முத்துமாலைகள்*

*வளமாகப் பொருந்தி நிற்கும் வளவிலேதான்*

*நீளப்பா நின்றதொரு இராசியாதி*

*நிலையறிந்து புவியோர்க்கு நிகழ்த்துவாயே*

*புலிப்பாணி கூறுவதைச் சற்றே கேட்பாயாக! அசுரர்களின் குரு எனப் போற்றி செய்யப்பெறும் சுக்ராச்சாரி சாதகனின் கேந்திர கோணத்தில் நிற்க அவரைத் தீய கோள்கள் பார்ப்பினும் அவர் நற்பலன்களையே தருவார். அச்சாதகனுக்கு உப்பரிகை மேடையும், கனவயிரமும் முத்துமாலை போன்ற அணிமணிகளும் அவன் மனையில் பொருந்தி இன்பம் தருவதாகும். இதனை இலக்கின, இராசி அதிபர்களின் பலமுணர்ந்து ஆய்ந்து கூறுக.*

*இப்பாடலில் சுக்கிரன் இலக்கினத்திலிருந்து 1,4,7,10,5,9 ஆகிய இடங்களில் அமரப் பிறந்த ஜாதகரரைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

049

*பாரப்பா பனிரெண்டு மூன்றாரெட்டில்*

*பலமுள்ள அசுரகுரு அதனில் தோன்ற*

*வீரப்பாவிதிகுறைவுவெதர்நோய்வாதம்*

*விளங்குகின்ற செம்பொன்னும்மனையும் நஷ்டம்*

*கூறப்பா குழவிக்கு மகோதரமும் பாண்டு*

*கொற்றவனே குன்மமொடு சயமும்சோகை*

*சீரப்பா ஈராறில் சுங்கன் ஆட்சி*

*சிவசிவா சயனசுகம் யோகஞ்சொல்லே.*

*ஒரு சாதகனுக்கு 12,3,6,8 ஆகிய இடங்களில் அசுர குருவான சுக்ராச்சாரியார் பலமுடன் சஞ்சாரம் செய்வாரானால் அச்சாதகனுக்கு ஆயுள் குறைவதுடன், மர்ம உறுப்புகளில் [பீசத்தில்] நோயுறுதலும்,வாதநோய் ஏற்படுவதும் மிகவும் விளக்கம் பெற்ற செம்பொன் மற்றும் வாழ்மனையும் நஷ்டமாம். மேலும், மகோதரம்,பாண்டு ஆகிய நோய் மட்டுமல்லாமல் குன்மம், சயம், சோகை ஆகிய நோய்களும் ஏற்படும். ஆயினும் 12ஆம் இடத்தில் சுக்கிரன் ஆட்சி பெற்றால் சிவபரம்பொருளின் பேரருளால் சயன சுகமும் நல்ல யோகமும் ஏற்படும் எனக் கூறுவாயாக.*

*இப்பாடலில் சுக்கிரன் இலக்கினத்திலிருந்து 12,3,6,8 ஆகிய இடங்களில் அமரப் பிறந்த ஜாதகரரைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

050

*கனமுள்ள நவமாறு லாபம் மூன்று*

*கதிர்மைந்த னதிலிருக்க விதியும் தீர்க்கம்*

*தனமுண்டுபிதுர் தோஷம் சத்துருபங்கம்*

*தரணிதனில் பேர்விளங்கும் அரசன்லாபம்*

*குணமுள்ள கருமத்தி லிருக்கநல்லன்*

*கொற்றவனே வாகனமும் தொழிலுமுள்ளோன்*

*பொணம் போலபோகாதே சபையில் கூறு*

*பூதலத்தில் யென்னூலைப் புகழுவாயே.*

*பெருமைக்குரிய 9,6,11,3 ஆகிய இடங்களில் சூரிய குமாரனான மந்தன் என்ற சனிபகவான் நிற்க அச்சாதகனுக்கு ஆயுள் தீர்க்கம். நிறை தனமுடையவர். அதே போல் பிதுர் தோஷமும் உடைய அச்சாதகன் சத்துரு பங்கனாகவும் இருப்பான். பூமியில் அவனது புகழ் விளங்கிக் காணும். அரச லாபம் பெறுவான். இனி, சனிபகவான் 10இல் நிற்க அச்சாதகன் நன்மையான பலன்களையே அடைவான். வாகன யோகம் உடையவனாகவும், செய் தொழில் கீர்த்தி உடையவனாகவும் விளங்குவான். இதையெல்லாம் உணராது உணர்ந்தார் உள்ள சபையில் பிணம் போலப் பேசாமல் இராதே. நான் கூறும் வார்த்தைகளைக் கேட்டுக் கூறுவாயேல் நீ புவியில் என்னூலைப் போற்றுவாய்.*

*இப்பாடலில் சனி இலக்கினத்திலிருந்து 9,6,11,3,10 ஆகிய இடங்களில் அமரப் பிறந்த ஜாதகரரைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

051

*பாரப்பா இன்னமொன்று பகரக்கேளு*

*பானுமைந்தன் பன்னொன்றி லமைந்தவாறும்*

*சீரப்பா சிறந்தகுரு சப்தமத்தில்*

*சீறிவரும் கரும்பாம்பு நாலிலேற*

*ஆரப்பா ஆரல்யிரு மூன்றதாகும்*

*அப்பனே அருக்கனுந்தான் மூன்றில்போக*

*வீரப்பா விலகுமடா தோஷம் தோஷம்*

*விதியுண்டு சென்மனுக்கு விளம்பக்கேளே*

*இன்னுமொரு கருத்தையும் உனக்கு விளக்கமாகக் கூறுகிறேன் நன்கு கேட்பாயாக! கதிர் மைந்தனாம் சனி 11இல் அமைந்து சிறப்புமிக்க குருபகவான் சப்தம (7ல்) ஸ்தானத்திலும் இராகு 4 ஆம் இடத்திலும், செவ்வாய் மூன்றிலும், சூரிய மூன்றில் போய் நிற்க (சனி பகவானால்) தோடம் உண்டெனினும் சென்மனுக்கு ஆயுள் உண்டென்று கூறுவதுடன் மேலும் நான் சொல்லும் கருத்துகளையும் கேட்பாயாக!*

052

*சூடப்பா சரராசி செனித்தபேர்க்கு*

*சுகமில்லை லாபாதி பதியினாலே*

*ஆடப்பா அகம்பொருளும் நிலமும்சேதம்*

*அப்பனே அரசரிட தோஷமுண்டாம்*

*தேடப்பா திரவியமு மளித்தாரானால்*

*திடமான அரிட்டமடா தேடமாட்டான்*

*வீடப்பாகோணத்தில் லிருக்கநன்று*

*விளம்பினேன் புலிப்பாணி வினையைப்பாரே*

*சரராசியில் பிறந்த ஜாதகனுக்கு, பதினொன்றாம் இடத்திற்கதிபதியான லாபாதிபதியாலே சுகமில்லை. ஏனெனில் அவனது பொசிப்பு காலத்தில் மனையும், பொருளும், நிலமும் சேதமாவதுடன் மன்னராலும் தோடம் ஏற்படும். அவ்வாறன்றி நிறைந்த செல்வத்தை ஒருவேளை அளித்தாலும் கூட நோயுபாதை போன்ற அரிட்டங்களையும் தருவார். ஆனால் அவனால் நிறை தனம் தேட இயலாது. ஆயினும் திரிகோண ஸ்தானத்தில் (1,5,9) இருந்தால் நன்மையான பலன்களையே தருவேன் என்று புலிப்பாணி போகரருளாணையால் கூறினேன்.*

053

*பாரப்பா திரராசி செனித்தபேர்க்கு*

*பாங்கான பாக்கியாதி பதியுமாகா*

*கூறப்பா கோணத்தில் மேவினாலும்*

*கொற்றவனே பலனளிப்பன் அரசன் லாபம்*

*வீறப்பா மற்றயெடந் தனிலே நிற்க*

*வெகுபயமாம் பலனில்லை வினையில் துன்பம்*

*சீரப்பா போகருட கடாக்ஷத்தாலே*

*சிறப்பாக புலிப்பாணி செப்பினேனே.*

*ஸ்திர ராசியில் தோன்றிய ஜன்மனுக்கு நன்மை செய்யும் பாக்கியாதிபதியான 9க்குடையவனும் தீமையே செய்வான். ஆனால் இப்பாக்கியாதிபதி திரிகோணமான (1,5,9 ஆகிய) பாவங்களில் நிற்பின் அரசனால் இலாபம் போன்ற நற்பலன்களை அளிப்பார். மற்ற இடங்களில் நின்றால் வெகுவான பயமே ஏற்படும். நற்பலன்கள் ஏற்படுவதில்லை. செய்கின்ற காரியத்தில் தொழிலில் விக்கினங்கள் உண்டாகும். சிறப்புமிக்க போக மகாமுனிவரான என் குருநாதர் அருளாணையால் புலிப்பாணியாகிய நான் இப்பலனைக் கூறினேன்.*

054

*செப்புவாய் உபயத்தில் செனித்தபேர்க்கு*

*சிறந்ததொரு சப்தமனு மாகாதாப்பா*

*ஒப்புவாய் உலகத்தில் அவதிமெத்த*

*ஊழ்வினையைத் தடுபாரு முலகிலுண்டோ*

*தப்புவாய்திடல் நாசம் தனமும் நாசம்*

*தார்வேந்தர் பகையுமுண்டு தேகதுன்பம்*

*இப்புவியில் போகருடன் கடாஷத்தாலே*

*இடமறிந்து திசையறிந்து யியம்புவாயே.*

*உபயராசியில் ஜனித்த ஜாதகருக்கு சப்தம கேந்திராதிபதி நற்பலன்களைத் தரமாட்டார். அதனால் அவனியில் மிகுந்த அவதியுண்டாகும். ஊழ்வினைத் தடுக்கவல்லவர் உலகில் யாரே உளர்? (இல்லையன்றோ) கிடைக்கத் தக்க வருவாய் கிடைக்காமல் போதலும் தொழில் நாசமும், தன நாசமும், அரசர் பகையும் தேகத்தில் நோய் உபாதைகள் ஏற்படுதலும் நேரும். எனினும் கிரக நிலவரத்தை நன்கு ஆராய்ந்தறிந்து என் சற்குருவான போகர் அருளாணையாலே நான் கூறும் கருத்தினை திசாபுக்தி தெரிந்து கூறுவாயாக.*

055

*கூறப்பா குருவோடு வெய்யோன் பாம்பு*

*கொற்றவனே குருமனையில் கூடி நிற்க*

*சீரப்பா சென்மனுக்கு தோஷமில்லை*

*செப்புகிறென் கொடிமாலை விழுகாதப்பா*

*ஆரப்பா அங்கத்தின் மச்சமுண்டு*

*அப்பனே அரவோடு அனலன்சேர*

*கூறப்பா கொடிமாலை மச்சமுண்டு*

*கொற்றவனே குழவிக்குக் கூறுவாயே.*

*சாதகனுக்குப் பலனுரைக்கும் சோதிடனே! தேவகுருவான பிரகஸ்பதியின் ஆட்சி வீடுகளான தனுசு, மீனம் ஆகிய மனைகளில் அவரோடு அரவும் சூரியனும் சேர்ந்து நிற்க அச்சாதகனுக்கு எந்த ஒரு தோடமும் இல்லை. கொடிமாலை கழுத்தில் சூடிக் (குழந்தை) பிறப்பதில்லை. ஆனால் உடலில் மச்சமுண்டு. ஆனால் குருவின்றி அரவோடு அனல எனப்படும் சூரியன் சேர்ந்தால் கொடி மாலை மச்சம் உண்டாம் என்று கூறுவாயாக.*

056

*கேளப்பா குடினாதன் ஆட்சிஉச்சம்*

*கெட்டவர்கள் கண்ணுற்று நோக்கினாலும்*

*சூளப்பா சுகமில்லை களவுபோகும்*

*சோரு துணிக்குக் கையேந்தி நிற்கச்செய்யும்*

*ஆளப்பா அகத்திலே துன்பங்காணும்*

*அப்பனே அரண்மனையார் பகையுண்டாகும்*

*கூளப்பா கூட்டுறவு பிரிந்து போகும்*

*கொற்றவனே கொடுந்துன்பம் விளையும் பாரே.*

*இன்னொரு கருத்தையும் நீ உன்னிப்பாகக் கவனித்துக் கேட்பாயாக. இலக்கினாதிபதி ஆட்சி உச்சம் எய்திடினும் தீயகோள்கள் பார்வை பெறின் அச்சாதகனின் இல்லத்தில் களவு போகும். அவன் சோற்றுக்கும் துணிக்கும் கையேந்தி நிற்கும் நிலையும் ஏற்படும். அவன் மனையில் துன்பமே மிகும். அரசாங்கப்பகையும் அவனுக்கு உண்டாகும். கூட்டு வாணிகம் புரிந்தவர்களும் கூட்டுறவோடு*

*இருந்தவர்களும் பிரிவர். கொடுந்துன்பம் விளையும் என்பதையும் குறித்துச் சொல்வாயாக.*

057

*சீரே நீகுருவுக்கு வியமாறெட்டில்*

*செழுமதியும் மதிலிருக்க சகடயோகம்*

*ஆரே நீ அமடுபயம் பொருளும் நஷ்டம்*

*அப்பனேபேர் விளங்கும் நிதியுமுள்ளோன்*

*கூறே நிகுருவுக்கு கேந்திரகோணம்*

*குழவிக்கு நிதி கல்வி மெத்தவுண்டு*

*பாரே நீபோகருட கடாக்ஷத்தாலே*

*பாடினேன் புலிப்பாணி பதமாய்த்தானே*

*நான் கூறும் ஒரு சிறப்பினையும் நீ குறித்துக் கேட்பாயாக. குருபகவானுக்குப் பன்னிரண்டு, எட்டு, ஆறு ஆகிய இடங்களில் சிறந்த சந்திர பகவான் இருக்க ஏற்படுவது சகடயோகம் ஆகும். அதனால் ஏற்படும் பலன்கள் என்னவெனின் அமடு, பயம், பொருட்சேதம், எனினும் நற்கீர்த்தியே வாய்க்கும். நிதியும் சிறந்து காணும். இன்னுமொன்று குரு 1,4,7,10 மற்றும் 1,5,9 ஆகிய இடங்களில் இருக்க அச்சாதகனுக்கு கல்விச்சிறப்பு மெத்தவும் உண்டாகும். எனது சற்குருவான போகமாமுனிவரது கருணா கடாட்சத்தை முன்னிறுத்தி நான் (புலிப்பாணி) இதனைப் பதமாகப் கூறினேன்.*

058

*பாரப்பா பனிரெண்டில் மதியும்நிற்கப்*

*பகருகின்ற பவுமனுமே மதிக்குயெட்டில்*

*சீரப்பா செவ்வாய்க்கு யெட்டிதீயர்*

*சிவசிவா சென்மனுமோ அன்னியபீசம்*

*ஆரப்பா அயன்விதியை அரையலாமோ*

*அப்பனே அனலனொடு குளிகன் சேர்ந்து*

*கூறப்பா குடியிருக்க அட்டமத்தில்*

*கொற்றவனே அவைபோலே கூறுவாயே.*

*இன்னொரு சேதியையும் நீ கேட்பாயாக! 2ஆம் இடத்தில் சந்திரன் நிற்க மதிக்கு எட்டில் அந்த செவ்வாய் நிற்க அச் செவ்வாய்க்கு எட்டில் தீக்கோள்கள் நிற்பினும் சிவபரம் பொருளின் பேரருட் கருணையால் அச்சாதகன் அன்னியபீசம் என்றே கூறுக. அதேபோல் பிரமன் படைப்பின் விந்தை இன்னுமொன்றுளது. சூரியனோடு குளிகனும் இலக்கினத்திற்கு அட்டமத்தில் கூட அச்சாதகன் அன்னிய பீசமே என்று கூறுக.*

059

*பாரப்பா பால்மதிக்கும் நான்கில்வெள்ளி*

*பாங்குள்ள வெள்ளிக்கு நான்கில் இந்து*

*ஈரப்பா இல்லுக்கு இவர்கள்நான்கில்*

*இடிபோலே குமுறுமடா தாரையோகம்*

*சீரப்பா சென்மனுக்கு சிவிகைகிரீடி*

*சிறப்பான வாகனமும் நிலமும் செம்பொன்*

*கூறப்பா போகருட கடாட்சத்தாலே*

*குடினாதன் பெலமறிந்து கூறுவாயே.*

*புலிப்பாணி போக மகா முனிவரின் பேரருட் கருணையாலே கூறுகின்ற மற்றொரு கருத்தையும் நீ கேட்பாயாக! வளர்பிறைச் சந்திரனுக்கு நான்கில் சுக்கிரனும் அதே போல் சுக்கிரனுக்கு நான்கில் மதியும் நிற்கவும் அல்லது இலக்கினத்திற்கு நான்கில் இவர்கள் இருப்பினும் இடிமுழக்கம் செய்து வருவது போலக் குமுறிக் கொண்டு வரும் தாரை யோகம் ஆகும். இப்படிப்பட்ட சிறப்புடைய அமிசம் பெற்ற சாதகனுக்கு சிவிகையும்,விளைவயல் மற்றும் சிறப்பான வாகன யோகமும் நிலமும், செம்பொன்னும் நிறைந்த அளவில் வந்து சேரும். இதனை இலக்கினாதிபதியின் பலம் அறிந்து கூறுவாயாக.*

060

*பாரப்பா பதினைந்து நாளிலேயும்*

*பகருகின்ற பால்மதியும் வெய்யோனைத்தான்*

*சீரப்பா சீறியே அரவந்தீண்டில்*

*செத்திடுவர் போர்முகத்தில் அனந்தம்மன்னர்*

*ஊரப்பா ஊரெங்கும் பேதி அம்மை*

*உத்தமனே கவுமாரி யாலேசீக்கு*

*பாரப்பா மன்னர்களு மடியாவிட்டால்*

*மகத்தான அன்னமது அரிதாம், பாரே*

*இன்னொரு கருத்தையும் நன்கு கவனிப்பாயாக! வளருகின்ற கலையால் பதினைந்து நாள்களில் உயர்வு பெறும் சந்திரனையும் மற்றும் சூரியனையும் (இராகு கேது ஆகிய) பாம்பு சீறித் தீண்டும் சீர் பெறில் போர் முகத்தில் அனெகம் மன்னர் இறந்தொழிவர்; ஊரெங்கும் கொள்ளை நோயும், அம்மை பேதி போன்ற தீய வியாதிகளும் கௌமாரியின் கருணையினால் உத்தமனே வந்து வாய்க்கும். அவ்வாறு மன்னர்கள் மடியாவிடின் பெருமைக்குரிய அன்னமது கிடைப்பது அரிதாகிப் போகும்.*

061

*பாரப்பா இரு ஐந்தில் புந்திநிற்க*

*பகருகின்ற பரமகுரு யேழில்நிற்க*

*ஆரப்பா அசுரகுரு யெட்டில் நிற்க*

*அப்பனே மீனத்தில் அருக்கன் பிள்ளை*

*வீரப்பா வில்வளவில் சேயும் நிற்க*

*விளங்குகின்ற மற்றோர்கள் யெங்கும்நிற்க*

*கூறப்பா குமரனையுங் கண்டுங்காணார்*

*குவலயதில் தேவனென்று கூறினேனே*

*மற்றொரு கருத்தையும் நீ கேட்பாயாக! இலக்கினத்திற்குப் பத்தில் புதன் நிற்க எல்லாராலும், புகழ்ப்படும் குரு பகவான் ஏழாம் இடத்தில் நிற்க அதே நேரத்தில் அசுர குருவான சுக்ராச்சாரியார் எட்டில் நிற்க அப்பனே! மீனத்தில் சூரியகுமாரனான சனியும், தனுசில் செவ்வாயும் நிற்கவும், பிற இடங்களில் வேறு கிரகங்கள் நிற்கவும் பிறந்த குமாரனைப் பிறர் கண்டும் காணார் என்றும் இந்நிலவுலகத்தில் தேவன் அவனே என்றும் போகமா முனிவரின் கருணாகடாட்சம் பெற்ற புலிப்பாணி கூறினேன்.*

062

*ஆமென்ற செவ்வாயும் ராகுமாந்தி*

*அப்பனே ரெண்டோனைக் கூடிநிற்கில்*

*போமென்ற பூதலத்தில் பரமன்பூசை*

*புகழ்பெரிய அய்யனோடு ருத்திரன் ருத்திரி*

*ஓமென்ரே ஓங்காளி வீரபத்திரன்*

*ஓதிடுவன் ஆகாச மாடந்தானும்*

*தாமென்ற போகருட கடாட்சத்தாலே*

*தப்பாமல் செய்திடுவன் சென்மந்தானே*

*இன்னுமொன்று கூறுகிறேன் கேட்பாயாக! செவ்வாயும் ராகுவும் மாந்தியுடன் இலக்கினத்திற்கு இரண்டிற்குரியவனைக் கூடி நிற்பின் அச்சென்மன் இப்பூதலத்தில் சிவ பூஜையும், பெரிய புகழ் உடைய ஐயனார். மற்றும் உருத்திரன், உருத்திரி, ஓங்கார வடிவினளாம் காளி மற்றும் வீரபத்திரன் மற்றும் ஆகாசமாடன் ஆகியோருடைய பூஜைகளையும் செய்யும் தேவதை வசியன் என்று போகருடைய கருணையாலே புலிப்பாணி கூறினேன்.*

063

*தாமென்ற அம்புலிக்கு நாலாமாதி*

*தயவாக லெக்கினத்து நாலோன் தானும்*

*யேனென்ற யெவ்விடத்தில் கூடிட்டாலும்*

*இதமாக அசுரகுரு இணங்கி நிற்க*

*தேனென்ற தேவிபரா துர்க்கை பூசை*

*திடமாகச் செய்திடுவன் வராகியோடு*

*கோனென்ற கொடியோர்கள் எதிர்நில்லார்கள்*

*கொற்றவனே வசியனடா கூறுகூறே*

*சிறப்புடைய சந்திரனுக்கு நான்கிற்குடையவனும் அதே போல் இலக்கினத்திற்கு நான்கிற்குடையவனும் இராசி மண்டலத்தில் எவ்விடத்தில் கூடி நின்றாலும், அதற்கு இதமாக அசுர குரு இணங்கி நிற்கவும், தேன் போன்று இனிமை செய்யும் தேவி பராசக்தி என்ற துர்க்கை மீது பேரன்பு பூண்டு பூசை செய்வதோடு வராகி பூஜையும் இணக்கமுறச் செய்வோன் என்றும் எத்தகைய சூழ்ச்சிகளும் கொடியவர்களும் இவனுக்கு எதிர் நிற்க மாட்டார்கள் என்றும் இவனே தேவதை வசியன் என்று திடமாகக் கூறுக.*

064

*கேளப்பா ஈரைந்தில் முகோள் நிற்க*

*கெதியுள்ள சன்னியாசி யோகம்யோகம்*

*ஆளப்பா அத்தலதில் இருகோள் நிற்கில்*

*அப்பனே தபசியடா யோகிஞானி*

*கூளப்பா ஒரு கோளும் குணமாய்நிற்கில்*

*குவலயதில் புனிதனடா ஞானியோகி*

*வீளப்பா விண்ணுலகத் தேவரோடு*

*விதமாக வீற்றிருப்பான் ரிஷிகளோடே*

*இன்னுமொரு கருத்தைக் கூறுகிறேன் கேட்பாயாக! இலக்கினத்திற்குப் பத்தாமிடத்தில் மூன்று கிரகங்கள் நிற்க கெதிதருகின்ற சன்னியாசி யோகம் என்பர். அதே பத்தாம் இடத்தில் இரண்டு கிரகங்கள் இருப்பின் தபசியாகவும், யோகியாகவும், ஞானியாகவும் இருப்பான். மற்றும் அதே இடத்தில் ஒரு கோள் பலம் பெற்று குணமாக இணக்கத்துடன் நின்றால் அவன் அந்நிலவுலகில் புனிதனாகவும் ஞானியாகவும் யோகியாகவும் விளங்குவதோடு விண்ணுலகில் உள்ள தேவர்களோடு சகல வரிசைகளுடன் ரிஷிகளின் கூட்டத்துடன் உடன் உறைவான்.*

065

*கூடினேன் கரும்பாம்பு செவ்வாய் நீலன்*

*கொற்றவனே ஓரிடத்திற் கூடிநிற்க*

*தெடினேன் தையலிட பொருளுஞ்சேரும்*

*திடமான மனையுமது கட்டுவானாம்*

*சூடினேன் சுகமுண்டு சென்மனுக்கு*

*சுருதிமொழி பிசகாது சிலகாலத்தில்*

*ஆடினேன் அழுதாலும் வினையும்போமோ*

*அப்பனே அமடுகளுந் திடமாய்ச்சொல்லே*

*இன்னுமொரு செய்தியையும் நீ கேட்பாயாக! கரும் பாம்பு எனச் சொல்லப்படும் இராகுவும், செவ்வாயும் நீலன் எனும் சனிபகவானும் ஒருமனையில் கூடிநிற்க ஸ்திரீகளால் தனசேர்க்கை ஏற்படும். கீர்த்திமிகு வீடு கட்டுவான். அச்சென்மனுக்கு சுகம் உண்டு. எனது சற்குருவான போகமகா முனிவரது பேரருட்கருணையால் நான் கூறும் இம்மொழி தவறாது. எனினும் சில வேளைகளில் அழுதாலும் ஊழ்வினைப் பயன் விட்டுப் போகுமா என்ன? எனவே சிற்சில அமடுகளும் (துன்பங்களும்) வந்து சேரும் என்று திடமாகச் சொல்வாயாக.*

066

*பாரப்பா பரமகுரு சனியும் பாம்பும்*

*பலமாக சரஉபய மமர்ந்து நிற்க*

*சீரப்பா சென்மனுமே ஊரைவிட்டு*

*சிவசிவா சிலகாலந் தேசஞ்செல்வன்*

*கூறப்பாகுடி நாதன் வலுத்திருக்க*

*கொற்றவனே குமரனுந்தான் குடியில்வந்து*

*வீரப்பா வெகுகாலம் வாசஞ்செய்வன்*

*விளம்பினேன் புலிப்பாணி விளம்பக்கேளே*

*போகமா முனிவரருள் பெற்ற புலிப்பாணி கூறும் இக்கருத்தையும் நன்கு ஓர்ந்து கவனிப்பாயாக! பிரசித்தமான பரம சுகமளிக்கும் குருபகவானும் சனியும் பாம்பும் பலமுள்ளவராக சரம், உபயம் அமர்ந்து நிற்க அச்சென்மன் சிவ பரம்பொருளின் பேரருளால் தன் இருப்பிடத்தை விட்டு தேசாந்தரம் செல்வான். நீ மிகவும் ஆராந்து கூறுவாயாக. இலக்னாதிபதி வலுத்திருந்தால் முருகப்பெருமானின் அருளால் அவன் அவனது குடியில் வந்து வெகுகாலம் வாசம் செய்வான் என்றும் உணர்த்துவாயாக.*

067

*பாரப்பா ஈராறோன் இருநான்கோனும்*

*பகருகின்ற செவ்வாயும் மூவர்சேர்ந்து*

*கூறப்பா யெவ்விடத்தில் கூடிட்டாலும்*

*கொற்றவனே பரதேசம் போவான் காளை*

*சீரேனீ சுந்திரனும் கண்ணுற்றாலும்*

*சிலகாலந் தங்கிருந்து செம்பொன்தேடி*

*ஆரப்பா அவன் பதியில் வந்துவாழ்வன்*

*அப்பனே புலிப்பாணி அரைந்திட்டேனே*

*இன்னுமொரு விஷயத்தையும் சொல்லுகிறேன் நன்கு விளக்கமாக இதனையும் நீ கேட்பாயாக! 12க்குடையவனும் எட்டுக்குடையோனும் சேர்ந்து செவ்வாயுடன் மூவரும் சேர்ந்து எந்த இடத்தில் கூடிநின்றாலும் அவன் பரதேசம் செல்வான். இவர்களைச் சந்திரன் கண்ணுற்றாலும் சில காலம் அங்கே தங்கியிருந்து வெகுதனம் தேடி மீண்டும் அவனது சுயதேசத்தில் வந்து வாழ்வான் என போகமா முனிவரது பேரருட் கரணையால் புலிப்பாணி கூறினேன்.*

068

*வீரப்பா யின்னமொரு புதுமைகேளு*

*விளம்புகிறேன் வீரியன் வீட்டில்தானும்*

*ஆரப்பா அசுரர்குரு செவ்வாய்கூடில்*

*அப்பனே அமங்கலையை அணைந்துவாழ்வன்*

*கூறப்பா குமரனுக்கு வித்தைபுத்தி*

*குவலயத்தில் நிதியுண்டு சிப்பிநூல் பார்ப்பன்*

*சீரப்பா போகருட கடாக்ஷத்தாலே*

*சிறப்பாகப் புலிபாணி செப்பினேனே.*

*வீரமிக்கவனே! இன்னுமொரு புதுமையினையும் நன்கு கேட்பாயாக. சூரியனது வீடான சிம்மத்தில் அசுர குருவான சுக்ராச்சாரியும் செவ்வாயும் கூடினால் அச்சாதகன் அமங்கலையை அணைந்து அவனுக்கு வித்தை புத்தி மிகுந்து இந்நிலவுலகில் நிதி மிகுந்தவனாய் சிற்ப சாத்திரத்தில் வல்லவனாய் நூலாராய்ச்சி உடையவனாவன் என எனது சற்குருவான போகமாமுனிவரது அருளாணையாலே புலிப்பாணி கூறினேன்.*

069

*பாரப்பா பதிக்கேழு நாலே ழெட்டில்*

*பாங்கான கோள்களது சேர்ந்துநிற்க*

*சீரப்பா சென்மனுந் தனித்துநில்லான்*

*செம்பொன்னும் கோடியுண்டு சிறப்பாய்வாழ்வன்*

*வீரப்பா வெகுபூமிக் கரசனாகி*

*வீரர்படை கரிமாவும் ரதங்களுள்ளோன்*

*கூறப்பா குவலயதில் யென்னூல்பாரு*

*குணமாக புலிப்பாணி குறித்திட்டேனே.*

*இலக்கினத்திற்கு 4,7, பாங்கான கிரகங்களானது பரிவுடன் சேர்ந்து நிற்கப் பிறந்த சாதகன் தனித்து நில்லான், சிறந்த செம்பொன்னும் கோடிதனமும் கொண்டவனாய்ச் சிறப்புடன் வாழ்வான். படைபலமும் யானை,குதிரை,ரதம் முதலியவை உடைவனவாய் இந்நிலவுலகில் கீர்த்தி பெறுவான். போகமா முனிவரின் அருளாணை பெற்ற புலிப்பாணி நூற்கருத்தைக் குறித்திட்டேன்.*

070

*கொள்ளப்பா கோள் ஒன்று சரமாய் நான்கில்*

*கொற்றவனே யேகசக்கிர வர்த்தியாவன்*

*அள்ளப்பா அனைபரி சேனைகூட்டம்*

*அணியணியா யிருக்குமடா அநேகமாக*

*உள்ளப்பா உத்தமர்கள் அருளும்பெற்று*

*உலகிலுள்ள அரசரிடம் பகுதிவாங்கி*

*இல்லப்பா இவ்வுலகில் சேல்கண்ணாளை*

*இதமாகச் சுகித்திருப்பன் அனேகம்பேரே.*

*இதனையும் நீ நன்கு உன் மனத்துள் கொள்வாயாக! இலக்கினத்திற்கு நான்காம் இடத்தில் சரத்தில் ஒரு கோள் நிற்க அச்சாதகன் சக்கரவர்த்தியாகும் யோகம் உள்ளவன். அனேகமான யானை, குதிரை ஆகிய சேனைக் கூட்டம் மிகவும் அணி பெற்று விளங்கும். இன்னுமொன்றையும் உணர்க. இச்சாதகன் உத்தமர்களின் அருள் பெற்றவனாக இலங்குவான். உலகில் உள்ள பல அரசர்களிடம் பகுதி (கிஸ்தி) வாங்கி இன்புடைய மாதரோடு சுக ஜீவனம் செய்வான்.*

071

*சூடினேன் இன்னமொரு சேதிகேளு*

*சுபருடனே நாலுபேர் கூடிநிற்க*

*ஆடினேன் அத்ற்க்குநால் மற்றோரெல்லாம்*

*அப்பனே அவனிதனில் முழுவாழவன்*

*கூடினேன் கோவேறு கழுதைகோடி*

*கொற்றவனே துரகங்கள் கோடாகோடி*

*தேடினேன் தேவர் வீரர் பகையுமெத்த*

*திக்கெட்டு மாளுமன்னன் தெரிந்துகொள்ளே*

*இன்னொரு விவரத்தையும் நான் கூறுகிறேன். அதையும் நீ நன்கு கவனிப்பாயாக. சுப கிரகத்துடன் நான்கு பேர் நிற்கவும் அதற்கு நாலில் மற்றோர் நிற்க அவன் (அச்சாதகன்) பூமியில் தீர்க்காயுளுடன் வாழ்வான். அவனுக்கு கோடிக் கணக்கில் கோவேறு கழுதைகளும் அதே போல் கோடானு கோடிக் குதிரைகளும் வாய்க்கும். அது மட்டுமல்லாமல் தேர் வீரர் படையும் கொண்டு எட்டுத்திக்கும் தன் அருளாணை கொண்டு அரசாளும் மன்னன் என்றே நீ கூறுவாயாக.*

072

*ஆரப்பா அஞ்சுபே ரொன்றுகூடி*

*அப்பனே மற்றவர்கள் ஒற்ற்ராமல்*

கூறப்பா குன்றுகளில் தனித்திருக்க

கொற்றவனே குவலயங்க ளெல்லாமாள்வன்

பாரப்பா படைவீரர் ஜெனங்கள் மெத்த

பறக்குமடா கொடித்திரையும் கடலுக்கப்பால்

சீரப்பா செம்பொன்னும் விளையும் பூமி

சிக்குமடா புலிப்பாணி செப்பினேனே.

இன்னுமொன்றையும் அறிந்து கொள். ஐந்து கிரகங்கள் ஒன்றுகூடி ஒரு மனையில் இருக்க, மற்றவர்கள் கேந்திரத்தில் (குன்றுகளில்) தனித்து நிற்க அவன் உலகமெல்லாம் ஆளும் மன்னவன் என்றே கூறுக. அவனுக்கு நிறைந்த படை வீரர்களும், பக்தி செலுத்தும் மாந்தர் கூட்டமும் மெத்த உண்டு என்பதனையும், அவனுடைய கொடி திரைகடலுக்கு அப்பாலும் புகழுடன் பறக்கும் என்றும் செம்பொன்னும் விளைவயலும் பூமியில் அவனுக்கு வாய்க்குமென்றும் போகமா முனிவருடைய அருளாணையாலே புலிப்பாணி உரைத்திட்டேன்.

073

அரைந்திட்டேன் நாலுபேர் கூடிநிற்க

அப்பனே அதற்குமற் றோர்கள் நிற்க

பரைந்திட்டேன் பாருலக மாளும்வல்லவன்

பகருகின்ற சேனைரதம் கணக்கேயில்லை

சிரந்திட்டேன் சிற்றரசர் மெத்தவுண்டு

செகத்திலே பேருள்ள ராசனாகி

குரைந்திட்டேன் கொடுமன்னர் எதிர்த்தாரானால்

கூற்றுவனைப் போலிருப்பன் ஆறினேனே.

வேறொன்றையும் கூறுகிறேன் கேட்பாயாக! நாலு கிரகங்கள் கூடி நிற்க அவற்றுடன் மற்ற கிரகங்கள் உறவாய் நிற்க, அச்சாதகன் இந்நிலவுலகத்தை ஆளும் மன்னவன் என்றும் அவனது சேனை பலத்திற்கு அளவில்லை என்பதும், சிறந்த கப்பம் செலுத்தும் சிற்றரசர்கள் அவனுக்கு வெகுபேர் உண்டென்றும் என்றென்றும் நற்பேறும் புகழும் கொண்டு வாழ்வான் என்றும் இவனுக்கு எதிரிகள் இருப்பாரானால் அழிந்தொழிவர் என்றும்இவன் பகைவருக்கு எமன் போன்றவன் என்றும் போகமா முனிவரின் அருளாணையால் புலிப்பாணி புகன்றிட்டேன்.

074

பாரப்பா மேடமுதல் கடகம்மற்றும்

பகருகின்ற கிரகங்கள் ளிருவராக

ஆரப்பா அகங்கள் தனி லமர்ந்திருக்க

அப்பனே அயிஸ்வரியம் மெத்தவுண்டு

*சீரப்பா செம்பொன்னும் ரதங்கள் மெத்த*

*சிரந்ததொரு படைவீரர் கரிமாவுண்டு*

*ஆரப்பா துலைபூமிக் கரசனாகி*

*தொல்புவியில் வாழ்ந்திருப்பன் சூழ்ந்துபாரே.*

*இன்னுமொன்றும் கேள்! மேஷம் முதல் கடகம் வரை ஒவ்வொரு மனைவியரும் இவ்விருவராக (இரண்டிரண்டு பேராக) அமர்ந்திருக்க, அச்சாதகனுக்கு ஐசுவரியம் மிகவும் உண்டாம். சிறப்பு மிக்க பொன்னாபரணச் சேர்க்கையும், ரதங்களும் சிறந்த படைவீரர்களும் யானைப்படையும் கொண்டு நீதி வழுவாது தராசுபோல் இப்புவியில் புகழ்பரப்பி மன்னனாக வாழ்வான்.*

075

*பாடினேன் நின்னமொன்று பகரக்கேளு*

*படவரவு பரமகுரு சேர்ந்துநிற்க*

*கூடினேன் குளிர்ந்தமதி அருகில் நிற்கக்*

*கொற்றவனே குவலயமும் ஆளும்வல்லன்*

*தேடினேன் தேர்வீரர் கோடாகோடி*

*திடமுள்ள துரகங்கள் ரதங்கள்மெத்த*

*நாடினேன் போகருட கடாட்சத்தாலே*

*நாடெல்லா மாளுமன்னன் நயந்துபாரே.*

*மேலும் ஒன்றையும் நான் பாடுகிறேன். கேட்பாயாக! பாம்பும் பரமகுருவும் குளிர்ச்சி மிக்க சந்திரன் அருகில் நிற்க ஒரு மனையில் இருப்பின் அச்சாதகன் இக்குவலயம் ஆளும் மன்னனே ஆவான். கோடானு கோடி தேர் வீரர்களுடன் நல்ல ஆஜானுபாகுவான குதிரைகளையும் (குதிரைப் படையையும்) மற்றும் ரதங்களையும் உடைய வெற்றி வீரன் என்று போகமா முனிவரின் அருளாணையால் புலிப்பாணி கூறினேன்.*

076

*கூறினேன் கலைமதியும் ஒன்றில் நிற்க*

*குருவெள்ளி தேர்ப்பாகன் ஆரேழெட்டில்*

*மாரினேன் மற்றோர்கள் மூன்றுபத்து*

*மைந்தனே லாபத்தி லமர நன்று*

*சீரினேன் செம்பொன்னும் கோடியுண்டு*

*சிவசிவா சீர்பெருகும் செல்வமுள்ளோன்*

*தேரினேன் காலாள்கள் மெத்தவுண்டு*

*திடமாகப் புலிப்பாணி தெரிவித்தேனே.*

*இன்னுமொன்று இலக்கினத்தில் பூர்ண கலையுள்ள சந்திரன் நிற்க, குரு, சுக்கிரன், புதன் ஆகியோர் முறையே 6,7,8, ஆகிய இடங்களில் நிற்க மற்றையோர் 3,10,11 ஆகிய இடங்களில் அமர்ந்திருப்பின் அச்சாதகன் நன்மையான பலன்களையே அடைகிறான். சிறந்த செம்பொன் கோடி கோடியாய் அவனுக்கு வாய்க்கும். சிவபரம் பொருளின் பேரருட் கருணையால் செல்வச்சீர் பெருகிப் காணும். மிகத் தனவந்தனான அவன் தேர்ப்படையுடன் காலாட்படையும் மெத்தவுடையன் என்று போகமா முனிவரின் அருளாணை பெற்ற புலிப்பாணி கூறினேன்.*

077

*பாரப்பா பனிரெண்டில் வெள்ளிநிற்க*

*பாங்கான ரெண்டதனில் குருவுமேற*

*கூறப்பா லெக்னாதி கேந்திரகோணம்*

*கொற்றவனே பாக்கியாதே லாபத்தோடு*

*வீரப்பா விவர்நோக்க மிகுபொன்சேரும்*

*விதமான முப்பதினா யிரந்தானாகும்*

*சீரப்பா போகருட கடாட்சத்தாலே.*

*சிறப்பாகப் புலிப்பாணி செப்பினேனே.*

*இனி, இலக்கினத்திற்குப் பன்னிரண்டில் சுக்ராச்சாரி நிற்க. பாங்கான இரண்டாம் இடத்தில் குரு நிற்க இலக்கினாதிபதி யாராக இருந்தாலும் கேந்திர கோணத்தில் நிற்க 9க்குடையவனும் 11க்குடையவனும் ஆகிய கிரகங்களின் நோக்கம் (பார்வை) பெற்றால் மிகுதியான பொன்னாபரணச் சேர்க்கையும் அப்பொன்னும் முப்பதினாயிரத்திற்கும் மேலாகும் என்றும் போகமா முனிவரது அருளாணையாலே புலிப்பாணி*

078

*பாரப்பா மகரமுதல் நண்டுக்குள்ளே*

*பகருகின்ற பானுமைந்தன் அதிலேதோன்ற*

*சீரப்பா செழுமதியும் கேந்திரமேற*

*சிவசிவாயென்ன சொல்வேன் அரசன் சென்மம்*

*ஆரப்பா அகிலங்க ளெல்லாமாறாம்*

*அப்பனே அரசனுடன் கொடியைப் பார்த்து*

*நாரப்பா நகைக்குதடா சீமான்சோலை*

*நன்றாக புலிப்பாணி நவின்றிட்டேனே.*

*இன்னுமொன்றும் அறிவாயாக. மகரம் முதல் கடகம் வரையுள்ள இராசிகளுக்கு பரிதி மைந்தனான சனி பகவான் ஏதேனும் ஒரு ராசியில் நிற்க அவனுக்குக் கேந்திரத்தில் செழுமைமிகு மதியும் கேந்திரம்*

*பெற, சிவ பரம்பொருளின் கருணை பலத்தினை என்னவென்று சொல்வேன்! அச்சென்மனை அரசனென்றும் அகிலங்களை யெல்லாம் கட்டி ஆளத் தக்கவன் என்றும் அவ்வரசனுடைய பதாகை தன்னைப்பார்த்து புன்னகை கொள்ளும் பூமலர்ச் சோலைகள் எல்லாம் என போகமாமுனிவரின் அருள் பெற்ற புலிப்பாணி இயம்பினேன்.இது*

079

*ஆரப்பா கரும்பாம்பு ஆறிலேற*

*அப்பனே செம்பாம்பு யீராறேற*

*சீரப்பா பிறந்தகுரு கேந்திரமேற*

*சிவசிவா அஷ்டலெட்சுமியாள் யோகம்*

*கூறப்பா கெணங்களுக்கு பெலிகொடுத்து*

*கெணத்திலுள்ள திரவியமும் வெளியெடுத்து*

*பாரப்பா பாக்கியங்கள் கண்ணால் பார்ப்பன்*

*பண்பாக புலிப்பாணி பகர்ந்தேன் பாரே.*

*இன்னுமொன்றையும் நீ கருத்துடன் கேட்பாயாக! இராகு எனும் கரும்பாம்பு இலக்கினத்திற்கு ஆறில் நிற்கவும் செம்பாம்பு ஆன கேது 12ஆம் இடத்தைச் சேரவும் சிறப்புடைய குருபகவான் கேந்திரம் ஏறியும் நிற்கப் பிறந்த ஜாதகன் அஷ்டலக்ஷ்மியாள் யோகம் பெற்றவனாவான். சிவபரம்பொருளின் கருணையிதுவே. எனவே இச்சென்மன் பூதங்களுக்கு பலி பூசை முதலியன நல்கித் தன் மனையிலோ விளைவயலிலோ உள்ள கிணற்றிலிருந்து அனேக திரவியங்களை வெளியெடுத்து அதனால் வெகுவான பாக்கியங்களையும் அனுபவிப்பான், தன் மனையில் மகிழ்ச்சி இழையோடுவதைக் காண்பான் என்று போகமா முனிவரின் அருளாணை பெற்ற புலிப்பாணி கூறினேன்.*

080

*கூறப்பா ஈரைந்தோன் நாலில்தோன்ற*

*கொற்றவனே குடினாதன் கோணம் ரெண்டில்*

*சீரப்பா சென்மனுக்கு புதையல்கிட்டும்*

*செகத்தில் நல்லபேர் விளங்கும் செய்யுள்வல்லோன்*

*ஆரப்பா அஸ்வங்கள் காடியுண்டு*

*அப்பனே அன்ன சத்திரமுங்கட்டி*

*வீரப்பா வெகுபேர்க்கு அமுதளிப்பன்*

*விதமான புலிப்பாணி விளம்பினேனே.*

*இதனையும் நீ நன்கு உன்னிப்பாய் அறிந்து கூறுவாயாக! பத்துக்குடையவன் நாலில் அமர இலக்கினத்ததிபன் திரிகோண ஸ்தான பலம்பெற (1,5,9 திரிகோணம்) அச்சென்மனுக்குப் புதையல் உண்டாகும். அவன் கவிதை பாடுவதில் வல்லோனாவான். அவனுக்கு குதிரைகள் வாய்க்கும், விளையவல் வாய்க்கும். அது மட்டுமல்லாமல் அன்ன சத்திரம் முதலியனவற்றைக் கட்டி*

*வெகுபேருக்கு அமுதளித்து ஆதரிப்பான் என்பதனை போகரருளாலே புலிப்பாணி கூறினேன்.*

081

*ஆமப்பா யின்னமொரு சேதிகேளு*

*அப்பனே தனநிதியன் கருமன்லாபன்*

*தாமப்பா தனம் குவியும் நால்வர்மாற*

*தரணிதனில் பேர்விளங்கோன் சிவிகையுள்ளோன்*

*வேமப்பா பகைவருடன் சேர்ந்துகெட்டால்*

*வீதிகளில் அமடுபிச்சை எடுப்பன்காளை*

*போமப்பா போகருட கடாட்சத்தாலே*

*பூதலத்தில் புலிப்பாணி அரைந்திட்டேனே.*

*இன்னொரு சேதியினையும் நன்கு உணர்ந்து கேட்பாயாக! இரண்டிற்குடையவனும் (இலக்கினத்திற்கு) குருவும், பத்தாவது கருமஸ்தானாதிபதியும் 11க்குடைய இலாபாபதியும் ஆகிய இவர்கள் நால்வரும் மாறிநிற்க தனம் மிகவும் குவியும். பூமியில் மிகுந்த பேரும் புகழும் பெறுவான். சிவிகை முதலியனவும் உடையவன். ஆனால் இச்சாதகனே பகைவருடன் சேர்ந்து குணம் மாறிக் கொடுவானேயானால் வீதியில் இழிவு தரத்தக்க பிச்சை உணவைப் பெற்று வாழவும் கூடும். இதனையும் எனது சற்குருவான போகமா முனிவருடைய கருணையாலே புலிப்பாணி ஆகிய நான் கூறலானேன்.*

082

*சொல்லுகிறேன் இருநாலில் செவ்வாய்தோன்ற*

*சூரியனா ரரவுடனே சேர்ந்துநிற்க*

*வில்லவே விஷந்தீண்டி சாவான் சென்மம்*

*விதமான் களத்திரத்தால் வேதைமெத்த*

*நல்லவே லெக்கினேச னாராமாதி*

*நஞ்சுள்ள கரும்பாம்பு சேர்ந்திட்டாலும்*

*புல்லவே மருந்தாலே கண்டம்சொல்லு*

*பூதலத்தில் புலிப்பாணி களறிட்டேனே.*

*இன்னுமொன்றையும் கூறுகிறேன் கேட்பாயாக! இலக்கினத்திற்கு எட்டில் செவ்வாய் நிற்க சூரியனோடு பாம்பும் சேர்ந்துநிற்க அச்சென்மன விஷம் தீண்டலால் உயிரிழப்பான். அவனுக்குக் களத்திரத்தாலும் துன்பமே. இன்னம் மெத்தவும் நல்லவனான இலக்கினாதிபதிக்கு ஆறாம் இடத்திற்குடையவன் நஞ்சுண்டு கரும்பாம்பான இராகுவுடன் கூடினாலும் மருந்தால் அச்சாதகனுக்குக் கண்டம் என்று கூறுவாயாக! இதனைப் போகமா முனிவர்டேன் அருளாணையால் புலிப்பாணி நவின்றிட்டேன்*

083

*பாரப்பா அட்டமனு மெவரானாலும்*

*பலமுள்ளோர் அப்பலனை பணிந்துகேளு*

*சீரப்பா சிறைமரணம் கிரிமேலேறி*

*சிவசிவா வீழ்ந்திடுவன் தேசம் செல்வன்*

*கூற்ப்பா கொடும்பகையும் கொடுவாள்காயம்*

*குடிமண்ணுஞ் சீவனமும் மோசக்கேடு*

*வீரப்பா விஷபயமும் அம்மைபேதி*

*விளையுமடா பலதுன்பம் வினையைக்கேளே.*

*இன்னொன்றையும் நீ நன்கு ஆராய்ச்சி பூர்வமாக கவனித்து உணர்க! இலக்கினத்திற்கு அட்டமாதிபதி எவரானாலும் பலமுள்ளவரே. அதன் பலனைப் பணிவுடன் கேட்பாயாக. அவனால் சிறைப்படுத்தலும், மரணம் வாய்த்தலும், மலைமேல் ஏறித் தவறிவிழுந்து இறத்தலும் பரதேசம் செல்வதும் மற்றும் கொடியபகையும், கொடுவாள் போன்ற ஆயுதங்களால் ரணமும், குடும்பத்திற்கும், பூமிக்கும் ஜீவனத்திற்கும் மோசமும் கேடு விளைத்தலும் மற்றும் விஷபயமும் மற்றும் கொள்ளை நோயான அம்மை, பேதி போன்ற பற்பல விதமான துன்பங்களைத் தரும் வினையும் நேரும் என உணருக.*

084

*கேளப்பா பீசத்தில் நோயுண்டாகும்*

*கெதியுள்ள குழவிக்கு ரோகங்கிட்டும்*

*வீளப்பா தொங்கிடுவன் வெகுபேர்காண*

*விளங்குகின்ற தூக்குமரக் கோலில் தானும்*

*பாரப்பா பீரங்கி வெடியால் கேடு*

*பலதுன்பம் விளையுமடா பொருளும் நஷ்டம்*

*நீளப்பா நீர்ப்பயமும் தீயால்வேதை*

*நீரிடியும் விழுகுமடா நிசஞ்சொன்னோமே. 84*

*அட்டமாதிபதியால் மேலும் ஏற்படும் துன்பங்களைக் கூறுவேன் கேட்பாயாக! பீசத்தில் நோய் உண்டாதலும், நற்கதியுள்ள குழவிக்கு பலவித ரோகங்கள் ஏற்படுதலும், பல பேரும் கண்டு அனுதாபப்படுமாறு தூக்கில் தொங்கி மரணமடைதலும், மற்றும் பீரங்கி முதலிய வெடிகளால் ஏற்படும் துன்பங்களும் போன்ற பலவும் ஏற்படுவதோடு அனேகப் பொருள் நஷ்டமும், ஜலத்தில் கண்டமுள்ளதாதலால் பயமும் தீயால் துன்பமும் நீரில் இடி விழுதலும் நேர்ந்து மிகத்துன்பம் உண்டாகும் என்பதையும் போகரது அருளாணையாலே புலிப்பாணி கூறினேன்.*

085

*பாரப்பா இன்னுமொன்று பகரக்கேளு*

*பலமுள்ள அட்டமனு மட்டமத்தில்*

*கூறப்பா குழவிக்கு ஆண்டுநூறு*

*கொற்றவனே சத்துருவும் கூடிநோக்க*

*ஆரப்பா அயன் விதியும் அற்பமாகும்.*

*அம்புலியும் உச்சகேந் திரத்தில் நிற்க*

*சீரப்பா ஜென்மனுமே அம்பதுக்குள்*

*சிவலோகஞ் சேர்வனென்று தெளிந்துசெப்பே.*

*இன்னுமொரு நிலைமையும் உனக்குச் சொல்கிறேன். இதனையும் நன்கு உணர்வாயாக. இலக்கினத்திற்கு அட்டமாதிபத்தியம் பெற்ற கிரகமானது அட்டமத்தில் ஆச்சி பெறுமானால் அச்சென்மனுக்கு ஆயுள் நூறாகும். அதே சமயம் சத்துரு கிரகங் கூடி அட்டமாதிபதியைப் பார்ப்பின் அவன் விதி அற்பமானதேயாகும். சந்திரன் தனது உச்ச வீடான ரிஷபத்திலோ அல்லது அதேபோல இலக்கின கேந்திரமானதாக இருப்பின் அச்சென்மன் ஐம்பது அகவைக்குள் சிவலோகம் சேர்வான் என்று ஏனைய கிரக பலங்களையும் நன்கு ஆராய்ந்து கூறுவாயாக.*

086

*அரைந்திட்டேன் இன்னமொன்று அன்பாய்க்கேளு*

*அட்டமத்தோன் மூன்றினிலேயமர்ந்தவாறும்*

*கரந்திட்டேன் கருவூரி லிருந்துவந்த*

*காளையன் நூறாண்டு வசிப்பனப்பா*

*பரைந்திட்டேன் பகைவர்களு மெதிர்த்தாரானால்*

*பாலனுமே போர்புரிவன் நிதியுள்ளோன்*

*கிரந்திட்டேன் போகருட கடாட்சத்தாலே*

*சிறப்பான புலிப்பாணி சொன்னேன்பாரே.*

*இன்னொரு விஷயத்தையும் நான் அன்புடனே கூறுகிறேன். அதனையும் நன்கு உணர்ந்து கேட்பாயாக. இலக்கினத்திற்கு எட்டுக்குடையவன் மூன்றாம் இடத்தில் அமர அவனுக்கு ஆயுள் நூறு என்க. இனி அவனுக்குப் பகைவர் ஏற்படின் அவன் அச்சமற்றவனாக வீரப்போர் புரிபவனாவான். மேலும் இவன் நிறைதனம் உடைய இரு நிதிக் கிழவனேயாவான். சற்குருவான போக மகா முனிவரின் அருளாசிபெற்ற புலிப்பாணி இதனை உனக்குச் சொன்னேன்.*

087

*பாரப்பா யின்னமொரு புதுமைகேளு*

*படவரவ சனிசெவ்வாய் வெய்யோனேழில்*

*வாரப்பா வந்ததொரு தாரமெல்லாம்*

*வையகத்தில் மாண்டிடுவர் வரிசையாக*

*ஆரப்பா அட்டமத்தி லிவர்கள் நிற்க*

*அப்பெண்ணின் கணவனோ முந்திசாவன்*

*சீரப்பா போகருட கடாட்சத்தாலே*

*சிறப்பாகப் புலிப்பாணி நூலைப்பாரே.*

*இன்னொரு புதுமையான செய்தியினையும் நீ கேட்பாயாக! பட அரவும், சனியும், செவ்வாயும், சூரியனும் சேர்ந்து களத்திர ஸ்தானமான ஏழாம் இடத்தில் அமர அச்சாதகனுக்கு வந்த தாரமெல்லாம் இப்பூமியிலே வரிசையாக மாண்டு போவார்கள். ஆனால் இவர்கள் அட்டமத்தில் அமர்ந்தார்களேயானால் அப்பெண்ணின் கணவனே (அதாவது சாதகன்) முன்னர் சாவான். இக்கருத்தையும் போகமுனிவரின் பேரருட் கருணையால் உனக்குச் சொன்னேன்.*

088

*சொல்லப்பா சுடர்வெள்ளி யெட்டில்நிற்க*

*சுகமான் கட்டில் மெத்தை மாடகூடம்*

*அல்லப்பா அகம்பொருளும் நிலமுங்கிட்டும்*

*அரண்மனையில் சேவகமும் செய்வன்காளை*

*தள்ளப்பா தரைபொருளும் நிலமுமெல்லாம்*

*தந்த சுக்கிரன் வாங்கிடுவன் பின்னால்கேடு*

*வல்லப்பா போகருட கடாட்சத்தாலே*

*வளமான புலிப்பாணி பாடினேனே*

*மற்றொரு கருத்தையும் நீ மனத்திற் கொண்டு கருத்துடன் கூறுவாயாக! சூரியனும் சுக்கிரனும் இலக்கினத்திற்கு எட்டில் நிற்க அச்சாதகனுக்கு சுகமான, மெத்தை தழுவணை, கட்டில் மற்றும் மாடகூடம் உள்ள நன்மனையும் பொருளும் நிலமும் மிகவானதாகப் பெற்று மகிழ்வதுடன் அரண்மனையில் சேவகமும் புரிபவனாவான். எனினும் இவற்றையெல்லாம் நல்கிய சுக்கிரபகவான் நல்கியவண்ணமே மீண்டும் வாங்கிடுவான். அதனால் பின்னர் கேடு விளைவதும் உறுதியேயாகும். வல்லமைமிக்க சற்குருவான போகமுனிவரது அருளாணையாலே இதனை வளமாகப் புலிப்பாணி பாடினேன்.*

089

*ஆரடா யின்னமொரு சேதிகேளு*

*அட்டமத்தில் கருநாக மமைந்தவாறும்*

*சீரடா செல்வனையும் அரவந்தீண்டி*

*செத்திறந்து போய்மடிவன் செகத்திலேதான்*

*பாரடா பரமகுரு வேந்தன் நோக்க*

*படவரவு தீண்டாது பாலனைத்தான்*

*ஊரடா உண்ணுதலால் கேடுமுண்டு*

*உத்தமனே ஆறோனைக் கூற்ந்துசொல்லே*

*வேறொரு கருத்தினையும் உனக்குச் சொல்கிறேன். அந்தச்சேதினையும் நீ மனங்கொண்டு கேட்பாயாக! இலக்கினத்திற்கு எட்டாமிடத்தில் இராகுபகவான் நிற்க, அச்சாதகனை அரவந் தீண்டலால் அவனுக்கு மரணம் என்பது உறுதி செய்யப்பட்ட தொன்றாகும். ஆனால் பரம குருவான பிரகஸ்பதியானவர் அத்தானத்தை நோக்க பட அரவு தீண்டாது என்பதனையும் உணர்வதோடு உண்ணும் உணவினால் அவனுக்குக் கேடுண்டாம் என்று விதம் தெரிந்து கிரக பலம் உணர்ந்து கூறுவாயாக.*

090

*பரந்திட்டேனின்ன மொன்று பகரக்கேளு*

*பானு மைந்தன் பால்மதிக்கு யெட்டில்நிற்க*

*சிறந்திட்டேன் ஜென்மனுக்கு அனேகதுன்பம்*

*செத்திறந்து போவதற்கு யெண்ணங்கொள்வன்*

*அறைந்திட்டேன் அகம்பொருளும் நிலமும் நஷ்டம்*

*அப்பனே அரசனிடம் தோஷமுண்டாம்*

*குரைந்திட்டேன் குடிநாதன் கேந்தரிக்க*

*குற்றமில்லை புலிப்பாணி கூறக்கேளே*

*பரிவுடன் இன்னொரு கருத்தையும் நான் கூறுகிறேன். கேட்பாயாக! சூரிய புத்திரனான சனிபகவான் சந்திரனுக்கு எட்டில் நிற்க அனேக விதமான துன்பங்கள் ஏற்படும். அவன் தற்கொலை செய்து கொள்வதற்கும் எண்ணுவான். அவனது மனையும், பொருளும், நிலமும் நஷ்டமாகும். அது மட்டுமல்லாமல் அரசர்களது கோபத்திற்கும் ஆளாகும் தோஷமும் உண்டாகும். எனினும் லக்கினாதிபதி கேந்திரத்தில் இருக்கக் குற்றமில்லை என்றே போகமா முனிவரின் அருளாணையால் புலிப்பாணி கூறினேன்.*

091

*நன்றாகப் பாம்புகள் தான் நாலிலேனும்*

*நலமாக ஈராறும் இருநான்கேனும்*

*சென்றிட்ட தீயர்பலர் செய்யாரப்பா*

*திறமான நாலில் நின்றால் மாதர்தோஷம்*

*குன்றிவிடும் யீராறில் பாதரோகம்*

*குணமான இருநான்கில் கூறும்பாம்பால்*

*நன்றாக மிகுபயமா மற்றராசி*

*நலமென்றே புலிப்பாணி நவின்றிட்டேனே*

*இராகு, கேது என்னும் பாம்புகள் இலக்கினத்திற்கு நான்கிலேனும் மற்றும் 12,8 ஆகிய இடங்களிலும் அமர்ந்தால் நற்பலன்களைச் செய்வார். நான்கில் நிற்பினும் மாதர்தோஷம் குறைவினைச் செய்யும். பன்னிரண்டாம் இடத்தில் நிற்க பாதரோகமும் அட்டம ஸ்தானமான எட்டாம் இடத்தில் நிற்க மிகுதியான பயமும் ஏற்படும்., பிற இராசிகள் நலமுடையதென்றே சற்குருவான போக மாமுனிவரின் அருளாணைப்படி புலிப்பாணி கூறினேன்.*

092

*கேளப்பா மலை தனத்தில் சப்தகோள்கள்*

*கெடி மெத்தமுடியரசு சீமானென்றேன்*

*ஆளப்பா சேனைபரி வேடர் கூட்டம்*

*அணியணியா யிருக்குமடா அலங்கஞ்சுத்தி*

*நாளப்பா நவமணியும் பொருந்திநிற்கும்*

*நலமான துரகங்கள் ரதங்களுள்ளோன்*

*சூளப்பா போகருட கடாட்சத்தாலே*

*சுகமாகப் புலிப்பாணி பகர்ந்தேன்பாரே.*

*இன்னொரு கருத்தினையும் கூறுகிறேன். கேட்பாயாக! கேந்திர ஸ்தானத்திலேனும், இரண்டாமிடமான தனஸ்தானத்திலேனும் ஏழு கிரகங்கள் பொருந்தி நிற்பின் அச்சாதகன் அரச செல்வம் பெற்ற சீமானேயாவான். அவனுக்கு சேனைகளும், பரிக் கூட்டமும், வேடர் கூட்டமும் அணியாகத் திரண்டிருக்கும் என்பதோடு வைரம் முதலான நவமணிகளும் பொருந்தி நிற்பதுடன், நல்ல ரகக் குதிரைகளும் ரதங்களும் உடையவன் என்று போகமா முனிவரின் அருளாணைப்படி புலிப்பாணி கூறினேன்.*

093

*ஆரப்பா அஞ்சுக்கு அஞ்சாம் வீட்டில்*

*அப்பனே அசுபர்களும் அமர்ந்துநிற்க*

*பாரப்பா பிதுருக்கு கண்டம் தெண்டம்*

*பலமாக செப்புவாய் அரசர்தோஷம்*

*சீரப்பா சுபர் நிற்க செல்வமுண்டு*

*சிவசிவா பிதுருக்கு விதியும் தீர்க்கம்*

*கூறப்பா குடிநாதன் கேந்திரகோணம்*

*கொற்றவனே புலிப்பாணி குறித்திட்டேனே*

*வேறொன்றையும் கூறுகிறேன் கேட்பாயாக! இலக்கினத்திற்கு ஐந்துக்கு ஐந்தாம் வீட்டில் அதாவது ஒன்பதாம் இடத்தில் தீக்கோள்கள் அமர்ந்து நிற்க பிதுர்களுக்குக் கண்டமும் அதனால் பொருள் விரயமும் மிகுதியாக ஏற்படும். அரசர் முதலியோராலும் தோஷமே ஏற்படும். ஆனால் சுபர் நிற்பாரேயானால் செல்வமுண்டாகும். சிவபரம்பொருளின் பேரட் கருணையால் பிதுர்களுக்கு ஆயுளும் தீர்க்கமாகும். இலக்கினாதிபதி கேந்திர, திரிகோண ஸ்தானத்திலிருப்பினும் இதே பலன் என்பதையும் போகரருளாலே புலிப்பாணி கூறினேன்.*

094

*பாரப்பா யின்னமொரு புதுமைகேளு*

*பகலவனுஞ் சனியோடு பாம்புசேர*

*கூறப்பா குமரனவ னுதிக்குமுன்னே*

*கொற்றவனே பிதுருக்கு கண்டஞ்சொல்லு*

*ஆரப்பா அத்தலத்தோன் சுபனைக்கூடி*

*அப்பனே கண்ணுற்று நோக்கினாலும்*

*சீரப்பா சிலகாலம் பிதுரிருந்து*

*சிவலோக மடைவனடா செயலைக்கூறே.*

*இன்னுமொரு புதுமையான செய்தியினையும் கூறுகிறேன். அதனையும் நன்கு கேட்பாயாக! சூரியபகவானும், சனியும், பாம்பும் சேர்ந்து நிற்க உதிக்கும் ஜென்மன் பிறப்பதற்கு முன்னமேயே பிதுருக்குக் கண்டம் ஏற்படும். ஆனாலும் அவர்கள் நின்ற அத்தலத்திற்குரியோன் சுபரைக் கூடினும் அல்லது சுபரது பார்வை பெறினும் சீரே ஏற்படும். எவ்வாறெனில் பிதுகர்கள் சில காலம் இருந்து பின்னர் சிவலோகமடைவர் என்பதே அது என்பதனை போகரது அருளாணையால் புலிப்பாணி கூறினேன்.*

095

*ஆச்சப்பா பத்தெட்டில் கோள்கள் நிற்க*

*அப்பனே அவரவர்கள் பொசிப்புநாளில்*

*கூச்சப்பா குழவியுட பிதுரைத்தேடி*

*கொற்றவனே கண்டனுமே வருவான் கூறு*

*மூச்சப்பா மேதினியில் செம்பொன்தேடி*

*முகமினுக்கி மாதருடன் கூடிவாழ்வன்*

*யேச்சப்பா போகருட கடாட்சத்தாலே*

*இடமறிந்து நிலைகூற்ந்து இயம்புவாயே.*

*மற்றுமொரு செய்தினையும் நீ கேட்பாயாக! இலக்கினத்தி'ற்குப் பத்தாம் இடம், எட்டாம் இடம் ஆகியவற்றில் கிரகங்கள் இருந்து அவரவர் தம்முடைய வாழ்நாளில் அச்சாதகனுடைய பிதுர்களைத் தேடி எமதூதனான சண்டன் வருவான் என்றும் கூறுவாயாக. அச்சாதகன் புவியில் நிறையச்*

*செம்பொன்னைத் தேடிச் சேர்ப்பதோடு முகத்தை மினுக்கித் திரியும் வேசியரைக் கூடி வாழ்வான் என்று கிரக நிலவரத்தை நன்கு ஆராய்ந்து கூறுக என்று போகரது அருளாணையால் புலிப்பாணி கூறினேன்.*

096

*தானேதா னின்ன மொன்று செப்பக்கேளு*

*தயவாக தனபதியுந் தனத்திலேற*

*கோனே தான் குமரனுக்கு தனமிருந்தும்*

*குவலயத்திற் கெட்டியடா காசுயீயான்*

*மானேதான் மக்கள் பெண்டிர் புஷ்டியாக*

*மடிரொம்ப உண்ணாமல் பதனஞ்செய்வான்*

*வீணேதான் போகருட கடாட்சத்தாலே*

*விதமாக புலிப்பாணி உரைக்கக்கேளே*

*நானே உனக்கு இன்னுமொன்றையும் கூறுகிறேன். அதனை கவனத்துடன் கேட்பாயாக! இரண்டுக்குடையவன் இரண்டாம் இடத்தில் அமர, அவன் அரச செல்வம் பெற்ற போதிலும் பூமியில் பணத்தை விரயம் செய்யாத கஞ்சனே ஆவான். தன்னுடைய பெண்டு பிள்ளைகளுக்குக்கூட பணம் ஈயான் என்பதோடு, உணவும் ஈயாது உலோபியாய் இருப்பான் என்றும் அவன் வீணான ஜன்மனே என்றும் போகரது அருளினால் புலிப்பாணி கூறினேன்.*

097

*பாடுவாய் பதியோனும் ரெண்டோன்கூடில்*

*பகருகின்ற அசுரகுரு பெலத்துநிற்க*

*கூடுவாய் குழவிக்கு நேத்திர ஊனம்*

*கொற்றவனே மாந்தியுமே கூடிநிற்க*

*தேடுவாய் ஜென்மனவ னுதிக்கும் போது*

*திடமாகச் செப்புவாய் நேத்திரமில்லை*

*ஆடுவாய் போகருட கடாட்சத்தாலே*

*அப்பனே புலிப்பாணி அறிவித்தேனே.*

*நான் கூறுவதை நீ நலமாகப் பாடுவாயாக! இலக்கினாதிபதியும் இரண்டுக்குடையவனைக் கூட எல்லாராலும் குறிக்கப்பெறும் அசுரகுருவான சுக்ராச்சாரியார் பலமாய் நிற்க அச்சென்மனுக்கு நேத்திர ஊனம் உண்டென்றும் அவர்களோடு மாந்தியும் கூடி நிற்க நேத்திரமே இல்லை யென்றும் சற்குருவான போக முனிவரின் அருளாணையால் புலிப்பாணி கூறும் கருத்தைப் புகலுவாயாக.*

098

*தானென்ற கோள்களது மாரிநிற்க*

*தரணிதனில் பேர்விளங்குந் தனமுமுள்ளோன்*

*ஊனென்ற உடல் நாதன் பாம்புகூடில்*

*உத்தமனாம் யோக்கியனாம் புனிதன் சேயன்*

*கோனென்ற குமரியுட பூசைசெய்து*

*கொற்றவனே குவலயத்தில் வாழ்ந்திருப்பான்*

*வானென்ற ,மறலிபய மில்லையில்லை*

*மைந்தனேவிட மறிந்து வழுத்துவாயே*

*நவகோள்களில் இராகு கேது நீங்கலாக ஏனையவை தங்களுக்குள் இடம் மாறி (பரிவர்த்தனை) நிற்க, அச்சாதகனுக்கு பூமியில் பேரும் புகழும் மிகும். வெகுதனமும் உடையவனேயாவான். உடல் நாதனான சந்திரனுடன் பாம்பு கூடினும் உத்தமனாகவும், யோக்கியனாகவும், புனிதத் தன்மையுடையவனாகவும் அச்செல்வன் இந்நிலவுலகில் வாழ்ந்திருப்பான். அவனுக்கு எமபயம் இல்லவே இல்லை. இதனை ஏனைய கிரக நிலவரங்களையும் நன்கறிந்து கூறுவாயாக என்று போகரது அருளாணையால் புலிப்பாணி கூறினேன்.*

099

*கூடப்பா யின்னமொன்று செப்புக்கேளு*

*சுகமுள்ள நாலோனைக் கருமன் கூடில்*

*கூடப்பா கோவில் திருப்பணிகள் செய்வன்*

*கொற்றவனே வாகனமும் செம்பொன் கிட்டும்*

*வீடப்பா வெள்ளிக்கு அம்மன் துர்க்கா*

*விதமான புந்திக்கு அய்யன்மாவோன்*

*பாடப்பா பவும னுக்கு சுப்பிரமணியம்*

*பரமென்ற சிவனுக்கு பொன்னன் கூறே*

*இன்னமொரு கருத்தையும் கூறுகிறேன் கவனமாகக் கேட்பாயாக! சுகஸ்தானாதிபதியாகிய நான்காம் இடத்தோனுடன் பத்தாமிடத்ததிபதியான கருமன் கூட அச்சென்மன் கோயில் திருப்பணிகள் புரிபவனாவான். அவனுக்குச் சிறந்த வாகனங்களும் செம்பொன்னும் கிடைக்கும். இலக்கினாதிபதி சுக்கிரனாகில் துர்க்கையம்மனுக்கும் புதனாகில் ஐயனார். திருமால் ஆகியோருக்கும் செவ்வாயாகில் சுப்பிரமணியருக்கும் குருவாகில் பரமசிவனுக்கும் கோவில் திருப்பணி செய்வான் என்று கூறுக.*

100

*கூறப்பா கதிருக்கு கணேசன் சக்தி*

*கொற்றவனே அம்புலிக்கு ருத்திரன் மாரி*

*ஆரப்பா வெகுபேர்க்கு அமுதளிப்பன்*

*அப்பனே அன்னசத் திரமுங்கட்டி*

*பாரப்பா பகைவர்களும் கண்ணுற்றாலும்*

*பலன்குறைந்துபோகாது விதியும் தீர்க்கம்*

*கூறப்பா போகருட கடாட்சத்தாலே*

*கொற்றவனே புலிப்பாணி குறித்திட்டேனே.*

*இலக்கினாதிபதி கதிரோனாகிய சூரியனாகில் கணேசருக்கும். சக்திக்கும் சந்திரனாகிய ருத்திரன் கௌமாரி ஆகியோருக்கும் கோயில் திருப்பணி செய்வதுடன் வெகுபேர்க்கு அன்னமளிப்பதுடன் அன்ன சத்திரமும் கட்டி ஆதரிப்பான். இச்சாதகனின் 4,10க்குடையோர் கூடிய ஸ்தானத்தை பகைக்கிரகங்கள் பார்வையிட்ட போதும் இவனுக்குப் பலன்கள் குறையா.தீர்க்க ஆயுளே பெறுவான். இதனையும் எனது சற்குருவான போகமா முனிவரின் அருளாணைப்படி புலிப்பாணி கூறினேன்.*

101

*அரைந்திட்டே னின்ன மொன்று அன்பாய்க்கேளு*

*அம்புலியும் ஆறெட்டு லெக்கினத்தில்*

*குரைந்திட்டேன் கொடியோர்கள் கூடிநோக்க*

*கூற்றுவனார் தந்திடுவர் சிசுவைப்பற்றி*

*திரந்திட்டேன் திங்களொரு மூன்றுக்குள்ளே*

*திடமான அரிட்டமடா பத்துநாளில்*

*பரைந்திட்டேன் பாலனுக்கு விதியோ அற்பம்*

*பண்பாக புலிப்பாணி உரைத்தேன்பாரே.*

*போகமா முனிவருடைய கருத்தினை அன்பினால் கூறுகிறேன். அதனையும் நீ ஆராய்ச்சி பூர்வமாகக் கேட்பாயாக! இலக்கினத்திலும், ஆறிலும், எட்டிலும் சந்திரன் நிற்க அச்சந்திரனைக் கொடியவர்கள் கண்ணுற்றுப்பார்த்தால் கூற்றுவன் அச்சிசுவினைப்பற்றி மூன்று மாதத்திற்குள் குறிப்பாகப் பத்து நாள் அதிக அரிஷ்டமுண்டாகும், அச்சாதகனுக்கு விதி வெகு அற்பமென்று போகரது கருணா கடாட்சம் பெற்ற புலிப்பாணி கூறினேன். இந்தக் கருத்தினையும் நீ உணர்ந்து நோக்குக.*

102

*பாரப்பா யின்ன மொன்று பகரக்கேளு*

*பகலவனும் கலை மதியும் கோணமேற*

*சேரப்பா பலவிதத்தால் திரவியம் சேரும்*

*செல்வனுக்கே வேட்டலுண்டு கிரகமுண்டு*

*ஆரப்பா அமடுபய மில்லையில்லை*

*அர்த்தராத் திரிதனிலே சப்தம்கேட்பன்*

*கூறப்பா குமரனுக்கு யெழுபத்தெட்டில்*

*கூற்றுவனார் வருங்குறியை குறிப்பாய் சொல்லே*

*இன்னுமொரு முக்கியமான செய்தியினையும் நான் கூறுகிறேன். இதனையும் நீ நன்குணர்ந்து ஆராய்ச்சி அறிவுடன் கொள்வாயாக! பிரசித்தி பெற்ற சூரிய பகவானுக்கு திரிகோண ஸ்தானத்தில் (1,5,9 ஆகிய இடங்களில்) அமிர்த கலையுள்ள சந்திரன் பலமுற்ற அச்சாதகனுக்கு பலவிதத்தாலும் செல்வங்கள் சேருமென்றாலும், அரிஷ்டமும் உண்டு. எனினும் காக்கும் கோள் உண்டாதலின் அதனால் குறையொன்றும் இல்லவே இல்லை. நடு நிசியில் சப்தங்களைக் கேட்பவானாக இருப்பான். அச்சாதகனுக்கு 78-ஆம் வயதில் கூற்றுவனார் வருவார் என்பதனை ஏனைய கிரகங்களையும் எண்ணி உன் குறிப்பைச் சொல்வாயாக.*

103

*பாடினே னின்னமொரு புதுமைகேளு*

*பலமான செவ்வாயும் துதியில் நிற்க*

*கூடினேன் கிரகத்தில் வழக்கும் போரும்*

*குமரியவள் கணவனையும் கருதிப்பாராள்*

*தேடினேன் தையலுமோ மாண்டாளானால்*

*தனம்விரயம் சஞ்சலமும் அழுதுமாய்வன்*

*ஆடினேன் ஆடவர்கள் அழுதகூலி*

*அவல்கடலை அவர்மடியில் போடுவாரே.*

*நான் கூறுகின்ற இன்னொரு புதுமையும், நீ கேட்பாயாக! ஸ்தான பலமிக்க செவ்வாய் இரண்டாம் இடத்தில் நிற்க அச்சாதகனின் மனையில் அனுதினமும் போர் நிகழும். காரணம் மனைவி அவனைக் கருதிப் பாராதவளாக இருப்பாள். ஆயினும் அவள் மடிந்தாளேயானால் தனம் விரயமாதலும், மனோ வியாகூலமும், அடைந்து அழுகையினால் அச்சாதகன் மாய்வான் என்றே கூறுவேன். ஆடவர்கள் அழுத கூலிக்காக அவலையும் கடலையையும் அவர்தம் மடியில் போடுவார் என்று போகர் அருளாணைப்படி புலிப்பாணி கூறினேன்.*

104

*குறித்திட்டே னின்ன மொன்று கூறக்கேளு*

*குற்றமுள்ளோர் நான்கதனி லமைந்தவாறும்*

*அரித்திட்டே னத்தலத்தோன் கேந்திரிக்க*

*அமடுவந்து தீருமடா அகமுமுள்ளோன்*

*சிரித்திட்டேன் ஜென்மனுக்கு வாகனங்களுண்டு*

*சிறப்பாக மேதினியில் நலமாய் வாழ்வன்*

*பரித்திட்டேன் பெற்றவட்கு ரோகஞ்சொன்னேன்*

*பரமகுரு பதியமர யோகந்தானே*

*நான் இன்னுமொன்றையும் குறித்துச் சொல்கிறேன் நன்கு கேட்பாயாக! தீய கோள்கள் நான்கில் அமைந்த முறையும் அந்த நான்காம் தலத்திற்கு உரியவன் கேந்திரத்திலிருப்பின் அதாவது 1,4,7,10 ஆகிய இடங்களில் இருக்க துன்பம் வந்து தீரும் என்பது சுருதி முடிவாகும். ஆயினும் நல்லமனை அவனுக்கு வாய்க்கும்; வாகன வசதியுடையவன். இந்நிலவுலகில் மேலான பெருமையுடன் வாழ்வான். ஆயினும் பெற்றோருக்கு வியாதியும் உண்டு என்பதை போகமா முனிவரின் பேரருளால் நான் கூறினேன் என்று புலிப்பாணி குறிப்பிடுவதோடு இலக்கினாதிபதி குருவுடன் சேர நன்றாம் என்று கூறுகிறார்.*

105

*கேளப்பா இன்னமொரு புதுமைகேளு*

*கெடுதிசெய்யும் செம்பாம்பு நாலில்நிற்க*

*சீளப்பா ஜெனித்தமனை சுத்தபாழாம்*

*சென்மனுக்கு கிரகமுண்டு விதியும்கூறு*

*கூளப்பா குளிகனுமோ சேர்ந்து நிற்க*

*குடியிருக்கக் குச்சில்லை கறவையில்லை*

*ஆளப்பா அன்னைக்கு தோஷம் தோஷம்*

*அத்திடலில் அரவுக்கு சாந்திசெய்யே*

*அப்பனே இன்னுமொருபுதுமையினையும் கூறுகிறேன். அதனையும் நன்கு உணர்ந்து கேட்பாயாக! தீமையையே செய்யும் செம்பாம்பு எனக் கூறப்படும் கேது பகவான் நான்காம் இடத்தில் நிற்க அந்த சென்மன் உதித்த மனைபாழாகிப் போகும். அவனுக்கு தீக்கோள் தோஷமுண்டு. அவனது விதியையும் கிரகபலம் அறிந்து கூறுக. அவனுடன் மாந்தியும் கூடிநிற்பின் குடியிருக்க வீடோ கன்று காலிகளோ அவனுக்கில்லை. அவனது அன்னைக்கும் தோஷம் உண்டாம் என்று கூறுவதுடன் நாக தோஷப் பரிகாரம் செய்வது சிறப்பாமென்று போகமா முனிவரது பேரருளினால் புலிப்பாணி கூறினேன்.*

106

*செய்யப்பா யின்னமொரு சேதிகேளு*

*செயலாக நிதிகரும னிருவர்கூடி*

*கையப்பா கண்ணுற்று நோக்கினாலும்*

*கனமுள்ளோ ரிருவருமே மாறினாலும்*

*அய்யப்பா அகம்பொருளும் நிலமுஞ்செம்பொன்*

*அப்பனே கிட்டுமடா ஜென்மனுக்கு*

*உய்யப்பா போகருடா கடாசத்தாலே*

*உத்தமனே புலிப்பாணி உரைத்தோம்னமே*

*சீர்த்தி மிகுந்தவனே, நீ இன்னுமொரு சேதியினையும் கேட்பாயக! இரண்டிற்குடையவனும் பத்துக்குடையவனும் கூடி இருப்பினும் அல்லது ஒருவரை ஒருவர் கண்ணுற்று நோக்கினாலும் அல்லது இவன் வீட்டில் அவனாக மாறி நிற்பினும் அச்சாதகனுக்கு அகமும், பொருளும், நிலமும், செம்பொன்னும் வெகுவாகக் கிடைக்கும். போகருடைய கடாட்சத்தால் உய்க என்றே அவருடைய மாணாக்கனாகிய புலிப்பாணி உரைத்தேன்.*

107

*அரைந்திட்டே னின்னமொரு சேதிகேளு*

*அப்பனே ஆறோனும் மூன்றோனின்மேல்*

*திரந்திட்டேன் தேசத்துக்குக் கள்ளர்நாட்டை*

*தீயாலேகொளுத்திடுவன் சினமுள்ளோன்*

*உரைத்திட்டேன் உள்நாட்டு கள்ளர்கண்டால்*

*உள்ளபடி ஆக்கினையை விதிப்பவன் கான்*

*பரைந்திட்டேன் படையாட்சி ஆள்கள்மெத்த*

*பன்பாக புலிப்பானி அரைந்திட்டேனே*

*இன்னுமொரு சேதினையும் நான் கூறுகிறேன் கேட்பாயாக! ஆறுக்குடையோனும் மூன்றுக்குடையோனும் கூடினால் அவன் மிகப் ¦ப்ரும் வீரனாக விளங்கினால் தீய கள்ளர்தம் தேசத்தைத் தீயாலே கொளுத்துகின்ற அளவுக்கு சினமுடைய வனாக இருப்பான். இன்னும் மறைமுக எதிரிகள் உண்டானால். அவர்களுக்கு முறைப்படி ஆக்கினைகள் விதிப்பான். இச்சென்மன் மிகப்பெரும் வீரனென்றும் குடி, படை கொண்டு செலுத்தத் தக்கவன் என்றும் இவனுக்கு நிறைந்த ஆள்பலம் உண்டென்றும் போகரது அருளால் புலிப்பாணி கூறினேன்.*

`

108

*வீரப்பா யின்னமொரு வினையைக்கேளு*

*விரையாதி குடும்பியுமோ ரேழில் நிற்க*

*சீரப்பா ஜென்மனும் வேடதாரி*

*சிவசிவா பாடகனாம் செய்யுளுள்ளோன்*

*கூறப்பா குமரியினால் லாபமுண்டு*

*கொற்றவனே செப்பபடி வித்தைகளும் செய்வன்*

*ஆரப்பா அரவத்தைப் பிடித்துவந்து*

*ஆட்டிவைப்பன் அனைவோரும் பார்க்கத்தனே* *108*

*வீரமிக்க மறவனே! இன்னுமொரு சேதியினையும் நீ விநயமுடன் கேட்பாயாக! 12-க்குடையவனும் 2க்குடையவனும் 7ஆம் இடத்தில் நிற்க, இச்சென்மன் சீருடையவன் என்றும், பாடகன் என்றும், செய்யுள் இயற்ற வல்லவன் என்றும், பெண்களால் லாபமடைபவன் என்றும், அரசனைப்போல் அலங்காரப் பிரியனென்றும் செப்படி வித்தையில் தேர்ந்தவன் என்றும். எல்லாரும் காணும் படியாக அரவுதனை ஆட்டிவைத்துக் காணச் செய்பவன் என்பதையும் போகர் அருளாலே புலிப்பாணி கூறினேன்.*

109

*பாரப்பா யின்னமொரு புதுமைகேளு*

*பால்மதிக்கு நாலோனும் சுங்கன் கூடில்*

*கூறப்பா யெத்தடத்தில் கூடிட்டாலும்,*

*கொற்றவனே ஜென்மனுமோ மந்திரவாதி*

*வீரப்பா வராகிதுர்க்கை தேவி அம்மன்*

*விதமான பூசைதனை மண்ணோர் போற்ற*

*சீரப்பா போகருட கடாட்சத்தாலே*

*செப்பினேன் புலிப்பாணி செயலைத்தானே.*

*நன்றாகக் கூற்மையாக இக்கருத்தையும் மனத்துள் கொள்க! இது புதுமையானதொன்றேயாகும். சந்திரன் நின்ற இடத்திற்கு நாலாம் இடத்திற்குரியவனும் சுக்கிரனும் கூடினால் அதாவது எவ்விடத்தில் கூடினாலும் அச்சென்மனை நீ மந்திரவாதி என்றே கூறுதல் வேண்டும். அவன் இப்பூவுலகில் உள்ளவர்கள் போற்றுமாறு வராகி,துர்கை, தேவி, அம்மன் ஆகியோருக்கு விதம் விதமாக பல நல்பூசைகளைச் செய்வன் என்றும் போக முனிவரது பேரருட் கருணையால் புலிப்பாணி கூறினேன்.*

110

*செப்புவாய் சந்திரனும் ஈராறோனும்*

*சிவசிவா பஞ்சமத்தோன் மூவர்சேர்ந்து*

*அப்புவாய் ஆகாசங் கோபுரத்தில்*

*அப்பனே கம்பத்தைக் கட்டித்தானும்*

*ஒப்புவாய் உலகத்தோர் மதிமயங்க*

*ஓகோகோ ஆகாச கரணம்போட்டு*

*தப்புவாய் தரணி தனில் கீழேவந்து*

*தார்வேந்தர் மனமகிழ பணிவன்பாரே.*

*புகழ் பெற்ற சந்திரனும் இலக்கினத்திற்குப் ப்ன்னிரண்டுக் குடையவனும் சிவ பரம்பொருளின் பேரருட் கருணையினால் ஐந்தாமிடத்தோனும் ஆகிய இவர்கள் மூவரும் சேர்ந்து நிற்க. இச்சாதகன்,நீர் மீதும், ஆகாச மீதும், கோபுரத்தின் மீதும் கம்பங்களை நாட்டி அதன் மீதிலும் உலகோர்*

*ஒப்பும்படியாக, அவர்களது மதியானது மயக்கமுறும்படியாக ஆகாசத்தில் கரணம் இட்டு வேடிக்கை காட்டி பூமியின் கீழ்வந்து மன்னர் முதலான மற்றையோரின் பரிசில்களைப் பெற்று மகிழ்வான் என்று போகமாமுனிவரது பேரருட் கருணையால் புலிப்பாணி கூறினேன்.*

111

*பகருவாய் ஆறோனும் லெக்னாதி*

*பன்னிரெண்டெட்டாறில் தீயரோடே*

*இகருவாய் தேகமது ஜென்மனுக்கு*

*இளைத்து விடும்ரோகங்கள் கிட்டும்கிட்டும்*

*புகழுகின்ற அரவொடு ரெண்டோன் கூடி*

*பூங்குழலே ரெண்டதனி லமர்ந்து நிற்க*

*நிகழுகின்ற நீணிலத்தில் கல்வியாலே*

*நாலுவித பிரசங்க வித்வானாமே*

*இன்னுமொன்றுரைப்பேன் கேட்பாயாக ஆறுக்குடையனும் இலக்கினத்ததிபனும் 12,8,6 ஆகிய இல்லங்களில் தீயோரோடு இருக்கப் பிறந்த ஜென்மனுக்கு தேகத்தில் இளைப்பு உண்டாகும். அநேக வியாதிகள் வந்து வாய்க்கும். எல்லாரும் புகழும் அரவுடன் இரண்டுக்குடையவன் கூடி இரண்டாம் இடத்திலேயே நிற்க இந்நிலவுலகில் அச்சாதகன் தான் பெற்ற கல்வியின் நிமித்தமாக மிகச் சிறந்த வித்துவானாகவும் பிரசங்கியாகவும் மிளிர்வான் என்று போகரது அருளாணையால் புலிப்பாணி கூறினேன்.*

112

*தானென்ற இரவிக்கு முன்னேபுந்தி*

*தனித்திருக்கப் புனிதனடா தரித்திரத்தோஷம்*

*தானென்ற யிரவிக்குப் பின்னேபுந்தி*

*தரணிதனில் பேர் விளங்கும் தனமுள்ளோன்*

*தானென்ற யிரவிக்குப் பின்னேசேயும்*

*தங்கிடவே புத்திரர்கள் மெத்தவுண்டாம்*

*தானென்ற குருவோடு நீலன்மேவ*

*தரணிதனில் செவிடனடா முடவன்பாரே.*

*தன்னிகரில்லாத ரவிக்கு புதன் முன்னே தனித்திருக்க அவன் புனிதனேயாவான். ஆனால் தரித்திர யோகம் கொண்டவனே. ஆனால் ரவிக்குப் பின்னால் புதன் நிற்பின் அச்சாதகன் பெயர் பூமியில் விளக்கமுறக் காணும். அவன் தனவானேயாவான். அதேபோல் ரவிக்குப் பின்னே செவ்வாய் நிற்க அச்சாதகனுக்குப் புத்திரர்கள் மெத்தவும் உண்டு. மற்றும், குருவோடு நீலனும் அவ்வாறு மேவ அச்சாதகன் செவிடனாகவும் முடவனாகவும் இருப்பான் என்று போகரது அருளாணையாலே புலிப்பாணி கூறினேன்.*

113

அரைந்திட்டே னின்னமொன்று செப்பக்கேளு

அனலனுக்குப் பின்னாலே அலரிமந்தன்

பரிரைந்திட்டேன் பண்டுபொருள் அகமிங்கிட்டும்

பார்தனிலேபர தார விசையநப்பா

குரைத்திட்டேன் குமரனுக்கு எட்டுபத்தில்

குலவையிட்டு வருவனடா சண்டன்தானும்

சிறந்திட்டேன் ஜென்மனுக்கு யோவஞ்செப்பு

சிறப்பாகப் புலிப்பாணி ஆசிச்சேனே.

இன்னொரு விவரத்தையும் உனக்குக் கூறுகிறேன். அதை மனங்கொண்டு கேட்பாயாக! அனலன் என்று சொல்லப்படும் சூரியனுக்குப் பின்னால் தாமரையை மலர்த்தும் அவனது குமாரனான மந்தன் என அழைக்கப்படும் சனிபகவான் நின்றால் அச்சாதகனுக்கு பூர்வீக சொத்தும் நல்ல மனையும் கிடைக்கும். அவன் இந்நிலவுகில் பரதார இச்சை கொண்டவனாக இருப்பான் என்றும் அவனது எண்பதாவது வயதில் எமதூதனாகிய சண்டன் வருவானென்றும் ஆயினும் அவன் யோகவானேயென்றும் போகர் அருளாணையால்

புலிப்பாணி கூறினேன்.

114

ஆரப்பா யின்னமொரு புதுமைக்கேளு

அம்புலியும் அசுரகுரு யேழில்நிற்க

கூறப்பா கிழவனுக்கு மாலையிட்டு

குமரியவள் மதனத்தால் பலரைக்கூடி

சீரப்பா செல்வனையும் பெற்றெடுத்து

சிறப்பாக தொட்டிவிட்டு ஆட்டுவாளாம்

பாரப்பா பார்த்தவர்கள் பிரமிக்கத்தான்

பாங்கியவன் ஸ்தனங்குலுங்க வருவாள்பாரே

இன்னும் ஓர் அதியசயமான செய்தியையும் கூறுகிறேன். நன்கு ஆராய்ந்து கேட்பாயாக! சந்திரனும் அசுரகுருவான சுக்கிரனும் இலக்கினத்திற்கு ஏழில் நிற்க அச்சாதகி கிழவனுக்கு மாலையிட்டு அவனால் மனநிறைவு பெறாமல் காமவயப்பட்டு பலரையும் கூடி சிறப்பான புதல்வனையும் பெற்றெடுத்து அவனைத் தொட்டிலிலிட்டு ஊரார் வியக்க ஆட்டுவதோடு தனது ஸ்தனங்கள் குலுங்கப் பெருமையோடு வருவாள் என்பதையும் புலிப்பாணி உனக்கு உணர்த்தினேன்.

115

பாரப்பா யின்னமொன்று பகரக்கேளு

பரமகுருபால் மதியும் வெள்ளிமூவர்

சீரப்பா ஜென்மனுக்கு அஞ்சில் தோன்ற

சிறப்பாக மேதினியில் நலமாய் வாழ்வான்

கூறப்பா குரு விருந்தால் புத்திரரற்பம்

குளிர்ந்தமதி தானிருந்தால் பெண்ணதாகும்

வீரப்பா வெள்ளிநின்றால் யோகம் மெத்த

விளம்புவாய் புவியோர்க்கு உலகின்கண்ணே

நான் கூறுகின்ற இன்னொரு கருத்தையும் நீ ஆழ்ந்து காண்க. தேவகுருவும் சந்திரனும் அசுரகுருவும் ஆகிய மூவரும் இலக்கினத்திற்கு ஐந்தில் நிற்க அச்சாதகன் இந்நிலவுலகில் மிகச் சிறப்புடன் வாழ்பவன் ஆவான்; அதே போல் ஐந்தில் குருதனித்திருக்க புத்திரர்கள் அற்பம் என்றும் சந்திரன் தனித்திருக்க பெண்சந்தானம் என்றும் இப்புவியோர்க்குக் கூறுக, போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.

116

கண்ணப்பா யின்னமொரு கருத்தைக்கேளு

கனத்ததொரு லாபத்தில் நிதியில் தோன்ற

உண்ணப்பர் உயர்நீதியோன் நிதியில்தோன்ற

உத்தமனாந் தண்டிகையும் துரகமுள்ளோன்

பண்ணப்பா புதை பொருளும் கிட்டுங்கிட்டும்

பலமான வித்தையடா யிருக்கும்பாரு

திண்ணப்பா போகருட கடாட்சத்தாலே

திடமான புலிப்பாணி சாற்றினேனே.

நான் உனக்குக் கூறும் மற்றொரு கருத்தினையும் நீ கேட்பாயாக! முன்சொன்ன மூவர் பதினொன்றாம் இடமான இலாபஸ்தானத்திலும் இரண்டாம் இடமான தனஸ்தானத்திலும் நின்ற பலன்களாவன: குருபகவான் நிதியில் தோன்ற அச்சாதகன் உத்தமன். பலவிதப் படைக் கலன்களும் குதிரைகளும் உடையவன். அவனுக்குப் புதையல் தனமும் பலமான வித்தையும் கிட்டும். இதனையும் போகரது அருளாணையால் புலிப்பாணி கூறினேன்.

117

பாரப்பா யின்னமொரு புதுமைகேளு

பால்மதியும் பரமகுரு யேழில் நிற்க

சீரப்பா ஜென்மனுக்கு வேட்டலில்லை

செந்திருமால் தேவியுமோ விலகி நிற்பாள்

கூறப்பா குமரியவளில்லாமல்தான்

குமரனுட வங்கிஷமும் நாசமாச்சு

ஆரப்பா அயன்விதியை கூறலுற்றேன்

அப்பனே புலிப்பாணி பாடினேனே

இன்னுமொரு புதுமையையும் நீ கேட்பாயாக! எல்லாராலும் புகழப்படும் குருவும் மதியும், ஏழாம் இடத்தில் நிற்கப் பிறந்த சாதகனுக்கு தன்னளவில் விருப்பமின்றி இருப்பான். எனினும் செந்திருமால் தன் தேவியுடன் அவனை விலகியே நிற்பான். ஆதலின் மனைவி மக்கள் இன்றி அக்குமரனது வம்சம் நாசமாகும்பிரமன் எழுதிய விதியை யாரால் மாற்ற இயலும்? இதனையும் போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.

118

பாடுவாய் புந்தி வெள்ளி நாலில் நிற்க

பகருகின்ற பதியோனும் கேந்திரமேற

நாடுவாய் நாலுள்ளோன் சுபர்கள் நோக்க

நற்சுகமும் மேடையுண்டு நாடுமுள்ளோன்

கூடுவாய் குமரனுக்கு யோகம் மெத்த

குவலயத்தில் பேர் விளங்கோன் நிதியுமுள்ளோன்

ஆடிடுவாய் ஆரல் நிற்கும் நிலையைப்பார்த்து

அப்பனே புவியோர்க்கு கூறுவீரே

மற்றொன்றையும் கூறுவேன், கேட்பாயாக! பெருமை மிகு புதனும் சுக்கிரனும் இலக்கினத்திற்கு நான்காம் இடத்தில் நிற்க இலக்கினாதிபதியும் கேந்திரத்தில் நின்றால் எல்லா சுகபோகமும் உள்ளவன், மேலும் சுபர்களின் திருஷ்டி பெற்றால் பெருமைமிகு சுகமும், உப்பரிகை மேடையும் நாடும் உள்ளவன், இச்சென்மனுக்கு இந்நிலவுலகில் மிகவும் யோகம் உண்டென்றும் இவன் பெயரும் புகழும் விளக்கம் பெறும் என்பதும் இவன் வெகுதனம் உடையவன் என்பதும் நிதர் சனமே. எனினும் சூரியன் நின்ற இடத்தை நன்கு ஆராய்ந்து கூறுவாயாக என்று போகரது அருளாணையால் புலிப்பாணி உரைத்தேன்.

119

ஆரப்பா யின்னமொரு சேதிகேளு

அப்பனே ஆறோனும் கேந்திர கோணம்

சீரப்பா ஜென்மனுக்கு இராஜ தோஷம்

செப்புகிறேன் சோரர்பயம் சோரத்தால் துன்பம்

கூறப்பா குடும்பத்தில் களவும் போகும்

*கூச்சலிட்டு வெளிவருவள் குமரிதானும்*

*வீரப்பா விஷயமுநீ வெடியால் துன்பம்*

*விளையுமடா பலதுன்பம் இன்னம்கேளே*

*இன்னுமொரு கருத்தினையும் உனக்குக் கூறுகிறேன். அதனையும் நன்கு கவனிப்பாயாக! இலக்கினத்திற்கு 6க்குடையவன் கேந்திரஸ்தானத்தில் (1,4,7,10) இருந்தால் அச்சென்மனுக்கு அரசதோஷம் மற்றும் திருடர் பயம், சோரம் போவதால் துன்பம் விளைதல், குடும்பத்தில் களவு போதல், வீட்டில் சண்டையும், குமரிப்பெண் கூச்சலிட்டு வெளிவருதலும், விஷபயமும், வெடி முதலியவற்றால் துன்பமும் இன்னும் இது போன்ற பல துன்பங்களும் ஏற்படும் என்று போகரது ஆணையால் புலிப்பாணி புகன்றேன்.*

120

*ஆரப்பா யின்னமொன்று அரையக்கேளு*

*அப்பனே அசுரகுரு நாலிலேற*

*சீரப்பா செழுமதியும் ஜென்மம் ஜென்மம்*

*செல்வனுக்கு யோகங்கள் கூறக்கேளும்*

*வாரப்பா வாகனங்கள் பூமியுள்ளோன்*

*வளமான போகனடா வையகத்தில்*

*கூறப்பா கொடுஞ்சனியும் பத்தில் நிற்க*

*கூறுவாய் குழவிக்கு யோகங்கூறே*

*வேறொரு விஷயத்தையும் உனக்கு விளக்கமாக உரைக்கின்றேன். அதனையும் நன்கு ஆய்ந்து கவனிப்பாயாக! அசுரர்களின் குருவென்று சொல்லக்கூடிய சுக்ராச்சாரியார் நான்காம் இடமான கேந்திரஸ்தானத்தில் நிற்க அச்சாதகனுக்கு யோகங்கள் மெத்தவும் உண்டாம். அவன் வாகன யோகம் உடையவன். பூமி லாபம் உடையவன். வளம் மிகுந்த போக பாக்கியங்களை அனுபவிப்பவன். இந்நிலவுலகில் சிறப்புறுபவன், இதேபோல் பத்தில் கொடிய பாவி எனக் கூறப்படும் சனிபகவான் நின்றாலும் அச்சென்மனுக்கு யோகம் என்றே கூறுவாயாக என போகர் அருள் பெற்ற புலிப்பாணி கூறினேன்.*

121

*ஆரப்பா யின்னமொன்று அரையக்கேளு*

*அப்பனே அம்புலிக்கு ஆரே ழெட்டில்*

*சீரப்பா சுபர் நிற்க ஜென்மன்தானும்*

*சிறப்பாக மேதினியில் நலமாய்வாழ்வான்*

*பூரப்பா பேய்பூதம் வசியமாகும்*

*பூதத்தில் அரசனிடம் சேனைகாப்பன்*

*கூறப்பா குடிநாதன் கெட்டானானால்*

*குமரனுக்கு யோகங்கள் குலைந்துபோச்சே*

*மேலும் ஒன்றைக் குறிப்பிடுகிறேன். அதனையும் நன்கு உணர்ந்து கேட்பாயாக! சந்திரனுக்கு ஆறு, ஏழு, எட்டு ஆகிய இடங்களில் சுப கிரகங்கள் நிற்கப் பிறந்த சாதகன் இப்பூமியில் மிகச் சிறப்பையே அடைகிறான். நலமுள்ள வாழ்வே பெறுகிறான். இவனுக்குப் பேய், பூதம் ஆகியவை வசியமாகும். மேலும் அரசசெல்வாக்கு பெறுவான். ஆனால் இலக்கினாதிபதி கெட்டால் இந்த யோகங்கள் குலையும் என்பதையும் கிரகநிலவரங்களை நன்கு ஆராய்ந்து கூறுவாயாக எனப் போகர் அருள் பெற்ற புலிப்பாணி கூறினேன்.*

122

*கூறப்பா யின்னமொரு புதுமைசொல்வேன்*

*குமரனுக்கு குருச்சந்திர பலனைக்கேளு*

*சீரப்பா செம்பொன்னும் மனையுங்கிட்டும்*

*ஜெனித்ததொரு மனைதனிலே தெய்வங்காக்கும்*

*கூறப்பா கோதையரால் பொருளுஞ்சேரும்*

*குவலயத்தில் போர் விளங்கோன் கடாட்ச முள்ளோன்*

*ஆரப்பா அத்தலத்தோன் மறைந்தானானால்*

*அப்பலனை யரையாதே புவியுளோர்க்கே*

*இன்னுமொரு புதுமையினையும் கூறுவேன், கேட்பாயாக! குரு சந்திரயோகத்துடன் பிறந்த ஜென்மனுக்கு மிகவும் சிறப்பே கிடைக்கும். செம்பொன்னும் நன்மனையும் அவனுக்கு வாய்க்கும். அவன் பிறந்த மனையைத் தெய்வம் காவல் கொள்ளும். பெண்களால் நிறைந்த தனலாபம் ஏற்படும். பூமியில் அவன் பேரும் புகழும் பெற்று வாழ்வான். இறையருள் வாய்ந்தவன். ஆனால் குரு சந்திரயோகம் தந்த பாவாதிபதி மறைந்தால் இப்பலனைக் கூறாதே எனப் போகர் அருளாணை பெற்ற புலிப்பாணி நவின்றேன்.*

123

*ஆமப்பா இன்னமொன்று அரையக்கேளு*

*அம்புலியும் ஆறோனும் ஆரல்முவர்*

*நாமப்பா நாலதனில் குடியிருக்க*

*நரசுகமு மில்லையடா ஜென்மனுக்கு*

*போமப்பா புதல்வனையும் பெற்றெடுத்த*

*பொற்கொடியாள் புக்கிடுவள் சோரனோடே*

*வேமப்பா போகருட கடாட்சத்தாலே*

*வினைப்பயனைப் புலிப்பாணி பாடினேனே.*

*வேறொன்றையும் கூறுகிறேன் அதனையும் நீ அன்புடன் கேட்பாயாக! சந்திரனும் ஆறுக்குடையவனும் ஒன்பதாம் பாவகத்திற்குரிய சூரியனும் ஆகிய இம்மூவர் இலக்கினத்திற்கு நான்கில் குடியிருக்க அச்சென்மனுக்கு மனிதர்களால் சுகமில்லை என்றே கூறுக. அப்புதல்வனைப் பெற்றெடுத்த பொற்கொடி போன்ற அன்னை சோர புருஷனோடு சுகித்திருப்பாள். வினைப்பயனை யாரோ விலக்க வல்லவர்கள்? இதனையும் போகர் அருளாலே புலிப்பாணி நவின்றிட்டேன்.*

124

*போச்சப்பா யின்னமொரு பேச்சுகேளு*

*பொன்னுவெள்ளி சனி செவ்வாய் புந்தி ஐவர்*

*யேச்சப்பா யெத்தலத்தில் கூடிட்டாலும்*

*என்மகனேயென்ன சொல்வேன் இராஜகள்ளன்*

*ஆச்சப்பா அரண்மனைக்குள் புகுந்தானானால்*

*அங்கிருக்குந் தலையாரி உறங்கிப் போவான்*

*வீச்சப்பா போகருட கடாட்சத்தாலே*

*விதமான புலிப்பாணி விளம்பினேனே*

*இன்னொரு கருத்தையும் நான் கூறுகிறேன். அதனையும் நீ கேட்பாயாக! வியாழனும், சுக்கிரனும், சனியும், செவ்வாயும், புதனும் ஆகிய இவர்கள் ஐவரும் எந்த இடத்தில் கூடினாலும் அச்சென்மனை நான் என்னவென்று சொல்வேன்? இவனே இராஜகள்ளன். இவன் அரண்மனைக்குத் திருடச் சென்றானேயானால் அங்குள்ள காவலன் உறங்கிப் போவான். இதனையும், போகரின் அருளாணையால் புலிப்பாணி புகன்றேன்.*

125

*அறிவித்தேன் அஞ்சுக்கு அஞ்சொன்றாலும்*

*அப்பனே அப்பதிக்கி கோணந்தன்னில்*

*தெரிவித்தேன் திரவியமும் காடியுண்டு*

*திடமான மனைகட்டி ஆளுவானாம்*

*குரிவித்தேன் ஆலயமும் பழுதுபார்ப்பன்*

*கொற்றவனே ரஜிதபாத் திரமுங்கொள்வன்*

*புரிவித்தேன் பதியோனும் வியமாறெட்டில்*

*பதறாதே பண்டுபொருள் விரயமாமே*

*இன்னமொரு கருத்தினையும் உனக்கு அறிவிக்கின்றேன் அதனையும் நீ மனங்கொண்டு கேட்பாயாக! ஐந்திற்கு ஐந்தான ஒன்பதாமிடத்ததிபதி அவனது ஸ்தானத்திற்குத் திரிகோண (1,5,9) ஸ்தானத்தில் நிற்கப் பிறந்த சாதகனுக்கு திரவிய லாபமும் வயல், வரப்பு, தோப்பு முதலியனவும் நல்ல தொட்டிக் கட்டுள்ள அரண்மனை போன்ற வீடும் அமைந்து நல்ல முறையில் வாழ்வான். அதுமட்டுமல்லாமல் கோயில் புனருத்தாரணம் செய்வான். மேலும் பரோபகாரியாகவும் பேரும் புகழும் பெற்று*

*வாழ்வான். ஆனால் இலக்கினாதிபதி 12,6,8 ஆகிய இடங்களில் நின்றால் வெகுதன விரயம் ஏற்படும். அதாவது பூர்வீக சொத்துகள் கூட அழியும் என்று போகர் ஆணையால் புலிப்பாணி தெரிவித்தேன்.*

126

*தேரான செவ்வாய்க்கி வியமா றெட்டில்*

*திடமுள்ள சுக்கிரனு மதனில்மேவ*

*பாரான பண்டுபொருள் மனைபால்வாதம்*

*பகருகின்ற பங்காளி துணைவனாலும்*

*கூறான குழவிக்கே யெதிரியாலே*

*கொற்றவனே யதிகாரியாலும் வெற்றி*

*சீரான செவ்வாயும் இதுபோல் செப்பு*

*சிவசிவா சித்திரமும் திசையைப்பாரே*

*..இதனையும் நீ நன்குணர்ந்து கேட்பாயாக, சேய் என்றழைக்கப்படும் செவ்வாய் 12,6,8 ஆகிய இடங்களில் சுக்கிரச்சாரியார் பலமுடன் இருப்பானாரால் மிகவும் சிறப்பு மிக்க பூர்விகப்பொருளாலும் மனையாலும் விவாதம் புரிவதாலும் மற்றும் அதற்காகவே உள்ள பங்காளிகளாலும் அச்சென்மனுக்கு வெற்றி. அதுமட்டுமல்லாமல் எதிரியாலும் எதிர்த்து வரும் அதிகாரியாலும் வெற்றியே நேரும். இதில் செவ்வாய் நின்ற நிலையும் பலமும் அறிந்து தசாபுத்தி அறிந்து பலன் கூறுக என்று போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

127

*வீரப்பா யின்ன மொருவினையைக் கேளு*

*விளம்புகிறேன் நிதிகருமன் தனமும் நாலோன்*

*நாரப்பா நால்வர்களும் மூடமானால்*

*நரபதி போலிருப்பதிற்கு வகையைக்கேளு*

*ஆரப்பா அருக்கன்பின் புந்திசேயும்*

*அப்பனே அடைவாகத் தனித்திருக்க*

*சீரப்பாரா போகருட கடாட்சத்தாலே*

*சிறப்பாக மேதினியி லிருப்பராமே.*

*வீரம் மிக்கவனே! இன்னமொரு பொருளையும் நீ கேட்பாயாக! தனஸ்தானாதிபதியும், பத்துக்குடையவனும், தனகாரகனும் வாகன ஸ்தானாதிபதியான நான்கிற்குடையவனும் 6,8,12 ஆகிய இடங்களில் நின்று பலமிழப்பினும் அச்சாதகன் சுகித்திருப்பான் என்பதற்குரிய காரணத்தைச் சொல்கிறேன் கேள்! அச்சாதகன் பூலோகத்தில் உள்ள மக்களுக்கு அதிகாரியாவான். எவ்வாறெனில் சூரியனுக்குப் பின் புதனும் செவ்வாயும் அடைவுடன் தனியாக இருப்பதே அதன் காரணம் என்று போகமா முனிவரின் பேரருட்கருணையால் புலிப்பாணி கூறினேன்.*

128

*பாரப்பா பகலவனும் சனிசேய்பாம்பு*

*பகருகின்ற இக்கோள்களாறில் நிற்க*

*கூறப்பா குமரனையும் சத்துருகண்டால்*

*குவலயத்தில் புலிகண்ட பசுபோலாவர்*

*சீரப்பா செம்பொன்னும் சென்னாடுண்டு*

*செயலாக வாழ்ந்திருப்பன் விதியுந்தீர்க்கம்*

*ஆரப்பா அத்தலத்தோன் விழுந்து கெட்டால்*

*அப்பனே அரியைப்போ லிருப்பன்பாரே*

*இன்னமொரு கருத்தையும் கேள்! சூரியனும், சனி செவ்வாயும் பாம்பு என்று கூறப்படும் இக்கோள்கள் ஆறாம் இடத்தில் நிற்க அச்சாதகனுக்குச் பகைவர்கள் அடங்கிப் பயந்து போவார்கள். அச்சாதகனுக்கு சீரும் செம்பொன்னும் சிறந்த நாடும் உண்டு. அவற்றைப் பெற்றுப் புகழோடு வாழ்வான். அவனது ஆயுளும் தீர்க்க முடையதேயாகும். மேலும் அந்த ஆறாம் இடத்திற்கு உடையோன் 6,8,12 ஆகிய இடத்தில் வீழ்ந்து கெட்டாலும் அச்சாதகன் ஒரு சிங்கத்தைப் போலவே இருப்பான் என்பதையும் போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்*

129

*கூறே நீ கொடியோர்கள் ராசியாதி*

*கொற்றவனே கூடினால் கொடுமைமெத்த*

*யேரேநீ ராஜபயம் பொருளுஞ்சேதம்*

*யிடாதோஷம் பிணிகண்டம் களவும் போகும்*

*சீரேநீ சந்திரனும் கண்ணுற்றாலும்*

*செம்பொன்னும் கிட்டுமடா ஜென்மனுக்கு*

*வீரேநீ போகருட கடாட்சத்தாலே*

*வினைப்பயனைப் புலிப்பாணி விரித்தேன்பாரே*

*இன்னுமொரு கருத்தையும் நீ கூறுவாயாக! இராசி நாதன் கொடிய கோள்களைக் கூடினால், அதனால் கொடுமை மிகவும் விளையும் என்பதையும் அறிக. அவ்வாறு கூடினால் அரச பயமும் அதனால் வெகுதன விரயமும், பலவிதத் துன்பங்களும், பெண்களால் தோஷமும் நோயும், கண்டமும் மனையில் களவு போதலும் நேரும். ஆயினும் வளர்பிறைச் சந்திரனின் நோக்க முற்றால் சிறந்த செம்பொன் கிட்டுதலும் உண்டாம் என்று போகரது அருளாணையால் புலிப்பாணி புகன்றிட்டேன்.*

130

*ஆரப்பா நாலஞ்சு பேர்கள்கூட*

*அப்பனே ரெண்டொருவர் முன்பின் நிற்க*

*பாரப்பா பண்டுபொருள் பதியும் தீதி*

*பதிகடந்து அலைவனடா பொருளுங்கொஞ்சம்*

*கூறப்பா குடிநாதன் சேர்ந்திருக்க*

*கொற்றவனே குழவிக்கு நிதியும்மெத்த*

*சீரப்பா போகருட கடாட்சத்தலே*

*செப்பினேன் புலிப்பாணி திறமாய்த்தானே*

*மற்றொரு கருத்தையும் நீ மனங்கொண்டு கேட்பாயாக! நான்கு அல்லது ஐந்து பேர் ஒரு மனையில் கூட, மற்றும் இரண்டொருவர் முன்பின்னாக நிற்க, பூர்வீக சொத்துக்கும், மனைக்கும் தீமையுண்டாம். அவன் பிறந்த ஊரைவிட்டு வேறிடம் சென்று அலைவன். அவனுக்கு வாய்க்கும் பொருளும் அற்பமே ஆயினும் இலக்கினாதிபதி அவர்களுடன் கூடினால் அச்சென்மனுக்கு மிகச்சீரே கூடினால் விளையும் என்று போகமா முனிவரின் அருளாணையால் புலிப்பாணி கூறினேன்.*

131

*ஆரப்பா அயன்விதியை அரையக்கேளு*

*அப்பனே அஞ்சுள்ளோன் ஆரோன்கூடில்*

*சீரப்பா ஜென்மனுக்கு புத்திரதோஷம்*

*சிவசிவா யிது மூன்றில் சேர்ந்துநிற்க*

*கூறப்பா கொடியோர்கள் கண்ணுற்றாலும்*

*கொற்றவனே கொள்ளிக்குப் பிள்ளையில்லை*

*பாரப்பா பரமகுரு கண்ணுற்றாலும்*

*பலனுண்டு பலதீர்த்த மாடச்சொல்லே.*

*கருத்தாக நான் கூறுகிறேன். நீ நன்கு உணர்ந்து கேட்பாயாக! பூர்வ புண்ணிய ஸ்தானாதிபதியான ஐந்துக்குடையவனுடன் ஆறுக்குடையவன் சேர அச்சென்மனுக்கு புத்திரதோஷம் ஏற்படும். சிவபரம் பொருளின் பேரருளால் இவர்கள் மூன்றாம் இடத்தில் நிற்கவும், அவர்களைத் தீயவர்கள் கண்ணுற்று நோக்கினாலும் அச்சென்மனுக்கு கொள்ளியிடப் பிள்ளையில்லை என்றே கூறுக. ஆனால் பரமகுருவான பிரகஸ்பதி அவர்களைக் கண்ணுற்று நோக்கினால் பலன் உண்டு என்றே கூறுவாயாக என்று போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

132

*பாரப்பா பாக்கியமும் ஆறோன் வீட்டில்*

*பகருகின்ற சனியோடு வெய்யோன்மேவ*

*கூறப்பா குழவிக்கு பாக்கியமுண்டு*

*குவலயத்தில் பிரசங்கி செய்யுளுள்ளோன்*

*வீரப்பா மற்றவிடந் தனிலே நிற்க*

*வினோ தகனாம் கூத்தாடி வேடக்காரன்*

*சீரப்பா போகருட கடாட்சத்தாலே*

*செயலறிந்து புவியோர்க்கு செப்புவாயே*

*மேலும் ஒரு கருத்தினைச் சொல்லுகிறேன் கருத்துடன் கேட்பாயாக! பாக்கியாதிபதி என்று பகரப்படும் ஒன்பதுக்குடையவனும் ஆறாமிடத்தில் சனியுடனும் சூரியனுடனும் சேர அச்செல்வனுக்கு பாக்கியமேயுண்டாகும். அவன் இந்நிலவுலகில் நல்ல பிரசங்கியாகத் திகழ்வான். மற்ற இடங்களில் இவ்வாறு நின்றாலும் அவன் வினோதம் மிக்கவனாகவும், கூத்தாடியாகவும், வேடக்காரனாகவும், விளங்குவான்என்று போகரது அருளாணையால் புலிப்பாணி புகன்றேன்.*

133

*பாரப்பா குருபுத்தி சேர்ந்துநிற்கப்*

*பாக்கியங்கள் கிட்டுமடா புனிதன்சேயின்*

*ஆரப்பா அரசகுரு புந்திசேர*

*அப்பனே பாடகனாம் பெரியோர்நேசம்*

*கூறப்பா கொடுஞ்சனியும் புந்திமேவ*

*கொற்றவனே கனதனவான் சத்துருயில்லை*

*வீரப்பா விஷபயமும் இல்லை யில்லை*

*வெகுதனங்க ளுள்ளவனாம் விளம்பக்கேளே*

*மற்றொரு கருத்தையும் நீ உன்னிப்பாக எண்ணிப்பார்க்கச் சொல்கிறேன், கேட்பாயாக! பிரகஸ்பதி என்று கூறக்குடிய குருவுடன் புதன் சேர்ந்தால், நல்ல பாக்கியங்கள் வாய்க்கப்பெற்று அச்சாதகன் புனிதன் எனப் பேர் பெறுவான். அதேபோல் அரசகுருவான சுக்கிரனுடன் புதன் சேர்ந்தால் அவன் பெரிய பாடகனாகவும், பெரியோர் நேசம் உடையவனாகவும் விளங்குவான். மேலும் அப்புதன் சனியோடு சேர்ந்தால் அச்சென்மன் கனதனவான். அவனுக்குச் சத்துரு பயமோ விஷபயமோ இல்லவே இல்லை. அவன் வெகுதனம் வாய்க்கப் பெறுபவனேயாவான் எனப் போகரது அருளாணையால் புலிப்பாணி கூறினேன்.*

134

*கேளப்பா கலைபுந்தி சனிசேய்சேர*

*கெட்டவனாம் துர்க்கிசதா நித்திரையுள்ளோன்*

*ஆளப்பா அகமில்லை தரித்திரனாவன்*

*அப்பனே அயன்விதியும் மெத்த உண்டு*

*சீளப்பா சேய்யிந்து சனிமால் வெள்ளி*

*சேர்ந்துநிற்க அய்யமெடுத் துண்பன்காளை*

*கூளப்பாக குருபார்க்க வேதையில்லை*

*கொற்றவனே குசலன் விதி கூறினேனே.*

*வேறொரு கருத்தை கேட்பாய்! சந்திரனும், புதனும், சனியும், செவ்வாயும், சேர அச்சென்மன் கெட்டவனேயாவான். அவன் சதா நித்திரை வயப்படும் சோம்பேறி. அவனுக்குச் சொந்த மனையில்லை. தரித்திராம்சம் கொண்டவனே ஆயினும் அவனுக்கு ஆயுள் அதிகம் உண்டு. மற்றும் செவ்வாய், சந்திரன், சனி, புதன், சுக்கிரன் சேர்ந்து நிற்க அச்சாதகன் பிச்சையெடுத்து உண்ணுபவனேயாவான்.எனினும் இவர்களைக் குரு பார்த்தால் இத்துன்பம் இல்லையென்பதையும் உணர்க என்பதையும் போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

135

*பாரப்பா ஈரிரண்டு தனில் யிருநான் கொன்றில்*

*பகருகின்ற பகலவனும் புந்திகூடில்*

*சீரப்பா நிதிகருமன் கண்ணுற்றாலும்*

*நிலத்தின் நல்லபூபதிபோ லிருப்பான்காளை*

*கூறப்பா குதிரைகளுங் காடியுண்டு*

*கொற்றவனே யேவலாள் மெத்தவுண்டு*

*ஆரப்பா அயிஸ்வரியம் மெத்தவாழும்*

*அப்பனே ராசியுட பெலத்தால்கூறே.*

*மற்றொரு கருத்தினையும் நீ மனங் கொள்வாயாக! இலக்கினத்திற்கு நான்கு-எட்டு-ஒன்றாம் இடம் ஆகியவற்றில் பகலவன் எனப்பகரும் சூரியனும் புதனும் கூடி நிற்க அவர்களை குருவும் பத்தாமிடத்ததிபதியும் கண்ணுற்றாலும் அவன் இந்நிலவுலகில் புகழ்பரப்பிப் பெருஞ் செல்வனாக இருப்பான் அவனுக்கு நிறையக் குதிரைகளும் விளைவயலும் தோப்பும் துரவும், மற்றும் ஏவலாட்களும் மிகவுண்டு அவனுக்கு வெகுதனம் வாய்ப்பதாகும். அவனது ராசியின் பலம் அறிந்து பலன் கூறுக என்பதைப் போகரின் அருளாணையால் புலிப்பாணி கூறினேன்.*

136

*ஆரப்பா அம்புலியும் ரவியும்சேர*

*அப்பனே தனமுண்டுகளத்திரநேசன்*

*ஆரப்பா அரசனுடன் அருக்கன்சேர*

*அரசனொடு அயிஸ்வரியம் மெத்த உண்டு*

*ஆரப்பா அசுர குருவெய்யோன்மேவ*

*அப்பனே வசியனடா களத்திரபோகி*

*ஆரப்பா அசுரகுரு நீலன்மேவ*

*அடங்காத களத்திரமா மறிந்துசொல்லே.*

*இன்னொரு கருத்தினையும் கவனத்துடன் கேட்பாயாக! சந்திரனுடன் சூரியன் சேர்ந்து ஒரு மனையில் நிற்க அவன் தனவான்: களத்திரத்திடம் அளவற்ற நேசம் உடையவன். அதே போல் அரசன் எனப் புகலப்படும் குருவுடன் சூரியன் சேர அவனுக்கு அரச செல்வம் வாய்த்து ஐசுவரின் எனப்புகலப்படுவான். அசுர குருவான சுக்கிரனுடனும் அனலனாகிய சூரியன் சேர, அவன் மிகுந்த வசிய முடையவன். களத்திரத்திடம் போகம் அனுபவிப்பதில் மிகச் சிறந்தவன். அதே போல் சுக்கிரனுடன் சனி கூடினால் அவனது களத்திரம் அவனுக்கு அடங்காதவளாக அமைவாள் என்பதையும் உணருக என்று போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

137

*பாரப்பா பவுமனும் புந்திவெள்ளி*

*பாங்கான யெவ்விடத்தி லமர்ந்திட்டாலும்*

*பாரப்பா பாலனுக்கு தேகபங்கம்*

*பதினெட்டு சித்தர்களும் செப்பலுற்றார்*

*பாரப்பா குருவோடு சேயும் வெள்ளி*

*பார்மன்னர் நேசனடா பாக்கியமெத்த*

*பாரப்பா பவுமனும் புத்திமேவ*

*பண்டிதனாம் பாக்கியமு முண்டுபாரே.*

*வேறொரு கருத்தினையும் நீ நன்கு உணர்ந்து கொள்வாயாக! செவ்வாயும் புதனும் சுக்கிரனும் அழகுற எந்த மனையில் அமர்ந்திட்டாலும் அச்செல்வனுக்கு தேகபங்கம் (அங்கஹீனம்) ஏற்படும் என்றே பதிக்னெண் சித்தர்களும் கூறினார்கள். மேலும் குருவோடு செவ்வாயும் சுக்கிரனும் கூட அச்சாதகன் பராளும் மன்னர் பாராட்டும் செல்வச் சீர் உடையவனே யாவான். அவனுக்கு நிறைந்த பாக்கியங்கள் வாய்த்தலும் உண்டாம். இனி செவ்வாயும் புதனும் கூடினால் அவன் பாக்கியம் மிகவும் உள்ள பண்டிதனேயாவான் என்று போகரது அருளாணையால் புலிப்பாணி கூறினேன்.*

138

*தானப்பா யின்னமொரு புதுமைகேளு*

*தனமென்ற இரண்டதனில் விரையன்நிற்க*

*ஊனப்பா உப்பரிகை மாடகூடம்*

*உத்தமனே கட்டுவன் உதயம்பாரு*

*யேனப்பா யெங்கோனும் யிந்துபுத்தி*

*யிதமுள்ள சுக்கிரனு மில்லுமாகில்*

*சீனப்பா செம்பொன்னும் சென்றாண்டு*

*சிவசிவா சித்திரமும் திசையில்சொல்லே*

*மேலும் ஒரு புதுமையினைக் கூறுகிறேன். இதனையும் நீ நன்கு உணர்ந்து கேட்பாயாக! தனஸ்தானம் என்னும் இரண்டாம் இடத்தில் விரயாதிபதியானவன் நிற்பின், அச்சாதகன் உப்பரிகையுடன் கூடிய மாட கூடம் அமைத்துக் கட்டுவன், அவன் உத்தமனே அவனது இலக்கினபலத்தையும் அறிந்து கூறுக. அவ்விலக்கினாதிபதி குருவோ, சந்திரனோ, புதனோ, சுக்கிரனோ அவர்தம் இல்லுக்கு ஏற்ற வகையில் செம்பொன் சேரும் என்று திசாபுத்தி அறிந்து சிவபரம் பொருளின் கருணையிது வென்று கூறுக என்று போகரின் அருளாணையால் புலிப்பாணி புகன்றேன்.*

139

*விளம்பினேன் வெண் மதிசேய் புந்தியோடு*

*வெய்யவனும் வியாழனும் சேர்ந்துநிற்க*

*விளம்பினேன் வினயனடா சென்மன் தானும்*

*வெகுபேரைக் கெடுத்திடுவன் கோள்சமர்த்தன்*

*விளம்பினேன் வெய்யனும் சேய்கன் நீலன்*

*வீற்றிருக்க வீடுதொறும் பலியேகொள்வன்*

*விளம்பினேன் போகருட கடாட்சத்தலே*

*விதமான் புலிப்பாணி விளம்பினேனே.*

*வேறொரு கருத்தினையும் கூறுகிறேன் கேட்பாயாக! சந்திரனும்,செவ்வாயும், புதனும், சூரியனும், குருவும் சேர்ந்து நிற்கப்பிறந்த சாதகன் வினைவல்ல தீயன். பலரையும் அவன் கெடுத்திடுவான், கோள் சொல்வதில் சமர்த்தன். அதே போல் சூரியனும், செவ்வாயும், சுக்கிரனும், சனியும் ஒரே வீட்டில் தனித்திருக்க அச்சாதகன் வீடுதோறும் பிச்சையேற்று உண்பான் என்பதையும் போகரது அருளாணையால் புலிப்பாணி புகன்றேன்.*

140

*ஆச்சப்பா அம்புலியும் வியாழன்புந்தி*

*அடைவாக சேர்ந்திருக்க சென்மந்தானும்*

*ஆச்சப்பா அழகனடா நிதியுமுள்ளோன்*

*அயன்விதியு மெத்தவுண்டு அரையக்கேளு*

*ஆச்சப்பா அம்புலியும் புந்திவெள்ளி*

*அடைவாக மூவர்களும் சேர்ந்து நிற்க*

*ஆச்சப்பா அழும்பனடா காமிதுஷ்டன்*

*அப்பனே புலிபாணி அரைந்திட்டேனே*

*மற்றொரு செய்தியையும் உன் மனங்கொள்ளுமாறு கூறுகிறேன். நன்கு கவனித்துக் கேட்பாயாக! சந்திரனும், குருபகவானும், புதனும் ஒரு மனையில் அடைவாகச் சேர்ந்திருக்கப் பிறந்த சென்மன், நல்ல அழகுடையவன்; நிதியுடையவன்; தீர்க்காயுள் உடையவன் என்றே கூறுக. அதேபோல் சந்திரனும் அழும்பன் என்றும் காமி என்றும் துஷ்டன் என்றும் பேர் பெற்று இந்நிலவுலகில்*

*நிலவுவன் எனப் போகர் அருளால் புலிப்பாணி புகன்றேன்.*

141

*ஆரடா குருபுந்தி வெய்யோன் வெள்ளி*

*அப்பனே நால்வர்களும் சேர்ந்துநிற்க*

*சீரடா சென்மனும் செம்பொன்னுள்ளோன்*

*திடமான போகனடா வையகத்தில்*

*கூறடா குருவெள்ளி ரவியும் சேயும்*

*கொற்றவனே சேர்ந்திருக்க குடும்பிமெத்த*

*வீரடா மனையுண்டு நிதியுமுண்டு*

*வெட்டல்களும் மெத்தவுண்டு விளம்பினேனே*

*இன்னமொரு கருத்தினையும் நான் உனக்குச் சொல்கிறேன். கேட்பாயாக! தேவகுருவான் வியாழனும் புதனும் சூரியனும் சுக்கிரன் தானும் இணைந்து நிற்கப் பிறந்த சாதகன் சிறப்புடையவனே யாவான். செம்பொன் இச்சென்மனுக்கு மிகவும் வாய்க்கும். திடமாக போகங்களை இப்பூமியிலே அனுபவிப்பான். இனி குருவும் சுக்கிரனும் சூரியனும் செவ்வாயும் சேர அச்சாதகன் வெகு குடும்பியாவான், செல்வாக்கும் நிதியும் உள்ளவனாவான். கண்பார்வையும் இச்சாதகனுக்கு மிகவும் உண்டாம் என்று போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

142

*படித்திட்டேனின்னமொன்று பகரக்கேளு*

*பரமகுரு சனிசெவ்வாய் புந்தியோடு*

*அடித்திட்டே னம்புலியும் வெள்ளிமேவ*

*அப்பனே அண்டங்கள் அளவெடுப்பன்*

*குடித்திட்டேன் குருபுந்தி சனிசேய்யிந்து*

*கொற்றவனே சோந்திருக்க தரித்திரதோஷம்*

*இடித்திட்டேன் போகருட கடாட்சத்தாலே*

*இதமான புலிப்பாணி சாற்றினேனே.*

*மேலுமொரு கருத்தினையும் கூறுகிறேன். கேட்பாயாக! பிரசித்தமான குருபகவானும் சனி, செவ்வாய், புதன் இவர்களோடு கூடிநிற்கவும் சந்திரனுடன் சுக்கிரனும் சேரவும் அச்சாதகன் அண்டங்களை அளவெடுப்பவனாக இருப்பான். இன்னுமொன்று குருவும் புதனும் சனி மற்றும் செவ்வாய் என்பதனைப் போகரது அருளாணையால் புலிப்பாணி கூறினேன்..*

143

*பாரப்பா பவுமனுக்கு நாலேழ்வெள்ளி*

*பகருகின்ற வெள்ளிக்கி ஐந்தேழ்லாபம்*

*சீரப்பா சேய்நிற்க சென்மந்தானும்*

*சிறப்பாக மேதினியில் நலமாய் வாழ்வன்*

*கூறப்பா குடிநாதன் கேந்திரகோணம்*

*கொற்றவனே வாகனமும் தொழிலுமுள்ளோன்*

*பாரப்பா பாக்கியமும் நிலமும்கிட்டும்*

*பகருவாய் திசைபுத்தியில் பலிக்குந்தானே*

*மற்றொரு கருத்தினையும் நீ மனங் கொண்டு கேட்பாயாக! பவுமனென்று பலராலும் புகழப்படும் செவ்வாய்க்கு 4,7 ஆகிய இடங்களில் சுக்கிரன் நிற்கவும், சுக்கிரனுக்கு 5,7,11 ஆகிய இடங்களில் சிறப்புடைய செவ்வாய் நிற்கவும் பிறந்த சாதகன் இந்தப் பூமியில் மிகவும் சிறப்போடு வாழ்பவனேயாவான். இலக்கினாதிபதி இச்சாதகனுக்கு கேந்திர திரகோணத்தில் அமையின் வாகன யோகமும் நற்றொழிற் சேர்க்கையும், எல்லா வகையான பாக்கியங்களும் நல்ல விளைச்சலைத் தரும் நிலமும் வாய்க்கும். இதனை தசாபுத்தி அறிந்து இதமாகக் கூறியருள்வாயாக என்று போகரது அருளாணையால் புகன்றேன் நான்.*

144

*கூறினேன் குருவெள்ளி சனிமால் இந்து*

*கொற்றவனே சேர்ந்திருக்க அங்கயீனம்*

*தேரினேன் தேவகுரு புந்தியோடு*

*திடமாக மதிவெள்ளி சேர்ந்துநிற்க*

*ஆரினேன் கைபொருளும் நிலமுஞ்செம்பொன்*

*அப்பனே கிட்டுமடாஅவனில்வாழ்வான்*

*சீரினேன் போகருட கடாட்சத்தலே*

*சிறப்பாக புலிப்பாணி செப்பினேனே*

*மேலும் ஒரு கருத்தினைக் கூறுகிறேன் கேட்பாயாக! பெருமை வாய்ந்த குருபகவானும் அசுரகுருவான சுக்கிரனும் சனி, புதன், சந்திரன் ஆகியோர் சேர்ந்திருக்க அங்கஹீனம் ஏற்படும். ஆனால் தேவகுரு புதனோடு திடம் பொருந்திய சந்திரனும் சுக்கிரனும் சேர்ந்து நிற்க அச்சாதகனுக்கு அனேகமான திரவியமும் நிலமும் செம்பொன்னும் வாய்த்து பூமியில் சுபீட்சத்துடன் வாழ்வான் என்று போகரது அருளாணையால் புலிப்பாணி கூறினேன்.*

145

*ஆசப்பா அம்புலியும் வெள்ளியோடு*

*அடைவாக குருபுத்தி சேயும்சேர*

*கூச்சப்பா குலவானாம் கிரகமுண்டு*

குவலயத்தில் நிதிபணையும் மெத்தவுண்டு

மேச்சப்பா வெகுபேரை ஆதரிப்பான்

பிரபலமாய் வாழ்ந்திருப்பான் அவனிதன்னில்

வீசப்பா போகருட கடாட்சத்தாலே

விதமாக புலிப்பாணி விளம்பினேனே

பெருமைக்குரிய சந்திரன் சுக்கிரனோடு கூடி நிற்க அவர்க்கு அடைவாக தேவகுருவும் புதனும் செவ்வாயும் சேர அச்சாதகன் குலமகன் என்றே கூறவேண்டும். இப்பாக்கியத்தைக் கிரகங்கள் நல்கும். இந்நிலவுலகில் இவனுக்கு பெருநிதியும் செல்வாக்கும் அதிகம் உண்டாகும். இச்சாதகன் நிறையப் பேரை ஆதரித்துப் பிரபலனாய் இப்புவியில் வாழ்ந்திருப்பான், என்று போகரது அருளாணையால் புலிப்பாணி கூறினேன்.

146

செப்புவாய் குருவோடு வெள்ளிகுடில்

ஜென்மனுக்கு யோகவிதி பொன்னுள்ளோன்

அப்புவாய அந்தணனும் நீலன் கூடில்

அப்பனே புத்திரர்கள் ஈனமாகும்.

ஒப்புவாய் உதயத்தில் சனியும் பாம்பும்

உத்தமனே நோயதுவே காத்திருக்கும்

தப்புசனி புதனுதயம் தளவாய்சேர

தரணிதனில் கூனனடா தெரிந்துகொள்ளே

மேலும் ஒரு கருத்தையும் கூறுவேன் கேட்பாயாக! தேவகுருவோடு அசுரகுரு கூடினால் அச்சென்மனுக்கு யோகமே விளையும், அவன் பொன்னுள்ளவன் எனக் கூறுக. அதே போல் குருவோடு சனி கூடினால் அச்சாதகன் ஈன புத்திரர்களை அடைவான். இலக்கினத்தில் சனி பாம்புடன் கூடி நிற்க அச்சாதகனுக்கு நோயேயென்றும் காத்திருக்கும். அதேபோல் இலக்கினத்தில் புதனோடு சனி சேர இப்பூமியின் கண் அச்சாதகன் கூனன் என்பதனையும் அறிந்து தெளிவாயாக என்று போகரது அருளாணையால் புலிப்பாணி கூறினேன்.

147

கூறினேன் ஆறோனும் மலைக்கிரெண்டில்

கொற்றவனே யெதிரியுட பொருளுஞ்சேரும்

நீரேநி குடும்பாதி விழுந்துகெட்டால்

நிலத்தில் நல்லகளவாளி வஞ்சகன் பொய்யான்

ஆரே நீ தனபதியும் ஆறிலேற

*அப்பனே யெதிரிக்கி அவைபோல்செப்பு*

*பாரேநி போகருட கடாட்சத்தாலே*

*பண்பாக புலிப்பாணி பகர்ந்தேன்பாரே*

*மற்றொரு கருத்தையும் கூறுகிறேன் கேட்பாயாக! இலக்கினத்திற்கு ஆறுக்குடையவன் இரண்டில் இருப்பின் அச்சாதகனுக்கு எதிரியினுடைய பொருளும் தனமும் வெகுவாகச் சேரும். அதே சமயம் இரண்டாம் பாவாதிபதி கெடுவானாயின், அச்சாதகன் நல்ல களவாளியென்றும் வஞ்சகன் பொய்யன் என்பதையும் வகையாக உணர்ந்து கொள்க. அதேபோல் 2-க்குடையவன் ஆறாமிடத்தை அடைந்து நிற்க அச்சாதகனின் எதிரிக்கு மேற்குறித்த பலன்களைச் செப்புக என்று போகரின் அருளாணையால் புலிப்பாணி கூறினேன்.*

148

*பாரப்பா பனிரெண்டு ஜென்மம் ரெண்டில்*

*பாங்கான மூடன் சஞ்சார நாளில்*

*சீரப்பா சிரநோயும் அம்மைபேதி*

*சிவசிவா சலபயமும் பொருளுஞ்சேதம்*

*கூறப்பா குடியோடிப் போகச்செய்வன்*

*கொற்றவனே குடும்பத்தில் களவு போகும்*

*வீரப்பா வெகுபோர்க்கு கொடியோனாகி*

*விளங்குவோன் புவிதனிலே விளம்பக்கேளே.*

*வேறொன்றையும் கூறுகிறேன் கேட்பாயாக! இலக்கினத்திற்கு 12, ஜன்மம் (1),2 ஆகிய இட்ங்களில் பிரசித்தமுள்ள முடவன் என்னும் சனிபகவான் சஞ்சாரம் செய்யும் காலத்தை ஏழரை நாட்டுச் சனியின் காலம் என்பர். இவ்வேளையில் சாதகனுக்கு தலைவலியும் அம்மை, பேதி என்று கூறும் கொள்ளை நோயும் ஜலபயமும், பெரும் பொருட்சேதமும் ஏற்படும். குடும்பத்தில் களவுபோதலும், உண்டாம். இக்காலகட்டத்தில் இவன் பல பேர்க்கும் கொடியவனாக விளங்குவான் என்று போகர் அருளாணையால் புலிப்பாணி கூறினேன்.*

149

*கேளப்பா கடகம்தேள் சிம்மம்ஜென்மம்*

*கெடுதி மெத்தசெய்வனடா வேதைதானும்*

*நாளப்பா நலமாகும் மற்றராசி*

*நரச்சுகமும் கிட்டுமடா வேட்டலுண்டு*

*கூளப்பா கோதையினால் பொருளுஞ்சேதம்*

*கொற்றவனே கடன்வந்து தீருமென்றே*

*ஆளப்பா திசைபாரு வலுவைநோக்கி*

*அப்பனே முடவன்செய் வலுவைகூறே.*

*மேலும் ஒரு கருத்தைக் கூறுகிறேன் கேட்பாயாக! வேதை என்று விளம்பப்படும் சனிபகவான் கடகம், விருச்சிகம், சிம்மம் ஆகிய இவ்விராசிகளை இலக்கினமாகக் கொண்டவர்களுக்கு நன்மையே ஏற்படும். இனஜன பந்துக்களால் சுகம் கிட்டும் எனினும் கண்பார்வையும் உண்டு. பெண்ணால் பொருட்சேதம் ஏற்படும் என்றும் இச்சாதகன் கடன் படுவான் என்றும் கிரகபலத்தையும் திசாபுத்தி வலுவையும் நன்கு ஆராய்ந்து சனிபகவானின் பலத்தைக் கூறுவாயாக என்று போகர் அருளாணையால் புலிப்பாணி கூறினேன்.*

150

*பாரப்பா இன்னமொன்று பகரக்கேளு*

*பானுமைந்தன் பால்மதிக்கி வாக்கில் வந்தால்*

*சீரப்பா மேம்பாடு சவுக்கியம் செம்பொன்*

*சிவசிவா கிட்டுமடா வேட்டல் கூடும்*

*கூறப்பா கோதையினால் பொருளுஞ்சேரும்*

*கொற்றவனே குடிநாதன் வலுவைப்பாரு*

*ஆரப்பா போகருட கடாட்சத்தாலே*

*அப்பனே புலிப்பாணி அரைந்திடேனே.*

*வேறொரு விவரத்தையும் கூறுகிறேன். அதனையும் நன்கு நீ கேட்பாயாக! சூரியபுத்திரனான சனிபகவான் சந்திரனுக்கு வாக்கு ஸ்தானத்தில் வந்தால் மிகவும் சீரே ஏற்படும். மேம்பாடான வாழ்க்கையும் சௌபாக்கியமும் செம்பொன்னும் சிவபரம் பொருளின் அருளாணையால் கிட்டுவதோடு அச்சாதகனின் எண்ணம் நிறைவேறுதலும் நேரும்., மற்றும் பெண்களால் தனலாபம் ஏற்படும். எனினும் இலக்கினத்ததிபனின் பலத்தையும் கிரக நிலவரத்தையும் ஆய்ந்து திசாபுத்திகளையும் தெரிந்து பலன் கூறுவாயாக என்று போகரது அருளாணையால் புலிப்பாணி கூறினேன*

151

*பாரப்பா இன்னமொன்று பகரக்கேளு*

*பஞ்சமத்தில் கருநாகம் அமைந்து நிற்க*

*சீரப்பா செங்கதிரோன் பார்த்திட்டாலும்*

*ஜென்மனவன் பரதேச வாசஞ்செய்வான்*

*ஆரப்பா அகம்பொருளும் நிலமும்கிட்டும்*

*அப்பனே அவன்பிதாவை யிசபைபண்ணான்*

*கூறப்பா குமாரனுக்கு அறுபத்தஞ்சில்*

*கூற்றுவனார் தெரியாணஞ் சாற்றினேனே.*

*இன்னுமொரு கருத்தையும் கூறுகிறேன் கேட்பாயாக! ஐந்தாம் இடத்தில் இராகு என்னும் கரும்பாம்பு அமைந்து நிற்க அவனை சூரியன் பார்த்திட அச்சென்மன் பிறந்த இடத்தை விட்டு பரதேச வாசஞ் செய்பவனாவான். அவனுக்கு மனையும், பொருளும், நிலமும் கிட்டும். அச்சாதகன் தன் பிதாவை எண்ணிப்பாராதவனே. இச்சாதகனுக்கு இவரது 65 வயதில் இயமானால் நிராயணம் ஏற்படும் என்றும் போகரது அருளாணையால் புலிப்பாணி சாற்றினேன்.*

152

*ஆச்சப்பா யின்னமொரு சேதிகேளு*

*அஞ்சுள்ளோன் தீயனாய் அரவைக்கூடி*

*கூச்சப்பா நாடியே மூன்றில் நிற்க*

*குமரனுட மனைவி யெண்ணங் கருத்தைக் கேளு*

*பாச்சப்பா புருஷனிடம் சண்டையிட்டு*

*பதறிவிழுந் தோடிடுவள் கொடியநீலி*

*யேச்சப்பா வெகுபேர்க்கு யிவள் மேல்மோகம்*

*யிவளாலே கெட்டவர்கள் அநேகம்பேரே.*

*வேறொரு சேதியினையும் உனக்கு விளக்கிக் கூறுவேன். இதனையும் கேட்பாயாக! இலக்கினத்திற்கு 5-க்குடையவன் தீயனாய்ப் பாம்பைக்கூடி மூன்றாம் இடத்தில் நிற்க அக்குமரனுடைய மனைவியின் எண்ணத்தையும் கருத்தையும் அறிந்து கொள்க. சதாகாலமும் புருஷனிடம் சண்டையிட்டு பதறி விழுந்தோடிடுவாள். குணத்தில் அவள் கொடிய நீலியேயாவாள். இவள் காமவிருப்பினளாதலால் இவள் மேல் பலர் மோகம் கொள்வர். இவளாலே கெட்டழிந்தவர்களும் பல பேர் ஆவர் என்று போகரது அருளாணையால் புலிப்பாணி புகன்றேன்.*

153

*பாரப்பா யின்னமொரு புதுமைகேளு*

*பாம்புடனே மூன்றோனும் தீயனாகில்*

*கூறப்பா யெத்திடத்தில் கூடிட்டாலும்*

*குமரி கள்ளப் புருஷனையும் கூடுவாளாம்*

*ஆரப்பா அகந்தனிலே யிவள்தான்மூப்பி*

*ஆளனுமே இவள்சொல்லை மீறுவதில்லை.*

*ஊரப்பா வூரருகில் கடலுமுண்டு*

*உத்தமனே யிருக்குமடா ஆறுமாரே.*

*இன்னுமொரு புதுமையான கருத்தினையும் கூறுகிறேன். கவனமாகக் கேட்பாயாக! இலக்கினத்திற்கு மூன்றுக்குடையவன் தீயனாகி அவன் பாம்புடனே கூடி எவ்விடத்தில் இருப்பினும் அவன் மனைவி சோர புருஷனைக் கூடுவாள். வீட்டினில் இவளோ வயது முதிர்ந்தவள். இவளது கணவன் இவள் சொல்லைத் தட்டமாட்டான். இவள் ஊருக்கு அருகே கடலுண்டு என்பதையும் வழியறிந்து*

*வகைதொகையாகக் கூறுக என்று போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

154

*பாரப்பா யின்னமொன்று பகரக்கேளு*

*பஞ்சமத்தில் கருநாக மமைந்தவாறும்*

*சீரப்பா ஜென்மனுக்கு புத்திரதோஷம்*

*தீர்ப்பதற்கு வகைவிவரம் சொல்வேன்மைந்தா*

*கூறப்பா கோதையுமோ அரசுசுத்தி*

*குற்றமில்லாக் கன்னியர்க்கு உத்தமஸ்தானம்செய்து*

*வீரப்பா விலகுமடா தோஷம் தோஷம்*

*விதியுள்ள ஜென்மனவன் செனிப்பன்பாரே.*

*இன்னுமொரு புதுமையையும் கூறுகிறேன் கேட்பாயாக! பூர்வபுண்ய ஸ்தானத்தில் அதாவது ஐந்தாம் இடத்தில் கரும்பாம்பு இராகு நின்றால் புத்திரதோஷம் அச்சென்மனுக்கு ஏற்படும். இத்தோஷத்தை நீக்கும் விவரத்தை என் மகனே உனக்குச் சொல்வேன். இத்தோஷம் பெற்றவனின் மனைவி அரசமரத்தைச் சுற்றி குற்றமில்லாக் கன்னியர்க்கு உத்தம ஸ்தானம் செய்து வணங்க அத்தோஷம் விலகுவதோடு நல்ல ஆயுள் பலம் மிக்க புத்திர உற்பத்தி ஏற்படும் என்பதையும் போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

155

*கேளப்பா யின்னமொருபுதுமைகேளு*

*கனமானகரும்பாம்பு கேந்திர கோணம்*

*ஆளப்பா அத்தலத்தோன் சுபரைக்கூட*

*அப்பனே சேர்ந்தாலும் கண்ணுற்றாலும்*

*சீரப்பா ஜென்மனுக்கு யோகம்மெத்த*

*சிவசிவா கிளர்யோகம் திடமாய்செப்பு*

*கூறப்பா குடிநாதன் சேர்ந்துநிற்க*

*குமரனுக்கு அனுதினமும் பலனைக்கூறே.*

*இங்கு வேறொரு விவரத்தையும் கூறுகிறேன். நன்கு விளக்கமாகக் கேட்பாயாக! இராகு என்ற கரும்பாம்பு 1,4,7, 10 ஆகிய கேந்திர ஸ்தானங்களிலோ, 1,5,9 ஆகிய திரிகோண ஸ்தானத்திலேயோ அந்த வீட்டிற்குடையவன் சுபருடன் கூடினாலோ சுப கிரகங்களின் திருஷ்டி பெறிலோ அச்சாதகனுக்குச் சிறப்பான யோகமே யுண்டாகும். சிவ பரம்பொருளின் பேரருட் கருணையினால் திடமான யோகம் உண்டென்பதை இலக்கினாதிபதி சேர்ந்து நிற்பது கண்டு அந்தப் பலனைக் கூறுக என்று போகரது அருளாணையால் புலிப்பாணி கூறினேன்.*

156

*பாரப்பா யின்னமொரு புதுமைகேளு*

*பகருகின்ற பாம்புடனே ஒருவன்சேர*

*வீரப்பா விருபுறமும் மற்றோர் நிற்க*

*வேந்தனுக்கு வேந்தனாம் கொடியவீரன்*

*கூறப்பா ஜெகமதனில் கெஜமுமுள்ளோன்*

*கொற்றவனே துரகமதுமெத்த உண்டு*

*வீரப்பா வேடர்படை கொடியுள்ளோன்*

*விதமான புலிப்பாணி சொன்னோம்நாமே.*

*மேலான இன்னொரு விவரத்தையும் கூறுகிறேன் கேட்பாயாக! எல்லாராலும் கூறப்படும் பாம்புடனே ஒருவன் சேர அவருக்கு இருபுறமும் மற்றவர் நிற்க அச்சாதகன் அரசர்க்கரசனாய் விளங்குவான். மிகப் பெரிய வீரன். இந்நிலவுலகில் யானைகளையுடையவன் மேலும் குதிரைகளின் பந்தியும் மிகுதியும் உண்டு. வீரம்மிக்க வேடர்படையும் வெற்றிப்பாதையும் உடையவன் என்று போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

157

*பூட்டுகிறேன் இன்னமொன்று புதுமைகேளு*

*புகழ்பெரிய ஈரிரண்டுக் குடையோனின்ற*

*ஆட்டுகிறேன் அப்பதிக்கி பத்தோன் தானும்*

*அப்பனே இரையோனைக் கூடிட்டாலும்*

*கூட்டுகிறேன் குழவிக்கி பூமிமெத்த*

*குவலயத்தில் பேர்விளங்கும் போகவானாய்*

*பூட்டுகிறேன் போகருட கடாட்சத்தாலே*

*பூதலத்தில் இரவியோனைப் பார்த்துச்சொல்லே*

*இன்னொரு ரகசியத்தையும் புதுமையாகக் கூறுவேன் கேட்பாயாக! இலக்கினத்திற்கு நான்கிற்குடையவன் நின்ற பதிக்குப் பத்தோன் தானும் இரவிதனைக் கூடிட்டாலும் அச்சாதகனுக்கு பூமிலாபம் மிகவும் ஏற்படும். பூதலத்தில் அவன் பேரும் புகழும் பெறுவான். போகவானேயோவான். ரவி நின்ற நிலையையும் கிரகபலத்தையும் ஆய்ந்து பலன் கூறுக எனப் போகர் அருளாணையால் புலிப்பாணி புகன்றேன்.*

158

*பாரப்பா பனிரெண்டு யெட்டு ஆறில்*

*பலமுள்ள படவரவு அதிலேதோன்ற*

*வீரப்பா வேல்விழியாள் கலகமெத்த*

விளங்குகின்ற கணவனுக்கு ரோகஞ்சொல்லு

கூறப்பா கொழுநனால் குமரியாலும்

கொற்றவனே குழவியினால் குடிக்குக்கேடாம்

பாரப்பா படவரவு பொல்லாதப்பா

பலதுன்பம் தருகுமடா திசையைநோக்க

மேலும் ஒரு விவரம் கூறுகிறேன் கேட்பாயாக! பலமிக்க பட அரவுகள் 12,8,6 ஆகிய இடங்களில் தோன்ற அச்சாதகனின் இல்லத்தரசியான வேல்விழியாளின் கலகம் மெத்தவும் உண்டு. அவள் கணவனுக்கு ரோகம் ஏற்படும். கணவனாலும், அவன் மனைவியாலும், அவர்களுக்கு வாய்க்கும் குழந்தையாலும் குடிக்குக் கேடே விளையும். அப்பட அரவுகள் பொல்லாதன என்று உணர்வாயாக. பலவிதமான துன்பங்களும் உண்டாகும் என்பதை திசாபுத்தி அறிந்து தெளிவாகக் கூறுக.

159

பாரப்பா பகலவனுக் கஞ்சுயெட்டு

பாக்கியத்தில் சுபர்நிற்க அதனுள்ளோர்கள்

சீரப்பா திரிகோண கேந்திரமே

சிவசிவா பிதுருக்கு தனமும் செல்வம்

வீரப்பா விதியுண்டு வெள்ளிபுந்தி

வீடானால் அமடில்லை ராஜயோகம்

கூறப்பா போகருட கடாட்சத்தாலே

கொற்றவனே புலிபாணி கூறினேனே.

மற்றொரு விஷயத்தையும் உனக்குக் கூறுகிறேன். மனங்கொண்டு கேட்பாயாக! இராசி மண்டலத்தில் சூரியன் நின்ற இடத்திற்கு 5,8,9 ஆகிய இல்லங்களில் சுபகிரங்கள் நிற்க அத்தலத்திற்குரியோர் 1,5,9 ஆகிய திரிகோணமோ அல்லது 1,4,7,10 ஆகிய கேந்திரமோ தேறி நிற்பாரேயானால் சிவபரம் பொருளின் பேரருளால் அச்சாதகனின் பிதுருக்கு தனயோகமும், நிறைசெல்வமும், நல்லா ஆயுள் பலமும் உண்டாம். அந்த மனையும், சுக்கிரன் புதன் ஆகியோரின் வீடானால் எவ்விதத் துன்பமும் இல்லை. சிறந்த ராஜயோகமே ஏற்படும். இதனையும் போகரின் அருட்கருணையால் புலிப்பாணி கூறினேன்.

160

காணப்பா கதிரவனும் மதியுங்கூடி

கனமுள்ள லெக்கினத்தை கண்ணால் நோக்க

சீனப்பா சக்கிலியப்பெண்ணை ஜென்மன்

சிறப்பாகச் சேர்ந்தணைவன் ஜெகத்திலேதான்

ஊணப்பா உதையவனும் கண்ணுற்றாலும்

*உத்தமனே உலகத்தில் ஒருவர்பாரார்*

*வீணப்பா போகருட கடாட்சத்தாலே*

*விதமாகப் புலிபாணி விளம்பினேனே.*

*வேறொரு விஷயத்தையும் நீ நோக்குக. சூரியனும் சந்திரனும் கூடி நின்று பெருமைமிக்க இலக்கினத்தைக் கண்ணால் நோக்க அச்சாதகன் சக்கிலியப் பெண்ணைச் சிறப்பாகச் சேர்ந்து சுகித்து இப்பூமியில் வாழ்வான். ஆனால் சூரியன் மட்டும் பார்ப்பின் உத்தம குணம் உள்ளவனே. அவனை ஒருவர்கூட ஏறெடுத்துப் பார்க்க மாட்டார்கள் என்பதனையும் போகரின் அருளாணையால் புலிப்பாணி கூறினேன்.*

161

*கூறேநீ உப்பரிகை மாடகூடம்*

*கொற்றவனே சயனசுகம் யோகமுள்ளோன்*

*வாரே நீவாகனமும் நிதியுமுண்டு*

*வையகத்தில் விதியுமுண்டு வேசிநேசன்*

*ஆரே நீஅசுபர்களும் சேர்ந்திருக்க*

*அப்பலன்கள் கெட்டாலும் அகமுமுண்டு*

*சீரே நீ ஈராறில் உச்சமானால்*

*சிவசிவா துன்பமொடு இன்பம்சொல்லை.*

*மேலும் ஒன்றையும் நீ கூறுவாயாக! அச்சென்மனுக்கு (மேற்குறித்த பாட்டின்படி பிறந்தோனுக்கு) உப்பரிகையும், மாடகூடமும் ஏற்படும். அவனுக்கு சயன சுகம் வாய்க்கும். நிறைந்த யோகம் உள்ளவன். வாகனயோகமும் கொண்ட இருநிதிக் கிழவன் அவன். இப்பூமியிலே நீண்ட ஆயுளுடன் வேசியரைக் கூடுவதில் விருப்புடையவனாக இருப்பான். இவர்களோடு அசுப கிரகங்கள் சேர்ந்திருப்பினும் மேற்குறித்த பலன்கள் கெட்டாலும் வீடுண்டு. இலக்கினத்ததிபன் 12-இல் உச்சமானால் சிவபரம் பொருளின் பேரருளால் துன்பமும் இன்பமும் விரவி வரும் என்பதையும் புலப்படுத்துவாயாக எனப்போகரது அருளாணையால் புலிப்பாணி புகன்றேன்.*

162

*விளம்பிடுவேன் வெண்மதியும் யெட்டில்நிற்க*

*விதிகுறைவுநிதிமனையும் வித்தையுள்ளோன்*

*களங்கமுள்ள நீர்ப்பயமும் குளிரும்காச்சல்*

*கனமுள்ள தாய்தந்தைக் கரிட்டஞ்சொல்லு*

*தளங்கொண்ட ஆறுக்கு கழிச்சல் போக்கு*

*தனவிரயம் விதிகுறைவு கருமமாகும்*

*விளங்குகின்ற அன்னைக்கி தோஷஞ்சொல்லும்*

*விரையமடா விளைவுகெடும் சராருக்கே.*

*எல்லாராலும் புகழப்படும் சந்திரனும் 8-ஆம் இடத்தில் நிற்க, அச்சாதகனுக்கு விதிகுறைவேனும் நிதியும் மனையும் வித்தையும் உடையோனேயாவான். அச்சென்மனுக்கு நீரில் பயமும், குளிர் காய்ச்சலும் பெருமையுள்ள தாய் தந்தையருக்கு அரிஷ்டமும் (பல துன்பங்கள்) ஏற்படும். எப்போதெனில் சந்திரன் 9-ஆம் இடத்தில் நிற்கும் போது, இனி ஆறாம் இடத்தில் நிற்க கழிச்சல், வயிற்றுப் போக்கு, வாந்தி முதலியன ஏற்படும். பத்தாம் இடத்தில் நிற்க தனவிரயமும் விதிக்குறைவும் ஏற்படும். விரயம் எனப்படும்12-இல் இருக்க அன்னைக்குத் தோஷமும் விரயமும் விளைவுக் குறைச்சலும் ஏற்படும் என்று போகர் அருளாணையால் புலிப்பாணி புகன்றேன். ./*

163

*பாரப்பா பவுமனுமே வியமாறெட்டில்*

*பகருகின்ற சுங்கனுமே பகைவன் வீட்டில்*

*சீரப்பா சென்மனுக்கு செனனபூமி*

*சிவசிவா சிக்குமடா ஜலத்தால்கேடு*

*ஊரப்பா ஊரருகில் கிழக்கு மேற்கு*

*உத்தமனே புஞ்சை நிலத்தாலும் லாபம்*

*சீரப்பா போகருட கடாட்சத்தாலே*

*சிரிக்குமடா கனகமது கையில்தானே.*

*மற்றொரு விஷயத்தையும் நீ நோக்குக. சேய் என அழைக்கப்படும் செவ்வாய் 12,6,8 ஆகிய இடங்களில் நிற்க சுக்கிரன் பகை வீடடைய அச்சென்மனுக்கு ஏற்படும் பலன்களாவன: அவனது ஜென்ம பூமி (பிதுர்களின் சொத்து) வந்தடையும், நீரினால் கேடுண்டாதலும் நேரும். ஊருக்கு அருகே கிழக்குத் திசையும் மேற்குத்திசையும் உத்தமமான நற்பலன் தரும். அதோடு புஞ்சை நிலத்தால் வெகுலாபம் ஏற்படும். போகரது அருளாணைப்படி அச்சென்மன் கையில் தங்கமானது ஜ்வலித்துச் சிரிக்கும் என்று அவரருளாலே புலிப்பாணி கூறினேன்.*

164

*தானென்ற பஞ்சமத்தில் கொடியோர் நிற்கில்*

*தாரணியில் குடிவிளங்க புத்திரரில்லை*

*ஊனென்ற உதயாதி பெரியோர் சேர*

*உத்தமனே உதித்ததொரு பாலந்தானும்*

*தேனென்ற பிதுருக்கு உதவியுண்டோ*

*பரைச்சேரி வில்வக்கண் முளைத்தாப்போலே*

*சீனென்ற சிவனுக்கு உதவாதப்பா*

*சிவசிவா புலிப்பணி செப்பினேனே.*

*மேலும் ஒன்றைக் கூறுகிறேன். கேட்பாயாக! பஞ்சமஸ்தானம் எனக்கூறப்படும் ஐந்தாம் இடத்தில் தீய கோள்கள் இருப்பின் இப்பூமியின் கண் அச்சாதகனின் குடும்பம் விளக்கமுறச் செய்யும் புத்திரரில்லையென்று கூறுக. இலக்கினாதிபதி சுபர்களுடன் கூடி அதன் பயனாகப் பிறந்த ஒரு பாலனும் அவர்தம் பிதுருக்கு உதவாதவனாக பறைச்சேரியில் வில்வமரம் முளைத்தால் எவ்வாறு பயன்படாதோ அதேபோல் உதவியாக இரான் என்று போகமா முனிவர் பேரருட்கருணை கொண்டு புலிப்பாணிபுகன்றேன். மேலும் இராகு கேந்தரத்தில் இருக்க கேதுவின் நிலையையும் நீ நன்கு ஆராய்வாயாக.*

165

*சொல்லுகிறேன் அஞ்சுக்கு கிலேசனாவன்*

*சுயதேச பரதேச வாசம் சென்மன்*

*வில்லுகிறேன் விதிகுறைவு மெலிந்ததேகன்*

*விளங்குகின்ற புத்திரரும் பரந்து போகும்*

*புல்லுகின்றேன் பெரியோர்கள் கண்ணுற்றாலும்*

*பூதலத்தி லதிகாரி பெரியோர்நேசன்*

*நல்லதொரு திசைபுத்தி பொருளுஞ்சேரும்*

*நலமறிந்து செப்புவாய் சனிக்குதானே.*

*இன்னொரு கருத்தினையும் கூறுகிறேன் கேட்பாயாக! இலக்கினத்திற்கு ஐந்தில் சனி நிற்பின் அவன் கிலேச முடையவனாவான். சொந்த ஊரிலும் பிற தேசங்களிலும் சென்று வாழும் ஜென்மமுடையவன். மேலும் விதி குறைந்தவன்; மெலிந்த தேகன். புத்திர நாசம் உடையவன். ஆனால் சுபர் பார்ப்பின் இந்நிலவுலகில் ஆட்சி செய்யும் அதிகாரியாக, பெரியோர்களால் விரும்பப்படுபவனாக வாழக்கூடியவனே. இதற்கு திசாபுத்தி வலுவறிந்து பலனை நிகழ்த்துக என்று போகமா முனிவரின் அருளாணையால் புலிப்பாணி கூறினேன்.*

166

*பாரப்பா யின்னமொரு புதுமைகேளு*

*பலமுள்ள கதிர்மைந்தன் பதியில் நிற்கில்*

*சீரப்பா யிளமையிலே மனோவியாதி*

*செழுமையுள்ள பருவத்தில் செல்வமுண்டு*

*வீரப்பா வேந்தனுட பொருளுஞ்சேரும்*

*விளங்குகின்ற கொடியோர்கள் சேரலாக*

*கூறப்பா போகருட கடாட்சத்தாலே*

*கொற்றவனே பதியறிந்து பலனைக் கூறே.*

*மேலும் ஒரு புதுமையினைக் கூறுகிறேன். அதனையும் நீ மனங்கொண்டு கேட்பாயாக. பலம் மிக்கவனாக பரிதி மைந்தனாகிய சனிபகவான் இலக்கினத்தில் நிற்கப் பிறந்த சாதகன் இளமையில்*

*மனோவியாதி உள்ளவனாவான். அதாவது எவ்வாறு முன்னேற்றம் பெறுவது என எண்ணிக்கலக்கமுறுவான். யெளவனப் பருவத்தில் இவனுக்குச் செல்வம் வந்து சேர்ந்து மகிழ்வினைச் செய்யும் இச்சென்மனுக்கு அரசனுடைய செல்வமும் வாய்க்கும் எனினும் இவனுடன் தீயோர் சேரலாகாது என்பதையும் உணர்ந்து கிரக நிலவரமும் பலமும் சேர்ந்து பலன் கூறுக என்று போகரது அருளாணையால் புலிப்பாணி புகன்றேன்.*

167

*புகழ்கின்ற ஈராறு யிருநான்கேழில்*

*புனிதமுள்ள சனிரெண்டு நான்கில்நிற்க*

*இகழ்கின்ற வாதநோய் நாய்கடிக்கும்*

*இதமுள்ள அன்னைக்கி கண்டம்நான்கில்*

*நிகழ்கின்ற ரெண்டேழில் மனைவிநஷ்டம்*

*நிசம்சொன்னோம் யெட்டுக்கு உயிர்க்குசேதம்*

*மகிழ்கின்ற ஈராறில் விரையமாகும்*

*துலையுமடா மாடாடு துன்பஞ்சொல்லே.*

*எல்லாராலும் புகழப்படும் 12,8,7,2,4 ஆகிய இடங்களில் பரிதிமைந்தனாகிய சனிபகவான் நிற்க ஏற்படும் பலன்களாவன: நான்கில் நிற்பின் அன்னைக்குக் கண்டம், வாதநோய் உண்டாம். நாய் கடிக்கும் என்றும் 2,7 ஆகிய இடங்களில் நிற்க அவனால் மனைவி நஷ்டம் மற்றும் 8-இல் நிற்க உயிர்க்குச் சேதமும் 12-இல் நிற்க கன்று காலிகள் நஷ்டமாதலால் விரயமும் துன்பமும் உண்டாம் என்று கூறுவாயாக! போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

168

*கோசாரம்கேளப்பா குருமூன்றில் குலைதானெட்டு*

*கேடுசெய்யும் சனிசென்மம் புந்திநாலில்*

*சீளப்ப சேயேழு செங்கதிரோன் ஆறஞ்சும்*

*சீரிவருங் கரும்பாம்பு நிதியில் தோன்ற*

*ஆளப்பா அரசகுரு ஆறிலேற*

*அப்பனே திசையினுட வலுவைப்பாரு*

*மாளப்பா குற்றம்வரும் கோசாரத்தாலே*

*குழவிக்கு நிராயணங் கூற்ந்து சொல்லே.*

*இன்னுமொரு விஷயத்தையும் நான் கூறுகிறேன். இதனையும் நன்கு கேட்பாயாக! ஒரு சாதகனுக்கு இலக்கினத்திற்கு மூன்றில் அமைந்து கேடு செய்யும். குரு சனி ஜென்மம் தன்னிலும் புதன் நான்கிலும், சேய் என்று கூறப்படும் செவ்வாய் ஏழிலும், சிவந்த கதிர்களைக் கொண்ட சூரியன் 6,5 ஆகிய இடங்களிலும், சீறி வரக்கூடிய இராகுவெனும் கரும்பாம்பு 2-ஆம் இடத்தில் நிற்கவும் அசுர குருவான சுக்கிரன் ஆறாம் இடத்தில் மேவவும் நீ அச்சென்மனுடைய திசையையும் புத்தியையும் வலுவையும்*

*அறிந்து கூறாவிட்டால் குற்றம் நேருவது உண்மையே. இது கோசார பலம் என்று நீ உணர்தலோடு, அக்குழவிக்கு நிராயணம் (மரணம்) என நன்கு ஆராய்ந்து கூறுக என்று போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

169

*கேளே நீசேல் கன்னி யெருதுமேடம்*

*கெதியுள்ள மகரமடா கடகந்தன்னில்*

*கூளே நீ கரும்பாம்பு அதனில் தோன்ற*

*கொற்றவனே யோகங்கள் புகழ்ந்திடாதே*

*சீளே நீகிரகங்கள் நான்குதிக்கில்*

*சிவசிவா சென்மனுக் கமைந்திருந்தால்*

*ஆளே நீயோகங்கள் கூறு அல்லால்*

*அப்பனே அஸ்தகிரி யோகஞ்சாற்றே.*

*மேலும் ஒன்றை நீ மனங்கொண்டு கேட்பாயாக! மீனம், கன்னி, ரிஷபம், மேடம் நற்கதியுள்ள மகரம் மற்றும் கடகம் தன்னில் கரும்பாம்பு எனப் பகரப்படும் இராகு நிற்பின், அதனால் வெகு நன்மையான யோகங்கள் வாய்த்திடும் என்று புகழ்ந்து கூறாதே. இனி, சிறப்பு என்னவெனில் நான்கு திக்கிலும் கிரகங்கள் கூடி நிற்பின், அச்சென்மனுக்கு யோகம் உண்டென்று கூறுவாயேயன்றி அச்சென்மனுக்கு அஸ்தகிரி தோடம் என்று சிவபரம் பொருளின் அருளாணையால் கூறுக என்று போகர் அருள்பெற்ற புலிப்பாணி கூறினேன்.*

170

*சொல்லப்பா செம்பாம்பு கோணம்லாபம்*

*சுயதேச பரதேச அரசர்லாபம்*

*சொல்லப்பா செம்பாம்பு பொல்லாதப்பா*

*சிவசிவா சொர்ணங்கள் மனையும் சிக்கும்*

*இல்லப்பா யிந்திரனார் பதவிகிட்டும்*

*இல்லறத்தில் வல்லனடா குணிதம்பார்ப்பன்*

*புல்லப்பா கருநாகம் கேந்திரங்கள்*

*புனிதமுள்ள செம்பாம்பின் பதியைப்பாரே.*

*மேலும் ஒன்றினை நீ கூறுவாயாக! செம்பாம்பு எனப் புகலப்படும் கேதுபகவான் 1,5,9 ஆகிய கோண ஸ்தானத்திலும், லாபத்திலும் நிற்க அச்சாதகன் சுயதேச பரதேச வாசம் கொள்வான். அச்செம்பாம்பாகிய கேது மிகவும் பொல்லாதது ஆயினும் அச்சென்மனுக்கு சிவபரம் பொருளின் பேரருட் கருணையினால் தங்க நகைகளும் நன்மனையும் ஏற்படுவதோடு தேவருலகில் இந்திர பதவியும் கிட்டும். இல்லறம் நடத்துவதில் வல்லவன். இவன் சி'றந்த ஜோதிடன் என்று திடமாகக் கூறுக என்று போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

171

*வாரே நீ யின்னமொன்று வழுந்தக்கேளு*

*வளர்மதியும் நல்லவனா யமர்ந்திட்டாலும்*

*சீரே நீ சனியவனைப் பார்த்திட்டாலும்*

*செழுமையுள்ள சந்திரனார் திசையைக்கேளு*

*கூறே நீ குமரனுக்குப் பசும்பொன்கிட்டும்*

*குவலயத்தில் கடன் கொடுப்போன் வேந்தனுக்கு*

*பாரே நீ யாய்மதியும் பூசம்மூணில்*

*பகருவாய் புலிப்பாணி குறித்திட்டேனே.*

*மேலும் ஒரு கருத்தினைச் சொல்கிறேன். அதனையும் நீ மிகவும் கவனமுடன் கேட்பாயாக! வளர்பிறைச் சந்திரனும் நல்லவனாய் அமைந்து அவனைச் சனி பார்த்திட்டாலும் சிறப்பருளும் சனியினால் செழுமையுள்ள சாதகனுக்கு சிறப்புமிக்க பசும்பொன் கிட்டுதலோடு இவன் லேவாதேவி செய்வான். இத்தகைய செல்வன் மந்தனாகிய சனிபகவானின் திருநட்சத்திரமான பூசத்தின் மூணாம் காலில் நின்றால் முழுப்பலன் என்று முறையோடு கிரகநிலவரமும் பிறவும் சேர்ந்து கூறுவாயாக என்று போகர் அருளால் புலிப்பாணி நவின்றேன்.*

172

*காணப்பா இன்னமொரு கருத்துக்கேளு*

*கருமனுமோ கருமத்துக் கருமஸ்தானம்*

*ஊணப்பா உற்றதனம் லாபம்யேற*

*உத்தமனாம் நிதியுடையோன் கருமமுள்ளோன்.*

*தானப்பா தருமங்கள் யாகஞ்செய்வன்*

*தரணிதனில் கிராமங்கள் உண்டுபண்ணி*

*வீணப்பா போகருட கடாட்சத்தாலே*

*விதமான புலிப்பாணி விரித்தேன்பாரே.*

*இன்னொரு கருத்தினையும் உனக்குக் காணும் வண்ணம் கூறுகிறேன் அதையும் நீ நன்கு உணர்ந்து அறிவாயாக! பத்துக்குடைய கருமாதிபதி அவனுக்குப் பத்தாம் இடமான கருமஸ்தானத்த்ல் அமர அல்லது 2-ஆம் இடமான தனஸ் தானத்தையோ 11-ஆம் ஸ்தானமான லாபத்தையோ அடைய அச்சாதகன் உத்தமனாய் மிகவும் நிதியுடையவனாய் நற்கருமம் சேய்பவனாய் மங்களகரமான யாகங்கள் பலவும் புரிந்து இத்தரணியில் வெகு கிராமங்களை உண்டுபண்ணி விளக்கமுற வாழ்ந்திடுவான் என்று போகமா முனிவார் அருளால் புலிப்பாணி கூறினேன்*

173

*சாற்றினேனின்ன மொன்று செப்பக்கேளு*

சந்திரனார்க் கீரைந்தில் எங்கோநிற்க

கூற்றினேன் குமரனுக்கு யோகம்மெத்த

கோவியிடம் சேனாதிபதியுமாவன்

பூட்டினேன் பீரங்கி வெடியினாலே

போர்புரியும் வீரர்களைச் சின்னஞ்செய்வன்

நாட்டினேன் நரக்குருவும் தனுசிலேற

நலமாகப் புலிப்பாணி பிடித்திட்டேனே.

இன்னுமொரு கருத்த்னையும் நான் கூறுகிறேன். அதையும் நீ மனங்கோண்டு கேட்பாயாக! விளக்கம் பெற்ற சந்திரனுக்கு ஈரைந்து எனக் கூறப்படும் பத்தாமிடத்தில் குரு நிற்க அக்குமரனுக்கு யோகம் மிகவும் உண்டென்று கூறுக. அவன் அரண்மனையில் அரசனுக்குகந்த சேனாதிபதியாக இருப்பான். பெரிய பீரங்கி வெடகளால் படைகளைச் சின்னாபின்னம் செய்பவரை இச்சாதகன் ப்ன்னப்படுத்தி அழித்தொழிப்பான். இந்நிலை தனுசுதனில் குபகவான் நிற்கநயமாக விளையும் என்று போகர் அருளால் புலிப்பாணி புகன்றேன்.

174

இடித்திட்டே னின்னமொன்று யியம்பக்கேளு

இந்துவுக்கு ஈரைந்தில் எங்கோநிற்க

அடித்திட்டேன் அத்தலத்தோன் கேந்தரிக்க

அப்பனே சாமியுந்தான் அஞ்சுநாலில்

குடித்திட்டேன் குழவிக்கு வித்தைபுத்தி

குவலயத்தில் போர்விளங்கோன்படைக்கிஆட்சி

படித்திட்டேன் போகருட கடாட்சத்தாலே

பண்பாகப் புலிப்பாணி நடித்திட்டேனே.

நான் வேறொரு கருத்தினையும் கூறுகிறேன். நன்றாக ஆராய்ந்து அதன் பொருளை உணர்க. குற்றமில்லாத சந்திரனுக்குப் பத்தாமிடத்தில் அரசன் எனக் குறிப்பிடப்படும் குரு நிற்க, அந்த வீட்டிற்குடையவன். 1,4,7,10 ஆகிய கேந்திரத்தில் இருக்க. பெருமைக்குரியவனே, அச்சாதகன் தான், தனக்கு 5,4 ஆகிய இடங்களில் வித்தை புத்திக்குரியவர்கள் நிற்க அவன் இந்நிலவுலகில் நிலைத்த பேர் பெறுவோன் ஆவான். பெரிய படையை நடத்திச் செல்லும் வீரன் என்றும் நீ கூறுவாயாக என, போகரது கருணையால் புலிப்பாணி கூறினேன்.

175

நடித்திட்டேனின்னமொன்று நாட்டக்கேளு

நரக்குருவும் அசுரகுரு அனலன்பின்னால்

படித்திட்டேன் பலகவியும் நூல்கள் கற்போன்

*பலமான வித்தையென்று புவியில் வாழ்வான்*

*இடித்திட்டேன்யெட்டுபத்து யெட்டு ஆண்டில்*

*ஈசன் லபி முடியுமடா சிசுவுக்கேதான்*

*குடித்திட்டேன் குழவிக்கு பாலையோகம்*

*குணமாக புலிப்பாணி அறைந்திட்டேனே.*

*நான் இன்னொரு கருத்தையும் உனக்கு நாட்டமொடு கூறுகிறேன் கேட்பாயாக! தேவகுருவும், அசுரகுருவும் சூரியனுக்குப் பின்னே நிற்க. அச்சாதகன் வெகுவான கவிகளையும் படிக்கவல்லவன். மேலும் பன்னூல் பயிற்சியுள்ளவன்; வித்தையில் மிகவும் விற்பன்னன். பூமியில் நீண்ட நாள் வாழ்வான். 88 ஆண்டுகளில் சிவபதம் அடைவது எம்பெருமானான ஈசன் செயல் என்றும் இது பாலை யோகம் எனப் பகரப்படும் என்றும் போகமா முனிவர் பேரருளால் புலிப்பாணி பகர்ந்தேன்.*

176

*பாரப்பா இன்னமொரு விவரங்கேளு*

*பகர்புதனுங் குருசனியும் வாதநாடி*

*சீரப்பா துர்க்கிரகம் சூரிசேயும்*

*சிறப்பான பாம்புகளும் பித்தநாடி*

*நேரப்பா பால்மதியும் சுங்கன்தானும்*

*நேர்மையுள்ள சிலேட்டுமத்தின் கிரகமென்று*

*வீரப்பா போகருடன் கடாட்சத்தாலே*

*விவரமெலாம் புலிபாணி விளம்பக்கேளு*

*என் நம்பிக்கைக்கு உரியவனே! உனக்கு இன்னமொரு விவரத்தையும் விளங்கச் சொல்வேன். கேட்பாயசக!*

*குரு எல்லாரும் போற்றுகின்ற புதனுக்கும், சனிபகவானுக்கும் வாத நாடி, சீர் பெற்ற ஆனால் துர்க்கிரகம் என*

*ச் செப்பப்படுகிற சூரியனுக்கும் செவ்வாய்க்கும் சிறப்புமிக்க பாம்புகளுக்கும் பிதநாடி. மற்றும் சந்திரனுக்கும் சுக்கிரனுக்கும் நேர்ந்தது நேர்மையுள்ள சிலேத்த்ம நாடி, என்றும் வீரமிக்கவனே போகமா முனிவரது பேரருளால் புலிப்பாணி சொன்னேன்.*

177

*கேளப்பா பண்டிதனே குறிப்புசொல்வேன்*

*கெவுனமுள சித்தர்களும் பிரித்துசொல்வார்*

*ஆளப்பா அம்புவியில் பிறந்தோர்க்கெல்லாம்*

*அவரவர்கள் ஜெனித்த ஜாதகத்தைப் பார்த்து*

*நாளப்பா திசைபார்த்து ஊணும் பார்த்து*

*நடந்த்¢டுமக் காலத்தின் சித்ரமும்பார்த்து*

*கேளப்பா கிரகத்தின் நாடிக்கேத்த*

*கொடுத்திடுவாய் பிணிமருந்துகுறித்திட்டேனே.*

*பண்டிதன் என்று உலகறியக் கூறிக் கொள்ளும் ஜோதிடனே! என்னுடைய குறிப்பையும் நீ நன்குணர்ந்துகேட்பாயாக! மிகவும் கவனமுள்ள பதினெண் சித்தர்களும் இதனை நன்கு பிரித்துப் பலன் கூறும் பண்பு வாய்ந்தவர்கல். எனினும் அவர்கள் இத்னை வெளிப்படையாகச் சொல்லார். ஆனால் இந்நிலவுலகில் அவதரித்தவர்களுக்கெல்லாம் அவரவர் ஜெனித்த ஜாதகத்தைப் பார்த்து அவர்களுக்கு நடக்கும் திசா புத்திகளையும் நன்கு ஆராய்ந்து அக்கிரகங்களின் பொசிப்பினையும் உனர்ந்து அன்று நடக்கும் சித்திரமும் கண்டு அவ்வக்கிரகத்தின் நாடிக்கேற்ற பிணிக்குரிய மருந்தினையும் நீ கொடுத்திடல் வேண்டும் என்று போகரது கருணையால் புலிப்பாணி கூறினேன்.*

178

*குரித்திட்டே நட்டமத்தின் செயலேயானால்*

*கொடும்பித்த நாடியதன் பிணியுமானால்*

*மரித்திட்டே போகுமடா மருந்து வேண்டாம்*

*மற்றுமுள சஷ்டமத்திற்கு அய்யம்*

*சிரித்திட்டேன் வியத்தானம் தனக்குவாதம்*

*சிரப்பாக நடக்காமல் மாறுமானால்*

*தரித்திட்டேன் மருந்துதனை யீவாயென்று*

*தயவுடனே புலிப்பாணி சாற்றினேனே.*

*மேலும் ஒரு விஷயத்தைக் குறித்துச் சொல்வேன். அதை நீ நன்கு உணர்ந்து கேட்பாயாக! அட்டமாதிபதி செயலாகி அதுவும் கொடிய பித்த நாடியானால் அதனால் பிணியும் உண்டென்றால் அச்சென்மன் மரிப்பான். அதனால் அவனுக்கு மருந்து எதுவும் வேண்டாம். மற்றும் சஷ்டமம், 12 என்ற விரயத்தானம் இவருக்கு உரியதாக அதுவும் வாத நாடியாகி அந்நாடியும் சிறப்பாக நடைபெறாமல் மாறி நடக்குமானால் அச்சென்மனுக்கு மருந்துதனைத் தருவாய் என்று போகரது அருளாணையால் புலிப்பாணி கூறினேன்.*

179

*சாற்றினேன் கும்பத்தில் பிறந்தோன்ஞானி*

*சார்வான துலையதுவும் சாஸ்திரவல்லோன்*

*போற்றினேன் புதனதுவும் கேந்திரகோணம்*

*பொல்லாத சனியனுமே துலங்கவேண்டும்*

*தூற்றினேன் கலைமதியும் லெக்கினகேந்திரம்*

*சொற்பெரிய நரகுருவும் வாக்கில் நின்றால்*

*சாற்றினேன் பண்டிதனாம் கோசரநூலால்*

*சார்வான புலிபாணி சாற்றக்கேளே.*

*மேலும் ஒரு கருத்தினைக் கூறுகிறேன் கேட்பாயாக! கும்ப இலக்கினத்தில் பிறந்தோன் சிறந்த ஞானியாவான். அதேபோல் துலா லக்கினத்தில் பிறந்தவன் சாஸ்திரத்தில் வல்லவனாக அமைவன். ஆயினும் புதனும்சனியும் கேந்திர கோணங்களில் இருக்க வேண்டும். சந்திரன் கேந்திரம் பெற்று வாக்கிற் பெரிய குருபகவான் வாக்கு ஸ்தானத்தில் நின்றால் அச்சாதகன் பண்டிதனேயாவான், மாட்டுவாகடம் முதலிய வளைதல் இல்லாத நன்நூல்களை ஆராய்பவன் என்று போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

180

*பாக்கியத்தில் வீரியத்தோனிருக்கத்தன்னை*

*பகரவே வெள்ளிகுரு பார்க்கநிற்க*

*யோக்கியமுடன் சிவதலத்தில் ஞானியாகி*

*யுலகுமெய்க்க மடபதியாயிருப்பானென்று*

*தீர்க்கமுட னவனிதனி லறியவேண்டி*

*செப்பினோ மிதையறிந்து செகத்தில்யார்க்கும்*

*ஆக்கமுடன் போகருட கடாட்சத்தலே*

*யவனிதனில் புலிபாணி யரைந்திட்டேனே.*

*ஒரு சென்மனுக்குப் பாக்கிய ஸ்தானமான 9-ஆம் இடத்தில் வீரியன் எனக் கூறப்படும் சூரியன் நிற்க அவனை சுக்கிரனும் குருவும் பார்க்கும் நிலையுண்டெனில் அச்சாதகன் மிக யோக்கியவானேயாவான். அவன் சிவ ஸ்தலத்தில் ஞானியாகி உலகமெல்லாம் மெச்சும்படியாக மடாதிபதியாய் இருப்பான். இதனைத் தீர்க்கமுடன் உலகோர் உணர வேண்டும் என்ற காரணத்தால் இதனைச் சொன்னோம். இதனை நன்கு கிரக நிலவரம் பலம் முதலியன கண்டு கூறுக என்று போகர் அருளால் புலிப்பாணி உரைத்தேன்.*

181

*உடலுயிர்க்கு மூன்றாமிடத் ததிபன் மந்தன்*

*உடன்கூடி யொருராசி நின்றாராகில்*

*திடமுடனே யவர் திசைகள் பொசுப்பில் நஞ்சு*

*தின்றத னாலி வனுயிர்க்குச் சேதமாகும்*

*படமுடைய ராகுடனே யிவர்கள்கூடிற்*

*பாசத்தாலிவனுயிரை மாய்த்துக்கொள்வான்.*

*அடவுடனே போகருட கடாட்சத்தாலே*

அரியநூல் புலிபாணி அரைந்திட்டேனே.

மேலும் ஒரு கருத்தைச் சொல்லுகிறேன் கேட்பாயாக! உடலுக்கு அதிபதியாகிய சந்திரனும், உயிருக்கு அதிபதி யாகிய இலக்கினாதிபதியும் ஆகிய இவர்களுக்கு மூன்றாம் இடத்ததிபதி யாரோ அவனும், சனிபகவானும், உடன்கூடி ஒரே ராசியில் நிற்பாரேயாகில் பலமுடைய அவர்களது திசாபுத்திகள் நடைபெறும்போது நஞ்சு தின்று அதனால் அச்சாதகன் உயிர் சேதமாகும். மற்றும் படவரவான பாம்பு இராகுவுடனே ஈன கிரகங்கள் கூடினால் இவன் சுருக்கு மாட்டித் தற்கொலை செய்து கொள்வான். இதனையும் குறிப்பாக வினயமுடன் போகரது கருணாகடாட்சத்தால் புலிப்பாணி கூறினேன்.

182

பாரப்பா வீரியதோன் குருவும் லக்கினத்திலேறில்

பண்புடனே மிருகத்தால் பாவர் திசைதுன்பமாகும்

சேரப்பா வட்டமத்தோ னிவர்களோடே

சேர்ந்தாறா மிடந்தனிலே நிற்பாராகில்

கூறப்பா சண்டை பல கருவியாலே

கொடுந்துன்பம் ஜென்மனுக்கு வாதையாகும்

நேரப்பா யெனது குரு கடாட்சத்தாலே

நேர்மையுடன் புலிபாணி நிகழ்த்தினேனே.

மேலும் ஒரு கருத்தைக் கூறுகிறேன் கேள்! வீரியன் எனப் புகழப்படும் சூரியனும் குருவும் லக்கின கேந்திரம் ஏற இச்சாதகனுக்கு பாவர்திசையில் மிருகத்தால் துன்பம் நேரும். மேலும் இவர்களுடன் அட்டமத்தோன் சேர்ந்து ஆறாமிடத்தில் நிற்க பல்வேறு வகையான போர்க்கருவிகளால் அச்சென்மனுக்குக் கொடுந்துன்பம் விளையும். இதனை சற்குருவாகிய போகரது கருணா கடாட்சத்தால் புலிப்பாணி உனக்குப் பொருந்தக் கூறினேன்.

183

தானானயினா மொரு சேதி கேளு

தன்மையுடன் சந்திரனா மதிபனெட்டில்

வீணான தீக்கோட்கள் பலருங்கூடி

விரும்பிசட்டாட்ட மதி லிருந்தாராகில்

கோனான அசீரணத்தா லிறப்பதல்லால்

கொடுமருந்து ஈடுபயம் சோற்றாலச்சம்

தேனான போகரது தாள்வணங்கி

தெரிந்தசிறு புலிபாணி பாடினேனே.

நான் கூறும் மற்றொரு சேதியினையும் நீ மதித்துக் கேட்பாயாக! தன்மையுள்ள சந்திர இலக்கினாதிபதியானவன் எட்டில் வீண் என்று சொல்லத்தக்க தீய கோள்களுடன் கூடி அவரும்

*பலராக அல்லது சஷ்டாஷ்டமத்தில் விளங்கில் அச்சாதகன் அஜீரணத்தால் இறப்பான்; அச்சாதகனுக்கு மருந்தீடும் சோற்றால் அச்சமும் உண்டென்று தேன் போன்று இதம் சொல்லும் எனது சற்குருவான போகமா முனிவரது கருணா கடாசத்தால் புலிப்பாணி கூறினேன்.*

184

*பாடினே னின்னமொன்று ஆறோனோடே*

*பகர்லெக்கினசாமியவன் சேர்ந்துவாழ*

*கூடினேன் கரும்பாம்பும் குலவிநிற்க*

*கொடுமருந்தால் சாவுவரும் கொடுத்திடாதே*

*தேடினேன் சனியொருகோள் சேர்ந்தானாகில்*

*தேடிவரும் ஜலகண்ட நிராயணந்தான்*

*நாடினேன் நவக்கிரக சாரங்கண்டு*

*நன்மையுடன் புலிபாணி நூலைப்பாரே.*

*இன்னுமொரு கருத்தினையும் நான் விளக்கமாகக் கூறுகிறேன். அதனையும் நீ கேட்பாயாக! இலக்கினாதிபதிக்கு ஆறுக்குடையோனுடன் இலக்கினத்திலுறைய அவ்விடத்தே கரும்பாம்பு எனும் இராகுவும் சேர தீய மருந்தீட்டால் அச்சாதகனுக்கு மரணம் நேரும். அவரோடு சனியும் சேர்ந்தானேயாகில் ஜல கண்டத்தால் நிராயணம். இதனை நன்கு நவக்கிரகங்களின் சார பலம் கண்டு தெளிவாக அறிவுறுத்துவாயாக என்று போகரது அருளால் புலிப்பாணி கூறினேன்.*

185

*பாரப்பா யின்னமொரு செயலைக்கேளு*

*பால்மதியைப் பெரியோர்கல் நீசம்பெற்று*

*கூறப்பா கொடுங்கண்ணால் நோக்கினாலும்*

*குவலயத்தில் செடிமறைவில் ஜெனித்தபிள்ளை*

*ஆரப்பா அசுபர்களும் நீசம் பெற்று*

*அம்புலியை அரைக்கண்ணால் நோக்கினாலும்*

*நீரப்பா நீச்சரில்லு வாசல்திண்ணை*

*நிலவரமாய்ப் பெற்றெடுத்த சிசுதான் சொல்லே.*

*மேலும் இன்னொரு செயலையும் நீ கேட்பாயாக! குளிர்ச்சி பொருந்திய சந்திரனை பெரியோர்கள் என்று கூறப்படும் சுபக்கிரகங்கள் நீசம் பெற்றுப் பார்ப்பானாகில் அச்சாதகன் இந்நிலவுலகில் செடிமறைவின் கண் செனித்த பிள்ளை அவனேயாவான். அதேபோல் அசுபர்களும் நீசம் பெற்று சந்திரனைப் பார்த்தாலும் அச்சாதகன் கருங் கல்லால் ஆன வாசல் திண்ணை ஆகிய இடத்தில் பெற்றெடுத்த சிசு அவனென்று கூறுக. எனப்போகப் மாமுனிவரின் பேரருளால் புலிப்பாணி கூறினேன்.*

186

*சொல்லுகிறேன் இருமூன்று ஈராறெட்டும்*

*சுகமில்லை ஜென்மனுக்கு குய்யரோகம்*

*சொல்லுகிறேன் செம்பொன்னும் கணைக்கால் துன்பம்*

*சுற்றத்தார் மனமுறிவர் அரிட்டஞ்செப்பு*

*சொல்லுகிறேன் கேந்திரமும் கோணம் நன்கு*

*சுகமாக வாழ்ந்திருப்பன் காடியுள்ளோன்*

*சொல்லுகிறென் சுயவித்தை மாமன் விருந்தி*

*சொர்ண நிலமுள்ளவனா மாலுக்கூறே.*

*மேலும் ஒரு கருத்தைக் கூறுகிறேன். கவனமுடன் கேட்பாயாக! புதன்கிரமானது ஆறு, பன்னிரண்டு ஆகிய இடங்களில் அமர அச்சாதகனுக்கு குய்யத்தில் ரோகம் ஏற்படுவதாலும், செம்பொன்னாலும் கணைக்காலின் துன்பம், துன்பம் விளைவதோடு உறவினர்களும் மனம் வேறுபட்டுப் போவார்கள் என்று துன்பங்களைக் கூறுக. கேந்திர கோணத்தில் இருக்க சுகமாக வாழ்ந்து இருப்பன் என்றாலும் வயல், வரப்பு, தோப்பு முதலியன உடையவன் என்றும், தங்கள் விளை நிலத்தில் நல்ல விதைகளையுடையவன் என்றும் மாமன்மார்கள் விருத்தி உடையவன் என்றும், பொன்விளையும் பூமி உள்ளவன் என்றும் கூறுக என்று போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

187

*பாரப்பா இன்னமொன்று பகரக்கேளு*

*பரமகுரு ஜென்மத்தில் வந்தபோது*

*கூறப்பா கோதண்டபாணி வீரன்*

*கொற்றவ குடியேறிப்போகச் செய்தார்*

*சீரப்பா ஜென்மனுக்கு வேதைமெத்த*

*சிவசிவா செம்பொன்னும் நஷ்டமாகும்*

*வீரப்பா வேந்தனுட தோஷமுண்டு*

*விளம்பினேன் கோள்சார வினையைக்கேளே.*

*மற்றும் ஒன்றைக் குறிப்பிடுகிறேன் இதனையும் நன்கு கேட்பாயாக! பிரசித்தனான குருபகவான் கோச்சாரத்தில் ஜன்மத்துக்கு வருவானேயால் அவனால் துன்பமே விளையும். கோதண்டராமன் வனவாசம் சென்றாலும் இவனால் தான். செம்பொன் விரயமாகும். அரசர்களுடைய கோபமும் இச்சாதகருக்கு விளையும் என்று கூறுக என்று போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

188

*கேளப்பா குருபதியும் மூன்றிலேறக்*

*கெடுதிமெத்த செய்வனடா வேந்தன் தானும்*

*ஆளப்பா அகத்திலே களவு போகும்*

*அப்பனே அரிட்டமடாச் சிசுவுக்கேதான்*

*கூளப்பா குவலயங்களெல்லா மாண்ட*

*குற்றமிலா காந்தா ரிமகனும் வானும்*

*வீளப்பா வீமன்கை கெதையினாலே*

*விழுந்தானே மலைபோலே சாய்ந்தான் சொல்லை.*

*வேறொன்றையும் கூறுகிறேன். கவனத்துடன் கேட்பாயாக! வேந்தன் எனப்படும் குருபகவான் கோட்சாரத்தில் மூன்றாமிடத்தை அடைந்தால் அவனால் மிகுந்த கேடுண்டாகும். இச்சாதகனின் மனையில் களவு போதலும் மற்றும் வெகுவான துர்ப்பலன்களும் ஏற்படும். அவ்வளவு ஏன்? உலகமெல்லாம் ஆண்ட ஒரு வகையான குற்றமும் இல்லாத காந்தாரியின் மகனான துரியோதனன் பீமன் கை கதையாலே மடிந்து மலைபோல் சாய்ந்தவனே இதனையே உதாரணமாகக் கொள்க என்று போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

189

*பாரப்பா பரமகுரு ஆறிலேற*

*பலமுள்ள மாபெலி சக்கிரவர்த்தி*

*சீரப்பா சிறைக்கூடம் சென்றாரப்பா*

*சிவசிவா தேவர்கள் தன்கொடுமையாலே*

*ஈரப்பா இராஜ பயம்கலகம் துன்பம்*

*இல்லறத்தில் களவுபோம் கிலேசம் மெத்த*

*வீரப்பா வெகுபயமாம் சர்ப்பதோஷம்*

*வேந்தன் நின்ற பதியறிந்து வினையைமுட்டே*

*பிரசித்திபெற்ற குருபவான் கோட்சாரத்தில் ஆறாம் இடத்தை அடைந்த காரணத்தால் தான் சிவபரம் பொருளின் பேரருளால், தேவர்கள் கொடுமையால் பலம் மிகுந்தவரான மகாபலிச் சக்கரவர்த்தி சிறைக்கூடம் சென்றதனை நினைவினில் கொள்க. அரசபயமும், கலகமும், பலவகைத் துன்பங்களும், இல்லத்தில் களவு போதலும் மனத்தில் குழப்பமும் பயமும் ஏற்படுவதோடு விஷபயமும் உண்டு என்று குரு நின்ற பதியினை அறிந்து அதாவது கிரக நிலவரங்களை ஆராய்ந்து கூறுக என்று போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

190

*சொல்லப்பா சூதாட்டம் கொடியதப்பா*

*சுகமுள்ள பஞ்சவர்கள் வினையினாலே*

*அல்லப்பா அகிலங்கள் வினையினாலே*

*அப்பனே ஆரணியம் சென்றாரவர்*

*நல்லப்பா நாலதனில் குருவுமேற*

*நரச்சுகமுங் கிட்டாது நலிவுமுண்டு*

*மல்லப்பா மண்ணாலும் பொன்னால்வேதை*

*மகத்தான குருபதியின் கடாட்சத்தாலே.*

*வேறொன்றையும் உன் மனங்கொள்ளும்படி கூறுகிறேன். சற்று கவனமாகக் கேட்பாயாக! என்றும் சுகத்தையே அனுபவிக்கும் வாய்ப்புடைய பஞ்சபாண்டவர்கள் வினைப்பயனின் காரணமாகச்சூதாட்டத்தில் நாடு நகரங்களை எல்லாம் இழந்து அடிமையாகி அடவி சென்றாரன்றோ? அதன் காரணம் என்னவெனில் கோட்சாரத்தில் குருபகவான் 4-ஆம் இடம் அடைந்தாலன்றோ? மனிதரால் சுகமும் இவர்களுக்குக் கிட்டுதல் இல்லை. வெகு துன்பம் விளையும். பூமியினாலும் பொன்னாபரணங்களாலும் வழக்கத்திற்கு மாறான துன்பங்களை ஏற்படும் என்று போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

191

*முட்டப்பா இன்னமொரு மொழியைக்கேளு*

*மூர்க்கமுள்ள வாலியுமோ சத்ருபங்கன்*

*கூட்டப்பா கோதண்டபாணி அம்பால்*

*கொற்றவனே மலைபோல் சாய்ந்தான் காளை*

*நாட்டப்பா ஜென்மனுக்கு நமனால் கண்டம்*

*நலம்தப்பும் பொருள்சேதம் அரசர்தோஷம்*

*வீட்டப்பா வேதியனும் மதிக்கேயெட்டில்*

*விளங்கவே வெகு பயமாம் விளைவுபோமே*

*மேலும் ஒரு கருத்தைக் கூறுகிறேன் கேட்பாயாக! இராமகாதையிலே வரும் வாலி சத்துருவை அழிப்பதில் வல்லமை வாய்ந்தவன் என்றாலும் கோதண்டத்தைக் கையில் ஏந்திய இராமனின் கருணையால் பெரிய மலை சரிந்ததைப் போல் சாய்ந்தது ஏனெனில் குரு கோட்சாரத்தில் சந்திரனுக்கு எட்டில் வந்ததாலன்றோ? இச்சாதகனுக்கு எமனால் கண்டம் ஏற்படும். சுகக்கேடு விளையும். பொருட்சேதம் ஏற்படும். அரச தோஷம் உண்டாகும் என்று கூறுக எனப் போகர் கருணையால் புலிப்பாணி கூறினேன்.*

192

*போமப்பா யின்னமொரு புதுமைகேளு*

*பொன்னனுமே பால் மதிக்கி பத்திலோ*

*ஆமப்பா ஆதிசிவன் தெருவுந்தோறும்*

*அரகரா அய்யமெடுத் துண்டாரப்பா*

*ஊமப்பா உத்தமனாயிருந்த புரூரன்*

*உள்ளபடி யறுப்புண்டான் வினையினாலே*

*வேமப்பா வேந்தனுட ராசிகூற்ந்து*

*விளம்புவாய் புவியோர்க்கு வினையைத்தானே*

*மேலும் ஒரு கருத்தைக் கூறுகிறேன். கவனமுடன் கேட்பாயாக! சந்திரனுக்குப் பத்தில் கோட்சாரத்தில் குருபகவான் வரும் காலத்தில் வினைவலியால் நிகழும் பலன்கள் கொடுமையானதேயாகும். சிவ பரம்பொருள் தெருதோறும் சென்று ஐயம் ஏற்று உண்டதும் உத்தமனான புரூரவசுவின் தலையறுபட்டதும் இதனாலன்றோ? வேந்தன் என்ற குருபகவான் நின்ற ராசியினை நன்கு அறிந்து பலன் நிகழ்த்துக என்று போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

193

*தானென்ற சந்திரனான் வியத்திலோ*

*தவத்தாலே வந்ததொரு இலங்கை வேந்தன்*

*கோனென்ற இராமன்கை அம்பால் மாண்டான்*

*குவலயத்தில் சென்மனுக்கு கொடுமைமெத்த*

*மானென்ற மறலிபயம் பொருளுஞ் சேதம்*

*மைந்தனே அரிட்டங்கள் வந்துகூடும்*

*ஊனென்ற போகருட கடாட்சத்தாலே*

*உத்தமனே புலிப்பாணி உரைத்தேன் காணே*

*தன்னிகரற்றவனான சந்திரனுக்குப் பன்னிரண்டாம் இடத்தைக் கோட்சாரத்தில் பெற்ற போதிலேயே இலங்கை மன்னன் இராவணன் இராமன் கைக்கருணையால் மாண்டான். இப்படிப்பட்ட சாதகனுக்கு மிகவும் கொடுமை நேரும். மரண பயம் உண்டாகும். பொருட்சேதம் பெருகிக் காணும். பலவிதத் துன்பங்கள் வந்தடையும் என்று போகர் அருளால் புலிப்பாணி புகன்றேன்.*

194

*சூடப்பா இன்னமொரு சூச்சமங்கேளு*

*சுகமுள்ள ஜென்மனுட ராசிதன்னில்*

*மாடப்பா மதிமயங்கி ஒளிவில்லாமல்*

*மகத்தான கோளதுதா னீசமோ*

*கூடப்பா குடினாத னம்புலிக்கு*

*கொற்றவனே கேந்திரமு முச்சமாக*

*நாடப்பா போகருட கடாட்சத்தாலே*

*நலமாக செப்பிடுவாய் நீசம்போச்சே.*

*வேறொரு சூச்சுமத்தையும் உனக்கு உணர்த்துகிறேன் தெளிவாகக் கேட்பாயாக! நற்சுகம் உடைய சாதகனின் ஜென்மராசி தன்னில் சந்திரன் முதலிய கிரகங்கள் மயங்கி நீச்சமே அடைந்திருப்பினும் இலக்கினாதிபதிபன் சந்திர கேந்திரமோ உச்சமோ அடைந்திருப்பின் இதனால் ஏற்படும் யோகம் நீசபங்க ராஜயோகம் என நிகழ்த்துக என்ற போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

195

*போச்சப்பா இன்னமொரு பேச்சுக்கேளு*

*புகழ்பெரிய நீசபங்க ராஜயோகம்*

*நீச்சப்பா நீணிலத்தில் ஜென்மனுக்கு*

*நிகழ்த்திவிட்டோம் நிலைசமய மறிந்து செப்பு*

*கூச்சப்பா கொடியோர்கள் கண்ணுற்றாலும்*

*குற்றம் வந்து தீருமடா குழவிக்கேதான்*

*வீச்சப்பா போகருட கருணையாலே*

*விலம்பினேன் புலிபாணி வினையைக்கேளே*

*வேறொன்றையும் கூறுகிறேன். கேட்பாயாக! புகழ்மிக்கதும் பெரியதுமான நீசபங்க ராஜயோகமானது ஒரு சாதகனுக்கு எவ்வாறு என்பதனை கிரகநிலை, சமயம் ஆகியவற்றை நன்கு ஆராய்ந்து அறிந்து கூறுவாயாக! ஏனெனில் தீயகோள்கள் கண்ணுற்றாலும் அச்சாதகனுக்குக் குற்றமே வந்து சேரும் என்பது மிக உறுதியான உண்மையே என்று போகரது அருளாணையால் புலிப்பாணி கூறினேன்.*

196

*இணங்கினே னின்னமொன்று யியம்பக்கேளு*

*இரவிமுத லொன்பதுகோள் திசையில் தானும்*

*சுணங்கினேன் சுயபுத்தியில் பலனைத்தாரார்*

*சுகமளிப்பார் இருநால்வர் பேர்களுந்தான்*

*அணங்கினேன் அவரவர்கள் சமயங்கூற்ந்து*

*அப்பனே சுவாமியிட செயலைப்பாரு*

*குணங்கினேன் போகருட கடாட்சத்தாலே*

*குற்றமிலை புலிப்பாணி கூறினேனே.*

*மேலும் ஒன்றைக் கூறுவேன் கேட்பாயாக! சூரியன் முதலான நவகோள்களும் தங்களது தசை நடைபெறும் காலத்தில் சுயபுத்தியில் பலனைத்தாரார். ஏனைய எண்மரும் சுகமளிப்பர். இதனை அவர்கள் நின்ற நிலை ஆதிபத்திய பலம் முதலியவற்றை ஆய்ந்தறிந்து கூற வேண்டும் என போகர் அருளாணையால் புலிப்பாணி கூறினேன்.*

197

*கூறப்பா கதிருக்கு வருஷம் ஆறு*

*குணமுள்ள புத்திநாள் நூத்தெட்டாகும்*

*பாரப்பா அக்னியால் பீடையுண்டு*

*பாங்கான அபமிருத்துப் பொருளுஞ்சேதம்*

*ஆரப்பா அறிவாளர்கள் பிதாமிருத்தியு*

*அரிதான வாணிபஞ்செல்யாகாது நஷ்டம்*

*கோளப்பா கண்ணோவாங் கனலே மீறும்*

*கொடுமையுள்ள நாளென்று கூறினோமே.*

*கதிரோன் என்றழைக்கப்படும் சூரிய மகாதிசை வருடம் 6 ஆகும். இதில் சூரிய பகவானின் பொசிப்பு நாள் 108 ஆகும். இக்கால கட்டத்தில் இவரது திசை நடக்கும் ஜாதகனுக்கு நெருப்பினால் பீடை ஏற்படும். உறவினர் பகையாகும். அபமிருந்து தோடம் ஏற்படும். வெகுவான பொருட்சேதம் நிகழும். தந்தையாருக்கு அரிஷ்டம் ஏற்படுவதுடன் கண்ணோய் ஏற்படுதலும் ஜுர உபாதை நேருதலும் ஏற்படும். கொடுமையான நாள்களாக இருக்கும் என்று போகர் அருளாணையால் புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் சூரிய மகாதிசையில் சூரிய புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

198

*கூறினோம் விதிசையில் சந்திரபுத்தி*

*குணமான மாதமது ஆறதாகும்*

*தேறினோம் அதன்பலனை செப்பக்கேளு*

*தீங்கில்லா தனலாபம் சம்பத்துண்டாம்*

*ஆறினோம் வந்தபிணி தீரும் ரோகம்*

*அரசரால் மகிழ்ச்சியது தானுண்டாகும்*

*தேறினோ மிரவிசந்திரன் பொசித்தநாளில்*

*தீங்கிலா நாளென்று தெளிந்துகாணே*

*இச்சூரிய மகாதிசையில் சந்திரனின் பொசிப்புக்காலம் 6 மாத காலங்களாகும். இக்காலகட்டத்தில் ஏற்படக்கூடிய பலனைச் சொல்கிறேன். கேட்பாயாக! கெடுதலே இல்லாத தனலாபம் வாய்ந்து சொத்து சேர்க்கை மிகும். நோயுபாதை இருப்புன் அவை நீங்கித் தேகமானது நலம்பெறும். அரசர்களால் பெருமையும் பாராட்டும் பரிசும் வந்தடைவதால் வெகுவான மகிழ்ச்சியுண்டாம். எனவெ இரவி திசையில் சந்திர புத்தி சிறப்பான நாள்களே என்று போகரது அருளாணையால் புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் சூரிய மகாதிசையில் சந்திர புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

199

*காணவே ரவிதிசையில் செவ்வாய்புத்தி*

*கனதையுள்ள நாளதுவும் நூத்திருபத்தாறாம்*

*தோணவே அதன் பலனைச் சொல்லக்கேளு*

*சொல் பெரிய பூமிதனம் செல்வமாடும்*

*நாணவே நடைகாலி நன்றாய்ச் சேரும்*

*நன்மையுடன் நவதானியம் விளைவுமாகும்*

*பூணவே பூபாலன் செவ்வாய்தானும்*

*புகழ்ந்து மனைவீடகத்தில் வாழலாமே.*

*மேலும் இச்சூரிய மகாதிசையில் செவ்வாயின் பொசிப்புக் காலம் 126 நாள்களாகும். இக்காலகட்டத்தில் இச்சாதகனுக்கு ஏற்படும் பலன்களாவன: பிறரால் புகழப் பெறும் தோரணை நேரும்; சொல்லுதற்குரிய நல்ல பூமி வாய்த்தலும், தனலாபம் ஏற்படலும், செல்வச் செழிப்பும் கன்று காலிகளும் பொருட் சேர்க்கையும் ஏற்படும். விளைச்சல் பெருகி அதனால் நற்பொருட் சேர்க்கையும் சுபகாரியங்களும் மனையில் நிகழும். நவதானிய விளைவு மிகுதலால் அரச செல்வம் பெற்றவன் என்று பிறர் போற்றும் பெருமையும் புகழும் ஏற்படும் என்று போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் சூரிய மகாதிசையில் செவ்வாய் புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

200

*ஆமென்ற ரவிதிசையில் ராகுபுத்தி*

*ஆகாதமாதம் பத்து நாள் மூவெட்டாகும்*

*போமென்ற அதன்பலனைப் புகலக்கேளு*

*பொன்னோடு பெண்ணதுவும் நாசமாகும்*

*நாமென்ற சத்துருவால் சண்டையுண்டாம்*

*நலமில்லா வியாதியது பீடிப்பாகும்*

*தாமென்ற மனைவியரைப் பிரித்து வைக்கும்*

*தகவில்லா நாளென்று தனித்து நில்லே*

*இன்னும் இச்சூரிய மகாதிசையில் கரும்பாம்பு எனக் கூறப்படும் இராகுவின் பொசிப்புக் காலம் மிக ஆகாத தொன்றேயாகும். இவனது பொசிப்புக் காலம் பத்து மாதம் இருபத்தி நான்கு நாள்களாகும். இக்காலகட்டத்தில் ஏற்படும் பலன்களாவன: பொன் பொருள் சேதமாகும். பெண்நாசமும் உண்டாகும். சத்துருக்களுடன் சண்டையிடுதல் போன்ற தீயன நிகழும். உடல் நலத்தைப் பீடிக்கும். கொடிய வியாதிகள் வந்தடையும், மனைவி மக்களைப் பிரிந்து வாழச் செய்யும். இவனது பொசிப்புக் காலத்தை நலமில்லாத நாள்களே என்று துணிந்து சொல்லுக எனப் போகர் அருளால் புலிப்பாணி*

*கூறினேன்.*

*இப்பாடலில் சூரிய மகாதிசையில் இராகு புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

201

*நில்லென்ற ரவிதிசையில் வியாழன்புத்தி*

*நேர்மையுள்ள நாளதுவும் யெரனூத்தி யெண்பத்தெட்டு*

*வில்லென்ற அதன் பலனை விரித்துச் சொல்வோம்*

*விவரமாய் சம்பத்தும் தனதானியமுண்டாம்*

*சொல்லொன்றும் தவறாது வினையகலும்பாரு*

*சொல்லப்பா நாள்யின்ப மெய்து வாழலாகும்.*

*புல்லென்று புத்திரனும் ஆகும்பாரு*

*பொல்லாத சத்துருவும் வணங்குந்தானே.*

*மேலும் இந்த இரவி திசையில் வியாழ பகவானின் பொசிப்புக் காலம் 288 நாள்களாகும். நன்மை தரும் இக்காலகட்டத்தில் ஏற்படும் பலன்களாவன; விவரமுடன் நன்மைதரத் தக்க சம்பத்து ஏற்படின் சில சிறு சுபவிரங்களும் ஏற்பட்டு தனஹானியுண்டாகும். என்சொல் என்றும் தவறாது, தீவினைகள் அகலும். மிகவும் குறைவற்ற இன்பம் ஏற்பட்டு சுக சௌக்யத்துடன் வாழும் நிலை ஏற்படும். இதுவரை ஏற்பட்டிருந்த சத்துருக்களும் இச்சாதகனை வணங்கி மித்துருவாகிச் சுகிப்பன் என்று போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் சூரிய மகாதிசையில் வியாழன் புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

202

*வணங்குவார் ரவிதிசையில் சனிபுத்திகேளு*

*வாக்கிலா நாளதுவும் மாதம்பதினொன்று*

*இணங்குவார் நாளதுவும் முன்னான்காகும்*

*இதனுடைய பலத்தையினி யியம்பக்கேளு*

*குணங்குவார் சத்துருவும் மன்னவருந்தானும்*

*குலைபொருளுஞ் சேதமே ஆக்கிவைப்பார்*

*பிணங்குவார் பிதிருமா ரகமேயாவர்*

*பிலன்கேடு பண்ணிவைப்பான் சனியன் தானே*

*வணங்குவதற்குரிய இரவியின் திசையில் இவனது மகனான சனிபகவானின் பொசிப்புக்காலம் பதினொரு மாதம் பன்னிரெண்டு நாள்களாகும். இக்காலகட்டத்தில் விளையும் பலன்களாவன: மனம் வேறுபட்ட சத்துருக்களாலும் அரச பீடையாலும் பெருந் தனக்கேடு ஏற்படும். அதேபோல் பிதுர்*

*மரணமும் எதிர்பாராவண்ணம் ஏற்படும்.கெடுதியான பலன் களையே சனிபகவான் ஏற்படுத்திவைப்பார் என்று கூறுக என போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் சூரிய மகாதிசையில் சனி புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

203

*தானென்ற ரவிதிசையில் புதனார் புத்தி*

*சாதகமாம் மாதம் பத்து நாளாறாகும்*

*ஆனென்ற அதன்பலனை அரையக்கேளு*

*அடங்காத வியாதிவந்து பின்னிக்கொல்லும்*

*வானென்ற வான்பொருளுஞ் சேதமாகும்*

*வாகுடைய புத்திமதி நாசமாகும்*

*கோனென்ற குடிகேடு பண்ணிவைக்கும்*

*கொடுமையுள்ள நாள்தனிலே குடிகேடாமே*

*தானென்று கூறத்தகும் சூரிய மகாதிசையில் புதபகவானின் பொசிப்புக் காலம் மிகவும் பாதகமானதே. இது பத்து மாதம் ஆறு நாள்கள் நிகழும். இக்கால கட்டத்தில் ஏற்படும் பலன்களாவன: தீராத வியாதி வந்து தேக நலத்தைக் கெடுக்கும் வானளாவிய சிறந்த செல்வமும் பொருளும் சேதம் அடையும். இதுவரை நன்மைகளையே அளித்து வந்த புத்தியானது நாசமாகும். அரசனைப் போல் வாழ்ந்த இச்சாதகனின் குடும்பத்தை நாசமடையச் செய்யும் என்று போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் சூரிய மகாதிசையில் புதன் புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

204

*ஆமென்ற ரவிதிசையில் கேதுபுத்தி*

*ஆகாத நாளதுவும் நூத்திருபத்தாறு*

*போமென்ற அதன்பலனைப் புகலக்கேளு*

*பொருந்துகின்ற காரியங்கள் சேதமாகும்*

*நாமென்ற மனைவிதன்னை நாசம் பண்ணும்*

*நலமில்லா சத்துருவும் நல்குவான்பார்*

*தாமென்ற இருந்தவிடம் விட்டேகவைக்கும்*

*தரணிதனில் தெண்டம்வரும் சார்ந்துகேளே*

*இன்னுமொன்று இந்த இரவியின் திசையில் செம்பாம்பு என்று கூறப்படும் கேதுபகவானின் பொசிப்புக் காலம் மிகவும் பொல்லாத நாள்களேயாகும். அதுவும் 125 நாள்களேயாகும். இக்கால கட்டத்தில் நிகழும் பலன்களாவன: காரியக்கேடு ஏற்படும். மனைவி நாசத்தை ஏற்படுத்தும். கேடு செய்யும் சத்துருக்களிடம் சென்று சரணடையச் செய்யும். இருந்தமனை ஊர்விட்டு ஓடிவிடச்*

*செய்யும். பூமியில் பலவிதமான தெண்டங்களை அடையச் செய்யும் என்று போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் சூரிய மகாதிசையில் கேது புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

205

*கேளப்பா ரவி திசையில் சுக்கிரபுத்தி*

*கெணிதமுள்ள மாதமது பனிரெண்டாகும்*

*ஆளப்பா அதன்பலனை அரையக்கேளு*

*ஆகாத சூரியனுடன் சூஸ்திரவாய்வு*

*பாளப்பா ஆக்குமடா திரேகந்தன்னை*

*பகையதுவுண்டாகும் பலனோயில்லை*

*வாளப்பா மனையாட்டி சிலுக்குண்டாகும்*

*வகையுடனே வான் பொருளும்கேடாம் சொல்லே*

*மேலுமொன்று இந்த இரவியின் திசையில் சுக்கிரபுத்தி 1 வருட காலமாகும். இச்சுக்கிர பகவானின் பொசிப்புக் காலத்தில் ஏற்படும் பலன்களாவன: சுக்கிரனது பகைவன் சூரியனாதலால் சூத்திர மிக்க வாய்வு உபாதை ஏற்பட்டு திரேக நலத்தைக் கெடுக்கும். பகைமைகளை உண்டாக்கும். நற்பலன்கள் வாய்த்தல் ஏற்படாது. மனைவிக்குப் பலவித அரிஷ்டங்களை உண்டாக்கும். திரண்ட பொருட் சேதம் எற்படும். நற்பலன்கள் விளையாது என்று கூறுவாயாக எனப் போகரின் அருளாணையால் புலிப்பாணி புகன்றேன்.*

*இப்பாடலில் சூரிய மகாதிசையில் சுக்கிர புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

206

*சொல்லவே சந்திரதிசை வருஷம் பத்தில்*

*சுகமுடைய சந்திரபுத்தி மாதம் பத்து*

*நில்லவே யதனுடைய பலனைச் சொல்வோம்*

*நிகரில்லா மன்னருடன் மகிழ்ச்சியாகும்*

*சொல்லவே சுயவரங்கள் நாட்டிவைத்து*

*சுகமான கல்யாணம் ஆகும்பாரு*

*வெல்லவே சத்துருவை ஜெயிக்கலாம்*

*வேணபடி நிதிசேரும் விவரந்தானே.*

*இனி, சந்திர மகாதிசையில் சந்திர பகவானின் சுயபுத்தி 10, மாதங்களாகும் இவ்னது பொசிப்புக் காலத்தில் ஏற்படும் பலன்களாவன; தன்னிகரில்லா மன்னருடன் மகிழ்வுடன் நட்புக் கொள்ளச் செய்யும். சொல்லுதற்கரிய சுயம்வரங்களை கூட்டி வைத்து கல்யாண வைபோகத்தை நிறைவு செய்து*

*மகிழ்ச்சி கொள்ளச் செய்யும். சத்துருக்களை வென்று வெற்றி வாகை சூடச் செய்யும். வேண்டிய தனலாபங்களையும் பொருட் சேர்க்கையையும் ஏற்படுத்தி மகிழ்வுதரும் என்று போகர் அருளால் புலிபாணி கூறினேன்.*

*இப்பாடலில் சந்திர மகாதிசையில் சந்திர புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

207

*தானென்ற சந்திர திசை செவ்வாய்புத்தி*

*தன்மையில்லா நாளதுவும் மாதம்ஏழு*

*வானென்ற அதன்பலனைச் சொல்லக்கேளு*

*வாதமுடன் கிரந்திபித்தம் வாய்வுரோகம்*

*யேனென்ற கள்ளரால் சோரமுண்டாம்*

*யெளிதான யேந்திழையால் துக்கமுண்டாம்*

*கோனென்ற கோதையரும் சகோதரத்தால்*

*கொடுமைகளு முண்டாகும் கூறந்துபாரே*

*அடுத்து, சந்திர மகாதிசையில் செவ்வாய் புத்தி ஏழு மாதங்களாகும். இவை அசுபபலன் தருபவையே. அவையாவன: வாதநோய், பித்தத்தால் ஏற்படும் வாந்திபேதி, மற்றும் வாயுவால் ஏற்படும் வியாதிகளை உண்டு பண்ணும். வெகுபலவான கள்ளர்களின் கோபத்திற்கு உள்ளாகச் செய்யும். இச்சைக்குகந்த பெண்களால் வெகு துக்கத்தை ஏற்படுத்தலும், வெகு பலமான அப்பெண்களாலும் அவர்களது சகோதரர்களாலும் கொடுமைகள் உண்டு. எனினும் தீர்க்கமாய் ஆராய்ந்து பலன் கூறுக என்று போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் சந்திர மகாதிசையில் செவ்வாய் புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

208

*பாரப்பா சந்திரதிசை ராகுபுத்தி*

*பகையான நாளதுவும் மாதம் பதினெட்டாகும்*

*ஆரப்பா அதனுடைய பலத்தைக்கேளு*

*அடங்காத சத்துருவால் தனநஷ்டமாகும்*

*விதியளவும் புத்திமத்தி நாசம்பண்ணும்*

*விளைவு தரும் பூமியுமே விரயமாகும்*

*காரப்பா களருடனே காலிசாவாம்*

*கனகமது சிலவாகும் கண்டுதேரே.*

*இதற்கு மேல் நான் ஒன்றையும் உனக்குச் சொல்வேன். அதையும் நீ கவனமாகக் கேட்பாயாக! சந்திர*

*மகாதிசையில் ராகுபுத்தி பகையானதேயாகும். இச்சந்திர மகாதிசையில் ராகுவின் பொசிப்புக் காலம் பகையான தென்றாலும் நீண்ட 18 மாதங்களைக் கொண்டதாகும். இக்கால கட்டத்தில் இதற்கு ஏற்படும் சோதனையான பலன்களை நீ விவரமாகக் கேட்பாயாக! எதற்கும் அடங்காத இவர்களது சத்துருவால் இவர்களுக்கு தனநஷ்டம் ஏற்படும் என்பதையும் அறிந்து கொள்க. பல விதமான வியாதிகளும் ஏற்படும், காலம் எல்லாம் விதியானது உள்ளளவும் மந்தம் உடையதும் மத்திமமான புத்தியுள்ளதும் நாசம் செய்வதுமாக அமையும். மேலும் களத்திலுள்ள விவசாயிகளுடன் கன்று காலிகளும் மடிதல் நேரும். தங்க ஆபரணங்கள் செலவாதலும் உண்டாகும் என உணர்ந்து கிரகபலம் தன்னையும் அறிந்து கூறுக எனப் போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் சந்திர மகாதிசையில் இராகு புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

209

*தேறவே சந்திரதிசை வியாழபுத்தி*

*தீங்கில்லா மாதமது பதினாறாகும்*

*கூறவே யிருந்தபலன் தன்னைக்கேளு*

*குணமுடைய மாதர்களும் சோபனமேயுண்டாம்*

*சேரவே செட்டுடனே லாபமுண்டாம்*

*சென்னல் முதல் விளைவாகுஞ்செல்வஞ்சேரும்*

*வீரவே வியாதியது நிவர்த்தியாகும்*

*வீறான மணியமுடன் விளையகலும்பாரே.*

*இப்படிப்பட்ட பெருமைக்குரிய சந்திர திசையில் வியாழபுத்தியின் பொசிப்புக் காலம் 16 மாதங்களாகும். அந்தக் காலகட்டத்தில் ஏற்படும் பலன்களை நன்கு அறிந்து கேட்பாயாக! நல்ல மணமகளுடன் சுபசோபனம் உண்டாகும். அதனால் பெருத்த லாபமும் உண்டாகும். சென்னல் முதலிய விளைவயலில் விளைவாகும். மிகுந்த செல்வம் சேரும். எத்தகைய வியாதியாய் இருந்தபோதும் நிவர்த்தியாகும். எதற்கும் தலைமை தாங்கும் பண்பு ஏற்படுவதோடு பூர்வ ஜென்ம வினையும் அகலும் என்பதை நீ நன்கு உணர்வாயாக என்று போகரது கருணையால் புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் சந்திர மகாதிசையில் வியாழன் புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

210

*பாரப்பா சந்திர திசை சனியன்புத்தி*

*பகர்ந்தநாள் மாதமது பத்தொன்பதாகும்*

*நேரப்பா அதனுடைய பலத்தைச் சொல்வோம்*

*நேரிழையாள் மரணமதாம் நெஞ்சுதனில்நோவாம்*

*காரப்பா கனகமது சிலவேயாகும்*

*கள்ளரால் சோரர்பயம் துக்கமுண்டாம்*

*சாரப்பா சத்துருவால் இடஞ்சலுண்டாம்*

*சஞ்சலங்க ளுண்டாகும் தவமேபாழாம்*

*மேலும் இச்சந்திரதிசையில் சனிபகவானின் பொசிப்புக்காலம் 19 மாதமாகும். இக்காலகட்டத்தில் அவனது பலத்தையும் புலிப்பாணியாகிய நான் போகரது கருணையினால் கூறுவேன் அதையும் தேர்ந்து அறிவாயாக! மனம் விரும்பி இச்சாதகனை மணந்த ஜாதகி மரணமெய்த நேரும். அதனால் ஜாதகனுக்கு இதய நோய் ஏற்படும். பல விதத் தங்க ஆபரணங்களும் விரயமாகும். கள்ளர் பயமும் ஏற்படும். சத்துரு உபாதையும் உண்டு. பலவித சஞ்சலங்கள் ஏற்பட்டு இதுவரை அனுபவித்த இன்பங்களும் பாழாகும். மணமிக்க சந்தனம் முதலியகந்தப் பொருள்களை அணிவான். கல்யாணம் முதலிய சுபகாரியங்கள் நிகழும்.*

*இப்பாடலில் சந்திர மகாதிசையில் சனி புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

211

*பாளில்லா சந்திரன் திசை புதனின் புத்தி*

*பகரும் நாள் மாதமது பதினேழாமே*

*கோளில்லா அதன் பலத்தை கூற்ந்துகொள்வோம்*

*குணமுள்ள மாதர்களும் மனமகிழ்ச்சியுண்டாம்*

*நாளில்லா கலியாணம் நடக்கும் பாரு*

*நன்றானபாக்கியமும் நவதானியஞ்சேரும்*

*தேளில்லா சத்துருவை செயிக்கலாகும்*

*தெரிவையர்கள் மோகமுடன் தெளிந்துநிற்பான்*

*மேலும் வேறுபாடில்லாத சந்திர திசையில் புதனின் பொசிப்புக்காலம் 17 மாதங்களேயாகும். அந்தக் கிரகத்தின் பலன்களை நன்கு அறிந்து கூறுவாயாக! ஏனெனில் குணமுள்ள மாதர்களால் அச்சாதகனுக்கு மனமகிழ்ச்சியுண்டாகும். திடுமென்று திருமணம் நிகழ்தலும் உண்டு. நிறைந்த பாக்கியங்களும் நிகழும். நவதானிய வகைகள் சேரும். தேனிலுள்ள வாசத்தைக் கலக்கும் வண்டென இச்சாதனைகளைத் தெரிவையர்கள் என்ற வயதான மங்கையர்கள் தெளிந்து நிற்பார்கள் என்று போகரது கருணையால் புலிப்பாணி பாடினேன்.*

*இப்பாடலில் சந்திர மகாதிசையில் புதன் புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

212

*தெரிந்து நின்ற சந்திர திசை கேதுபுத்தி*

*தென்மையில்லா நாளதுவும் மாதம் ஏழு*

*புரிந்துகொண்ட இதன்பலனைப் புகலக்கேளு*

*புகழ்மெத்த மார்பில்சில பிணியுமுண்டாம்*

*பரிந்துகொண்ட பாவையரும் பகைநாசமுண்டாம்*

*பாங்கான தாய்தந்தை சுதன்மரணமாகும்*

*விரிந்து கொண்ட வியாதியது விழலாய்ப்பண்ணும்*

*வீணாக தேசமெங்கும் அலைவன்பாரே.*

*மேலும், இச்சந்திர மகாதிசையில் கேது புத்தியானது, மிகவும் கலக்கத்தைச் செய்வதேயாகும். இக்கேதுவின் பொசிப்புக்காலம் ஏழு மாதம் என்பதையும் உணருக. இக்காலகட்டத்தில் ஏற்படும் பலன்களாவன: புகழ்தற்குரிய பெருத்த மார்பகத்தில் பிணியேற்படுதலும், இவர்களுக்காகப் பரிந்து நின்ற பெண்களுக்குப் பகைவர்களால் பெருநாசமும் விளைவதாகும். மேலும், பெற்ற தாய், தந்தை மற்றும் பிறந்த மகன் முதலியோரின் மரணமும் நேரும். அதிகப்பட்டுப்போன வியாதி பெருத்த விரயத்தை உண்டு பண்ணும். இச்சாதகன் காரணமின்றியே தேசாந்தரம் சென்றலைவான் என்று போகரது கருணையினால் புலிப்பாணி பாடினேன்.*

*இப்பாடலில் சந்திர மகாதிசையில் கேது புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

213

*கேளப்பா சந்திரதிசை சுக்கிரபுத்தி*

*கெணிதமுள்ள நாளதுவும் மாதம் நாலைந்து*

*ஆளப்பா அதன்பலனை சொல்லக்கேளு*

*அன்பான லெட்சுமியு மனுதினமுநிற்பாள்*

*தாளப்பா வாகனமும் பொன்முத்துசேரும்*

*வகையான பூஷணமும் மிகுதியுண்டாகும்*

*கேளப்பா கலியாணங் கெணிதமுடன் நடக்கும்*

*கெந்தமுடன் சுகந்தங்கள் அணிவான்பாரே*

*இன்னும் ஒரு கருத்தைச் சொல்லுகிறேன். கேள்! சந்திர மகாதிசையில் சுக்கிரனது பொசிப்புக் காலம் 1 வருடம் 8 மாதமாகும். அவனது பொசிப்புக் காலத்தில் ஏற்படும் பலன்களைக் கூறுகிறேன் கேள். மகாலட்சுமியானவள் அவனது மனையில் சுகித்துத் தங்கிருப்பாள். வாகன யோகம் உண்டாகும். பொன்னாபரண சேர்க்கையும் முத்தாபரண சேர்க்கையும் இதமான பல்வேறு பூஷணங்களும் இணையற்றதாக இச்சாதகனுக்கு வாய்க்கும் என்று வகை தொகை அறிந்து கூறுக என்று போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் சந்திர மகாதிசையில் சுக்கிர புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

214

*மானேகேள் சந்திரதிசை சூரியபுத்தி*

*மரணநாள் மாதமது ஆறதாகும்*

*தானேதான் சத்துருவும் அக்கினியின் பயமும்*

தாபமுள்ள சுரதோஷம் சன்னிதோஷம்

யேனே தான்காணுமடா யிருக்கமதுவுண்டாம்

யேகாந்த தேகமது இருளதுவேயடையும்

தேனேகேள் லெட்சுமியும் தேகமுடன் போவாள்

திரவியங்கள் சேதமடா, சிசுவுடனேதீதாம்

மற்றுமொரு கருத்தினை என்னன்பிற்குரிய மானே கேட்பாயாக! சந்திர மகாதிசையின் இறுதி புத்தியாகிய சூரியனின் பொசிப்புக் காலம் ஆறுமாத காலமேயாகும். இக்காலகட்டத்தில் ஏற்படும் பலன்களைக் கூறுகிறேன். நன்கு கேட்பாயாக! சத்துரு பயமும், அக்கினி பயமும் ஏற்படும். ஜுரதோடம் உண்டாகும். அதிகமான ஜுரத்தால் ஜன்னி காணுதலும் ஏற்படும். மதுவினால் மயக்கமடைதலும் தேகம் இருளடைதலும் நேரும், இலக்குமி தேவியானவள் அவனது தேகத்தை விட்டுச் சென்றுவிடுவாள். அதனால் திரவிய நஷ்டமும் சிசு நஷ்டமும் ஏற்படும் என்று போகர் அருளால் புலிப்பாணி புகன்றேன்.

இப்பாடலில் சந்திர மகாதிசையில் சூரிய புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.

215

ஆமென்ற சேய்திசை வருஷம் ஏழில்

அங்காரகன் புத்திநாள் நூத்திநாற்பத்திஏழு

போகமென்ற அதன்பகை ஆயுதத்தால்பீடை

தாமென்ற சத்துருவால் வியாதியதுகாணும்

தனச்சேதம் உடல்சேதம் தானே உண்டாம்

நாமென்ற நகரத்தில் சூனியங்களுண்டாம்

நாடேல்லாம் தீதாகும் நன்மையில்லாப் பகையே.

இனி, சேய் என்று அழைக்கப்படும் செவ்வாயின் தசையில் அக்கிரகத்திற்குரிய சுயபுத்தி 147 நாள்கள் ஆகும். இவனது பொசிப்புக் காலத்தில் ஏற்படும் பலன்களாவன: புகழ்மிக்க அரசர் பகை உளவாகும்; ஆயுதத்தாலும் பீடைகள் நேரும். நாகப்பாம்பினைப் போன்ற விடமுடைய சத்துருக்களால் வியாதியும் நேரும்; தன விரயம் ஏற்படும். உடல் சேதமும் உண்டாகும். சூனியம், பில்லி, போன்றவற்றால் துன்பங்கள் நேரும். நாடே தூற்றிப் பகையாகும் என்று போகரது அருளால் புலிப்பாணி பாடினேன்.

இப்பாடலில் செவ்வாய் மகாதிசையில் செவ்வாய் புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.

216

பகையான சேய்திசை ராகுபுத்தி

பாங்கில்லா நாளதுவும் வருஷம் ஒன்று

துகையில்லா நாளதுவும் பதினெட்டாம்

*துன்பங்கள் சுரதோஷம் வாதபீடை*

*வகையில்லா சத்துருவும் அக்கினியுமுண்டாம்*

*வளங்கொடியாள் விரோதமது வகையுடனே காட்டும்*

*நகையுடனே பூஷணங்கள் நலமில்லா சிலவாம்*

*நன்மையில்லா நிலைவிட்டு நடப்பாள் காணே 216*

*பகை செய்யும் கிரகமான செவ்வாய் கிரகத்தின் திசையில் கரும்பாம்பு என்ற இராகு பகவானின் பொசிப்புக் காலம் 1ட் வருடம் 18 நாள்களாகும்; இக்காலகட்டத்தில் ஏற்படும் பலன்கள் வெகு துன்பங்களை விளைவிக்கும் . சுரதோடம்; வாதம் முதலிய நோய்களால் பீடை சத்துருக்களினால் ஏற்படும் துன்பம் மற்றும் அக்கினியாகிய நெருப்பினால் துன்பம் நேரும்; மனைவியால் விரோதம் வந்து வகை தொகையான துன்பங்களைக் காட்டும், அணியும் ஆபரணங்களும் அழிந்தொழியும்; நலமில்லா வகையில் மனையாளும் சென்று நன்மையில்லாத நிலையினைவிட்டு நடப்பாள் என்றும் போகரது அருளாணையால் புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் செவ்வாய் மகாதிசையில் இராகு புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

217

*காணவே சேய்திசை வியாழபுத்தி*

*கனமான நாளதுவு மாதம்பதினொன்று*

*நாணவே நாளதுவும் ஆறதாகும்*

*நன்றாக, அதன்பலனை நவிலக்கேளு*

*பூணவே பூவையரும் பொருந்தியிருப்பாள்*

*புகழான சிலவுடனே சிறப்புண்டாகும்*

*தோணவே சத்துருவும் வணக்கமாவான்*

*தொடுத்ததொரு காரியங்கள் வெற்றியாமே*

*இனியொன்று இச்செவ்வாய் தசையில் வியாழபகவானின் பொசிப்பானது 11மாதம் 6 நாள் ஆகும். இக்காலகட்டத்தில் நிகழும் பலன்களைக் கவனமாகக் கூறுகிறேன். நன்கு கேட்பாயாக! பூணணிந்த மாதான மனைவியும் மனையில் பொருந்தி அன்புடன் இருப்பாள். புகழானது பெருகும். மிகப் பல சிறப்புகள் ஏற்படும். சத்துருக்கள் நேசமாவர். எடுத்த காரியங்கள் அனைத்தும் வெற்றிப்பாதையில் வெகுவாக முன்னேறி நற்பெயரும் புகழும் தோற்றுவிக்கும் என்றும் போகர் அருளால் புலிப்பாணி புகன்றேன்.*

*இப்பாடலில் செவ்வாய் மகாதிசையில் வியாழன் புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

218

*வெற்றியில்லா சேய்திசை சனியன்புத்தி*

*வீறான நாளதுவும் மாதம்பதின்மூன்று*

*சத்தியில்லா நாளதுவும் ஒன்பதாகும்*

*சுகமில்லை அதன்பலனை சூட்டக்கேளு*

*புத்தியில்லா சத்துவும் ரோக பயமுண்டாம்*

*பூவையரும் புத்திரரும் புனிதமுடன் மடிவாம்*

*கத்தியில்லா தர்க்கங்கள் மெத்த உண்டுபாரு*

*கனதையுள்ள சூனியமும் கனாவுடனேகாணும்*

*வெற்றியே அளிக்கவல்ல செவ்வாய் திசையில் அச்செவ்வாயின் பகைவன் எனச் சொல்லத்தகும் சனிபகவானின் பொசிப்புக் காலம் 1வருடம் 1 மாதம் 9 நாள்களாகும். இவை சுகமில்லா நாள்களே. இக்கால கட்டத்தில் பலன்களைக் கூறுகிறேன். கேட்பாயாக! அறிவற்ற பேதைகளான சத்துருக்களினால் பயம் ஏற்படும். நோயின் பயம் உண்டாகும். பெண்டிரும், புத்திரர்களும் மரணமடைய நேரிடும்; ஆதாரமற்ற தர்க்கங்கள் உண்டாகும்; அவையும் வெகுவானதாக இருக்கும். சூனியங்களால் தொல்லையும் கனாக்களினால் பயமும் ஏற்படும் என்று போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் செவ்வாய் மகாதிசையில் சனி புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

219

*காணவே சேய்திசையில் புதனார்புத்தி*

*கணக்கான நாளதுவும் மாதம் பதிமூன்று*

*பூணவே நாளதுவும் மூணொன்பதாகும்*

*பூட்டான அதன்பலனைப் புகலக்கேளு*

*பேணவே ஓமுடிந்து பிரயமும்*

*பெரிதான நீரிழிவும் பிலன்கேடுபண்ணும்*

*தோணவே தோகையரும் வியாதியாவாள்*

*தொடுத்ததொரு காரியங்கள் பொல்லாப்பாமே*

*இனி, செவ்வாய் திசையில் புகபகவானின் புத்தி 1 வருடம் 1மாதம் 27 நாள்களாகும். இக்காலகட்டத்தில் நிகழும் பலன்களாவன: பாண்டு முதலிய நோய்களும், நீரிழிவும் தேக பலனை அழித்துக் கேடு செய்யும். வீட்டில் மனையாளும் வியாதிக்கு அடிமைப்பட்டு கேடடைவாள். எடுத்த காரியங்கள் எல்லாம் முற்றும் கேடுற்றுப் பொல்லாததாகவே முடியும் என்று போகர் அருளால்*

*புலிப்பாணி பாடினேன்.*

*இப்பாடலில் செவ்வாய் மகாதிசையில் புதன் புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

220

*ஆகுமே செவ்வாயில் கேதுபுத்தி*

*ஆகாத நாளதுவும் நூத்திருபத்தியேழு*

*போதவே பலன் தனைப் பூட்டக்கேளு*

*பூவையரும் புத்திரரும் வியாதியாகும்*

*யேருமே வியாதியது கொல்லும்*

*யின்பமுள்ளனவிரோதம் தானுமுண்டாம்*

*சாருமே சத்துருவும் பிசாசுதானும்*

*சஞ்சலங்க ளதனாலே கோடிதானே.*

*மேலும், இச்செவ்வாய் திசையில் கேது பகவானின் பொசிப்புக்காலம் 127 நாள்களாகும். இவை ஆகாதவையே. இக்கால கட்டத்தில் நிகழும் பலன்களாவன: மனையில் நாகணவாய்ப்புள் போன்ற பூவையர்க்கும், புத்திரர்க்கும் வியாதி உண்டாகிப் பெருத்த துன்பம் நல்கும். அதனால் மரணமும் நேரும். இதுவரை இன்பமுள்ள அனைத்தும் துன்பம் தரும். விரோதம் பெருகும். சத்துருக்களாலும் பிசாசு பயத்தாலும் துன்பங்கள் மிகும் என்று போகரது அருளால் புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் செவ்வாய் மகாதிசையில் கேது புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

221

*தானென்ற சேய் திசையில் சுக்கிரபுத்தி*

*தாழ்வான மாதமது பதினாலகும்*

*வீணென்ற அதன்பலனை வினவக்கேளு*

*விரகான சத்துருவால் விலங்குமுண்டாம்*

*யேனென்ற ஈனஸ்திரீ போக முண்டாம்*

*யின்பமில்லா துன்பமது யிடஞ்சல் காட்டும்*

*கோனென்ற இராசாவால் கலகமுண்டு*

*கோதண்டம் தான்வுருகும் கொடுமைபாரே.*

*தன்னிரகற்ற செவ்வாய் திசையில் சுக்கிர புத்தி தன்றன் பொசிப்புக் காலம் 14 மாதமாகும். இக்காலகட்டத்தில் நிகழும் பலன்களைக் கூறுகிறேன். நன்கு கேட்பாயாக! மாறுபாடற்ற சத்துருக்களால் விலங்கு பூண நேரும்: மீன் போலும் கண்ணுடைய போகஸ்திரீயின் சேர்க்கை நிகழும். இன்பமில்லாத நிலையில் வெகு துன்பங்களே நிகழும். பலவகையிலும் காரியங்கள் கேடுறும். அரசபயம் உண்டாகும். ஆயுதத்தால் கேடுறும் பயம் ஏற்படும் என்று போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் செவ்வாய் மகாதிசையில் சுக்கிர புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி*

*விவரிக்கிறார்.*

222

*பாரப்பா செவ்வாயில் சூரிய புத்தி*

*பாங்கான நாளதுவும் நூற்றிருபத்தியாறு*

*ஆரப்பா அதன் பலன் அரையக்கேளு*

*ஆனதொரு சம்பத்து அயிஸ்வரிய முண்டாம்*

*சாரப்பா சத்துருவு முறவாகிப் போவான்*

*சஞ்சலங்கள் தானகலும் சம்பத்துண்டாம்*

*சேரப்பா சில தவங்கள் சேரப்பண்ணும்*

*தீங்கில்லா சிவவேடம் பூணுவானே.*

*கீர்த்திமிகு செவ்வாய் திசையில் சூரிய புத்தி 126 நாள்களாகும். அவனது பொசிப்புக் காலத்தில் ஏற்படும் பலன்களாவன: வெகு சம்பத்து ஏற்படும், ஐஸ்வரியம் பெருகும். சத்துருக்கள் உறவாகி அதனால் இன்பம் காணும். எல்லாவகைத் துன்பங்களும் விலகும்; மிகுந்த தன லாபம் நேரும்., பல சிவத்தலங்களுக்குச் சென்று பிரசித்திமிகு பூசைகளை இச்சாதகன் புரிவான். சிவதீட்சை பெறுவான் என்று போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் செவ்வாய் மகாதிசையில் சூரிய புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

223

*பூணுவான் செவ்வாயில் சந்திரபுத்தி*

*புகழான நாளதுவும் மாதமேழு*

*ஆணுவான் அதன்பலனை அன்பாய்க்கேளு*

*ஆயிழையா ளருகிருந்து செல்வபதியான்*

*கோணுவான் கொடியோர்கள் வணக்கஞ்செய்வார்*

*கொற்றவனே குவலயத்தில் பேர் விளங்கும்*

*ஊணுவான் தோகையரும் புத்திரருமுண்டாம்*

*உற்றதொரு குலதெய்வம் உறுதிகாணே.*

*இனி, இச்செவ்வாய் மகாதிசையில் இறுதி புத்தியான சந்திரனின் பொசிப்புக் காலம் ஏழு மாதங்களேயாகும். இவ்வேழு மாதங்களும் நற்பலன்களும் விளையும். மனைவி இணக்கமாக இருந்து வெகு செல்வம் நல்கி விளங்கி வாழ்வாள்; தீயவர்களும் தங்கள் தவற்றினையுணர்ந்து வணங்கி வழிபடுவர். இந்நிலவுலகில் வெகுவான பேர் விளங்கும். நல்ல மனைவியரும் புத்திரரும் வாய்ப்பர். இவையெல்லாம் குலதெய்வத்தின் பேரருளால் என்று போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் செவ்வாய் மகாதிசையில் சந்திர புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

224

*காணவேராகு திசை வருஷம் பதினெட்டு*

*கனதையுள்ள ராகுவினில் ராகுபுத்தி*

*தோணவே மாதமது முப்பத்திரண்டு*

*துகையான நாளதுவும் பனிரெண்டாகும்*

*யேனவே சத்துருவால் நிவந்தனையோடும்*

*யெண்ணமுள்ள மனைவியரும் யிருந்தவிடம்பாழ்*

*போனவே பழம் பொருளும் வேதமாகும்*

*பிலமான நோயதுவும் கூடிக்கொல்லும்*

*சிறப்பு மிக்க இராகு மகாதிசையானது 18 ஆண்டுகளாகும். இதில் இராகுவின் பொசிப்புக் காலம் அதாவது சுயபுத்தியானது 2 வருடம் 8 மாதம் 12 நாள்களாகும். இக்காலகட்டத்தில் சத்துருக்களால் தொல்லைகளும் நிபந்தனையோடும் எண்ணமுள்ளவனாய் மனைவி இருப்பது கண்டு மனம் வெதும்புதலும், குடியிருக்கும் மனைபாழாதலும் மூதாதையர் சேர்த்து வைத்த பழைமையான கலைப்பொருள்களும் தம் பொருளும் சேதமாகி விரயம் காட்டும். அதுமட்டுமல்லாமல் பலமான பிணியுண்டாகி உயிர்க்குக் கேடு செய்யும் என்று போகர் அருளால் புலிப்பாணி புகன்றேன்.*

*இப்பாடலில் இராகு மகாதிசையில் இராகு புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

225

*கூடியே ராகுதிசை வியாழபுத்தி*

*குணமுள்ள மாதமது யிருபத்தெட்டும்*

*நாடியே நாளதுவும் மூவெட்டாகும்*

*நலமுள்ள ராசரால் நன்மையுடன் வாழ்வன்*

*தேடியே தெரிவையரும் சோபனமேயாகும்*

*தெகுட்டாத புத்திரனும் தென்புடனேவாழ்வான்*

*பாடியே பாக்கியமும் பவுசிகளுண்டாம்*

*பலன் தரும் பூமிமுதல் யோகந்தானே*

*இவ்விராகு திசையில் வியாழ புத்திற்குரிய காலம் 2 வருடம் 4 மாதம் 24 நாள்களாகும். இக்காலத்தில் இச்சாதகனுக்கு அரசரால் நன்மையுண்டாகும். பெண்களால் சுபசோபனங்கள் ஏற்படுதலும் புத்திரோற்பத்தியும் ஏற்படும். அதனால் மனத்தில் தெம்பும் மகிழ்ச்சியும் மிகுந்து காணும். பலவிதமான பாக்கியங்கள் ஏற்படுவதோடு சமுதாயத்தில் அந்தஸ்து மிகுதலும், வெகுதனம்*

*வாய்த்தலும் பூமி லாபமும் உண்டாகும் என்று போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் இராகு மகாதிசையில் வியாழன் புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

226

*தானென்ற ராகுதிசை சனிபுத்திகேளு*

*தன்மையில்லா மாதமது முப்பத்தினாலு*

*நானென்ற நாளதும் ஆறதாகும்*

*நலமில்லாப் பிரமை கொண்டு நாடுநகர் திரிவன்*

*கோனென்ற பிதுர் பீடையுண்டாகும் பாரு*

*கொடியிடையாள் நோவாகும்குழந்தையது சாவாம்*

*தேனென்ற தேவதையின் இடஞ்சலுண்டாகும்*

*தெண்டமுடன் சத்துருவும் திரவியங்கள்சேரும்.*

*இராகு மகாதிசையில் சனிபுத்தியின் காலம் 2 வருடம் 10 மாதம் 6 நாள்களாகும். இக்காலகட்டத்தில் இச்சாதகன் நன்மை இல்லாதவனாகப் பிரமை பிடித்தவனைப் போல் பலதேசமும் சென்று திரிவான். பூர்வபுண்ய வசத்தால் பிதுர்களினால் பீடை ஏற்படும். கொடிபோலும் இடை யுடைய மனைவிக்கு நோய் உண்டாதலும் குழந்தை மரணமும் உண்டாகும். குலதெய்வத்தால் இடைஞ்சல் ஏற்படும். பலவகையில் விரயங்கள் ஏற்படும். சத்துருக்களின் தொகைமிகுவதே போல வெகு தனலாபமும் என்று போகர் அருளால் புலிப்பாணி புகன்றேன்.*

*இப்பாடலில் இராகு மகாதிசையில் சனி புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

227

*சேதமில்லா ராகுதிசை புதனார் பத்து*

*செப்புநாள் மாதமது முப்பதாகும்*

*பாதமில்லா நாளதுதான் பதினெட்டாகும்*

*பகுத்தறிவும் அதன்பலனை பகரக்கேளு*

*வாதமில்லா வாணிபஞ் செட்டாகும் பாரு*

*வகையான சகோதரமுடன் வாழலாகும்*

*பேதமுடன் பொருளுண்டாம் பூமிலாபம்*

*பொங்குமால் புத்திரனில் புகழ் ரொம்பபாரே*

*மேலும் இவ்விராகு திசையில் புதனது புத்தி 2 வருடம் 5 மாதம் 18 நாள்களாகும். அக்காலகட்டத்தில் நிகழும் பலன்களைக் கூறுவேன் கேட்பாயாக; பின்னமில்லா வகையில் வாணிபமும் செய்தொழிலும் செழிக்கும். சகோதரர்களுடன் மனமொன்றி வாழ்தலும் நேரும். பிறருடன் சிற்சில மனபோதங்கள்*

*ஏற்படினும் தனலாபமும் பூமி லாபமும் மேலோங்கிப் பெருத்தலோடு புத்திரரால் புகழும் பெருமையும் மிகும் என்று போகர் அருளால் புலிப்பாணி புகன்றேன்.*

*இப்பாடலில் இராகு மகாதிசையில் புதன் புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

228

*பாரேநீ ராகுதிசை கேதுபுத்தி*

*பகருகின்ற மாதமது பனிரெண்டாகும்*

*சேரேநீ நாளதுவும் பதினெட்டாகும்*

*செலுத்துகின்ற அதன்பலனை செப்பக்கேளு*

*ஊரே நீவிரோதமுடன் சத்துருவுண்டாம்*

*உடன்கேடு பண்ணிவைக்கும் உண்மைபாரு*

*தேரே நீ திரவிங்கள் யேவலுடன் சேதம்*

*தீதான காயங்கள் தேகத்தில் காணும்*

*இனி, இராகு திசையில் கேதுபகவானின் புத்தி ஒரு வருடம் பதினெட்டு நாள்களாகும். இக்காலகட்டத்தில் ஏற்படும் பலன்களாவன: எவ்விடத்திலும் விரோதம் ஏற்படுதலும் அதனால் பகைவர்கள் பெருகிக் காணலும் நேரும். உடல்நலத்தைப் பொறுத்தவரை கேட்டினையே செய்தலும் ஏவல், பில்லி முதலியவற்றால் திரண்ட திரவியங்கள் சேதமாதலும் தேகத்தில் தீராப்பிணிக்குரிய அடையாளங்களும் காணும் எனப் போகர் அருளால் புலிப்பாணி புகன்றேன்.*

*இப்பாடலில் இராகு மகாதிசையில் கேது புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

229

*காணவே ராகுதிசை சுக்கிரபுத்தி*

*கணக்கான மாதமது ஆறாறாகும்*

*கோணவே அதன்பலனைச் சொல்லக்கேளு*

*தோகையர்கள் தன்னாலே சுகமாகும் பாரு*

*பூணவே பூமிமுதல் பொருளுஞ்சேரும்*

*புகழ்பெற்ற அரசரால் சந்தோஷமாகும்*

*ஊனவே வியாதியது பீடிப்பாகும்*

*உடன்கேடு வேந்தனால் கலகமாமே.*

*இராகு திசையில் சுக்கிர பகவான் பொசிப்புக் காலம் 3 வருடங்களாகும். இக்காலத்தில் சாதகனுக்கு நிகழும் பலன்களாவன: மயில் போலும் சாயலையுடைய பெண்களால் இன்பம் விளையும். பூமி லாபம் ஏற்படுதலும் நிறைவான பொருட் சேர்க்கையும் புகழ்மிக்க அரசர்களால் சுப சந்தோஷங்களும் ஏற்படும். எனினும் வியாதி பீடிப்பதும் அதன் காரணமாகக் காரியக்கேடு ஏற்படுதலும், அரசனால்*

கலகம் விளையும் என்றும் போகர் அருளால் புலிப்பாணி புகன்றேன்.

இப்பாடலில் இராகு மகாதிசையில் சுக்கிர புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.

230

ஆகுமே ராகுதிசை சூரியபுத்தி

அருளில்லா மாதமது பத்தேயாகும்

யேகுமே நாளதுவும் மூவெட்டாகும்

யென்ன சொல்வேனதன் பலனை யியம்பக்கேளு

போகுமே சத்துருவால் வியாதிகாணும்

பொருள் சிலவு பூமிமுதல் சேதமாகும்

சாகுமே நாள்தோறும் சண்டையாலே

சதிரான பூமிமுதல் காலிபோமே.

இவ்விராகு திசையில் சூரிய பகவானின் பொசிப்புக் காலம் கருணை தராத காலமே. இக்காலம் 10 மாதம் 24 நாள்களாகும். தீய சத்துரு ஏற்படுதலும், உடல் நலத்தைக் கெடுக்கும் வியாதி நேர்தலும் அதனால் பெரும் பொருள் செலவும் பூமி முதலிய விரயமுமாகும். ஒவ்வொரு நாளும் சண்டையிடுதலாலே சாவு நேர்தலும் பெருமை மிக்க பூமி அழிதலும் கன்று காலிகள் மாய்தலும் நேரும் எனப் போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.

இப்பாடலில் இராகு மகாதிசையில் சூரிய புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.

231

காலியென்ற ராகுதிசை சந்திரபுத்தி

கனமில்லா மாதமது ஈரொன்பதாகும்

விதமில்லா மனைவி தன்னால் பொருளுஞ்சேதம்

வாலியென்ற குரங்கது போல் மாண்டுபோவான்

வகையான தேசம்விட்டு அலைவது பாரு

மாலையென்ற மனைவியால் சுகபோகமில்லை

மிகையான செல்வமதும் விரையமாகும்

மக்கள் முதல் மாடுடன் கோடாங்கேளே

இராகு பகவானின் திசையில் சிறப்புத்தராத சந்திர பகவானின் பொசிப்புக் காலம் 1 வருடம் 6 மாதங்களாகும். இக்கால கட்டத்தில் விளையும் பலன்களாவன: இன்னவிதம் என்று சொல்ல இயலாத வகையில் இதம் அறிந்து நடந்திடாத மனைவியால் பெரும் பொருட் சேதமும் இராமகாதையில் வரும் வாலியினைப் போல இச் சாதகன் மாண்டு போதலும் உண்டு. சுய தேசத்தைவிட்டு பரதேசத்தில் அலைந்து திரிதலும் மனைவியால் நற்சுகம் அடைதலும் இல்லாது போகும். மேலும்

மக்களால் தான் அடைந்த பிற செல்வங்களாலும் கன்று காலிகளாலும் கேடே விளையும் என்று போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.

இப்பாடலில் இராகு மகாதிசையில் சந்திர புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.

232

கேளப்பா ராகுதிசை செவ்வாய்புத்தி

கேடான நாளதுவும் வருஷம் ஒன்று

நாளப்பா நாளதுவும் பதினெட்டாகும்

நன்மையில்லா அதன்பலனை நவிலக்கேளு

ஆளப்பா அக்கினியும் சோரபயமுண்டாம்

அடிபணியும் தேவதையால் அவதியுண்டாம்

பாளப்பா பாவையரும் பலனுந்தீதாம்

பாழாகும் பொருள் சிலவும் பலவிதமுந்தானே

இனி, இவ்விராகு திசையில் செவ்வாயின் பொசிப்புக் காலம் கேடுதருவதே. அதுவும் 1 வருடம் 18 நாள்களாகும். இக்கால கட்டத்தில் நன்மை நேராது. அப்பலன்களாவன: அக்கினியாலும், திருடர்களாலும் வெகுபயம் உண்டாகும். குலதெய்வத்தின் சாபத்தால் மிகுந்த அவதி உண்டாகும். பாவையரால் ஏற்படும் பல தீங்குகளால் வெகுதன விரயம் ஏற்படும். பலவகையிலும் பொருட் செலவு உண்டாகும் என்று போகர் அருளால் புலிப்பாணி புகன்றேன்.

இப்பாடலில் இராகு மகாதிசையில் செவ்வாய் புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.

233

தானென்ற வியாழதிசை ஒருபத்தாறாம்

தன்மையுட னதன்புத்தி வருஷம் ரெண்டு

நானென்ற நாளதுவும் நாற்பத்தெட்டு

நன்றாக அதன்பலனை நவிலக்கேளு

கோனென்ற ராசாவும் குருவருளுமுண்டு

குறைவில்லா திரவியங்கள் வெகுலாபமுண்டாம்

ஆனென்ற பெண்கொடியாள் மனமகிழ்ச்சியுண்டாம்

மங்களமும் சோபனமும் வளருங்கலியாணம்

தன்னிரகற்ற வியாழ பகவானின் திசா காலம் வருடம் 16 ஆகும். அதில் அவரது புத்தி 2 வருடம் 1 மாதம் 18 நாள்களாகும். நன்மை தரத்தக்க வகையில் அவர் நிகழ்த்தும் பலன்களைக் கூறுகிறேன். கேட்பாயாக! ஓர் அரசனைப் போல் மகிழ்வுடன் வாழும் வசதியான வாழ்வு நேரும்.

குருவினுடைய அருளும் வாய்க்கும்.குறைவில்லா வகையில் திரவியங்கள் வந்து சேர்தலும் நிறைந்த லாபம் வந்தடைவதோடு மனைவியால் மனமகிழ்ச்சி யுண்டாதலும் மங்களகரமான சுப சோபனம் நேர்தலும் இல்லத்தில் திருமணகாரியங்கள் நிகழ்தலும் நேரும் என்று போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.

இப்பாடலில் வியாழன் மகாதிசையில் வியாழன் புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.

234

வளருமென்ற வியாழதிசை சனியின்புத்தி

வாகான மாதமது முப்பதுவேயாகும்

வளருமென்ற நாளதுவும் பனிரெண்டாகும்

வன்மையுடன் அதன்பலனை வழுத்தக்கேளு

வளருமென்ற கெர்ப்பமுடன் போகம்சித்தி

வகையுடன் திரவியமும் பூஷணமுஞ்சேரும்

வளருமென்ற மன்னன்போல் வளருமது யோகம்

வாகன தண்டிகையும் வாகனமுமுண்டாம்

வியாழ மகாதிசையில் சனிபகவானின் பொசிப்புக் காலம் 2 வருடம் 6 மாதம் 12 நாள்களாகும். கொடைத் தன்மை மிகு சனிபகவான், அக்காலத்தில் நிகழ்த்தும் பலன்களாவன: புத்திரோற்பத்தி ஏற்படுதலும் இன்பம் நேர்தலும், எண்ணிய எண்ணங்கள் எண்ணிய வண்ணம் ஈடேறுதலும் நேரும். வெகு திரவியமும் பொன்னாபரணம் புத்தாடை சேர்க்கையும் ஏற்படும். எழுச்சிபெறும் அரசனைப் போல் சம்பத்தும் கனக தண்டிகையும் வாகனாதிகளும் ஏற்பட்டு வெகு பிரபலனாவான் என்று போகர் அருளால் புலிப்பாணி புகன்றேன்.

இப்பாடலில் வியாழன் மகாதிசையில் சனி புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.

235

உண்டாகும் வியாழதிசை புதனார்புத்தி

உண்மையுள்ள மாதமது மூவொன்பதாகும்

தென்றாகும் நாளதுவும் ஆறதாகும்

தெருட்டாத அதன்பலனை தென்புடனேகேளு

உண்டாகு மலைபோலே பெருகுஞ்செல்வம்

குறைவில்லா மாதர் மைந்தர் கட்டுடனே வாழ்வான்

சென்றாகும் திருவுடனே பட்டங்கட்டும்

திருவான லெட்சுமியும் சேர்வள்பாரே

*வியாழ மகாதிசையில் புதபகவானின் பொசிப்புக் காலம் 2 வருடம் 3 மாதம் 6 நாள்களாகும். அக்காலகட்டத்தில் ஏற்படும் பலாபலன்களாவன: மலைபோலச் செல்வமானது பெருகிக் காணும். குறைவில்லாத மனைவியுடனும் குழந்தைகளுடனும் கட்டுக்கோப்பான நல்வாழ்வினைச் சாதகன் பெறுவான். வெகுதனமும், பெரும் புகழும் கொண்டு அரச சம்பத்தும் பட்டம் பதவிகளும் பெறுவதோடு இவனது மனைவியில் திருமகள் நிலை கொண்டு உறைவாள் எனப் போகர் அருளால் புலிப்பாணி புகன்றேன்.*

*இப்பாடலில் வியாழன் மகாதிசையில் புதன் புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

236

*பாரப்பா வியாழதிசை கேது புத்தி*

*பாழாகும் மாதமது பதினொன்றாகும்*

*சேரப்பா நாளதுவும் ஆறதாகும்*

*செம்மையில்லா அதன் பலனை செப்பக்கேளு*

*வீரப்பா வியாதியது கூடிக்கொல்லும்*

*விதமில்லா மனைவிதன்னால் நிலைவிட்டுப் போவான்*

*சாரப்பா சத்துருவும் சதஞ்செய்யவருவான்*

*சகலதன பாக்கியமும் க்ஷணத்தில்போமே*

*வியாழ மகாதிசையில் கேது பகவானின் பொசிப்புக் காலம் தீது 11 மாதம் 6 நாள்களாகும். இன்பம் நல்காத அக்கால கட்டத்தில் நிகழும் பலன்களைக் கேட்பாயாக! கொடிய வியாதியினால் மரணமடைதலும், இதமாக நடந்து கொள்ளத் தெரியாத மனைவியினால் மனமுறிந்து பிரிந்து செல்வதும் நேரிடும். பகைவர்களும் பலவிதத்தில் சேதம் விளைவிக்க வந்து சேர்வார்கள், சகல ஜனங்களால் கிடைத்த அனைத்து பாக்கியமும் ஒரு கணத்தில் மறைந்து போம் என்று போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் வியாழன் மகாதிசையில் கேது புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

237

*போமென்ற வியாழதிசை சுக்கிரபுத்தி*

*பொருள்காணு மாதமது முப்பத்திரண்டு*

*ஆமென்ற அதன்பலனைச் சொல்லக்கேளு*

*அருளான லெட்சுமியும் அன்புடனே சேர்வாள்*

*சுபமென்ற சோபனமும் மனமகிழ்ச்சியுண்டாம்*

*சுகமான கன்னியுடன் சுகமுடனேவாழ்வன்*

*நாமென்ற நாடுநகர் கைவசமேயாகும்*

*நன்றாக அவனிதனில் நன்மையுடன் வாழ்வன்*

*வியாழ மகாதிசையில் சுக்கிர பகவானின் பொசிப்புக் காலம் 2 வருடம் 8 மாதங்களாகும். இக்கால கட்டத்தில் நிகழும் பலன்களாவன: மனையில் அருளே உருவான திருமகள் தானே விரும்பி வந்து உறைவாள். சுபசோபனங்கள் ஏற்படும். மனமகிழ்ச்சியுண்டாகும். சுகம் தரக்கூடிய கன்னிகையுடன் இன்பமாக வாழ்வான். நாடு நகரங்கள் தனதெனக் கைவசமாகும், இந்நிலவுலகில் நன்மை மிகுந்து புகழுடன் வாழ்வான் என போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் வியாழன் மகாதிசையில் சுக்கிர புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

238

*வாமென்ற வியாழதிசை சூரியபுத்தி*

*வகையுட மாதமது ஒன்பதாகும்*

*தாமென்ற நாளதுவும் பதினெட்டாகும்*

*தன்மையுடன் அதன்பலனை சாற்றக்கேளு*

*பரமென்ற பரதேசி யாகிப்போவான்*

*பாங்கான மடபதியில் பரமகுரு ஆவான்*

*ஞானமென்ற பதியில் நின்று யோகநிலையை*

*ஞாபகத்தில் சிவனடியை மறவான்காணே*

*வியாழமகாதிசையில் சூர்யபகவானின் பொசிப்புக் காலம் 9 மாதம் 18 நாள்களாகும். இக்காலகட்டத்தில் நிகழும் பலன்களைக் கூறுவேன், கேட்பாயாக! இல்லறத்தை நீத்து துறவறத்தைப் பூண்டு பரதேசியாகிப் போதல் நேரும். சிறப்புடைய மடத்தில் மடாதிபதியாய்ப் பரம குருவாய் ஆதலும் நேரும், உண்மையான அறிவு வழி (ஞானம்) நிலையில் நின்று யோகநிலை கொண்டு நினைவில் சிவனை நிறுத்தி அவனடி மறவாதவனாக இருப்பான். இதனையும் நீ காண்க என்று போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் வியாழன் மகாதிசையில் சூரிய புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

239

*காணவே வியாழதிசை சந்திர புத்தி*

*கனமுள்ள மாதமது பதினாறாகும்*

*கோணவே அதன் பலனை சொல்லக்கேளு*

*சுகமுடைய கலியாணம் சோபனங்களுண்டாம்*

*பேணவே சிவிகை முத்து வெண்குடையுமுண்டாம்*

*பெரிதான ராசாவால் பெருஞ்செல்வமுண்டாம்*

*பூணவே தாய்தந்தை மனைவியுடன் புத்திரன்*

*புகழுடன் வாழ்ந்திருப்பான் பூலோ கந்தன்னில்*

*வியாழ மகாதிசையில் சந்திர பகவானின் பொசிப்புக் காலம் 1 வருடம் 4 மாதங்களாகும். இக்காலகட்டத்தில் நிகழும் பலன்களான: நலம் தரத்தக்க வகையில் திருமணம் நிகழ்தலும் சுப சோபனங்களும் உண்டாகும். பல்லக்கு, முத்தாபரணம். வெண்குடை ஆகியன விரைந்து வந்து சேரும். பெருமையுடைய அரசர்களால் வெகுதனம் உண்டாகும். ஈன்ற தாய், தந்தை, மனைவி மக்களுடன் நிலைத்த புகழ் உடையவனாகி இவ்வுலகில் பெருமையுடன் வாழ்ந்திருப்பன் இச்சாதகன் எனப் போகர் அருளால்*

*புலிப்பாணி புகன்றேன்.*

*இப்பாடலில் வியாழன் மகாதிசையில் சந்திர புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

240

*தன்னிலே வியாழதிசை செவ்வாய்புத்தி*

*தன்மையில்லா மாதமது பதினொன்றாகும்*

*விண்ணிலே நாளதுவும் ஆறதாகும்*

*வீறான பலனதுவை விளம்பக்கேளு*

*புண்ணிலே அக்கினியால் வியாதிகாணும்*

*பூமியினால் விளைவுகுன்றும் மாடாடுசாகும்*

*விண்ணிலே போனாலும் சத்துருவுண்டு*

*வீணான விலங்கதுவும் விதிவசமேசாகும்*

*வியாழமகா திசையில் செவ்வாயின் பொசிப்புக்காலம் 11மாதம் 6 நாட்களாகும். இக்காலகட்டத்தில் நிகழும் பலன்களாவன: புண்களாலும், அக்னியாலும் நோய் வந்தடையும். பூமியில் விளைச்சல் குறைந்துபோகும். கன்றுகாலிகள் மரணமடையும் ஆகாயத்திலே பறந்து சென்றாலும் அங்கேயும் பகைவர் உளராவர். சிறைவாய்ப் படுதலும் அதனால் துன்புறுதலும் விதிவசமே என்று விதிவசமே என்று போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் வியாழன் மகாதிசையில் செவ்வாய் புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

241

*ஆகுமே வியாழ திசை ராகுபுத்தி*

*அருளில்லா மாதமது யிருபத்தெட்டு*

*போகுமே நாளதுவு மூவெட்டாகும்*

*பொல்லாத அதன்பலனைப் புகலக்கேளு*

*வாகுமே வியாதியது பீடிப்பாகும்*

*மனைவியரும் புத்திரரும் மாண்டுபோகும்*

*யேகுமே சத்துருவும் இடஞ்சலுண்டாம்*

*இதங்கேடு பண்ணிவைக்கும் யிம்மையுடன்கேளே*

*வியாழமகாதிசையில் இராகு பகவானின் பொசிப்புக் காலம் 2 வருடம் 4 மாதம் 24 நாள்களாகும். இக்கால கட்டத்தில் நிகழும் பலன்களாவன: தேக நலத்தைக் கெடுக்கும். வியாதிகள் வந்துசேரும். மனைவி, புத்திரர் ஆகியோர் மரணமடைதலும் நேரும். பகைவரால் வெகுபயம் உண்டாகும். அவரால் இடைஞ்சல்கள் ஏற்படும். காரியக்கேடு ஏற்படும் என்று போகர் அருளால் புலிப்பாணி புகன்றேன்.*

*இப்பாடலில் வியாழன் மகாதிசையில் இராகு புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

242

*கேளப்பா சனிதிசையில் மார்க்கங்கேளு*

*கொடியான வருஷமது பத்தொன்பதாகும்*

*கேளப்பா சனிபுத்தி வருஷம் மூன்று*

*கேடான நாளதுவும் மூன்றதாகும்*

*பாளப்பா பாவையரும் பாலன் தானும்*

*பாங்கான வருஷம் ஒன்றில் சாவதாகும்*

*ஆளப்பா அலைச்சலது மெத்தவுண்டாகும்*

*அளவில்லா தனச்சேத மாகுந்தானே*

*சனிமகாதிசை வருடம் 19-காக்கை வாகனனான அச்சனிபகவானின் பொசிப்புக்காலம் இதில் 3 வருடம் 3 நாள்களாகும். இக்காலகட்டத்தில் துன்பம் தரத்தக்க பலன்களே விளையும். அவையாவன: மனம் விரும்பிய பாவையரும் பாலகரும் மடிவார்கள். வெகுவான அலைச்சல் திரிச்சல் உண்டாகும். வெகுதன விரயம் ஏற்படும் என்று போகர் பேரருளால் புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் சனி மகாதிசையில் சனி புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

243

*தானென்ற காரிதிசை புதன்புத்திகேளு*

*தன்மையுள்ள மாதமது நாலெட்டாகும்*

*நானென்ற நாளதுவும் ஒன்பதாகும்*

*நன்றாக அதில் பலனை நவிலக்கேளு*

*மானென்ற மன்னரால் மகிழ்ச்சியுண்டாம்*

*மாதர்முதல் பந்துக்களும் மகிழ்ச்சியுண்டாம்*

*வானென்ற ஞானமுடன் யோகமார்க்கம்*

*வளர்கின்ற கற்பமுதல் தேகசத்தியாமே*

*காரியென்னும் சனி திசையில் புதபகவானின் பொசிப்புக்காலம் 2 வருடம் 8 மாதங்களும் 9 நாள்களுமாகும். அதன் பலனை விரிவாகச் சொல்வேன். கேட்பாயாக! அரசர் முதலோராலும் மற்றும் தாய், இன ஜன பந்துக்களாலும் மகிழ்வே உண்டாகும். ஞான மார்க்கமும், யோகமார்க்கமும் தேக சித்தியும் (நல்லுடல் வாய்ப்பும்) கருவளரும் காலம் தொட்டே உளவாகும் என்று போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் சனி மகாதிசையில் புதன் புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

244

*ஆமென்ற காரிதிசை கேதுபுத்தி*

*அருளில்லா மாதமது பதின்மூன்றாகும்*

*போமென்ற நாளதுவும் ஒன்பதாகும்*

*புகழில்லா அதன் பலனைப் புகலக்கேளு*

*தாமென்ற தலைவலியும் கண்ரோகமாகும்*

*தப்பாது பாண்டுஉடன் தனம்பொருளுஞ்சேதம்*

*நாமென்ற சத்துருவால் முத்தண்ட முண்டாம்*

*நன்மையுள்ள மாதாரால் கெர்ப்பமது பாழாம்*

*சனி திசையில் கேது பகவானின் பொசிப்புக்காலம் அருளற்றதே. இது 1 வருடம் 1 மாதம் 9 நாள்கள் நடைபெறும். இக்காலகட்டத்தில் ஜாதகனுக்கு நிகழும் பலன்களாவன; சிரரோகம் ஏற்படும். கண்ணோய் வரும். மேலும் வயிறு பெருத்துக் காணும். பாண்டு போன்ற நோய் உபாதை உண்டாகும். வெகுதனமும் பெரும்பொருளும் சேதமாகும். சத்துருக்களால் மூவகையில் விரயம் உண்டாகும். நன்மையே தரும் மனைவிக்கு கெர்ப்ப நஷ்டம் ஏற்படும் என்று போகரது பேரருளால் புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் சனி மகாதிசையில் கேது புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

245

*பாளில்லா காரிதிசை சுக்கிரபுத்தி*

*பாங்கான மாதமது முப்பத்தியெட்டு*

*நாளில்லா மங்கையரும் மனமகிழ்ச்சியுமாம்*

*நன்றான பெருஞ்செல்வம் நாலதிலேயுண்டாம்*

*ஆளில்லா அரசனுடன் அனுதினமும் வாழ்வன்*

*அணைகட்டு விரக்களுருடன் அலங்காரமுண்டாம்*

*கோளில்லா சத்துருநோய் யில்லையதுபாரு*

*கோகனமாது செல்வம் கொறிப்பாள்தானே*

*மேலும் இக்காரியென்னும் சனிபகவானின் திசையில் சுக்கிர பகவானின் பொசிப்புக்காலம் 3 வருடம் 3 மாதங்களாகும். இக்காலகட்டத்தில் பெண்களால் மனமகிழ்வு உண்டாகும். இப்புத்தி வந்த நாள் தொட்டு வெகுவான தனப்ராப்ட்தி யோகம் உண்டாகும். எப்பொழுதும் அரசரோடு இணங்கி தினம்தோறும் மகிழ்வுடன் இச்சாதகன் வாழ்வதோடு வரும் பொருள் உரைக்கும் மந்திரிமார்களோடு அவருக்குச் சமமான அணியலங்காரங்களும் ஏற்படும். கோள் சொல்லிக் கொள்ளி வைக்கும் பலவாகிய பகைவர்களும் இல்லாதொழிவர். பொன் மகள் என்னும் இலக்குமி தேவி இச்செல்வ நலங்களைத் தருவாள் என போகர்அருளால் புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் சனி மகாதிசையில் சுக்கிர புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

246

*தானென்ற காரிதிசை கதிரோன்புத்தி*

*தயவில்லா மாதமது பதினொன்றாகும்*

*நானென்ற நாளதுவும் பனிரெண்டாகும்*

*நன்கையில்லா அதன் பலனை நவிலக்கேளு*

*ஊனென்ற சுர பீடை ரெத்தமேறும்*

*உதிரத்தால் சூலைநோய் உடனேகாணும்*

*மானென்ற மனைவியரும் மக்கள் தானும்*

*மயங்குகின்ற நோவதனால் வருத்தங்காணே.*

*இனி இச்சனி திசையில் கதிரவனாகிய சூரியனது பொசிப்புக்காலம் 11 மாதம் 12 நாள்களாகும். இந்தக் கால கட்டத்தில் விளையும் பலன்களாவன: தேகத்தில் சுர உபாதை காணுதலும் ரத்த சம்பந்தமான நோயும் வயிறுபாதையால் வாடச் செய்யும். சூலை நோயும் உடன் காணும். அதுமட்டுமல்லாமல் மனம் விரும்பும் மனைவிக்கும் மக்களுக்கும் நோயுபாதை ஏற்பட்டு வெகு வருத்தத்தை நல்கும் என்பதை உணர்க என்று போகர் அருளால் புலிப்பாணி பாடினேன்.*

*இப்பாடலில் சனி மகாதிசையில் சூரிய புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

247

*காணவே காரிதிசை சந்திரபுத்தி*

*கனமில்லா மாதமது பத்தொன்பதாகும்*

*தோணவே அதன்பலனை சொல்லக்கேளு*

*தோகையருஞ் சண்டையதால் துன்பம் வருங்கேடு*

*பூணவே பூமிமுதல் பூணாபரணங்கள்*

*புகன்றதொரு தனமுதல் சேதமாகும்*

*ஆணவே அலைச்சலது உண்டாகும்பாரு*

*அளவில்லா யேதுவுங்கூடிக் கொல்லும்*

*காரி எனும் சனி திசையில் சந்திரபகவானின் பொசிப்புக்காலம் 1 வருடம் 7 மாதங்களாகும். இக்காலகட்டத்தில் நிகழும் பலன்களைக் கூறுகிறேன் கேட்பாயாக! பெண்களுடன் மனம் வேறுபட்டுச் சண்டையிடுவதால் துன்பம் நேரும். ஆண்டிருந்த பூமியும் அணிந்திருந்த ஆபரணங்களும் வெகுதனமும் விரயமாகும். மேலும் வெகுபேய்களும் வந்து கூடி மரணத்தைத் தரும் என போகர் அருளால் புலிப்பாணி புகன்றேன்.*

*இப்பாடலில் சனி மகாதிசையில் சந்திர புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

248

*கூடியே காரிதிசை செவ்வாய்புத்தி*

*குணமில்லா மாதமது பதிமூன்றதாகும்*

*தேடியே நாள துவும் ஒன்பதாகும்*

*தேகமுள்ள அதன் பலனைச் சொல்லக்கேளு*

*பாடியே பாவையரும் வகைநாசமாகும்*

*பண்புடனே சத்துருவும் தனச்சேதம் பண்ணும்*

*வாடியே அலைந்திடுவாய் தேசமெங்கும்*

*வாகான தேவதையால் பிசகுண்டாமே*

*சனி மகாதிசையில் செவ்வாய் தன் பொசிப்புக் காலம் 1 வருடம் 2 மாதம் 9 நாள்களாகும். இக்காலகட்டத்தில் விளையும் பலன்களாவன: மனம் விரும்பும் பாவையர் நாசமாவதுடன் பகைவரும் பலவாகிப் பெருகுவார்கள். இதனால் பெருந்தனம் விரயமடையும். தேசமெங்கும் வாடித்திரிந்திடும் நிலையுண்டாகும். நன்மை செய்யும் தேவதைகள் மாறுபட்டு நிற்பதால் பிழைகள் பலவாகப் பெருகிக் காணும் எனப் போகர் அருளால் புலிப்பாணி புகன்றேன்.*

*இப்பாடலில் சனி மகாதிசையில் செவ்வாய் புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

249

*உண்டாகும் காரிதிசை ராகுபுத்தி*

*உறுதியில்லா மாதமது முப்பத்திநாலு*

*கொண்டாகும் நாளதுவும் ஆறதாகும்*

*கொடுமையுள்ள அதன் பலனைக்குறித்துச் சொல்வோம்*

*விண்டான வியாதியுடன் வாந்தி காணும்*

*விதமான சரீரமதில் மேகரணமுண்டாம்*

*துண்டாகும் சரீரமது யிருபிளவாய்ப் போகும்*

*துன்பமுள்ள நாளதனில் சாவாம் மாசே.*

*இச்சனி பகவானின் திசையில் ராகுபகவானின் பொசிப்புக் காலம் 2 வருடம் 10 மாதம் 6 நாள்களாகும். கொடுமை செய்யும் இக்காலகட்டத்தின் பலன்களைக் குறித்துச் சொல்வேன் கேட்பாயாக! சொல்ல முடியாத நோய் வந்து பற்றும். வாந்தி காணும். தேகத்தில் ரணம் ஏற்படும். அங்கக்குறைவு ஏற்படும். அதனால் மரணமும் நேரும் எனப் போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் சனி மகாதிசையில் இராகு புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

250

*சாவில்லாக் காரிதிசை வியாழபுத்தி*

*சமான முள்ள மாதமது முப்பதாகும்*

*நாளில்லா நாளதுவும் பன்னிரெண்டாகும்*

*நன்மையுள்ள அதன்பலனை நவிலுவோம்கேள்*

*மாயில்லா மங்கையரும் மணமுடனே வருவாள்*

*மார்க்கமுள்ள பழம்பொருளும் வகையுடனே வரும்*

*காவில்லா வாகனமது கண்டெடுப்பான்பாரு*

*கனதையுள்ள சத்துருவும் காலடியில் வீழ்வான்.*

*இனி இச்சனிபகவானின் திசையில் வியாழ பகவானின் பொசிப்புக் காலம் 2 வருடம் 6 மாதம் 12 நாள்களாகும். நன்மை தரத்தக்க இக்கால கட்டத்தில் விளையும் பலன்களாவன: திருமணம் நடந்தேறும். மனத்திற்கேற்ப மனைவி அமைவாள். முதாதையர் பெரும் தனம் வகையாக வந்து சேரும். வாகனயோகம் அமையும். புதையல் தனம் கிடைக்கும், ஈனகுணம் மிக்க சத்துருக்களும் இச்சாதகனின் காலடியில் வீழ்ந்து அடிமைப் படுவர் எனப் போகர் அருளால் புலிப்பாணி புகன்றேன்.*

*இப்பாடலில் சனி மகாதிசையில் வியாழன் புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

251

*அடியில்நின்ற புதன் திசைதான் வருஷம்பதினேழு*

*அதனுடைய புத்தியதுமாதம் நாலேழ்*

*முடியில்நின்ற நாளதுவும் மூவொன்பதாகும்*

*மூர்க்கமுள்ள அதன் பலனைக் கூறக்கேளே!*

*படியில்நின்ற பழம்பொருளும் பாவையருஞ்சேருவன்*

*பாங்கான சோபனமும் பாங்குடனேகாணும்*

குடியில்நின்ற தெய்வங் குணமுடனேசேரும்

குடும்பத்தில் புத்திரனும் குணமுடனே வாழ்வான்

புதமகாதிசை மொத்தம் 17 ஆண்டுகளாகும். இதில் புதனது சுயபுத்தி 2 வருடம் 4 மாதம் 27 நாள்களாகும். இக்காலகட்டத்தில் நிகழும் பலன்களாவன: மூதாதையரின் கூட்டும் அதனால் மகிழ்ச்சியும் இன்பமும் நேரும். குலதெய்வம் மனமொன்றி இருந்து குடும்ப நலத்தைக் காக்கும். அதோடு குடும்பப் பொறுப்புணர்ந்து புத்திரனும் நற்குணம் நற்புகழ் பெற்று வாழ்வான் என்று போகர் அருளால் புலிப்பாணி பாடினேன்.

இப்பாடலில் புதன் மகாதிசையில் புதன் புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.

252

வாழலாம் புதன் திசையில் கேதுபுத்தி

வகையில்லா மாதமது பதினொன்றாகும்

குள்ளலாம் நாளதுவும் யிருபத்தியேழு

கொடுமையுள்ள அதன்பலனைக் கூறக்கேளு

மாளலாம் பகைவரும் உத்தாநாசம்

மணமில்லா வியாதியதும் மடிந்து கொல்லும்

தேடலாம் திரவியங்கள் சேதமாகும்

தினந்தோறும் சத்துருவும் நீதான்பாரே.

புதமகாதிசையில் கேது பகவானின் ஆதிக்க காலம் 11 மாதம் 27 நாள்களாகும் . இக்கால கட்டத்தில் நிகவும் பலன்களாவன: மாண்டு போகலாம் என்ற எண்ணத்தை அளிக்கும். வலியபகை வந்து சேர்தலோடு செய்தொழில் நாசம் அடையும். விரும்பத்தகாத வியாதிகளும் வந்தடையும்., அதனால் மரணமும் நேரும். நிறைந்த செல்வங்கள் தேடிப் பெற்றாலும் அவை அழிவுறும். ஒவ்வொரு நாளூம் புதுப்புதுப் பகைவர் தோன்றுவர். இதனை நீ அறிவாயாக என்று போகர் அருளால் புலிப்பாணி பாடினேன்.

இப்பாடலில் புதன் மகாதிசையில் கேது புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.

253

பாரப்பா புதன் திசையில் சுக்கிரபுத்தி

பாங்குள்ள மாதமது முப்பத்தினாலு

சேரப்பா அதன் பலனைச் செப்பக்கேளு

தேவதையால் தர்க்கமது தீதாம்பாரு

ஆரப்பா மனைவியுடன் புத்திரனும்

அனுதினமும் வாழ்ந்திருப்பன் அலங்காரமுடன்

*காரப்பா கனகமது கனசம்பத்துண்டாம்*

*கனமான ராசாவால் கடாட்ச முண்டாங்கேளே*

*புதமகா திசையில் சுக்கிர பகவான் புத்தி 2 வருடம் 10 மாதங்களாகும். தனது ஆதிக்க காலத்தில் சுக்கிரபகவான் நிகழ்த்தும் பலன்களைக் கூறுகிறேன். கேட்பாயாக! தேவதை கோபத்தால் குடும்பத்தில் தர்க்கம் ஏற்படும். இது தீமையானதே எனினும் மனைவி மக்களுடன் அன்யோன்யமான வசியமுடன் இச்சாதகன் அலங்காரமுடன் வாழ்ந்திருப்பான். பொன்னாபரணச் சேர்க்கை உண்டாகும். வாகனயோகம் ஏற்படும். பெருமைமிக்க அரசரின் கருணையும் உண்டாகும் என்று போகர் அருளால் புலிப்பாணி கூறும் இக்கருத்தைக் கவனமாகக் கேட்பாயாக!*

*இப்பாடலில் புதன் மகாதிசையில் சுக்கிர புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

254

*கேளப்பா புதன் திசையில் சூரியபுத்தி*

*கெணிதமுள்ள நாளறும் மாதம்பத்து*

*ஆளப்பா அதன் பலனை அரையக்கேளு*

*ஆதிகுரு தலஞ்சிவ பதங்களுள்ளாம்*

*காணப்பா காவியது வேஷ்டியுண்டு*

*காசினியில் பரதேசி ஆகிப்போவான்*

*வாளப்பா மடபதியிலுருந்து கொண்டு*

*மனையாட்டி தன்னுடனே வாழ்ந்திருப்பான் தானே.*

*புதமகா திசையில் சூரியனின் ஆதிக்க காலம் 10 மாதம் 6 நாள்கள். இக்காலத்தில் நிகழ்த்தும் பலன்களைக் கூறுகிறேன். கேட்பாயாக! இச்சாதகன் இக்கால கட்டத்தில் சிவார்ச்சனை செய்வதோடு ஹோம சாந்தி முதலியன நிகழ்த்தி நிறையருள் பெறுவான். இவன் பூமியில் பரதேசியாக ஆகித்திரிவான். பின்னர் மடாதிபதியாகி இல்லறத்தினைத தொடர்வான் எனப் போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் புதன் மகாதிசையில் சூரிய புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

255

*தானென்ற புதன் திசையில் சந்திரபுத்தி*

*தாழ்வான் மாதமது பதினேழாகும்*

*தேனென்ற அதன் பலனைச் சொல்லக்கேளு*

*தெரிவையர்கள் கலகமுடன் யிளைப்புசயரோகம்*

*கோனென்ற ராசாவால் குடிகேடு செய்யும்*

*கோதையர்கள் தன்னாலே குடிபாழாகும்*

*வானென்ற வான்பொருளும் வகையில்லாச்சேதம்*

*வையகத்தில் நீதியில்லா மாதரைச்சேர்வாரே.*

*புதமகா திசையில் சந்திர புத்திக்காலம் 1 வருடம் 5 மாதங்களும். இவன் தன் ஆதிக்க காலத்தில் நிகழ்த்தும் பலன்களைக் கூறுகிறேன். கவனமாகக் கேட்பாயாக! பெண்களால் கலகமும் ,இளைப்புநோய், சயரோகம் முதலிய நோய் உபாதைகளும் ஏற்படும். அரசனின் தொல்லையால் குடும்பத்திற்கே கேடு உண்டாகும். அதேபோல் பெண்களாலும் குடும்பமும் பாழாகும். அளவில்லாத செல்வமும் எதிர்பாரா வண்ணம் அழியும். நீதியை நினையாத வேசையரைச் சேர்ந்தின்புறம் சந்தர்ப்பம் ஏற்படும் என்று போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் புதன் மகாதிசையில் சந்திர புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

256

*சேரலாம் புதன் திசையில் செவ்வாய்புத்தி*

*செயமில்லா மாதம் பதினொன்றாகும்*

*தேரலாம் நாளதுவு மிருபத்தேழில்*

*தெரிவையர்கள் தன்னாலே கிரந்தியதுநோவாம்*

*மாரலாம் சத்துருவால் மயக்கமுடன்பேயும்*

*மனதான சகோதரமும் அதனால் சேதம்*

*பாரலாம் பலநிதியுங் கெடுதிகாணும்*

*பணமுடைய பூமிமுதல் பலனுந்தீதாம்*

*இந்த புதமகா திசையில் செவ்வாயின் ஆதிக்க காலம் வெற்றியினைத் தராத 11 மாதம் 27 நாள்களாகும். இக்கால கட்டத்தில் இச்சாதகன் பெண்களால் கிரந்தி முதலிய ரோகங்களைப் பெறுவான். சத்துரு உபாதையுண்டாகும், அதனால் மனத்தில் பீடியும் மயக்கமும் உண்டாகும். நோயுபாதையால் மனமுடைய சகோதரமும் நஷ்டமடையும். பலவகைச் செல்வமும் பங்கப்படும். வெகுதனம் நல்கும் பூமியும் விளைச்சல் குன்றி துர்ப்பலனே தரும் என்று போகர் அருளால் புலிப்பாணி புகன்றேன்.*

*இப்பாடலில் புதன் மகாதிசையில் செவ்வாய் புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

257

*பலனில்லா புதன் திசையில் ராகுபுத்தி*

*பாழான மாதமது முப்பதாகும்*

*நலமில்லா நாளதுவும் பதினெட்டாகும்*

*நன்றாக அதன் பலனை நவிலக்கேளு*

*பலமில்லாப் பிணிகளுடன் மயக்கம்சேதம்*

*புரட்டான சத்துருவால் பேதையர்கள் பாசம்*

*தலமில்லா வியாதியினால் நற்பொளும் சேதம்*

*நன்றான வீடுமுதல் பூமிநிதிபோமே*

*புதமகா திசையில் இராகு புத்தி தீங்கு தருகின்ற 2 வருடம் 6 மாதம் 18 நாள்களாகும். இவ்விராகு பகவான் இவரது ஆதிக்ககாலத்தில் நிகழ்த்தும் பலன்களாவன: தேக பலத்தைச சிதைக்கும். பலவித நோய்களும் மயக்கமும் ஏற்பட்டு அதனால் பெரும் பொருட் சேதம் உண்டாகும். முரண்பட்டுப் பேசக் கூடிய பகைவர்களால் அறிவற்றவர் நேசம் ஏற்படும். இடையீடில்லாத வியாதிகளால் பெரும் பொருள் சேதமாவதுடன் நல்ல கட்டுக்கோப்போடு வீடு முதலாக விளைவயலும் பெருநிதியும் அழியும் என்று போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் புதன் மகாதிசையில் இராகு புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

258

*போமென்ற புதன் திசையில் வியாழபுத்தி*

*புகழுள்ள மாதமது யிருபத்தேழு*

*நாமென்ற நாளதுவும் ஆறதாகும்*

*நன்றாக வதன் பலனை நவிலக்கேளு*

*தாமென்ற சத்துருநோய் பயமும்போகும்*

*சகலசம் பத்துண்டாகும் தரணியில்வாழ்வன்*

*யோகமென்ற யோகமது கைக்குள்சிக்கும்*

*யேகமாம் புத்திரனும் யிதிலுண்டாகும்*

*புதமா திசையில் வியாழ பகவான் புத்திக் காலம் பெரும் புகழ் தருவதான 2 வருடம் 3 மாதம் 6 நாள்களாகும். இவர் தன் ஆதிக்க காலத்தில் அளிக்கும் பலன்களைக் கூறுகிறேன். கேட்பாயாக! சத்துரு உபாதையும், நோயும், மனபயமும் நீங்கி சகலவிதமான செல்வ நலங்களும் பெருகி இப்பூமியில் பெரும் புகழுடன் வாழ்வான். சகலவிதமான யோகங்களும் சித்திக்கும். அனேக புத்திரர்களும் இச்சாதகனுக்கு உண்டாம் என்று போகர் பேரருளால் புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் புதன் மகாதிசையில் வியாழன் புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

259

*பாரப்பா புதன் திசையில் சனியின்புத்தி*

*பாழான மாதமது முப்பத்திரண்டு*

*சேரப்பா நாளதுவும் ஒன்பதாகும்*

*செலுத்துகிற பலணாபுஊவே செப்பக்கேளு*

*வீரப்பா சத்துருவால் சூனியமுண்டாம்*

*விதியில்லா நோய்போலே விதங்கேடுபண்ணும்*

*மாரப்பா மனைவியரும் புத்திரரும் தானும்*

*மரணமாம் உன்னுடலு மரணமாமே*

*புதமகா திசையில் சனிபகவான் புத்திக்காலம் 2 வருடம் 8 மாதம் 9 நாள்களாகும். இவர் ஆதிக்க காலத்தில் நிகழ்த்தும் பலன்களாவன: பலமுள்ள சத்துருக்கள் இச்சென்மனுக்குச் சூன்யம் வைப்பர். உயிர்கொல்லி நோயைப் போல இருந்த நிலை சிதைந்து கேடுற நேரிடும். மனைவியும் புத்திரரும் மரணமடைவதுடன் சாதகனும் மடிய நேரிடும். மனைவியும் புத்திரரும் மரணமடைவதுடன் சாதகனும் மடிய நேரிடும். மனைவியும் புத்திரரும் மரணமடைவதுடன் சாதகனும் மடிய நேரிடும் என்று போகரது அருட்கருணையால், புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் புதன் மகாதிசையில் சனி புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

260

*ஆமென்ற கேதுதிசை வருஷம்யேழு*

*அதனுடைய புத்திநாள் நூத்திநாற்பத்தியேழு*

*போமென்ற அதன் பலனைப் புகலக்கேளு*

*புகழான அரசர்படை ஆயுதத்தால் பீடை*

*தாமென்ற சத்துருவால் வியாதிகாணும்*

*தனச்சேதம் உடல் சேதம் தானே உண்டாம்*

*நாமென்ற நகரத்தில் சூனியங்களுண்டாகும்*

*நாடெல்லாம் தீதாகும் நன்மையில்லாப்பகையே*

*கேது பகவானின் திசை வருடம் 7 ஆகும். இதில் இவரது சுய புத்தியான ஆதிக்க காலம் 4 மாதம் 27 நாள்களாகும். இக்காலகட்டத்தில் இவர் நிகழ்த்தும் பலன்களாவன இவை தான் என்று சொல்வோம். நன்கு கவனித்து கேட்பாயாக! புகழ் மிக்க அரசரது படையாலும் ஆயுதங்களாலும் பீடைகள் ஏற்படும். வலிய பகைவரால் பலவகைத் தொந்தரவுகளும் அதனால் வியாதியும் நேரும். பெரும் பொருட்சேதமும் அங்கத்தில் குறையுண்டாதலும் தானாகவே வந்துசேரும். தான்வசிக்கும் நகரத்தில் பலவகைச் சூனியங்களும் உருவாகும், நாட்டுமக்கள் எல்லாரும் பகையாகித் துன்பம் தருவதால் நன்மை நேராது என்று போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் கேது மகாதிசையில் கேது புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

261

*பகையான கேதுதிசை சுக்கிரபுத்தி*

*பாங்கில்லா மாதமது பதினாலாகும்*

*தகையான அதன் பலனைச் சாற்றக்கேளு*

*தாழ்வில்லா சத்துருவால் விலங்குண்டாகும்*

*நகையான பூஷண்ங்கள் நசிவதாகும்*

*நாரழையாள் தன்னுடனே அபமிருத்துகாணும்*

*வகையான ராசாவால் மனமகிழ்ச்சியாகி*

*மனைவிமக்கள் தன்னுடனே வாழ்வன்காணே*

*கேது மகாதிசையில் சுக்கிரபகவானின் ஆதிக்க காலம் 1 வருடம் 2 மாதங்களாகும். இக்கால கட்டத்தில் இவரால் நிகழ்த்தப்பெறும் பலன்களைக் கூறுகிறேன். கேட்பாயாக! குறைதல் இல்லாத பகைவரால் விலங்கு பூணுதல் நேரும். பலவகையான பொன்னாபரணங்களும் விரயங்களாகும். மனைவிக்கும் இச்சாதகனுக்கும் அபமிருந்து தோடம் காணும். எனினும் தன்மையுள்ள அரச சகாயத்தால் மனத்தில் மகிழ்ச்சியுண்டாகி மனைவி மக்களுடன் சுகித்து வாழ்வான் என போகர் அருளால் புலிப்பாணி பாடினேன்.*

*இப்பாடலில் கேது மகாதிசையில் சுக்கிர புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

262

*பாரப்பா கேது திசை சூரியபுத்தி*

*பாங்கான நாளதுவும் நூத்திஇருபத்தி ஆறு*

*பாரப்பா அதன் பலனைச் சொல்லக்கேளு*

*ஆகாதசத்துருவால் அக்கினியும்பேயும்*

*சேரப்பா சேர்ந்துமே கூடிக்கொல்லும்*

*சேர்ந்துநின்ற தந்தைகுரு மரணமாகும்*

*வீரப்பா வீண்சிலவு மிகவேயாகும்*

*வீடு விட்டு காஷாயம் பூணுவானே*

*கேது மகாதிசையில் சூரிய பகவானின் ஆதிக்க காலம் 4 மாதம் 6 நாள்களாகும். இக்கால கட்டத்தில் நிகழும் பலன்களைக் கூறுகிறேன். கேட்பாயாக! மனம் ஒவ்வாத பகைவரால் துன்பம் நேரும். அக்கினி பயமும் பேய், பிசாசுகளினால் மிகுந்த பயமும் சேர்ந்து இச்சாதகனைக் கொல்லும். இவர்க்கு உறுதுணையாக நின்ற தந்தைக்கும், குருநாதர்க்கும் மரணம் ஏற்படும். வீணான தண்டச் செலவுகளால் இச்சாதகன் துறவு பூணுவான் எனப் போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் கேது மகாதிசையில் சூரிய புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

263

*பூணுவான் கேதுதிசை சந்திரபுத்தி*

*புகழான மாதமது நாலுமூணும்*

*ஆணுவான் அதன் பலனை அரையக்கேளு*

*ஆயிழையாள் விலகிநிற்பள் அதமமாகும்*

*தோணுவான் தோகையரும் புத்திரரும் பாழாம்*

*தொகுதியுடன் பொருளதுவுஞ் சேதமாகும்*

*நாணுவாள் நாரிகையும் சலத்தில் வீழ்ந்து*

*நன்றாகமடிந்திடுவான் நலமில்லைதானே*

*இக்கேது மகாதிசையில் சந்திர பகவானின் ஆதிக்க காலம் 7 மாதங்களாகும். இக்கால கட்டத்தில் இவர் நிகழ்த்தும் பலன்களாவன இவைதான் எனக் கூறுவோம். கவனித்துக் கேட்பாயாக! மனைவியானவள் , இச்சாதகனுடன் மனம் வேறுபட்டு விலகி நிற்பாள். அதர்மம் நேரும். மனைவி மக்கள் பாழடைவர். மிகப் பலவாகிப் பல்கி இருந்து பெரும் பொருள்கள் சேதமடைதலும் நேரும். தனது மனைவி தண்ணீரில் வீழ்ந்து தற்கொலை செய்து கொள்ளும் நலமில்லாத துர்ப்பலன் நிகழும். இது கண்டு இச்சாதகன் நாணுவான் என்று போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் கேது மகாதிசையில் சந்திர புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

264

*தானென்ற கேதுதிசை செவ்வாய்புத்தி*

*தாழ்வான நாளதுவும் நூத்தியிருபத்தியேழு*

*வானென்ற அதன்பலனை வழுத்தக்கேளு*

*வண்மையுடன் சத்துரு தானே உண்டாம்*

*கோனென்ற திரவியமும் சேதமாகும்*

*கோதையரால் குலமதுவு நாசமாகும்*

*தேனென்ற திரவியமும் சேதமாகும்*

*தெகுட்டாத துணை தம்பி தீதுண்டாமே*

*இனி இக்கேது பகவானின் திசையில் செவ்வாயின் ஆதிக்க காலம் 4 மாதம் 27 நாள்களாகும். இக்காலகட்டத்தில் இவரால் நிகழ்த்தப் பெறும் பலன்களைக் கூறுவோம். கவனமாகக் கேட்பாயாக! வலிமையுள்ள இனஜன பந்துக்களும் தாமறியாதவாறே சத்துருக்களாக மாறிப் போவர். மனையில் சிலர் கோள் சொல்லுதலால் குடும்பம் பாழாகும். பெண்களால் குல நாசம் ஏற்படும். நிதானித்துத் திரட்டிய வெகுதனமும் விரயமாகிப்போகும். சகோதர விரோதம் உண்டாகி அதனால் தீமை மிக்க பலனே நேரும் எனப் போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் கேது மகாதிசையில் செவ்வாய் புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

265

*உண்டான கேதுதிசை ராகுபுத்தி*

*உண்மையில்லா நாளதுவும் வருடம் ஒன்று*

*நன்றாகும் நாளதுவும் மூவாறாகும்*

*நலமில்லா அதன்பலனை நவிலக்கேளு*

*விண்டாகுஞ் சத்துருவால் சோரபயமாகும்*

*வினையான மனைவிதன்னால் வீண்கலகமாகும்*

*ஒன்றாகும் உன் உடம்பில் பிணியுண்டாகும்*

*உறுதியில்லா உந்தெய்வம் ஓடுந்தானே*

*கேது மகாதிசையில் இராகுபகவானின் ஆதிக்க காலம் 1 வருடம் 18 நாள்களாகும். நன்மை தராத அக்கால கட்டத்தில் இவர் நிகழ்த்தும் பலன்களைக் கூறுவோம். கவனமாய்க் கேட்பாயாக! பகைவராலும், திருடர்களாலும் மிகு பயம் ஏற்படும். சந்தேகம் கொண்ட மனைவியினால் குடும்பத்தில் வீண் கலகம் ஏற்படும். தேகத்தில் வியாதி காணும், இச்சாதகனின் குலதெய்வமானது இவன் மனையில் தங்காது குடியோடிப் போகும் என்று போகமா முனிவர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் கேது மகாதிசையில் இராகு புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

266

*காணவே கேதுதிசை வியாழபுத்தி*

*கனமான மாதமது பதினொன்றாகும்*

*தோணவே நாளதுவும் ஆறதாகும்*

*துகையான தனங்களும் புத்திரனாலுண்டாம்*

*பூணவே மூவுடையாள் நிர்த்தனம் செய்வாள்*

*பூமிதனில் வெகுலாபம் பொருந்திக்காணும்*

*நாணவே ராசாங்க யோகம் பெற்று*

*நன்றாக சுகம் விளையும் யோகந்தானே*

*கேது மகாதிசையில் வியாழ பகவானின் ஆதிக்க காலம் 11 மாதம் 6 நாட்கள் ஆகும், இக்கால கட்டத்தில் புத்திரனால் வெகுதனம் உண்டாகும். மனம் விரும்பிய மனைவி மகிழ்ச்சிக் கூத்தாடும் வண்ணம் மனையில் மகிழ்ச்சி பொங்கும். பூமிதனில் விளைச்சல் மிகுந்து வெகு லாபம் தன்னிறைவாக வந்தடையும். வெகுவான அரசாங்க நன்மைகளும் உதவிகளும் சேர்ந்து மனச்சோர்வகற்றும். பலவகையிலும் சகாயங்கள் நேர்ந்து யோகத்தைச் செய்யும் என்று போகர் அருளால் புலிப்பாணி புகன்றேன்.*

*இப்பாடலில் கேது மகாதிசையில் வியாழன் புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

267

*தானென்ற கேதுதிசை சனியின்புத்தி*

*தாழ்வான மாதமது பதிமூன்றாகும்*

*நானென்ற நாளதுவும் ஒன்பதாகும்*

*நலமில்லா அதன்பலனை நவிலக்கேளு*

*வானென்ற வான்பொருளும் கேடுவாகும்*

*வகையான மனைவியுடன் மக்களதும்போம்*

*மானென்ற பதிமூன்றில் மரணமாவான்*

*மனக்கவலை ரொம்ப உண்டு மாள்வான்பாரே*

*கேது மகாதிசையில் சனிபகவானின் ஆதிக்க காலம் 1 வருடம் 1 மாதம் 9 நாள்களாகும். இக்கால கட்டத்தில் நிகழும் பலன்களைக் தெளிவாகக் கூறுவோம். கவனமாகக் கேட்பாயாக! வானளாவிய செல்வமும், பெரும் பொருளும் சேதம் அடையும். நன்மையையே விரும்பிச் செய்யும் மனைவி மக்கள் கை விட்டுப் போதலும் நேரும். மூன்று மாத கால அளவில் மரணமும் நேரும். மிகுதியான மனக் கவலையால் பீடித்த இச்சாதகனுக்கு மரணம் நேர்தலும் உண்டு என்று போகமா முனிவரின் பேரருளால் புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் கேது மகாதிசையில் சனி புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

268

*பாரப்பா கேதுதிசை புதனார்புத்தி*

*பாங்குள்ள மாதமது பதினொன்றாகும்*

*சேரப்பா நாளதுவும் இருபத்தியேழு*

*சேதமில்லா அதன் பலனை செப்பக்கேளு*

*வீரப்பா கொண்டுநின்ற மயக்கம் போய்நீ*

*மேதினியில் நீயுமொரு மனுஷனாவாய்*

*சீரப்பா லட்சுமியும் சேர்ந்துகொள்வாள்*

*தீங்கில்லா மனக்கவலையில்லை காணே*

*கேது மகாதிசையில் புதன் பகவானின் ஆதிக்க காலம் 11 மாதம் 27 நாள்களாகும். நன்மை தரும் இக்காலகட்டத்தில் நிகழும் பலன்களைக் கூறுகிறேன். கவனமாகக் கேட்பாய்! இதுவரை பற்பல இன்பங்களில் வயப்பட்டு மயங்கிய நிலை மாறி இந்நிலவுலகில் இச்சாதகனை எல்லாரும் ஒரு சிறந்த மனிதன் என்று கூறத்தக்க நிலை உண்டாகும். திருமகள் இவன் மனையை விரும்பிச் சேர்வாள். எனவே தீங்கொன்றும் நேராது எவ்வித மனக்கவலையும் இல்லாதொழியும் எனப் போகமா முனிவர் பேரருளால் புலிப்பாணி பாடினேன்.*

*இப்பாடலில் கேது மகாதிசையில் புதன் புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

269

*காணவே சுக்கிரதிசை வருஷம் நாலைந்து*

*கனமான சுக்கிரனில் சுக்கிரன் புத்தி*

*பூணவே மாதமது நாற்பதாகும்*

*பூலோக மன்னரைப்போல புவியிலரசாள்வான்*

*பேணவே சவுக்கியங்க ளுண்டாகும்பாரு*

*பெரிதான லெட்சுமியும் பொற்கொடிபோல் வருவான்*

*தோணவே சோபனமும் சுபயோகமுண்டாம்*

*தோகையர்கள் வந்தவுடன் தொகுதியுடன் வாழ்வான்.*

*சுக்கிர மகாதிசை வருடம் மொத்தம் 20 ஆகும். இதில் சுக்கிர பகவானின் சுயபுத்தியான ஆதிக்க காலம் 3 வருடம் 4 மாதங்களாகும். இக்கால கட்டத்தில் இச்சாதகன் பூமியில் ஓர் அரசனைப்போல வெகு சிறப்புடன் வாழ்வான். பலவிதமான சுக போகங்களும் உண்டாகும். பெருமை தரத்தக்க இலக்குமி தேவியானவள் இவனது மனையை விரும்பி ஒரு பொற்கொடி போல வந்து அமைவாள். சுப சோபனங்களும் சுபயோகங்களும் உண்டாகும். மனம் விரும்பிய மங்கையர் வாய்த்து பலவகையிலும் இன்பம் துய்த்து வாழ்வான் என்று போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் சுக்கிர மகாதிசையில் சுக்கிர புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

270

*வாழலாம் சுக்கிரதிசை சூரியபுத்தி*

*வகையில்லா மாதமது பனிரெண்டாகும்*

*நாளலாம் அதன்பலனை நவிலக்கேளு*

*நன்மையில்லா சுரபீடை நாய்கடிகளுண்டாம்*

*கேளலாம் சத்துருவும் குடிகேடுசெய்வான்*

*குணமான தாய்தந்தை மரணமதுவாகும்*

*வாழலாம் சித்தமதில் வெகு கலக்கமுண்டாம்*

*மனைவிதனைவிட்டேகி மலையாண்டியாவான்*

*இச்சுக்கிர மகாதிசையில் சூரிய பகவானின் ஆதிக்க காலம் 1 வருடமாகும். இக்கால கட்டத்தில் நிகழும் பலன்களைக் கூறுகிறேன். கேட்பாயாக! ஜுரத்தினால் பீடையுண்டாகும். நாய் கடித்தல் போன்ற பிணியும் உண்டாம். பகைவர்கள் குடிகெட்டுப்போகும் வண்ணம் கேடு நினைத்து அதனை நிறைவேற்றவும் செய்வர். நல்ல குணம் பொருந்திய தாய், தந்தையின் மரணம் முதலியன சம்பவிக்கும். குறைவற வாழ்ந்த போதிலும் அறிவில் தெளிவின்றி வெகு கலக்கம் ஏற்படும். தன் துணைவியை விட்டுப்பிரிந்து ஆண்டியாகி மலைப்பிரதேசங்களுக்குச் செல்வான் என்று போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் சுக்கிர மகாதிசையில் சூரிய புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

271

*ஆவானே சுக்கிரதிசை சந்திர புத்தி*

*அருளில்லா மாதமது நாலைந்தாகும்*

*போவானே அதன்பலனைப் புகலக்கேளு*

*பொன்பெறுவான் அன்னையும் மரணமாவாள்*

*சாவானே சம்பத்தும் குறைந்துபோகும்*

*சதிரான மனையை விட்டு ஓடிப்போவான்*

*நோவானே வியாதியது துடர்ந்து கொள்ளும்*

*நுணுக்கமுள்ள வினைசமயம் நுகருந்தானே*

*சுக்கிர மகாதிசையில் சந்திர பகவானின் ஆதிக்க காலம் 1 வருடம் 8 மாதங்களாகும். இக்கால கட்டத்தில் நிகழும் பலன்களாவன: திருமகளைப் போல் திகழ்ந்த அன்னை மரணமடைவாள். அவளது சாவுக்குப்பின் தேடி வைத்திருந்த திரவியங்கள் நாசமாகிப் போகும்; பதர் போன்ற மனைவியை விரும்பாது அவளிடமிருந்து விலகி இச்சாதகன் ஓடிப் போதலும் நேரும். வியாதி தொடர்ந்து காண்பதால் வெகு வருத்தையும் அடைவான். சமயம் பார்த்து பழவினையானது தனது பணியைச் செய்வது எத்தனை அதிசயமானது எனப் போகர் கருணையால் புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் சுக்கிர மகாதிசையில் சந்திர புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

272

*தானென்ற சுக்கிரதிசை செவ்வாய்புத்தி*

*தாழ்வான மாதமது பதினாலாகும்*

*யேனேன்ற அதன் பலனை யியம்பக்கேளு*

*எலிகடியும் பீனிசமும் இளைப்பு முண்டாம்*

*வானென்ற வயத்தினிலே நோவுண்டாகும்*

*வகையுடனே ஆசனத்தில் கடுப்புண்டாகும்*

*தேனேன்ற தெரிவையர்கள் விகற்பமாகும்*

*தீதான சத்துருவும் சேர்வான்பாரே*

*சுக்கிர மகாதிசையில் செவ்வாயின் ஆதிக்க காலம் 1 வருடம் 2 மாதங்களாகும். இக்கால கட்டத்தில் நிகழும் பலன்களாவன: எலி கடித்தலால் ஏற்படும் நெடுநாள் இருமல் முதலியனவும் வந்து பற்றிக் கொள்ளும். வயிற்றில் உபாதை ஏற்படும். குதத்தில் கடுப்பு உண்டாகும். பெண்களால் தொல்லைகள் ஏற்படும், கொடுமையான பகைவனும் வந்து பற்றிக் கொள்வான் என்று போகரின் பேரருட் கருணையால் புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் சுக்கிர மகாதிசையில் செவ்வாய் புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

273

*பாரப்பா சுக்கிரதிசை ராகுபுத்தி*

*பகையான மாதமது முப்பத்தாறாம்*

*சேரப்பா அதன் பலனை செப்பக்கேளு*

*சிரரோகம் காமாலை ஜெயமும்நோவாம்*

*ஆரப்பா அரசர்பகை அகமிருந்துமாமே*

*அன்பான தாய் தந்தை அடவுடனே சாவாம்*

*மேரப்பா மேகமதால் ரோகமுண்டாம்*

*மேலெல்லாம் சிரங்குகுட்டம் ஆவான்பாரே*

*சுக்கிர மகாதிசையில் இராகு பகவானின் ஆதிக்க காலம் 3 வருடங்களாகும். இக்கால கட்டத்தில் நிகழும் பலன்களாவன: சிரரோகம், காமாலை, சயரோகம் முதலிய நோய்கள் ஏற்படுதலோடு அரசரது பகையும், அபமிருந்து தோஷமும் மனத்திற்கினிய தாய் தந்தை மடிந்து படுதலும் ஏற்படும். மேலும் மேக நோய் எனும் ரோகம் ஏற்பட்டு தேகமெங்கும் சிரங்கு, குட்டம் போன்ற நோயுற்று அவதிப்படுவான் எனப் போகர் அருளால் புலிப்பாணி புகன்றேன்.*

*இப்பாடலில் சுக்கிர மகாதிசையில் இராகு புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

274

*காணவே சுக்கிரதிசை வியாழபுத்தி*

*கனமான மாதமது முப்பத்திரண்டு*

*தோணவே அதன்பலனை சொல்லக்கேளு*

*தோகையரும் மங்களமும் சுபயோகமாகும்*

*பேணவே பெருஞ்செல்வம் பெருகும்பாரு*

*பெரிதான புத்திரனும் பெண்களுண்டாகும்*

*நாணவே நாடுநகரம் உண்டாகும்பாரு*

*நன்மையுடன் வாகனமும் நட்புடனே உண்டாம்*

*சுக்கிர மகாதிசையில் வியாழ பகவானின், ஆதிக்க காலம் 2 வருடம் 8 மாதங்களாகும். இக்கால கட்டத்தில் நிகழும் பலன்களாவன: மனம் விரும்பிய மங்கையரைச் சேர்தலும் அதனால் மங்களகரமான வாழ்வும் சுபயோகங்களும் நேரும். விரும்பிய வண்ணம் பெரும் பொருட் சேர்க்கை ஏற்படும். அச்செல்வம் மேலும் மேலும் பெருகிக் காணும். நன்மை தரத்தக்க ஆண் சந்தானமும் பெண் மக்களும் வாய்ப்பர். நாடு நகரங்கள் வசமாகும். பலவிதத்திலும் நன்மையும் வாகன யோகமும் ஏற்பட்டு சிறந்த நண்பர்களையும் பெற்றுச் சுகித்து வாழ்வான் எனப் போகர் கருணையால் புலிப்பாணி புகன்றேன்.*

*இப்பாடலில் சுக்கிர மகாதிசையில் வியாழன் புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

275

*உண்டாகும் சுக்கிர தசை சனியன்புத்தி*

*உண்மையுள்ள மாதமது முப்பத்தெட்டு*

*தெண்டாடும் தினபலனை சொல்லக்கேளு*

*திரவியமும் பூமிமுதல் சேரும்பாரு*

*நன்றாகும் அரசர்பதி யாவாய்பாரு*

*நன்மையுள்ள மாதர் மைந்தர் நாடு நகர்உண்டாம்*

*சென்றாகும் செல்வபதி யாவான்பாரு*

*தீர்க்கமுள்ள மன்னனெனச் செப்பலாமே*

*சுக்கிர மகாதிசையில் சனிபகவானின் ஆதிக்க காலம் 3 வருடம் 2 மாதங்களாகும். இக்கால கட்டத்தில் இவர் நிகழ்த்தும் பலன்களாவன: வெகு தன லாபம் வாய்க்கும் பூமி, மனை முதலியன நேரும். அரச சம்பத்துடன் வாழ்வது நேரும். குலமாதர், நன்மைந்தர் அமைதலோடு நாடு நகரங்களும் உண்டாகும். மிகப்பெரிய தனவந்தனாகி ஆளுமை மிகுந்து ஒரு பெருமன்னன் என்று கூறக்கூடிய வகையில் அவனியில் பொலிவுற வாழ்வான் என்று போகர் அருளால் புலிப்பாணி புகன்றேன்.*

*இப்பாடலில் சுக்கிர மகாதிசையில் சனி புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

276

*ஆமென்ற சுக்கிரதிசை புதனார்புத்தி*

*அன்புடைய மாதமது முப்பத்தினாலு*

*நாமென்ற அதன்பலனை நவிலக்கேளு*

*நாடுநகர் உன்வசமே ஆகும்பாரு*

*தானென்ற தன்னரசு ஆண்டுநீயும்*

*தரணியில் நீயுமொரு தவசியாவாய்*

*போமென்ற பொன்முதலும் பூமியாண்டு*

*பொங்கமுடன் தானிருந்து அரசு ஆள்வாய்*

*சுக்கிர மகாதிசையில் புதபகவானின் ஆதிக்க காலம் 2 வருடம் 10 மாதஙகளும். இக்கால கட்டத்தில் விளையும் பலன்களைக் கூறுவோம் தெளிவாகக் கேட்பாயாக! நாடு நகரம் வசமாகும். தன்னிகரில்லாத அரசனெனஆட்சி புரியும் நிலை ஏற்படும். முடிவில் இந்நிலவுலகில் தவத்திற் சிறந்த தவசியாதலும் நேரும். கைவிட்டுப்போம் என்று சொல்லத்தகும் பொன் முதலாகிய பொருள்களையும் பூமி லாபத்தையும் பெற்று அரச செல்வமெய்தி ஆண்டிருக்கும் நிலை ஏற்படும் எனப் போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் சுக்கிர மகாதிசையில் புதன் புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

277

*ஆளலாம் சுக்கிரனில் கேதுபுத்தி*

*ஆகாத மாதமது யீரேழாகும்*

*வாழலாம் அதன்பலனை வகுத்துச் சொல்வேன்*

*வளர் கொடியாள்தான் சாவாள் வான் பொருளும் போகும்*

*தாழ்வான தன்னரசு ராச்சியங்கள் போகும்*

*சம்பத்து தான்குறையும் தந்தைதாய் மரணம்*

*கோளலாம் சத்துருவால் குடிகேடாகும்*

*கோதையரும் தான்போவாள் குடிகேடாமே*

*சுக்கிர மகாதிசையில் கேது பகவானின் ஆதிக்க காலம் 1 வருடம் 2 மாதங்களாகும். இக்கால கட்டத்தில் இவர் நிகழ்த்தும் பலன்களாவன: வளருகின்ற கொடிபோலும் இடையுடைய மனையாள் மரணம் நேரும். மிகுதியான திரவிய நாசம் ஏற்படும். ஒப்பாகும் மிக்காரும் இல்லாது தனித்தரசாண்டிருந்த நிலைமை மாறும். நாடு நகரங்கள் இழப்பாகும், சம்பத்து குறையும். தாய் தந்தை மரணமடைவர். கோள் வைக்கக் கூடிய சத்துருக்களால் குடிக்குக் கேடு விளையும். மனைவி மனம் வெறுத்து வீட்டைவிட்டுப் போவாள். குடும்பமானது சிதையும் எனப் போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

*இப்பாடலில் சுக்கிர மகாதிசையில் கேது புத்தியின் பலன்களைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

278

*ஆமென்ற நவக்கிரகந் திசைபுத்திபலனை*

*அணு அணுவாய் சொல்லிவிட்டோம் அனுசரித்துப்பாரு*

*நாமென்ற நவக்கிரகந் திசைபுத்தி அந்தரம்*

*நன்றான பலனதிலே நவின்று விட்டோம்*

*தாமென்ற கிரகமது ஆட்சியுச்சம்*

*தப்பா நட்புநிலை சத்துருநீசம்*

*போயேன்ற பகைச்சாரம் பார்த்து நீயும்*

*பொருளுதுபோல் பயனறிந்து புகலுவாயே*

*சூரியாதி நவக்கிரங்களின் திசைகளைப் பற்றியும் புத்திகளைப் பற்றியும் உளதான பலன்களை அணு அணுவாக நீ விளங்கும் வண்ணம் உரைத்தோம். இதை உமது அனுபோகத்தில் அனுசரித்துப் பார்த்து உண்மை நிலையை நன்கு கொள்க. மேலும் திசை, புத்தி, அந்தரம் ஆகிய பலன்களையும் கூறியமையும் காண்க. இன்னும் கிரகங்களின் ஆட்சி, உச்சம், நீசம் மற்றும் அவை சார்ந்திருக்கும் பகைக்கிரகங்களின் சாரம் இவையாதியானவற்றை நன்கு மனத்திற் பொருத்தி அவர்க்கு ஜாதகப் பலனை உரைப்பாயாக எனப்போகர் அருளால் புலிப்பாணி புகன்றேன்.*

*இப்பாடலில் திசா, புத்தியின் பலன் கூறும் முறையைப் பற்றிப் புலிப்பாணி விவரிக்கிறார்.*

279

*பாடினே னின்ன மொன்று பகரக்கேளு*

*பகலவனுஞ்சனி செவ்வாய் கொடியோராவர்*

*தேடினேன் யெட்டாறு பன்னிரெண்டும்*

*திடமான கேந்திரமும் வலுமையப்பா*

*நாடினேன் நல்லோர்கள் கோணம் நட்பு*

*நற்பொருளுங் கீர்த்தியுண்டு நலமாய்வாழ்வன்*

*ஆடினேன் அயன் விதியும் தீர்க்கம் தீர்க்கம்*

*அப்பனே புலிபாணி அரைந்திட்டேனே*

*மேலும் ஒரு கருத்தையும் கூறுவேன். அதை நன்கு உணர்ந்து கேட்பாயாக! சூரியன், சனி, செவ்வாய் ஆகிய மூவரும் கொடியோரேயாவர், மற்றும் 8,6,12,1,4,7,10 ஆகிய இடங்கள் வலிமையான இடங்களேயாகும்,. நல்ல கிரகங்கள் 1,5,9 ஆகிய திரிகோண ஸ்தானங்களில் இருப்பின் அதுவும் நட்புடன் காணப்படின் நற்பொருள், கீர்த்தி ஆகியவையும் கொண்டு நலமான முறையில் வாழ்வான். அச்சாதகனின் விதியானது தீர்க்கமானதே என்று தீர்க்கமான எண்ணத்துடன் எனது குருநாதரான போகரின் பேரருட்கருணை துணைகொண்டு புலிப்பாணி உரைத்தேன்*

280

*பாரப்பா யின்னமொரு புதுமைகேளு*

*பாங்கான மலை தனிலை சப்தகோள்கள்*

*சீரப்பா ஜென்மனிடம் பெரியக்காள்தான்*

*சிறப்பாக வீற்றிருப்பாள் கிரகம் தன்னில்*

*கூறப்பா குண்டித் துணி கந்தையாகும்*

*குவலயத்தி லிவனைப்போல் சொன்னாரில்லை*

*ஆரப்பா யென்னைப்போல் சொன்னாருண்டோ*

*அப்பனே யின்னமொரு புதுமைகேளு*

*மேலும் நான் கூறப்போகும் மற்றொரு புதுமையையும் நீ நன்கு கேட்பாயாக1 1,4,7,10 என்ற கேந்திரங்களில் 7 கிரகங்கள் இருப்பின், அச்சாதகனுக்கு ஸ்ரீதேவியின் மூத்தோளான மூதேவிதான் தானே விரும்பி உவந்து அவனது மனையில் வீற்றிருப்பாள். அவனுக்கு உடுக்கும் உடையும் அமையாது. அமைந்தாலும் அது கந்தைக் துணியேயாகும். உலகில் இவனைப் போல் யாரும் இவ்வளவு வெளிப்படையாக உண்மைச் சொன்னவரில்லை. போகமா முனிவரின் பேரருள் கொண்ட என்னைப் போல் சொன்னவர்கள் யாரேனும் உண்டோ? (இல்லவே இல்லை என்பது கருத்து) எனவே போகர் அருளால் புலிப்பாணி மேலும் ஒரு கருத்தினைக் கூறுவேன்,கேட்பாயாக!*

281

*சங்கர சங்கர சம்போ சிவ*

*சங்கர சங்கர சங்கர சம்போ*

*ஒண்ணவனுச் சமுமாகி மாதே*

*ஒரைந்தில் முடவனும் வெள்ளியைநோக்க*

*திண்ணமாயிவனுக்கு புத்திரன் - தீர்க்கம்*

*திடமாகவியஞ்சொல்லு சொல்லு சொன்னாண்டி தோலி !*

*சங்கர சங்கர சம்போ சிவ*

*சங்கர சங்கர சங்கர சம்போ*

*தோழிப்பெண்ணே! சிவன் என்றும் சங்கரிக்கும் சங்கரன் என்றும் கங்கையெனும் புனிதத்தைத் தலைக்கணிந்தவனும் ஆன சிவபெருமானின் பேரருளால் போகமாமுனிவர் ஆய்ந்துணர்ந்த (திசாபாக உடற்கூற்று வண்ணம்) தைச்சொல்கிறேன். கேட்பாயாக!*

*இலக்கினாதிபன் உச்சமாகி 5-ஆம் இடத்தில் சனிநின்று சுக்கிரனைப் பார்க்க இச்சாதகனுக்குத் திண்ணமாய் புத்திர பாக்கியம் உண்டு. அப்புத்திரனும் தீர்க்க ஆயுளுடன் வாழ்வன் ஆயினும் 12-ஆம் இடத்தில் அமர்ந்த கிரகங்களையும் அவ்விடத்தைப் பார்த்த கிரக பார்வையையும் உன்னிப்பாய் அறிந்து பின் பலன்களைக் கூறுவாயாக.*

282

*ஒண்ணவன் சுபனுமேயாகி -மாதே*

*ஒண்ணவன் சுபனுமேயாகி -மாதே*

*ஒரேட்டோன் கேந்திர கோணங்களேற*

*சொன்னேனே இவனுக்கு யோகம் -சுகம்*

*போகமும் ரோகமும் சுமந்து சொல்தோழி*

*சங்கர சங்கர சம்போ சிவ*

*சங்கர சங்கர சங்கர சம்போ*

*இலக்கினாதிபன் சுபனாகி எட்டுக்குடையவன் 1,4,7,10 ஆகிய திரிகோண ஸ்தானங்களிலோ அமர்ந்தால் இச்சாதகனுக்கு யோகமே விளையும். இவனுக்குச் சுகபோகம் மெத்த ஏற்படினும் ரோகமும் உண்டாகும் என்ற கருத்தையும் உள்ளடக்கிப் பலன் நிகழ்த்துவாயாக.*

283

*ஒண்ணவன் விரயத்திலேற - மாதே*

*ஒன்பதோனாரெட்டி லீராறிலேற*

*பண்ணவேயிவனுக்கு பாக்கியம் - மெத்த*

*பண்டுபொருளெல்லாம் விரயஞ்சொல்தோழி*

*சங்கர சங்கர சம்போ சிவ*

*சங்கர சங்கர சங்கர சம்போ*

*இலக்கினாதிபன் 12-இல் நிற்க 9-க்குடையவனும் 2-குடையவனும் விரயஸ்தானமாகிய 12-இல் நிற்க இவனுக்குப் பாக்கியம் நிறைய உண்டெனினும் மூதாதையரின் சொத்துகளும் பிறவும் விரயமாகும் என்றே பலன் நிகழ்த்துவாயாக.*

284

*ஒண்ணவன் விரயமுமாகி - மாதே*

*ஒன்பதில் வெள்ளியு மாட்சியுமேற*

*சொன்னேனேயிவனுக்கு விதவை-சொத்து*

*கிஞ்சிற்று உண்டென்று சொல்லடிதோழி*

*சங்கர சங்கர சம்போ சிவ*

*சங்கர சங்கர சங்கர சம்போ*

*இலக்கினாதிபன் விரயத்தில் நிற்க சுக்கிரபகவான் என்றும் வெள்ளி என்றும் விளம்பப்படும் பார்க்கவன் ஒன்பதாம் இடத்தில் ஆட்சி பெறின் இச்சாதகனுக்கு விதவையின் சொத்து சிறிது உண்டென்று கூறிப்பலன் நிகழ்த்துவாயாக என்று போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

285

*ரெண்டவன் திசையைக்கேளு-அவன்*

*ரெண்டேழிலீரைந்து லாபமுமேற*

*பெண்டுபிள்ளைகளுடன் வாழ்வன் --மாதே*

*சுகமுடன் ஆண்மையும் நீதியும் சொல்தோழி*

*சங்கர சங்கர சம்போ சிவ*

*சங்கர சங்கர சங்கர சம்போ*

*தனம், குடும்பம், வாக்கு ஆகியவற்றை நிர்ணயிக்கும் இரண்டுக்குடையவன் திசையைப்பற்றிச் சொல்கிறேன் கேட்பாயாக! இவ்விரண்டுக்குடையோன் 2,7,10,11 ஆகிய இடங்களில் நிற்க இச்சாதகன் பெண்டு பிள்ளைகளுடன் சுகித்து வாழ்பவனாவான், அது மட்டுமல்லாமல் ஆளுமைத் தன்மை மிகுந்தவனாகவும் நிறை தனம் பெற்றவனாகவும் இருப்பான் என்று போகரது அருளால் புலிப்பாணி கூறினேன்.*

286

*மூன்றவன் திசை நீகேளு --மாதே*

*மூணேழில் மும்மூன் றிலக்கினமேற*

*நாணயவீரியமுண்டு நல்ல*

*போகமும் சேவகம் கலந்து சொல்தோழி*

*சங்கர சங்கர சம்போ சிவ*

*சங்கர சங்கர சங்கர சம்போ*

*இனி மூன்றுக்குடையவன் திசையைப் பற்றிச் சொல்வேன். அதனையும் நன்கு கேட்பாயாக! இம்மூன்றுக்குடையவன்3, 7, 9 ஆகிய இடங்களில் அமர்ந்தானேயென்றால் சொல் தவறாத நாணயமும் நல்வீரமும் உண்டாம். அதோடு பொறுப்பான சேவகத்தால் பெரும்போக பாக்கியம் அடைவான் என்பதையும் கூறுவாயாக என்று போகர் அருளால் புலிப்பாணி புகன்றேன்.*

287

*நாலவன் திசையை நீகேளு---மாதே*

*நாலேழிலாபத்தில் கேந்திரமேற*

*சீலமாயிவனுக்கு கூறு--நல்ல*

*செந்நெல் வயல்களும் நிதியும் சொல்தோழி*

*சங்கர சங்கர சம்போ சிவ*

*சங்கர சங்கர சங்கர சம்போ*

*வீடு, வாகனம் முதலியவற்றை விஸ்தாரமாகச் செல்லும் நான்காம் வீட்டிற்குடையோனின் திசையினைப் பற்றிக் கூறுகிறேன். அதையும் நீ நன்கு கவனித்துக் கேட்பாயாக! இந்த நான்காமதிபன் 1,4,7,10 ஆகிய கேந்திரங்களிலும் 11-ஆம் இடமான இலாபஸ்தானத்திலும் தேறி நிற்க குணம் பல உடைய இச்சாதகனுக்கு நல்ல செந்நெல் விளை வயல்களும் இருவகைத் தனவருவாயும் (காலாலும், கலத்தாலும்) ஏற்படும் என்றே கூறுவாயாக என்று போகர் அருளால் புலிப்பாணி புகன்றேன்.*

288

*அஞ்சவன் திசையை நீகேளு--மாதே*

*அஞ்சேழிலீரைந்தி லாபமுமேற*

*தொந்தமாயின்னுக்கு செப்பு-சுகம்*

*தென் கீழ்திசைதனில் யோகம் சொல்தோழி*

*சங்கர சங்கர சம்போ சிவ*

*சங்கர சங்கர சங்கர சம்போ*

*இனி 5-க்குடையவன் திசையைக் கூறுவேன் கேட்பாயாக! இவ்வைந்திற்குடையவன்., 5,7,10,11 ஆகிய இடங்களில் தேறி அமர்வானாகில் இச்சாதகனுக்கு தென்கிழக்குத் திசையில் யோகம் ஏற்படுதலும் சுகபோகம் அடைதலும் உண்டென்று சொல்வாயாக எனப் போகர் அருளால் புலிப்பாணி புகன்றேன்.*

289

*ஆறவன் திசையை நீபாரு--மாதே*

*ஆறவனஞ்சேழி லாபத்திலேறி*

*சீராக கேந்திரம்புக்க--சிறை*

*காவலும் யோகமும் சிறந்து சொல்தோழி*

*சங்கர சங்கர சம்போ சிவ*

*சங்கர சங்கர சங்கர சம்போ*

*இனி 6-ஆம் இடத்திற்குடையவனது திசையைப் பற்றிக் கூறுகிறேன். இதனையும் உன்னிப்பாய்க் கேட்பாயாக! இவ்வாறுக்குடையவன் 5,7,11 மற்றும் 1,4,10 ஆகிய கேந்திரங்களிலும் இருப்பின், சிறைக் காவல் ஏற்படும். எனினும் சிறந்த யோகமும் அவனுக்கு உண்டென்று தெளிவாகச் சொல்வாயாக எனப் போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

290

*ஏழவன் திசையை நீகேளு--மாதே*

*யேழஞ்சில் கேந்திர கோணங்களேற*

*மார்க்கமா இவனுக்கு மங்கை--வயதில்*

*சேர்க்கையும் பூமியும் சேவகம் கூறு*

*சங்கர சங்கர சம்போ சிவ*

*சங்கர சங்கர சங்கர சம்போ*

*இனி களத்திர ஸ்தானாதிபன் எனப்படும் 7-க்குடையவன் திசையினைப் பற்றிக் கூறுகிறேன். கேட்பாயாக! இவ்வேழுக்குடையவன்7,5,1,4,10,9 ஆகிய இடங்களில் தேறி நிற்க இச்சாதகனுக்கு மனம் விரும்பிய வண்ணம் உரிய காலத்தில் மணம் நேர்தலும் பூமி சேர்க்கையும் நல்ல வேலைக்காரர்களும் அமைவர் என்றும் உறுதிப்படுத்து எனப் போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

291

*எட்டவன் திசையை நீபாரு--மாதே*

*யெட்டைந்தில் கேந்திர கோணங்களேற*

*சட்டமாயிவனுக்கு செப்பு--சிறை*

*காவலும் துன்பமும் யோகம் சொல்தோழி*

*சங்கர சங்கர சம்போ சிவ*

*சங்கர சங்கர சங்கர சம்போ*

*இனி, ஆயுள் ஸ்தானாதிபதியான எட்டுக்குடையவன் திசையைப் பற்றிக் கூறுகிறேன் கேட்பாயாக! இவ்வெட்டுக்குடையவன், 8,5,1,4,7,10,9 ஆகிய இடங்களில் தேறி நிற்க இச்சாதகனுக்கு சட்டப்படி சிறைக்காவல் உண்டெனினும் யோகம் உண்டென்று நன்கு ஆராய்ந்து கூறுவாயாக எனப்போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

292

*பாக்கியன் திசையை நீகேளு--மாதே*

*பாக்கியன் லாபத்தில் கேந்திரமேற*

*யோக்கியம் பாக்கியமுண்டு--நல்ல*

*போக்கியம் ஆண்மையும் கூடவே சொல்லு*

*சங்கர சங்கர சம்போ சிவ*

*சங்கர சங்கர சங்கர சம்போ*

*இனி, ஒன்பதிற்குடைய பாக்கியாதிபன் திசையைப் பற்றிக் கூறுகிறேன். கேட்பாயாக இப்பாக்கியாதிபன் 1,4,7,10 ஆகிய கேந்திரங்களிலும் 11-ஆம் இடமாகிய லாபஸ்தானத்திலும் தேறி நிற்க நல்லவிதமாக அனைத்துப் பாக்கியங்களும் நேரும். போக போக்கியத்தை ஆளுமையுடன் இச்சாதகன் அனுபவிப்பான் என்று குறிப்பிட்டு கூறுவாயாக எனப் போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

293

*பத்தோன் திசையை நீபாரு--மாதே*

*பத்தேழில் ஒரைந்தில் கேந்திரமேற*

*வத்தாத செல்வங்கல் கொடுப்பன்--சுகம்*

*கருமமும் வேட்டலும் சொல்லுவாய்தோழி*

*சங்கர சங்கர சம்போ சிவ*

*சங்கர சங்கர சங்கர சம்போ*

*பத்துக்குடைய கர்மாதிபன் திசையைப் பற்றி இனிக் கூறுகிறேன். இதனையும் நீ கேட்பாயாக! இப்பத்திற்குடையவன், 1,4,7,10 ஆகிய கேந்திரங்களிலும் திரிகோணஸ்தானமான 5-ஆம் இடத்திலும் தேறி நின்றால் வற்றாத செல்வ வளங்களைத் தருவான். சுகம் மெத்தவும் உண்டென்றாலும் கர்மம் செய்ய நேர்தலும் கண் பார்வையுண்டென்றும் நீ கணித்துச் சொல்வாயாக எனப் போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

294

*லாபத்தில் குருவுமிருக்க--மாதே*

*லாபனுமுச்ச கேந்திரமேற*

*பாபமோகிஞ்சிற்று செய்யான்--மெத்த*

*பாக்கியம் போக்கியம் சொல்லடி தோழி*

*சங்கர சங்கர சம்போ சிவ*

*சங்கர சங்கர சங்கர சம்போ*

*இனி இலாபாதிபனான 11-க்குடையவனைப் பற்றிக் கூறுகிறேன். இலாபஸ்தானத்தில் குரு பகவான் வீ'ற்றிருக்க லாபாதிபன் உச்சத்திலோ கேந்திரத்திலோ தேறி நிற்கில் இச்சாதகன் சிறிதளவு கூடப்பாவமே செய்யான். இவனுக்கு வெகுபாக்கியமும் போக பாக்கியமும் நேரும் என்று கூறுவாயாக எனப் போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

295

*வெய்யோனிருபக்கம் பாரு--மாதே*

*வேந்தனுக் கொப்பான கோள்களுமேற*

*பையவேலவனுக்குப்பண்டு--பொருள்*

*யோகமும் போகமும் பகர்ந்து சொல்தோழி*

*சங்கர சங்கர சம்போ சிவ*

*சங்கர சங்கர சங்கர சம்போ*

*இனி விரயஸ்தானம் என விளம்பப்படும் 12-க்குடையவன் திசையைப் பற்றிக் கூறுகிறேன். கேட்பாயாக! இப்பன்னிரண்டுக்குடையோன் நின்ற இராசிக்கு முன்னும் பின்னும் குருவுக்கு ஒப்பான சுப கிரகங்கள் தேறி நிற்க இச்செல்வனுக்கு மூதாதையர் தம் பெரும் பொருள் வந்து வாய்க்கும் யோகமும் அதனால் சுகபோகம் விளைதலும் உண்டாகும் என நன்கு ஆராய்ந்துணர்ந்து பலன்களை நிகழ்த்துவாயாக எனப் போகர் அருளால் புலிப்பாணி கூறினேன்.*

296

*நொண்டி வண்ணம்--நாலவன் திசைக்கு*

*தனனா தனதனதன--தனனா*

*தன்ன தனனதன தனனா (தனனா)*

*நாலவன் திசை-கேளு- அவந் நாகரிகமுள்ள விதிப்படி செய்ய- நாலேழில், பத்தில் நல்லக்கினமேறி கேந்திரிக்க நலமுள்ள சுகங்கொடுப்பன் - நாணய -சென்னல் வயல் நிதிகளும் மாடு மக்களும்- போகவிருத்தி யோகவிருத்தி- வாகனமும்- ஆளடிமை சேர்க்கைகளும் மெத்த உண்டு-கெடிமெத்தை வீடுமுண்டு- துலங்கிய- வியாபாரஞ் செய்வதில் லாபமுண்டு பூட்டம் வைத்த- ஜோசியத்தை- புலிப்பாணி விவரமாயுரைத்து விட்டேன் - தன்னாதனதன.*

*இலக்கினத்திற்கு நான்குக்குடையவன் திசையை நன்றாக நீ அறிவாயாக! மேலோர் சொன்ன மிக்க அறிவின்படி 1,7,9 ஆகிய இடங்களில் கேந்திரமேற அச்சாதகனுக்கு நாலுக்குடையவன் நலம் அருள்வான். நாணயம், சென்நெல், வயல்நிதி, மாடு, மனை, மக்கள் ஆகிய யோக விருத்தியை நல்குவன்: இச்சாதகனுக்கு வாகன யோகமும், ஆள் அடிமை சேர்க்கைகளும் ஏற்படும். தொட்டிக் கட்டு உள்ள அரண்மனை போன்ற \வீடும் வெதனம் சம்பாதிப்பான். இதுவரை முனிவர்களும்*

*பதினெண் சித்தர்களும் பூட்டி வைத்த ரகசியத்தை புலிப்பாணி போகர் அருளால் உனக்குக் கூறினேன்.*

297

*அட்டமாபதிதிசைகேளு-அவன் - சப்தமத்தில் கோணங்கள் கேந்திரிக்க-அவன் செய்யும் கொடுமைகளை-நானும்-அடவுடனே சொல்லத் துடங்குகிறேன்-நட்டப்பயிர் தீக்கடுவன்-நலமுள்ள-சுகங்காட்டி மெத்தக் கெடுத்திடுவன்-ராஜமுகங் கொண்டுபோவான்-அரசால் சிறைக்காவல் பூண்டு மீண்டு வருவன்-மனையோடு மாடகூடம்- நல்ல பொக்கிஷங்களெல்லாம் - கொள்ளையிடுவான்-மாறாலடிபடுவன்-நல்ல- மனையாளை வேறு படுத்திடுவன்-மூலையில் உறங்க வைப்பன்-முழுவதும்-பட்டினியே போட்டு வருத்திடுவான்-கண்டோரேசிடவும்- கடையினில்-கையேந்தியொரு காசுக்குக் காத்திருப்பன்-பந்து ஜனமெல்லவரும்- யிவனுக்கு போக்கு வழிதேடுவரிழுத்துவிட்டு- கட்டு கொட்டு வெட்டுகளும்- கனத்த சண்டையில் தாக்கி கொன்றிடுவன்-ஒருவன் களத்திரத்தை- நல்ல உன்னத போகங்கள் செய்திடுவான்-சித்திரப் புதுமைபெற்ற-நல்ல சீமாட்டி வாசலில் காத்திருப்பன்-இந்திரலீலை சுந்தர வைபோகம் க்ஷணத்தில்-துன்பத்தைக் காட்டியே யின்பஞ்செய்வன்-போகர் சொன்ன விதி நொண்டியை புலிப்பாணி கிளிப்பிள்ளை சொல்லு போலுரைத்து விட்டேன்-அட்டமாதிசையும் கூறு-நானும்-அணுவுக்கு அணுவாக உரைத்து விட்டேன்-தன்னாதன தன்னா.*

*இலக்கினத்திற்கு உரிய அட்டமாதிபன் 7,1,5,9,1,4,10, ஆகிய இடங்களில் அமர அவன் செய்யும் கொடுமைகளை நான் மிக அழகாகக் கூறுகிறேன். அதையும் நீ நன்குணர்ந்து கேட்பாயாக. விளைச்சல் மிக்கவயலில் தீப்பாயும். வெகு சேதம் விளையும். அரச கோபம் உண்டாகும். அநியாய தண்டங்கள் ஏற்படும். சிறையுண்டு இச்சாதகனுக்கு, ஆயினும் மீண்டும் வந்து மாடு, மனை, மக்களுடன் வெகுதனவானாய் வாழ்ந்து மேலும் மேலும் பல அரசர்களின் பொக்கிஷங்களை எல்லாம் கொள்ளை இடுவான். விளக்கு மாற்றால் அடிபடுபவனும் இவனே. நல்ல மனைவியை வெறுத்துப் புறம் போவான்; அம்மனையாளை ஒரு மூலையில் உறங்க வைப்பான்; பட்டினிபோடுவான். முழுவதும் பட்டினி போட்டு வருத்துவதுடன், பிறர் ஏசிடவும் வைப்பான். புறங்கடையில் கையெந்திப் பிச்சையும் ஏற்றிடச்செய்வான்; இன ஜனபந்துக்களால், இவனுக்கு வெட்டு, குத்து ஆகியவை ஏற்படும்., இவன் நகரமக்களால் தெருவில் கொல்லப்படுவான். இவர்களிலும் உன்னதன் ஒருவன் உத்தமக் களத்திரம் பெற்றோன் என்றால், இவனே உன்னத போகங்களை அனுபவிப்பவன். நல்ல சித்திரம் போலும் பதுமை போலும் நல்ல சீமாட்டி வாயிலும் இவனுக்காகக் காத்திருக்கும்: இந்திர லீலை சுந்தர வைபோகம் ஆகியவை ஒரு க்ஷணத்தில் துன்பம் காட்டி பின் இன்பம் செய்வான் என்று எனது குருநாதரான போகரது அருளாணையால் புலிப்பாணி கூறினேன்.*

298

*மகரமரிகும்பம்யாழ் மாதலவன்வில் மீனம்*

*பகர்துலைதேள் மாடாடு பண்பாய்- இ·துலகில்*

*லேசாராதாமேவில் வேசியமாம் நன்மை*

*தாசாரா மேவிலதந்தான்*

*கும்பம், மகரம், சிம்மம், மிதுனம், ஆகிய நான்கு லெக்கினங்களுக்கு சாத்மீகவேளை வந்தால் அமிர்த யோகமும், தாமதவேளை வந்தால் மரண யோகமும் இது இரண்டுமல்லாத மற்ற ராக்ஷச வேளை வந்தால் சித்த யோகமுமாம். அப்படியே, கன்னி-கடகம்-தனுசு-மீனம் ஆகிய நான்கு லெக்கினங்களுக்கும் ராக்ஷசவேளை வந்தால் அமிர்த யோகமும் சாத்மீக வேளையானால் மரணயோகமும் இதுகளிரண்டுமில்லாத மற்ற தாமத வேளையானால் சித்த யோகமும் அப்படியே-துலாம்-விருச்சிகம்-மேஷம்-ரிஷபம் ஆகிய நான்கு லெக்கினங்களுக்கும்*

*தாமதவேளையானால் அமிர்தயோகமும், ராக்ஷசவேளையானால் மரண யோகமும், இதுகளிரண்டுமல்லாத மற்ற சாத்மீக வேளையானால் சித்தயோகமும், எவ்விதமான சுபநிகழ்ச்சிகளுக்கும் அநேகர் லெக்கினங்களுக்குத் தக்க வேளைகளைப் பொருந்தப் பார்க்காத தோஷத்தால் விக்கினங்கள் நேரிடுவதை கவனிக்க வேண்டும்.*

299

*கேளப்பா ராசிபனி ரெண்டுக்குள்ளே*

*கனமுள்ள கோள்கள் நிலையறியாமல்தான்*

*பாழப்பா பலவாறாய் சக்கரம் பூட்டி*

*பணம்பறிக்கும் விந்தையது பாரிலேதான்*

*சூளப்பாசோதிடமும் முன்னூறுக்குள்*

*சுகமாகப்பாடி வைத்தேன் நுணுக்கமாக*

*நீளப்பா போகருட கடாட்சத்தாலே*

*நீணிலத்தில் புலிப்பாணி நிகழ்த்தினேனே.*

*நான் சொல்லுவதை நலமாக நீ கேட்பாயாக! அறிவற்றவர்கள் 12 ராசிக்குள் கிரகங்களைக் கூட்டி வைத்து பணம் பறிக்க இதுதான் சரியான வித்தையென்று இதுகாறும் பாரில் கூறி வந்தார்கள். ஆனால் நானோ 300 பாட்டுக்குள் நுணுக்கமாக என் குருநாதரான போகருட கடாட்சத்தாலே இதனை நீ உணர்வாயாக!*

300

*காணப்பா குருபதியின் நிலைமைபாரு*

*கனமுள்ள இராமனின்ற நிலையைப்பாரு*

*வீண்ப்பா லெக்கினேசன் நிலையைப்பாரு*

*விதமான ஜென்மனுட திசையைப்பார்த்து*

*ஊணப்பா உன் மனத்தை திடப்படுத்தி*

*உத்தமனே ஊழ்வினையை யெடுத்துச் செப்பு*

*ஆளப்பா போகருட கடாட்சத்தாலே*

*அப்பனே புலிப்பாணி முன்னூறுமுற்றே.*

*அன்பனே! இலக்கினத்திற்குரியவனும், குருவும் நின்ற நிலையை நீ காண்க! வெகு நன்மைதரும் புதபகவான் நின்ற நிலையையும் நீ கூற்மையுடன் கவனிப்பதோடு அச்சாதகனின் திசை, புத்தி ஆகியனவற்றை உறுதியாக எண்ணி, உன்மனத்தையும் நன்கு திடப்படுத்திக் கொண்டு அச்சாதகனின் ஊழ்வினைக்கேற்ற பலனைக் கூறுக. அவ்வாறு நீ கூறினாயேயானால் போகர் கருணையால் புலிப்பாணி கூறியது முற்றுப்பெறும்.*